
# அதிர்வுகள்



செ.அன்புராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்வுகள்

(சமூக மானிடவியல்)

செ.அன்புராசா

வெளியீடு

அமலமரித் தியாகிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| தலைப்பு | : அதிர்வுகள் |
| விடயம் | : சமூக மானிடவியல் |
| ஆசிரியர் | : செ. அன்புராசா |
| பக்கங்கள் | : XXVI + 228 |
| முதற் பதிப்பு | : மார்கழி 2014 |
| பதிப்புரிமை | : ஆசிரியர் |
| வெளியீடு | : அமலமரித் தியாகிகள் |
| கணினி வடிவமைப்பு, அட்டை | : ஜெயந்த் சென்றர்<br>165, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். |
| அச்சுப்பதிப்பு | : ஜே. எஸ். பிரின்டர்ஸ் |
| விலை | : 350.00 |

| | |
|---|---|
| Title | : ATHIRVUKAL |
| Subject | : Social Anthropology |
| Author | : S. Anpurasa |
| Pages | : XXVI + 250 |
| First Edition | : December 2014 |
| Copy Right | : Author |
| Published by | : Oblates of Mary Immaculate |
| Computer Setting & Cover | : Jeyanth Centre<br>165, Vempaday Road, Jaffna. |
| Printed by | : J.S.Printers |
| Price | : 350.00 |

ISBN: 978-955-1769-05-5




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம் மண்ணின்*
*மொழியை, கலையை, கலாசாரத்தை, பண்பாட்டை*
*நேசித்து,*
*அவற்றை*
*முன்நிறுத்த - நிலைநாட்ட*
*கடந்த 60 ஆண்டுகளாய்*
*இயல், இசை, நாடகத்தினால்*
*கலைத்தவம் செய்து,*
*தனக்குப் பின்னால்*
*முப்பெரும் தலைமுறைக்கு உருக்கொடுத்து,*
*தற்போது*
*ஓய்வுநிலையில் இருக்கும்,*
*வருமாண்டு தன்னகவையின் பவளவிழாக் காணும்*
*என்னப்பன்,*
***கலைத்தவசி குழந்தை செபமாலை** அவர்களுக்கு*
*சமர்ப்பணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனுபவ முதிர்ச்சியில் உதிர்ந்தவை அதிர்வுகள்

புனைகதைகளான சிறுகதை, நாவல், இலக்கியங்கள் போன்றே கட்டுரையும் நவீன இலக்கிய வடிவங்களிலொன்று என்பதையோ வலுவான - வளமான - வடிவமென்பதையோ பலரும் அறிவதில்லை. தமிழ் நாட்டிலே இத்துறை கண்ட வளர்ச்சி ஈழத்தமிழ்ச் சூழலில் இன்னமும் ஏற்படவில்லை. எமது கல்லூரிப் பாடநூல்களுக்குக் கட்டுரைகள் தேடுகின்றபோது மு.வரதராசன் (மு.வ) தொடக்கம் தியோடர் பாஸ்கரன் வரை தமிழ்நாட்டு எழுத்தாளர்களை நாடிச் செல்கின்ற நிலையே இன்றுவரை காணப்படுகின்றது. ஈழத்தில் இத்துறை வளராமை எமது சமூகத்தினதும் எழுத்துலகினதும் பின்னடைவு நிலையையே வெளிப்படுத்துகின்றது.

ஏனெனில், இன்றைய உலக மயமாக்கச் சூழல், இணையச் செல்வாக்கு, தலைமுறை இடைவெளி, முப்பதாண்டு ஊழிக்காலம், பண்பாட்டு மாற்றங்கள் முதலானவற்றினால் எமது சமூகம் குறிப்பாக இளந்தலைமுறைக்குத் தெரியாத பயணங்களை மேற்கொண்டு வருகின்றது! இவர்களுக்கான தேவைகளிலொன்று, உளவியல், சமூகம், அரசியல், சூழலியல், உடல்நலவியல், ஆன்மீகம் முதலான பல்துறை சார்ந்த விடயங்களிலும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதாகும்.

இத்தகைய திசை நோக்கி, ஆற்றுப்படுத்த ஏற்றதொரு வடிவமாக கட்டுரை இலக்கியம் கைகொடுக்கின்றது. இத்தகைய கட்டுரைகள் சுவைபட எழுதப்படுகின்றபோது சிறுகதை, நாவல் முதலானவை ஏற்படுத்துகின்ற ஈர்ப்பினை இத்துறையும் ஏற்படுத்துமென்பது தமிழ்நாட்டிலேற்பட்டுள்ள இத்துறை வளர்ச்சி மெய்ப்பித்துள்ளது. அங்கே நடக்கின்ற புத்தகச் சந்தைகளிலே இத்துறைசார் நூல்கள் அதிகளவு விற்கின்றமை நாமறிந்ததே. எவ்வாறாயினும் ஈழத்தில் வைரவநாதன் முதலான மிகச் சிலரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர்ந்த நாடுகளில் அ.முத்துலிங்கம் போன்ற மிகச் சிலருமே இத்துறையில் ஈடுபாட்டுடன் உழைத்துவருகின்றனர். அண்மைக் காலமாக, இவர்களோடு இணைந்து கொண்ட அடிகளார் செ.அன்புராசா அவர்கள் இத்தொகுப்பினூடாக தமது எழுத்தாற்ற லையும் சமூகப் பொறுப்புணர்வையும் மேலும் உறுதி செய்துள்ளார் என்று துணிந்து குறிப்பிடலாம்!

முன்னைய 'திருப்பத்திற்கான தேடல்கள்' நூல் போலன்றி இந்நூலிலுள்ள கட்டுரைகள் பொருளடிப்படையில் பல்துறை சார்ந்தவை; சமூகம் சார்ந்தவை, அரசியல் சார்ந்தவை, புலம்பெயர் சார்ந்தவை என வகைப்படுத்தப்படக் கூடியன.

பல்துறைசார் கட்டுரைகளின் தேர்வு இவ்வெழுத்தாளரின் அனுபவ முதிர்ச்சியை வெளிப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. முதற் கட்டுரை, நேரம் தவறாமையின் முக்கியத்துவத்தை உணர்த்து கின்றது. இளந்தலைமுறையினர் பொருட்படுத்தாத விடயங்களுள் இதுவும் முக்கியமானதொன்று. அரச சார்பற்ற நிறுவனங்களிலே பணியாற்றச் சென்ற இளந்தலைமுறையினர் சிலர் நேரத்திற்கு செல்லாமை காரணமாகத் தமது அரிய தொழில்வாய்ப்பை சில வருடங்களுக்கு முன்னர் இழக்க நேரிட்டமை பலருமறியாத விடயமாகும். மேனாட்டினரின் அசுர வேக வளர்ச்சிக்கான முக்கிய காரணங்களில் தலையாயிது நேர ஒழுங்கைக் கடைப்பிடிப்பது. இந்நிலையில் இவ்விடயம் முதற்கட்டுரையாகவிருப்பது பாராட்டிற் குரியது. முதற்கோலம் முற்றிலும் கோலமாகியிருக்கிறது.

இளைய தலைமுறையினர் பொதுக் கூட்டங்களுக்குச் சென்றால் அவர்களது பொறுமையைச் சோதிக்கின்ற விடயமாக விருப்பது, மேடைப்பேச்சாளரின் பேச்சுச் சுதந்திரம். நன்றியுரை கூறுபவர்கூட அதிக நேரத்தை விழுங்குவது நாம் சலித்துப்போன அனுபவமே. இரண்டாவது கட்டுரை இப்பொருள் பற்றியதே.

இன்றைய வீதி அபிவிருத்தி வேகம் ஏற்படுத்திய பாதக விளைவுகளுள் முதன்மையானது, அடிக்கடி நிகழ்கின்ற வீதி விபத்து களாகும். அலைபேசியில் கதைத்தவாறு வாகனத்தை செலுத்துகின்ற இளந் தலைமுறையினர் கூடப் பலருள்ளனர். மூன்றாவது கட்டுரை அதுபற்றியிருப்பது பொருத்தமானதுதான்.

கனவுலகங்களில் மிதப்பதும் அற்ப ஆசைகளைச் சுமப்பதும் இளந் தலைமுறையினரின் இயல்புகளுள் முக்கியமானது. அவற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிற்குத் தடைகள் ஏற்படும்போது அவர்களிடம் கோபம் பொங்கு வது கண்கூடு. அதுபற்றி அமைதியாக எடுத்துரைக்கின்றது அடுத்த கட்டுரை.

இன்றைய இளைஞர்கள் மத்தியிலே காதல் மோகம் எஸ்.எம்.எஸ் செய்தி வேகத்தைவிட வெகுவேகமாகப் பரவிவரு கின்றது. விபரீதங்கள் பல வகைகளில் நடைபெறுகின்றன. சில மாதங்களுக்கு முன் இந்நாட்டையே அதிர்வுக்குள்ளாக்கியது 'செங்கலடி படுகொலை' (அது பற்றி இந்நூலிலும் இடம்பெற்றுள் ளது). இந்நிலையில் இந்நூலிலுள்ள கட்டுரைகளுள் ஆறு கட்டுரை கள் இப்பொருள் பற்றி இருப்பது பயன்மிக்கது.

மேற்கூறியவாறான வேறு விடயங்களோடு சமூகப் பிரச்சி னைகள் சிலவும் கவனத்திற்குள்ளாகியிருக்கின்றன. இவற்று ளொன்று எமது சமூகத்தை செல்லரித்து வரும் சாதிப்பிரச்சினை. இடப்பெயர்வுகளிலும், அகதி முகாம்களிலும் ரொறண்ரோ வீதிகளிலும் கூட தமிழினம் சாதிக்கின்ற விடயமாக அதுவுள்ளது. அதுபற்றிய கட்டுரை தரும் கவன ஈர்ப்பு எமக்கு அவசியமானது.

கடந்த முப்பதாண்டு காலம் வழங்கிய பரிசுகளிலொன்று விதவைகளின் பெருக்கம். இன்று நாம் முக்கியமாகக் கவனஞ் செலுத்த வேண்டிய இவ்விடயத்திலும் நூலாசிரியர் கவனஞ் செலுத்தி எம்மைச் சிந்திக்க வைத்துள்ளார்.

இந்நூற்கட்டுரைகளுள் பிறிதொரு வகையானவை எமது அரசியல் சார்ந்தவை. இவ்வாறான கட்டுரைகள் எழுத பலர் அஞ்சுகின்ற நிலையிலும் இவ்வாறான கட்டுரைகள் நிலபேறுடை யன அல்ல என்று அறிந்துள்ள நிலையிலும் இது பற்றி கவனஞ் செலுத்தியிருப்பது நூலாசிரியரின் சமூகப் பொறுப்புணர்வையே காட்டி நிற்கின்றது. அரசியல்வாதிகளின் உண்மைத் தோற்றத்தை வெளிப்படுத்துவது தொடக்கம் எமது தமிழ்க் கட்சிகளை இடித்துரைத்து ஆற்றுப்படுத்துகின்ற விடயங்கள் வரை ஆசிரியரது கவனஞ் செல்கின்றது. மன்னார்ப் பிரதேச மொழி உணர்ச்சிக் கவிதை முன்னோடியான புலவர் குழந்தையின் குழந்தை இவ்வழிச் செல்வது வியப்பிற்குரியதன்று. அடுத்த இளந்தலைமுறையினர் தமது சமூகப் பொறுப்பைச் சிந்திக்கவும் இவை வழிகாட்டுமென்பது நிச்சயமே.

இன்றைய தமிழ்ச் சமூகத்தினர் பலரின் உன்னத இலட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்களிலொன்று, புலப்பெயர்வு வாழ்வு மீதான மோகம். அவ் வாழ்க்கை மாயமான், கானல் நீர், அக்கரைப்பச்சை என்பதெல்லாம் அங்கு சென்றபின் ஏற்படுகின்ற ஞானங்களே! இவ்விடயம் பற்றிய அக்கறை எமது எழுத்தாளர் பலருக்கில்லை. இவை சார்ந்த கட்டுரை கள் இன்றைய சமூகத்தினருக்கு அவசியம் வேண்டப்படுவது.

இன்று இளந் தலைமுறையினரிடம் அருகிவரும் நல்லியல்பு களுளொன்று வாசிப்புத்துறையில் நாட்டம் கொள்ளாமை. ஆசிரியர்கள், பெற்றோர்கள் முன்மாதிரியாக இல்லா நிலையில் வாசிப்பு மாதமென்பது வேடிக்கை நிகழ்வுகளின் உச்சமே. அதே வேளையில் வாசிப்பைத் தூண்டுவனவற்றுளொன்று, சுவைபட எழுதுதலாகும். இந்து மதத்தத்துவ விளக்கக் கட்டுரைகளைச் சுவையாக எழுதி வாசகர் மத்தியிலே செல்வாக்குப் பெற்றவர் கவிஞர் கண்ணதாசன். இந்நூலாசிரியரிடமும் சுவைபடக்கூறி வாசகரை ஈர்க்குமாற்றல் அதிகமுண்டு. இலகுவான நடை, கதைகள், துணுக்குகள், செய்திகள், எழுத்தாளரின் மேற்கோள்கள், சொந்த அனுபவங்கள் எனப் பல உத்திகளை திறம்படக் கையாள்வதில் முதிர்ச்சி பெற்றுள்ளார் இவ்வாசிரியர் என்பது மிகைக்கூற்றன்று.

மேற்கூறிய தனித்துவமான தமது எடுத்துரைப்புத் திறனைப் பயன்படுத்தி உடல்நலவியல், சூழலியல் தொடக்கம் எமது புதிய இளையதலைமுறையினர் அறியாத கடந்த முப்பதாண்டுகளின் வரலாற்று முக்கியத்துவம், நிகழ்வுகள் என்றவாறு இந்நூலாசிரியர் எழுதுவதற்குப் பலவுள்ளன. ஏனைய பணிகளைவிட இவ்வெழுத்துப் பணியில் தொடர்ந்தும் ஈடுபட வேண்டுமென்பது என்போன்றோரின் எதிர்பார்ப்பு!

வாழ்த்துக்களுடன்,

**பேராசிரியர் செ.யோகராசா**

*B.A. (Hons), M.A. (Jaffna), Ph.D. (Jaffna)*

கிழக்குப் பல்கலைக்கழகம்,

மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆழத்தில் கிடைக்கும் முத்து

அருட்பணியாளர் செ.அன்புராசா அவர்களின் 'அதிர்வுகள்' நூலை முழுவதும் வாசித்து முடித்த போது, தாகூர் அவர்களின் கவிதை ஒன்றே என் மனதில் மேலெழுந்து வந்து நின்றது.

எங்கு மனம் அச்சமற்றிருக்கிறதோ
எங்கு தலை நிமிர்ந்தே உள்ளதோ
எங்கு அறிவுக்குத் தடை இல்லையோ
எங்கு குறுகிய சுவர்களால் உலகம் துண்டாடப்பட
வில்லையே
எங்கு சத்தியத்தின் ஆழத்தில் இருந்து சொற்கள் ஊற்றெடுக்
கின்றனவோ
எங்கு சலியாத முயற்சி செம்மையை நோக்கித் தன்
கைகளை நீட்டுகிறதோ
எங்கு பகுத்தறிவு என்னும் தெளிந்த நீரோடை உயிரற்ற
பாரம்பரியம்
என்ற பாலை மணலுள் வழி தவறிப் போகவில்லையோ
எஞ்ஞான்றும் விரிந்து செல்லும் சிந்தனையையும்
செயலையும் நோக்கி,
எங்கு மனம் உன்னால் வழி நடத்தப்படுகிறதோ
அந்த விடுதலைச் சுவர்க்கத்துள் என் இறைவனே
நான் விழிப்படைவேனாக!

என்பது அந்த அற்புதமான கவிதை.

அருட்தந்தை அவர்கள் இந்தக் கட்டுரைகளை சமூகம் சார்ந்தவை, அரசியல் சார்ந்தவை, புலப்பெயர்வு சார்ந்தவை என்ற மூன்று பெரும் பிரிவுகளுக்குள் பிரித்துத் தந்திருந்தாலும் அந்தக் கட்டுரைகள் எல்லாவற்றிலும் 'ஊடுபாவாக' இருப்பது அந்த விடுதலைச் சுவர்க்கத்துள் நாம் எல்லோரும் விழிப்படைய வேண்டும் என்ற உன்னதக் குறிக்கோள்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித நேயம், மனித மேம்பாடு, மனித விழுமியச் சிறப்பு என்ற ஒரே நேர்கோட்டில் அமைந்த இலக்குகள் மீது இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளதால், சிந்தனைத் தெளிவுள்ள எந்த ஒரு வாசகனும், எவ்வித முரணுமின்றி ஒத்துணர்வுடன் அவரது எழுத்துடன் பயணிக்க முடிகிறது.

அதனால்தான் ஒரு விமர்சனக் கண்ணோட்டத்துடன் இந்த நூலை வாசிக்க முற்பட்ட எனக்கும்கூட, எந்த ஒரு இடத்திலும் அவரது கருத்துடன், கருத்து வேற்றுமை கொள்ள முடியவில்லை.

> "நவில் தொறும் நூல் நயம் போலும் பயில் தொறும்
> பண்புடையாளர் தொடர்பு" என்றான் வள்ளுவன்.

பண்புடைய மனிதர் ஒருவரை நான் அறிய நேர்ந்தது 2001ஆம் ஆண்டை அண்மித்த காலப்பகுதியில்! ஆம், அப்போது அருட்தந்தை செ.அன்புராசா அவர்கள் யாழ்.போதனா வைத்திய சாலை ஆன்ம குருவாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். நான் வலிகாமம் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிக் கொண்டு வடக்கு கிழக்கு மகாணத்தில் சீர்மிய ஆசிரியர்களின் பயிற்சி நெறிகளுக்குப் பொறுப்பாக இருந்தேன்.

அப்போதுதான் அவர் என்னை அணுகி, போதனா வைத்திய சாலையில் பணியாற்றும் தாதியர்களுக்கு வாரம் ஒரு முறை, நோயாளர்களுடன் தொடர்பாடல் என்ற விடயத்தில் பட்டறை நடத்துமாறு கேட்டுக்கொண்டார். தானே அந்தப் பட்டறைகளை ஒருங்கமைத்துத் தலைமைதாங்கி நடத்தி வந்தார்.

மனிதர்களின் உடல் நலம் பாதிக்கப்படுகின்றபோது, உள வலிமையும் குறைந்து போகிறது. அத்தகைய நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களுடன் அங்கு பணி யாற்றும் தாதியர்களும் மற்றவர்களும் அன்புடன் உரையாடுதல் முக்கியம் என்ற தெளிவான கருத்து நிலையுடனேயே என்னை அவர் அழைத்திருந்தார் என்பதை நான் புரிந்து கொண்டேன். அன்று என்னை மிகவும் ஈர்த்த அந்த மனிதாபிமானம் இன்று இந்த நூல் முழுவதும் விரவி நிற்பதைப் பார்க்கிறேன், பரவசப்படுகிறேன்.

அண்மையில் நான் சுகவீனமுற்ற யாழ்.போதனா வைத்திய சாலையின் இரண்டாம் இலக்க வாட்டில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். அங்கு பணியாற்றும் மூத்த தாதியர் சிலர் இன்னும் அருட்தந்தை அவர்கள் நடத்திய அந்தப் பட்டறையை நினைவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்கிறார்கள்.

ஆருளர் உம்போல் அரும்பணியாற்ற!

ஐயா நீர் வாழி பல்லாண்டு! என்று அன்றே நான் அவரை வாழ்த்தியுள்ளேன் மனதினுள். இன்றும் வாழ்த்துகிறேன், எனக்குத் தகுதி உண்டேல்!

ஆரவாரமாகப் புத்தகங்களை எழுதிவிட்டு, அதெல்லாம் கைகாட்டி மரம்! ஊருக்கடி உபதேசம்! எனக்கில்லை என்று வாழும் எழுத்தாளர்களுடன் எனக்கு ஒரு போதும் சமரசம் செய்து கொள்ள முடிந்ததில்லை. உலகில் அறிவாளிகள் மிகப் பலர் இருக்கிறார்கள், இருந்து விட்டுப்போகட்டும்! ஆனால் மனிதர்களாய் வாழ்பவர்கள் மிகக் குறைவு பாருங்கள்! மனிதர்களின் எழுத்தும் அவர்களது நடத்தையும் சமாந்தரமாக இருக்கும்!

"அருமையான மனிதர்களும் அவர்களின் கருத்துக்களும் நல்ல முத்துக்களைப் போல் ஆரவாரமின்றிக் கடலின் ஆழத்தில் கிடக்கும்" என்று அறிஞர் மு.வ.குறிப்பிடுவார். இந்த நூலை வாசிக்கும் போது அப்படிப்பல முத்துக்களைப் பொறுக்கலாம்.

அருட்தந்தை அவர்கள் தனது வாழ்நாளில் தொடர்ந்து மேற்கொண்டு வந்த தெரிவு செய்யப்பட்ட நூல்களின் வாசிப்பு முயற்சி சான்றாதாரங்களைப் பொருத்தமான இடத்தில் பயன் படுத்தும் இயல்பான திறன், தனது கருத்துக்களைத் தெளிவாகவும் உறுதியாகவும் சொல்லும் ஆளுமை ஆகியவை சேர்ந்து நூலை உயரத்தில் நிறுத்தியுள்ளன. கட்டுரைகளில் பொதுவாக ஒரு இறுக் கமான கட்டுக் கோப்புக் காணப்படுகிறது. கூறியது கூறல் என்னும் குற்றத்திற்கு ஆளாகாமல் தன்னைக் கவனமாகப் பேணிக் கொள் கிறார்.

தன்னுடைய கட்டுரைகளுக்கு வலுச் சேர்க்கும் வகையில் ஆசிரியர் கூறுகிற சொந்த வாழ்க்கை அனுபவங்கள் என்னை மிகவும் கவர்ந்தன. எடுத்த எடுப்பிலேயே முதலாவது கட்டுரையில் அவர் குறிப்பிடும் பங்குத்தந்தை, அரசியல் பிரமுகர் சம்பவம் அத்தகைய ஒன்று. புலம்பெயர்ந்த நாட்டில் சோறும் கறியும் வருகிறதென்று எதிர்பார்த்துப் பட்டினி கிடந்து பட்டறிவு பெற்ற சம்பவம் மற்றொன்று.

இவை ஒவ்வொன்றும் வாசகனின் மனதில் தொற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கும் செய்திகள் ஆழமானவை. அகலமானவை. இவற்றை இன்னொரு எழுத்தாளர் எழுத முடியாது. அவை அன்புராசாவின் சொந்தம். அதனால் அவற்றுக்கு வலிமை அதிகம்.

அவரது பரவலான வாசிப்புக் காரணமாக பேர்னாட்ஷாவின் வாழ்க்கை வரலாற்றில் இருந்தும், முல்லா கதைகளில் இருந்தும், இன்னும் பல இடங்களில் இருந்தும் அவர் எடுத்தாளும் விடயங்கள் நூலின் கனதியை அதிகரிக்கின்றன.

சில கட்டுரைகளின் முத்தாய்ப்பாக ஒரு நற்சிந்தனை வந்து அமைந்து அதன் பெறுமதியை அதிகரித்து விடுகிறது. ஆத்திரத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவீர்கள் என்ற கட்டுரையில் வரும் இந்தச் சிந்தனையைப் பாருங்கள்!

'ஒரு நல்ல மனிதனுடைய கோபம் ஒருசில கணங்களே நீடிக்கிறது. சராசரி மனிதனுடைய கோபம் ஒரு நாள் நீடிக்கிறது. மிகச் சாதாரண மனிதனுடைய கோபம் ஒரு கிழமை நீடிக்கிறது. ஒரு தீயவனுடைய கோபம் அவன் இறக்கும் வரையில் நீடிக்கிறது'.

இந்த அற்புதமான சிந்தனையை ஒவ்வொரு நாளும் வாசித்துக் கொள்வது நல்லது!

நூலாசிரியர் ஒரு ஆன்மிகவாதியாக இருந்தும் பைபிள் எடுத்துக் காட்டப்படும் இடங்கள் அளவுக்கு அதிகமாக இல்லை. கீதையும் எடுத்துப் பேசப்படுகிறது. அதனால் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் துணிவுடன் நூலுக்குள் போக முடிகிறது.

'இயேசு இரண்டு கள்வர்களுக்கு நடுவில் இறந்த' விடயத்தை அவர் இணைத்திருக்கும் முறையின் துணிச்சலை நான் நயந்தேன்.

தெரிவு செய்யப்பட்ட சமூக மேம்பாட்டுச் சிந்தனைகளுக்கான ஆதாரங்களை சினிமாப் படங்களில் இருந்து கொண்டுவரும் போது, 'குப்பையிலும் குன்று மணிகளைத் தவறவிட்டுவிடக் கூடாது' என்ற எண்ணம் மனதில் ஊடறுத்துச் செல்கிறது. சீர்காழி கோவிந்தராஜனின், சமரசம் உலாவும் இடமே என்ற அருமையான பாடல் அவர் நினைவுபடுத்தும் குன்றுமணி.

நூல் முழுதும் விரவி வரும் நகைச்சுவை உணர்வு போற்றுதற்குரியது. அது எடுத்த நூலை வைக்க முடியாது செய்து விடுகிறது. மைனர் குஞ்சுகளின் காதல் பற்றி எழுதும்போது "துடுப்பாட்டத்திற்குத்தான் துடியாயித் துடிப்பார்கள்" என்று மோனையுடன் கூறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் போலப் பல இடங்கள் உள்ளன. சில இடங்கள் சற்று மிகையோ என்றும் தோன்றுகிறது. அது வாசிப்பவர்களின் மனநிலையைப் பொறுத்தது.

"திருவருள், வாழ்க்கை, கீர்த்தி, தீரம், நல்லறிவு, வீரம், மருவு, பல்கலையின் சோதி, வல்லமை என்பதெல்லாம் வருவது ஞானத்தாலே" என்றான் பாரதி. நல்ல நூல்களை வாசிக்கும்போது இந்த ஞானம் வரும். அத்தகைய நூல்களில் ஒன்று 'அதிர்வுகள்' என்று துணிந்து கூறலாம்.

பண்புடைய மனிதர்களின் உறவு நல்லதாயினால் அவர்களைப் பிரித்து வைக்க முடியாது. ஆனால் இது போன்ற நூல்கள் நமக்காக வேண்டிய இடங்களில் வேண்டிய நேரங்களில் காத்திருக்கும். அதனால்தான் உயிருள்ள மனிதனை விட உயிரற்ற நூல்கள் உயர்ந்த இடத்தில்!

அருட்தந்தை செபமாலை அன்புராசா அவர்களின் எழுத்தாற்றல் ஓங்கி வளர்க! உலகம் பயன் பெறுக! தந்தை அருங்கலைஞர் செபமாலை எங்கிருந்தாலும் பெரிதுவப்பார்!

**கோகிலா மகேந்திரன்**

உளவள ஆலோசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசிப்புத் தொடர்ச்சியைப் பேண உதவும் பத்தி எழுத்துக்கள்

இலேசாக வாசிக்கப்படும் பத்திகள் ஈழத் தமிழர்கள் மத்தியில் குறைந்து வருகின்றன. இதன் அர்த்தம் ஆழமாக வாசிக்கப் படும் பத்திகள் அதிகரித்துவிட்டன என்பதல்ல. வாசிப்பே குறைந்து வருகிறது என்று பொருள். இணைய பிரயோகம் குறிப்பாக சமூக வலைத்தளங்களின் பரவலாக்கம், கேபிள் தொலைக் காட்சியின் விரிவாக்கம் இவையெல்லாவற்றையும் விட முக்கியமாக கடந்த ஐந்தாண்டுகளாக ஏற்பட்டிருக்கும் அரசியல் தலைமைத்துவ வெற்றி டம் போன்ற பல காரணிகளதும் திரண்ட விளைவாக ஈழத் தமிழர் கள் மத்தியில் வாசிப்புக் குறைந்து வருகிறது.

மூன்று தசாப்த கால ஆயுத மோதல்களுக்குப் பின் எதிர் பாராத விதமாக வந்த கடந்த ஐந்தாண்டு கால ஆயுத மோதல்கள் அற்ற ஒரு சூழலும் இதற்குக் காரணம். ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரான கடந்த ஐந்தாண்டு கால சூழலில் இளவயதினர் மத்தியில் இலட்சியப் பற்றற்ற ஒரு போக்கு அதிகம் வளர்ந்து வருகிறது. நுகர்வுத் தாகம் அதிகரித்த அளவுக்கு வாசிப்புத் தாகம் அதிகரிக்கவில்லை.

கடந்த சுமார் நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக ஈழத் தமிழர்கள் அதிகமதிகம் அரசியல் பிராணிகளாக மாறியிருக் கிறார்கள். ஆனால் அதே அளவுக்கு அரசியல் மயப்படவில்லை. எல்லாவற்றையும் அரசியலாகப் பார்க்கவும் வாழ்க்கையை, தனிப் பட்ட உறவுகளைக் கூட இராஜ தந்திரமாகக் கையாளவும் கற்றுக் கொண்ட அளவிற்கு அரசியற் தெளிவோ அறிவியல் வேட்கையோ அதிகரித்திருக்கவில்லை. அரசியல் பத்தியாளர்கள் அதிகரித்த அளவுக்கு சமூக பத்திகளை எழுதுவோர் அல்லது கார்ட்டூனிஸ்றகள் அல்லது நகைச்சுவை பத்திகளை எழுதுவோர் அதிகரித்திருக்க வில்லை.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலான ஆயுதப் போராட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானது பெருமைப்படத்தக்க அதே சமயம் தொடர்ச்சியறாது இயங்கும் ஒரு கார்ட்டூனிற்ரை ஏன் உருவாக்கவில்லை? சிரிக்கத் தெரியாத அரசியற் பிராணிகளா ஈழத் தமிழர்கள்?

எழுபதுகளிலும் எண்பதுகளிலும் வெளிவந்த அளவுக்கு அதற்குப் பின்னரான தசாப்தங்களில் இலக்கிய பத்திகளும் வரவில்லை, சினிமா பத்திகளும் வரவில்லை. இப்பொழுது உள்ளூர் பத்திரிகைகளில் வெளிவரும் ஆன்மீக பத்திகள்கூட சொந்த தயாரிப் புக்கள் அல்ல. தமிழ் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப் பட்டவைதான்.

சில உள்ளூர் பத்திரிகைகளில் சமூக விமர்சன பத்திகள் அல்லது அரச அலுவலகங்களில் நடக்கும் முறைகேடுகளை பற்றிய பத்திகள் ஆங்காங்கே வெளிவந்தன. ஆனால் அவைகூட பிந்நாளில் பத்திரிகை ஆசிரியர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காக அல்லது பத்திரிகை முதலாளிகளின் இலாப நட்டக் கணக்கு களுக்காக நிறுத்தப்பட்டன.

இப்படியாக மேற்சொன்னவை அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் கடந்த சில தசாப்தங்களாக ஈழத் தமிழர்கள் மத்தியில் அரசியல் பத்திகள் அதிகரித்த அளவுக்கு ஏனைய துறைசார் பத்திகள் வளரவில்லை என்பது தெரியவரும். உள்ளூர் பத்திரிகைகளில் வெளிவரும் இலேசான வாசிப்புக்குரிய பத்திகள்கூட பெரும்பாலும் இணையத்திலிருந்து திருடப்பட்டவைதான்.

இங்கு திருடப்பட்ட என்ற வார்த்தைக்கு அழுத்தம் அதிகம். ஏனெனில் இணைய மட்டத்திலேயே ஒரு பத்தியை மறுபிரசுரம் செய்யும் இணையங்கள் அதன் மூலத்தைக் குறிப்பிடுவதில்லை. அதேபோல இணையத்திலிருந்து அவற்றை தரவிறக்கம் செய்யும் உள்ளூர் பத்திரிகைகளும் அவற்றை மொட்டையாக அரூபமாக இணையம் என்றே போடுகின்றன. அதாவது யாரோ ஒரு பத்தி எழுத்தாளருடைய உழைப்பு திருடப்படுகிறது என்று பொருள்.

இவ்விதம் தரவிறக்கம் செய்யப்படுகின்ற அல்லது தமிழ் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற இலேசான பத்திகள் கூட ஒருவித புறத்தித் தன்மையோடுதான் காணப்படுகின்றன. சொந்த மண்ணின் சொந்த சூழலை பிரதிபலிக்காத மேற்படி பத்திகள் உள்ளூர் வாசகர்களை சுண்டி இழுக்கத் தவறுகின்றன.

ஏற்கனவே சமூக வலைத்தளங்களின் பெருக்கத்தால் ஒருவித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்க்ரோலிங் மனோநிலை வளர்ந்துவிட்டது. முக நூலில் ஆழமானதையும் ஆழமற்றதையும் ஒரு சேர மேலோட்டமாக வாசித்துக் கடக்கும் ஒரு மனோநிலையே அது. இது வாசிப்பை ஒரு தியானம்போல் அல்லது தவம்போல் அல்லது ஒரு கலையாக செய்யத் தேவையான பொறுமையை கவனக்குவிப்பை இல்லாமல் செய்துவிட்டது. இந்நிலையில் சொந்த மண்ணின் சொந்த பிரச்சினைகளை தொட்டு எழுதப்படாத புறத்தியான பத்திகளை மேலோட்டமாக நுனிப்புல் மேய்ந்து கடந்து போகும் வாசகர் தொகை அதிகரித்து வருகிறது.

இத்தகைய ஒரு வரண்ட வாசிப்புச் சூழலில்தான் இந்நூல் வெளிவருகிறது. அருட்பணியாளர் செ.அன்புராசாவால் எழுதப்பட்ட மாதாந்த பத்திகளின் தொகுப்பே இந்நூல். மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து கத்தோலிக்கத் திருச்சபையால் வெளியிடப்படும் மன்னா என்ற மாதப் பத்திரிகையில் எழுதப்பட்ட பத்திகள் இவை.

இவை இலேசான வாசிப்புக்குரியவை. ஆழமான கோட்பாட்டு விவாதங்களுக்குள் அதிகம் செல்லாதவை. சமகால பிரச்சினைகளை, உள்ளூர் நிலைமைகளை, உள்ளூர் உதாரணங்களோடு எடுத்துக் கூறுபவை. உலகளாவிய ஒரு மத நிறுவனத்தால் வெளியிடப்படும் பத்திரிகையில் எழுதப்படும் பத்திகள் என்ற போதிலும் முழுக்க முழுக்க உள்ளூர் நிலைமைகளையும் உள்ளூர் அரசியலையும் பிரதிபலிப்பவை.

இப்பத்திகள் அனைத்தும் இரண்டு பொதுப் பண்புகளைக் கொண்டிருக்கின்றன. முதலாவது அவை பேசும் அரசியல், இரண்டாவது அவை முன்வைக்கும் சமூக விமர்சனங்கள்.

முதலாவதாக அவை பேசும் அரசியல்:

கத்தோலிக்க திருச்சபைக்கென்று உலகளாவிய ஓர் அரசியல் நிகழ்ச்சி நிரல் உண்டு. அதே சமயம் இலங்கைத் தீவில் இன ரீதியாக பிளவுண்டிருக்கும் சமூகங்களைப் பொறுத்தவரை கத்தோலிக்க திருச்சபையும் அந்த உள்நாட்டு யதார்த்தங்களை பிரதிபலிக்கிறது. சிங்கள மக்கள் மத்தியிலுள்ள குறிப்பிடத்தக்களவு அருட்பணியாளர்களும் ஆயர்களும் தமது சமூகத்தின் இன யதார்த்தத்தை அதிகம் பிரதிபலிப்பதைப் போலவே தமிழ் மக்கள் மத்தியிலுள்ள குறிப்பிடத்தக்களவு அருட்பணியாளர்களும் ஆயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் தமது சமூகத்தின் அரசியல் அபிலாசைகளை அதிகம் பிரதிபலிக்கிறார்கள். மன்னா பத்திரிகை அப்படியொரு அரசியல் நிலைப்பாட்டை மிகத் தெளிவாக எடுத்திருக்கிறது. அருட்பணி யாளர் செ.அன்புராசாவும் தனது பத்திகளில் அந்த நிலைப்பாட்டை மிகத் துலக்கமாக வெளிப்படுத்துகிறார்.

இவ்விதம் தமிழ்த் தேசிய நோக்கு நிலையிலிருந்து அவர் தமிழ் அரசியலை எழுதுவதோடு தனது திருச்சபையின் மேய்ப்பர் களாக காணப்படும் சிங்கள ஆயர்கள் சிலரை நோக்கியும் கேள்வி களை எழுப்புகிறார். ஒரு மத நிறுவனத்தால் வெளியிடப்படும் பத்திரிகையில் எழுதப்படும் பத்திகள் இவ்வாறு துணிச்சலாக அரசியலைப் பேசுவது இப்பத்திகளை கவனிப்புக்குரியவை யாக்குகிறது. இத்தனைக்கும் இப்பத்திகள் அவற்றின் முதற் பொருளில் அரசியல் பத்திகள் அல்ல என்பதையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

இரண்டாவதாக இப்பத்திகள் முன்வைக்கும் விமர் சனங்கள்:

ஈழத் தமிழர்கள் தாயகத்திலும் புலம் பெயர்ந்த பரப்புக் களிலும் எதிர்கொள்ளும் சமகால பிரச்சினைகளை இப்பத்திகள் விவாதிக்கின்றன. ஓர் அருட்பணியாளராக அவர் சேவை புரிந்த எல்லா இடங்களிலும் அவர் தனது பங்கு மக்களின் அல்லது பொதுவாக ஈழத் தமிழர் சமூகத்தில் காணும் குற்றங் குறைகளை அனேகமானவற்றைப் பற்றி எழுதிச் செல்கிறார்.

இப்பத்திகள் முன்வைக்கும் சமூக நீதி குறித்து விவாதிப்பது இம்முன்னுரையின் நோக்கமன்று. ஆனால் இப்பத்திகள் பேசும் அரசியல் நீதி எனப்படுவது சமூக விடுதலையோடு கூடிய ஓர் அரசியல் நீதியே என்பது இப்பத்திகளை கவனிப்புக்குரியவை ஆக்குகிறது. ஓர் அருட்பணியாளராக அவர் கருதும் விடுதலை அதன் முதற்பொருளில் ஆன்மீக விடுதலையாகத்தான் இருக்க முடியும் என்பதனை மனதிற்கொண்டே இம்முன்னுரை எழுதப்படுகிறது. ஆனாலும் தான் நம்பும் சமூக நீதியோடு கூடிய ஓர் அரசியல் நீதிக்காக தான் சார்ந்த நிறுவனத்தையும் சுயவிமர்சனம் செய்யு மளவுக்கு துணிச்சலான பத்திகள் இவை. அதாவது தளம்பாத ஓர் அரசியல் நிலைப்பாட்டோடு சமூக நீதியோடு கூடிய ஓர் அரசியல் நீதியைப் பற்றிப் பேசுவது இப்பத்திகளுக்குரிய முக்கியத்துவம் ஆகும். தான் வாழும் சமூகத்தையும் காலத்தையும் சுய விமர்சனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு எதிர்கொள்ளும் இது போன்ற இலேசான பத்திகள் தொடக்க நிலை வாசகர்களை இலகுவாக பற்றிக் கொள்கின்றன.

இலேசான பத்திகள் உடனடி வாசிப்புக்குரியவை. அவற்றை வாசிப்பதற்கென்று நேரத்தை ஒதுக்கத் தேவையில்லை. அதற்கென்று மனத்தயாரிப்பும் தேவையில்லை. எனவே அதிகப் பிரயத்தனமின்றி வாசகர் அவற்றுள் நுழைய முடியும். இலேசாக எழுதப்படும் பத்திகளுக்குரிய முக்கியத்துவம் அதுதான். அவை தொடக்க நிலை வாசகர்களை வாசிக்கத் தூண்டுகின்றன. வாசிப்புப் பண்பாட்டின் முதற்கட்டம் அது. குறிப்பாக பத்திகளின் வாசகராக இருப்பது என்பது வாசிப்புத் தொடர்ச்சியைக் குறிக்கிறது. இளம் பராயத்தில் தொடர் கதைகளை வாசிப்பது தொடர் பத்திகளை வாசிப்பது என்பவற்றுக்கூடாக வாசிப்பின் தொடர்ச்சி கட்டி யெழுப்பப்படுகிறது. தொடர் வாசிப்பே வாசிப்பை ஒரு பழக்கமாக அல்லது பண்பாடாக, தவமாக அல்லது தியானமாக, ஒரு கலையாக வளர்த்தெடுக்கிறது. இது *கணினி மௌசை ஸ்க்ரோல்* பண்ணி கடப்பதைவிட ஆழமானது அல்லது தொலைக்காட்சி தொடர் களின் பின் இழுபட்டுச் செல்வதைவிட ஆழமானது. எனவே இலேசான பத்திகள் எனப்படுபவை அவற்றின் தொடர் விளைவு களை கருதிக் கூறின் ஆழமானவை. ஒரு முளைக்குப் பருக்கப்படும் நீரைப் போன்றவை, உரத்தைப் போன்றவை.

அருட்பணியாளர் செ.அன்புராசாவின் எழுத்துக்களும் அப்படிப்பட்டவையே. குறைந்தளவு அரசியல் மயப்பட்ட ஆனால் கூடுதலான அளவு அரசியல் பிராணிகளாகக் காணப்படும் ஒரு மக்கள் கூட்டத்தின் மீட்சிக்கு அவை அவசியமானவை. ஏனெனில் அறிவை ஆயுதமாகக் கையாள விழையும் எந்தவொரு சிறிய மக்கள் கூட்டமும் வாசிப்பதிலிருந்தே அதைத் தொடங்க வேண்டி யிருக்கும்.

**நிலாந்தன்**
*யாழ்ப்பாணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருட்பணி அன்புராசா அடிகள் செய்த அதிர்வுகளுக்கு வாழ்த்து

இன்முகம் இன்சொல் இனியவே செய்யும்
இயல்புடன் எம்மிடை உலவி
பன்முக ஈடு பாடுகள் கொண்டு
பணிபல புரியும் நல்லறிஞன்
அன்புரா சப்பேர் அடிகள்நம் வாழ்வுக்கு
ஆயின நெறிகளைத் தொகுத்து
சொன்ன நூல் செய்யும் 'அதிர்வுகள்'
யாவ ராலுமிங்குணர்ந்திடப் படுமாம்!

ஊழென ஒன்பான் கோளென நம்பும்
கொள்கையை ஒருபுறம் ஒதுக்கி
வாழுதற் கான வழிகளை எளிய
நடையிலே தந்திடல், மேற்கோள்
ஆளுதல், காணும் சீரழிவுகளை
அங்கதச் சுவையொடு சுட்டி,
மீளுதல் கூடும் எனுமொரு கருத்தை
மிகவலி யுறுத்தினர் அடிகள்!

உடையிலே மாற்றம் உணவிலே மாற்றம்
உறவிலே மாற்றம் யாழ்ப்பாணர்
தடையிலா தந்நாள் பருகிய பச்சைத்
தண்ணீரிலும் ஒரு மாற்றம்
விடைபெறுகையிலே *Bye* சொலல் கண்ணில்
படுகையில் *Hi* யுஎன மொழியும்
உடைபடும் நிலையை உணர்த்திட இந்நூல்
உதவிய அடிகளார் வாழ்க!

**கவிஞர் சோ.பத்மநாதன்**
*யாழ்ப்பாணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னுரை

*1998ஆம் ஆண்டு அருள்பணியாளனாகப் பணிகளை ஆரம் பித்தபோது என் முதல் பணியாக யாழ்.போதனா மருத்துவமனை யில் நோயாளர்களுக்கான ஆன்மீகப் பணியாக அமைத்தது. 1998 தொடக்கம் 2002 வரையான ஐந்து ஆண்டுகள் இப்பணியில் கரைந்தேன்!*

*யாழ்.போதனா மருத்துவமனையில் மோதல்களில் கொல் லப்பட்டவர்களை ரொபிகளைச் சுற்றி வைத்திருப்பதுபோல உடலங்களை கறுப்பு நிறப் பொலித்தினால் சுற்றி, அடுக்கி நாள் கணக்கில் வைக்கப்பட்டிருந்த நாள்கள் இலகுவாக மறக்கக்கூடி யவையல்ல! யாழ்.குடா நாட்டிற்குள்ளேயே இடம்பெயர்வு களாலும், ஆயுத மோதல்களாலும் அல்லோல கல்லோலப்பட்ட நாள்கள் அவை.*

*வாழ்வில் பெறவேண்டி அனேக அனுபவங்களை இவ்வைந் தாண்டு கால மருத்துவமனைப் பணியில் ஆன்ம குருவாக இருந்து பெற வாய்ப்புப் பெற்றேன்.*

*அடுத்து, மறையுரைஞராக 2003 தொடக்கம் 2007 வரை யான ஐந்தாண்டுகள் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று பணியாற்ற வாய்ப்புக் கிடைத்தது. இக்காலப்பகுதியில்தான் ஆழிப்பேரலையின் அனர்த்தம் ஏற்பட்டது.*

*ஆழிப்பேரலையால் அவதியுற்ற, அல்லலுற்ற மக்களுடன் பணியாற்றிய அந்நாள்கள், என் பணிவாழ்வின் ஆழ்ந்த அர்த்தத்தை உணர்த்திய நாள்களாக அமைந்திருந்தன.*

*தொடர்ந்து பிரான்சு நாட்டின் லூர்து திருத்தலத்தில் 2008 தொடக்கம் 2010 ஆகிய மூன்றாண்டுகள் புலம்பெயர் தமிழ்த் திருப்பயணிகளின் ஆன்ம குருவாகப் பணியாற்றினேன்.*

*மேற்சொன்ன காலங்களிலும், பணித்தளங்களிலும் நான்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொண்ட அனுபவங்களையும், கற்றுக்கொண்ட பாடங்களையும் இன்றைய நிகழ்வுகளோடு சேர்த்துச் சிந்திக்கச் செய்தது.

குறிப்பாக லூர்து திருத்தலத்தில் மூன்று ஆண்டுகள் பணியாற்றிக்கொண்டிருந்தபோது இலங்கையில் கடுமையான போர் நடந்து கொண்டிருந்தது. 2008, 2009 ஆகிய ஆண்டுகளின் நிகழ்வுகளை எழுதவேண்டும் எனத் துடித்துக் கொண்டிருந்தேன்.

இருப்பினும், "வெளிநாட்டிலிருந்து எல்லாரும் எழுதலாம் தான்..." என்ற விமர்சனத்தைத் தவிர்ப்பதற்காக, நாட்டுக்குச் சென்று எழுதலாம் எனக் காத்திருந்தேன்.

2011ஆம் ஆண்டு பிரான்சில் இருந்து நாடு திரும்பியதும் உள்ளத்தில் உறைந்து கிடந்த உணர்வுகளும் உண்மைகளும் உருவெடுத்தன. அவற்றுக்கு உருவம்கொடுக்க தமிழ்நேசன் அடிகள் மன்னா பத்திரிகையில் மீண்டும் எழுத ஒரு வாய்ப்பினைத் தந்தார்: அதனால் விளைந்தவை இவை!

குறிப்பாக 2009 வைகாசித் திங்கள் முள்ளிவாய்க்காலில் மக்கள் பட்ட பாடுகள், சுமந்த சிலுவைகள் என் இரத்தத்தை உறைய வைத்தது போன்ற உணர்வைத் தந்தது. அதன் விளைவுதான் அரசியல் கட்டுரைகளாக விளைந்தவை. இக்கால அரசியலோடு இணைந்த பல சிந்தனைகளை இக்கட்டுரைகளில் நீங்கள் தரிசிக்கலாம்.

இன்றைய அரசியலிலும், எம் சமூக - சமய கட்டமைப்புக்களிலும் மலிந்து காணப்படும் அதிகாரத்திற்கான போட்டி, கதிரைகளுக்கான அடிபாடு போன்றவைகளைக் கண்டும் காணாமல் என்னால் இருக்க முடியவில்லை. அதனால் எழுந்தவை சில அதிகாரங்கள்!

இவ்வாறு, என் மனதுக்குள்ளே போட்டு அமத்தி அமத்தி வைத்திருந்த பல உண்மை உணர்வுகளுக்கு ஒத்தணம் கொடுப்பதாகவும் சில கட்டுரைகளை அமைக்கவேண்டியதாயிற்று!

இன்றைய போர்க்காலத்தின் பின்னரான குடும்ப நிலை, கல்வி நிலை, காதல் விவகாரம், வீதி விபத்துக்கள், பெண்களின் நிலை போன்ற நிலமைகளைக் கருத்தில் கொண்டு சமூகத்தை முதன்மைப்படுத்தி இன்னும் சிலவற்றை வரைந்தேன்.

நான் எழுதியவற்றை வாசித்து வந்தவர்களின் கருத்துக்களில் இருந்தும் விமர்சனங்களில் இருந்தும் நாமும் நாம் வாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகங்களும் வளர்வதற்கு இன்னும் எவ்வளவோ இடமிருக்கிறது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

பலர் உள்நாட்டில் இருந்தும் புலம்பெயர் நிலத்தில் இருந்தும் இக்கட்டுரைகளைப் பற்றிய விமர்சனங்களையும் அபிப்பிராயங்களையும் தெருவித்ததில் இருந்து இக்கட்டுரைகள் வாசகர்களின் சிந்தனை மாற்றத்தில் மிகுந்த செல்வாக்குச் செலுத்தியிருந்தன என்பது தெளிவாகிறது.

இவர்களின் பின்னூட்டல்கள், மேலும் எழுதவும், எழுதுவதை ஓர் அர்ப்பணிப்பு மிக்க பணியாகச் செய்யவும், இதனால் சமூக மாற்றத்திற்கான சிந்தனைகளை விதைக்கத் தூண்டுதல் கிடைப்பதையும் உணர்ந்தேன்.

சிறப்பாக, இக்கட்டுரைகள் பற்றிய விமர்சனங்களையும் அபிப்பிரயாங்களையும் நேரிலும், தொலைபேசி மூலமாகவும், கடிதம் ஊடாகவும் தெரிவித்த அத்தனை பேருக்கும் நான் நன்றிக்கடன்பட்டவன். அவர்களின் கருத்துக்கள் இப்பணியில் என்னை உறுதிப்படுத்துவதை உணர்கிறேன்.

மேலும், புலம்பெயர் மண்ணில் பலதரப்பட்டவர்களுடன் பழகவும் வாழவும் கிடைத்த சந்தர்ப்பத்தினால் நம்மவர்களின் புலம்பெயர் வாழ்க்கையைக் கொஞ்சம் என் சிந்தனைக்கு உட்படுத்தியதன் விளைவுதான் புலம்பெயர் கட்டுரைகள்.

இவ்வாறு நான் பெற்றுக் கொண்ட அனுபவங்களை பலதரப்பட்ட அறிஞர்களின் அனுபவங்களுடன் சேர்த்துப் பார்த்து எழுத விளைந்ததன் முயற்சிதான் இந்நூலில் உள்ள முப்பத்தி மூன்று கட்டுரைகளும்.

இக்கட்டுரைகள் அனைத்தையும் முழுமையாக வாசித்து பல கோணங்களில் இருந்து மிகவும் ஆழமான கருத்துக்களைப் பொதிந்து அணிந்துரைகளை வழங்கிய என் மதிப்பிற்குரிய பேராசிரியர் திரு. யோகராசா அவர்களுக்கும், என் அன்புக்குரிய மூத்த எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரன் அம்மையார் அவர்களுக்கும், என் கவனத்திற்குரிய நாடறிந்த அரசியல் விமர்சகர் திரு. நிலாந்தன் அவர்களுக்கும் என் விசேட நன்றியினைத் தெரிவித்து நிற்கின்றேன்.

இதனை அச்சேற்ற அனுமதி தந்த அமலமரித்தியாகிகளின் முதல்வர் அருள்பணி செ.எட்வின் வசந்தராஜா அவர்களுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுற கணனியில் வடிவமைத்த 'சொல்லோவியன்' கலையார்வன் கு.இராயப்பு, ஒப்புநோக்குநர் திரு. கி.செல்மர் எமில், அருள்திரு போல் ஜயந்தன் பச்சேக், அ.ம.தி., திருமதி மேரி மக்டலின் ஜெயக்கெனடி ஆகியோருக்கும், அச்சுக்கலை இரசனையுடன் இந்நூலை அச்சேற்றிய ஜே.எஸ்.பிறின்றஸ் ஆகியோருக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

நிறைவாக,

நான் கண்டவற்றை, கேட்டவற்றை, படித்தவற்றை, உணர்ந்தவற்றை, அனுபவித்தவற்றை வாழ்க்கைச் சூழலோடு சேர்த்துச் சிந்தித்ததன் விளைவுதான் இப்பந்திகள். உங்களைப்போல நானும் அர்த்தமுள்ள வாழ்வு வாழத்துடிக்கும் ஒரு சாதாரண மனிதாபிமானி என்பதை மறந்துவிடாதீர்கள். உங்கள் வாழ்க்கை யில் இந்நூல் சில தெளிவுகளைப் பெறவும், சில தெரிவுகளைச் செய்யவும், சில விழுமியங்களை வளர்த்துக் கொள்ளவும், சில பற்றுறுதிகளில் வளரவும் உதவும் என்ற நம்பிக்கையில் உள்நுழைய அழைக்கின்றேன்.

**செ.அன்புராசா, அ.ம.தி. அடிகள்**

அதிபர்
புனித வளனார் அ.ம.தி. குருமடம்
சுவாமியார் வீதி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.
anpuomi1970@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்ளே...

## சமூகம் சார்ந்தவை


| | |
|---|---|
| 01. பிந்திச் செல்வது நம் பெருமை ஆயிற்று | 01 |
| 02. தயவுசெய்து அளவோடு பேசுங்கள் | 06 |
| 03. அதிவேகம் ஆபத்து நிறைந்தது | 11 |
| 04. ஆத்திரத்தை ஆக்கிரமியுங்கள் | 18 |
| 05. பிள்ளைகள் எம் பெரும் சொத்துக்கள் | 25 |
| 06. காதல் பற்றிக் கலந்துரையாடுங்கள் | 32 |
| 07. காதலைக் காதலியுங்கள் | 39 |
| 08. பாலியல் கல்வி பாடமாகட்டும் | 45 |
| 09. கல்வியைத் தவம் ஆக்குங்கள் | 52 |
| 10. கல்விக் கலாசாரம் காக்கப்படட்டும் | 58 |
| 11. வாழ்க்கைத் தெரிவுக்கான முன் தீர்மானம் | 65 |
| 12. சாதிச் சாக்கடையில் நீச்சலாடுவதா? | 72 |
| 13. அகமாற்றம் அவசியம் | 79 |
| 14. வசந்தகால வடலிப் பருவம் | 88 |
| 15. உருவாகுவோம்! உருவாக்குவோம்! | 94 |
| 16. கணவனை இழந்தவர்களுக்கு வாழ்வாதாரம் | 101 |


## அரசியல் சார்ந்தவை


| | |
|---|---|
| 17. இறைவாக்கினன் மனம் வேண்டும் | 110 |
| 18. உரிமைகளுக்காகப் பாடுபடுங்கள் | 115 |
| 19. சலுகைகளுக்கு விலைபோகக் கூடாது | 120 |
| 20. அரசியல் தீர்வை நோக்கி | 123 |
| 21. உசுப்பேத்திவிட்டு ஓடுகாலி ஆக்காதீர்கள் | 129 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. ஒருமித்து ஒன்றாய் செயலாற்றுங்கள் 135
23. நீதியையும் உண்மையையும் நிலைநாட்டுங்கள் 142
24. நீதியின்படி செயற்படுங்கள் 149
25. எம் வாழ்வுரிமைக்காகப் போராடுங்கள் 156
26. வாக்களிக்க வழுவாதீர்கள் 164
27. முதல்வர்களாக முண்டியடிக்கக் கூடாது 170
28. கூட்டமைப்பினரே கவனியுங்கள்! 176

## புலம்பெயர்வு சார்ந்தவை

29. காலஞ்சென்ற கலாசாரக் கூறொன்று 183
30. புலம்பெயர் வாழ்வைப் புரிந்துகொள்ளுங்கள் 188
31. புலம்பெயர் நிலத்தில் காசு காய்க்கிறதா? 194
32. பணம் பகட்டுக்கல்லவே 200
33. வெளிநாட்டு வெறி வேண்டாம் 207

## அதிர்வுகளின் அதிர்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் சார்ந்தவை

# பிந்திச் செல்வது நம் பெருமை ஆயிற்று



## 01

**பிந்திவந்து பிதற்றாதீர்**

ஓர் அருள்பணியாளரின் இருபத்தைந்து ஆண்டுப் பங்குப் பணியைப் பாராட்டும் முகமாக சிறிய அளவிலான வெள்ளிவிழா ஒழுங்கு செய்யப்பட்டது. அப்பங்கைச் சேர்ந்த அரசியல் பிரமுகர் ஒருவர், தான்தான் அவ்விழாவில் அருள்பணியாளரைப் பற்றிப் பேசவேண்டும் என வலுக் கட்டாயமாக நின்றதால் பங்குப் பேரவையினர் விரும்பாவிட்டாலும் அப்பொறுப்பை அவரிடமே விட்டுவிட்டனர்.

குறிப்பிட்ட நாளில் விழா ஆரம்பமாகியது. அரசியல் பிரமுகர் வழமை போலக் குறிப்பிட்ட நேரத்தில் சமுகமளிக்கவில்லை. நிகழ்ச்சிநிரலின்படி விழாவின் இறுதி நிகழ்வாக அருள்பணியாளரின் உரை இடம்பெற்றது. அவர் தம் உரையை, "இப்பங்கைப் பற்றிய என் முதல் மனப்பதிவை இப்பங்கிற்கு வந்த முதல் நாளில் நான் கேட்ட முதல் பாவசங்கீர்த்தனத்தில் இருந்துதான் பெற்றுக்கொண்டேன். பாவசங்கீர்த்தனத்தின் இரகசியத் (மறைபொருளின்) தன்மையையும் புனிதத்துவத்தையும் மனதில் வைத்துக்கொண்டு இதனைப் பகிர்கிறேன்" என ஆரம்பித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில், " 'மிக மோசமான ஒரு பங்கிற்கு வந்திருக்கிறேன்' என்றுதான் முதலில் நினைத்துக் கொண்டேன். காரணம், நான் உங்கள் பங்கிற்கு வந்த முதல் நாளில் முதன் முதலாக பாவசங்கீர்த்தனத்திற்கு வந்தவர், தான் பெரிய கொள்ளையில் ஈடுபட்டதாகவும், வரும் வழியில் பொலிஸ்காரர்கள் வழிமறிக்கையில் அவர்களில் ஒருவனைக் கொன்றதாகவும் குறிப்பிட்டார். மேலும், பல களவுகள் செய்ததாகவும், தம்முடன் வேலை செய்வோருடன் தகாத முறையில் நடந்து கொள்வதாகவும், குடியிலும் வெறியிலும் களியாட்டத்திலும் தான் இருப்பதாகவும் குறிப்பிட்டார். 'இவனைப் போலத்தான் இப்பங்கு மக்களும் இருப்பார்கள். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்தானே' என அப்போது எண்ணிக் கொண்டேன். இதனால், உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் உங்களைப் பற்றி – உங்கள் பங்கு பற்றி, மிக மோசமான – எதிர்மறை எண்ணத்தைத்தான் கொண்டிருந்தேன். எனினும், நீங்கள் எவ்வளவு அன்பான, புரிந்துணர்வுள்ள மக்கள் என்பதை நாட்கள் செல்லச்செல்ல உணர்ந்து கொண்டேன். அந்த வகையில் இப்பங்கில் உங்களோடு சேர்ந்து பணிசெய்யக் கொடுத்து வைத்தவன்" எனக்கூறி அமர்ந்தார்.

பங்குத்தந்தையின் உரை நிறைவுறும் அவ்வேளையில், அரசியல் பிரமுகர் தாம் பிந்தி வருவதற்கான காரணங்களைக் கையோடு கட்டிக் கொண்டு, அலுமினியக் கடைக்குள் யானை புகுந்தது போல படை பட்டாளங் களுடன் விழா மண்டபத்துக்குள் நுழைந்தார்.

அவருடைய நேரம் – சந்தர்ப்பம் முடிவடைந்து போனாலும் தாம் உரையாற்றவே வேண்டும் எனப் பிடிவாதம் பிடித்துக்கொண்டு தம் உரையைத் தொடங்கினார். தமக்கு முன் உரையாற்றிய பங்குத்தந்தை என்ன சொன்னார் என்பதை அறிந்திராத அரசியல்வாதி தன் பங்கு மக்களையும் பங்குத் தந்தையையும் விழித்து, "எங்கள் பங்குத்தந்தை, எமது பங்கிற்கு வந்த அந்த முதல் நாளை நீங்கள் மறந்தாலும் நான் மறக்க மாட்டேன், என்னால் மறக்கவும் முடியாது! ஏனென்றால், எங்கள் பங்குத்தந்தை எம் பங்குக்கு வந்த முதல் நாளில், முதல் ஆளாக பாவசங்கீர்த்தனத்திற்குச் சென்ற பெருமை எனக்குத்தான் உண்டு..." என்ற போது பங்குத்தந்தையின் கண்கள் உட்பட எல்லாருடைய கண்களும் பிதுங்கின, அரசியல் பிரமுகரின் கண்களைத் தவிர!

**பிந்திச் செல்வதே பெருமை!**

நேரத்திற்கு நிகழ்வுகளுக்கு நிற்கவேண்டும் என்பதன் பெறுமதி இப்போது நன்கு புரிந்திருக்கும். பிந்தி வந்து, பிந்தி வந்ததற்கான அறுபத்தெட்டுக் காரணங்களை அநேகர் சொல்வார்கள். நிகழ்வுக்குப் பிந்தி வருகின்றவர்கள் பொதுவாகச் சொல்லுகின்ற எல்லாருக்கும் நன்கு தெரிந்த காரணம், 'தவிர்க்க முடியாத காரணம்' என்பதாகும்.

'தவிர்க்க முடியாத காரணங்கள்' ஓரிரு சந்தர்ப்பங்களில் ஏற்படலாம். அதெப்படி, 'தவிர்க்க முடியாத காரணங்கள்' மேற்சொன்ன அரசியல்வாதியைப் போன்றவர்கள் போகின்ற இடங்களைச் சுற்றியும், இவர்கள் தொடங்குகின்ற நிகழ்வுகளைச் சுற்றியும் இருக்கின்றன என்பதனைத்தான் விளங்க முடியாதுள்ளது.

சரி, அப்படிச் சொல்லிவிட்டு 'சும்மா' என்றாலும் வாயைப் பொத்திக் கொண்டு – மன்னிக்கவும் – வாயை வைத்துக் கொண்டு இருக்க வேண்டியது தானே! இப்படிப்பட்டவர்கள், அப்படியும் இருக்க மாட்டார்கள். தங்களின் இருப்பைக் காட்ட முற்பட்டு மேற்குறிப்பிட்ட அரசியல் பிரமுகரைப்போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொக்கயீனப்படுவார்கள் – வெட்கத்துக்கு உரியவர்கள் ஆவார்கள்.

"ஒன்பது மணிக் கூட்டத்தை எத்தனை மணிக்குத் தொடங்குவீர்கள்" என ஒருவர் என் நண்பர் ஒருவரிடம் கேட்ட ஞாபகம் இருக்கிறது.




இதேபோன்ற இன்னுமொரு சம்பவம் இருக்கிறது. ஒரு பங்குக் குருவின் அழைப்பில் திருப்பலி நிறைவேற்றச் சென்றிருந்தேன். ஒருவர், "ஐந்து மணித் திருப்பலியை எத்தனை மணிக்கு வைப்பீங்க?" எனக் கேட்டார். எனக்குத் தலை சுற்றியது. சுதாகரித்துக் கொண்டு, "ஐந்துமணித் திருப்பலி ஐந்துமணிக்குத்தான்" என்றேன். அவர், "ஆனால், சனம் வராது" என்றார். "பரவாயில்லை, நீங்களும் நானும் நிற்கிறோம்தானே. குறித்த நேரத்தில் தொடங்கலாம்" என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டேன். திருப்பலிக்கு, அவரைத் தவிர வேறு சிலர் குறித்த நேரத்தில் சமுகமளித்திருந்தார்கள்.

**ஈழத்திலும், வந்து இருக்கிற இடத்திலும் பிந்தித்தான்**

பிரான்சில் லூர்து திருத்தலத்தில் பணிசெய்த நாட்களில் (2008 – 2010 வரை) நிகழ்வுகளை குறித்த நேரத்தில் தொடங்கி குறித்த நேரத்தில் முடிக்க வேண்டியிருந்தது. அதனால், வருகின்ற தமிழ்த் திருப்பயணிகள் நிகழ்வுகளுக்கு குறித்த நேரத்தில் நிற்க வேண்டிய அவசியத்தைச் சுருக்கமாக அடிக்கடி நினைவு ஊட்டுவதுண்டு.

குறித்த நேரத்தில் நிகழ்வுகளுக்கு நிற்கவேண்டும் என்பதை எல்லாருமே விரும்பி ஏற்றுக் கொள்வார்கள். ஆனால், பெரும்பாலானோர் குறித்த நேரத்தில் நிற்க மாட்டார்கள்.

சிலர் தனிப்பட்ட முறையில் சந்தித்து, "அது நல்லது *பாதர்*, அப்பிடித்தான் நீங்க இருக்க வேணும். நேரத்தில, நீங்கள் *கட் அன்ட் றயிற்றாத்தான்* இருக்க வேணும். இல்லாது போனால், உங்களால ஒண்டும் செய்ய ஏலாது. அதிலையும் நம்மட சனங்களோட...!" என்று தொடங்குபவர்கள், "அது நீங்க எதைச் செய்தாலும், இந்த விசயத்தில, நம்மட சனம் திருந்தவே திருந்தாது, திருத்தவும் முடியாது!" என்று கூறி முடிப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ந்து பார்த்தால் இப்படிச் சொல்பவர்கள்தான் பெரும்பாலும் குறித்த நேரத்தில் நிகழ்வுக்கு நிற்க முடியாதவர்களாக அல்லது அடியோடு நிகழ்வுகளுக்கு வராதவர்களாக இருப்பார்கள்.

மீண்டும் இவர்களைச் சந்திக்கின்றபோது, கேட்காமலே பிந்தி வந்ததற்கான காரணத்தைக் கூறத்தொடங்கி விடுவார்கள், "*கோட்டலில்* சாப்பாடு பிந்தீற்றிது!", "பிள்ளைகள வெளிக்கிடுத்திறதில நேரம் போயிற்றுது!", "*றபிக்கில* மாட்டீற்றம்!", "நாங்க நேரத்துக்கு வந்திற்றம், ஆனா கடையில நிண்டம்!", "நாங்க நினச்சம், நீங்க பிந்தி வருவீங்க எண்டு!" எனப் பல காரணங்களை வடிவாக இறைச்சிக் கறியைக் காச்சுவதுபோல, கூட்டி வதக்கித் தாளித்துச் சொல்வார்கள்.

இத்தோடு, "ஒருநாளும் பிந்திறதில்ல, இண்டைக்குத்தான்... அதுவும் இதுகளால!" என்று இறைச்சிக் கறியோடு ஒரு பொரியலும் சாப்பாட்டில் சேர்ப்பதுபோல விடுகதை எல்லாம் விடுவார்கள். ஏதோ, அவர் குறித்த நேரத்தில் நிற்பவர்போலவும் இவரோடு சேர்ந்து வந்தவர்களால்தான், தான் பிந்தியதாகவும் உரையாடலை முடித்துவிடுவார்கள்.

இதன்பின், இவர்களோடு எதைக் கதைப்பது — என்னத்தைப் பேசுவது? நடுவர் ஒருவரை வைத்து நியாயங்களை விவாதித்தாலும் அவர்கள்தான் இறுதியில் வெற்றி பெறுவார்கள். அந்த அளவிற்கு அவர்கள் பிந்தி வந்ததற்கான நியாயங்கள் வலுப்பெற்றிருக்கும்.

இவ்விடயத்தில் மேலைத்தேய மக்கள் நேரத்தை மிகக் கர்ச்சிதமாகக் கடைப் பிடிக்கிறார்கள்தானே! அதனால்தான், அவர்கள் வாழ்க்கையில் முன்னேறிக்கொண்டு போகின்றார்கள்.

அவர்களும் *கொட்டலில்* சாப்பிடுகிறார்கள், அவர்களும் பிள்ளை களைப் பெறுகிறார்கள், அவர்களும் பிள்ளைகளை 'வெளிக்கிடுத்துகிறார்கள்', அவர்களும் *றபிக்கில்* அகப்படுகிறார்கள், அவர்களும் கடைக்குப் போகிறார்கள். ஆனால், அவர்கள் எல்லாரும் (விதிவிலக்காக ஒருசிலரைத் தவிர) குறித்த நேரத்தில் குறித்த நிகழ்வுகளுக்கு நிற்கிறார்கள். எப்படி அவர்களால் குறித்த நேரத்தில் நிற்கவும், நம்மவர்களால் முடியாமலும் போகிறது?

**செய்வதறியாது சினந்து நிற்கும் குரு(வி)**

நம்மவர்களின் திருமணத் திருப்பலிகள் மேற்சொன்ன விடயத்தை விளக்குவதற்கு அதிசிறந்த உதாரணங்களாகும். திருப்பலி, 09 மணிக் கென்றால் 9.30க்கும், 10 மணிக்கென்றால் 11 மணிக்கும், 10.45 மணிக் கென்றால் 12 மணிக்கும் வருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்களிடம் அங்கு கேட்டால், "*றபிக்கில அம்பிட்டிட்டம்*" என்பார்கள். இங்கு, ஈழத்தில் வாழும் எம்மவர்களிடம் வினவினால், "*வீடியோகாரன்* பிந்தீற்றான்," என்பார்கள்.

இத்தனைக்கும் திருமண வீட்டுக்காரர்கள் விரும்பும், அவர்களுக்கு வசதியான – ஏற்ற நேரத்தில்தான் திருப்பலி நிறைவேற்றும் நேரம் அநேகமாகத் தீர்மானிக்கப்படுகிறது.

அப்படியிருந்தும், குறித்த நேரத்தில் கோவிலில் ஒரு குருவியைக் கூட காண முடியாது. விதிவிலக்காக, ஓரே ஒரு குரு(வி) மட்டும் சோர்ந்து போய், ஒரு புறத்தில் குந்திக் கொண்டு, செய்வதறியாது, சினந்து நிற்கும்!

**'பழக்கதோஷத்தை கழிக்கிற' வரையில்...!**

பிந்திப்பிந்தி வருவதற்குக் காரணம் வேறொன்றுமல்ல, நம்முடைய பழக்கதோஷம்தான் என்பது என் முடிபு! இப்பழக்கதோஷத்தைக் கழிக்கிற வரையில் இதிலிருந்து நாம் மீள முடியாது!

மானம் (மானம் என்றால் இங்கு வானம் என்று பொருள்) இருக்கும் வரை மழை போகாது, மண்டை இருக்கும் வரை சளி போகாது என்ற ஒரு பழமொழியைச் சொல்வார்கள் நம் முன்னோர்கள்.

நிகழ்வுகளுக்குப் பிந்திச் செல்லும் 'பழக்கதோஷத்தைக் கழிக்கும்' வரையில் வாழ்க்கை ஓட்டத்தில் நாம் பிந்தியவர்கள்தான்! ஒருவகையில் தோற்றுப் போனவர்களும்கூட!

நமது தமிழர் போராட்டத்திற்கும் இந்த நேரத்திற்கும் (காலத்திற்கும்) இடையே நிறையத் தொடர்பு இருப்பதுபோலத்தான் தெரிகிறது. காலத்தின் அறிகுறிகளைக் கணிப்பதில் நாங்களும், அவர்களும் 'நிபுணர்கள்' என்றுதான் நினைத்திருந்தோம்.

'நினைப்பு', பிழைப்பைக் கெடுத்ததாம்! தமிழர்களாகிய நம்முடைய வாழ்வில் இது உண்மையாகிவிட்டதோ?

மன்னா, தை 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயவுசெய்து அளவோடு பேசுங்கள்




02

**'சுருக்கமாக சுவையாகப் பேசுங்க'**

குறிப்பிட்ட ஒரு நிகழ்வில் உரை நிகழ்த்த இருந்த ஒருவர் பார்வையாளர்களைப் பார்த்து, "நான் எவ்வளவு நேரம் உரையாற்றலாம்?" என இரண்டு, மூன்று தடவைகள் கேட்டுவிட்டார். இவரின் 'கடி உரையை' ஏற்கெனவே அறிந்திருந்தபடியால் அம்மக்களுள் ஒருவன் எழுந்து துணிவோடு, "ஐயா நீங்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் உரையாற்றலாம்! ஆனால், நாங்கள் அரை மணித்தியாலந்தான் இருப்போம்!" என்று மரியாதையோடு சொன்னான் மக்களின் சார்பாக. எல்லாரும் கைதட்டி ஆர்ப்பரித்ததில் இருந்து மக்களின் மனநிலை பேச்சாளருக்குப் புரிந்தது.

**நேரத்தை கவனத்தில் கொள்வதற்குக் கோடி நன்றி**

லூர்து திருத்தலத்தில் மூன்று ஆண்டுகளாகப் பணிசெய்தபோது அவதானித்த விடயங்களுள் ஒன்று நேர முகாமைத்துவமும் நேரக் கட்டுப்பாடு மாகும். திருத்தலத்திற்கு வருகின்ற ஆயர்கள், பேராயர்கள், கருதினால்கள் கூட குறிப்பிட்ட நேரத்துக்குள் தங்களின் பிரசங்கங்களை, உரைகளை நிறைவு செய்கிறார்கள் – நிறைவு செய்ய வேண்டும். அதனால், நிகழ்வுகளுக்கு முன்பே, நேரகாலத்தோடு மிகவும் மரியாதையான முறையில், 'ஆயர் அவர்களே, நேரத்தைக் கவனத்தில் கொள்வதற்கு நன்றி' என்ற குறிப்பைச் சொல்லிவிடு வார்கள். பெரிய பெரிய மக்கள் தொகைகளைக் கொண்ட திருப்பலிக் கொண்டாட்டங்களோ, பவனிகளோ, ஏனைய கலந்துரையாடல் கூட்டங்களோ ஒன்றரை தொடக்கம் இரண்டு மணித்தியாலங்களுக்குள் மிக நேர்த்தியாக நிறைவேறிவிடுகின்றன. இத்தனைக்கும் இந்நிகழ்வுகள் பல மொழிகளில் நடைபெறுகின்றன.

**யாம் அறியோம் பராபரமே?**

நம்முடைய விழாக்களை, திருநாட்களை, நிகழ்வுகளை, கொண்டாட் டங்களை நோக்குகின்றபோது எங்கு தொடங்குகிறோம், எப்போது முடிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகிறோம் என ஏற்பாட்டாளர்களுக்கும் தெரியாது, பங்கெடுக்கிறவர்களுக்கும் தெரியாது. நிகழ்வில் பங்கெடுக்கிறவர்களில் பலர் மந்தி குந்திக்கொண்டு இருப்பதுபோல இருப்பார்கள். மற்றவர்கள், "வந்துவிட்டோம், உத்தரிக்கிறோம்!" என மனதுக்குள் கொதித்துக் கொந்தளித்துக் கொள்கிறார்கள். "எப்போதாவது தொடங்கி, எங்கேயாவது முடிவுறும்தானே" என ஏற்பாட்டாளர்கள் இருந்துவிடுகின்ற 'இயலாமை இயல்பு' எப்போது மாறுமோ?

பொதுவாக, விழாக்களில் முக்கிய நிகழ்வாக உரைகள் இடம்பெறும். உரையாற்ற அழைக்கப்படுபவர்கள் நீண்டதொரு உரையை ஆற்றி பார்வையாளர்களைக் களைப்படைய – சோர்வடையச் செய்து விட்டுச் செல்வார்கள். நம் ஊர்களில் குறிப்பிடுவதைப்போல அவர்களுடைய உரையில், 'உப்பும் இருக்காது சப்பும் இருக்காது.' மேலும், இனிப்போ, புளிப்போ, உறைப்போ கூட இருக்காது: கசப்பு மட்டும் மிஞ்சி இருக்கும். இனிமேல் விழாக்களுக்கு, "யார் கூப்பிட்டாலும் போவதில்லை" என்ற முடிவுக்கே இவர்கள் பார்வையாளர்களில் பலரைக் கொண்டுவந்து விடுகிறார்கள்.

என் குரு நண்பர் ஒருவர் இருக்கிறார். அவர் பல கடினமான பணிகளைச் செய்துவருகிறார். அற்புதமான ஒரு மனிதர். அவரைத் தேடி அவரது மாணவர்களாகிய நாங்கள் போகிற போதெல்லாம் அவர் ஏதாவது கருத்தமர்வுகளை – சந்திப்புக்களை நடத்திக் கொண்டுதான் இருப்பார். கண்டவுடன், அவர் எங்கள் சுகத்தைக்கூட விசாரிக்காமல் கேட்பது என்னவென்றால், "வந்து ஏதாவது சொல்லிற்றுப் போ(ங்க)" என்பதாகும். அதாவது உரை நிகழ்த்துவதற்கான தலைப்பு – 'ஏதாவது சொல்லுதல்'!

நான் அவரைப் பார்க்கச் செல்லும்போது, எதற்கும் ஆயத்தமான நிலையில்தான் செல்வதுண்டு. அப்படி இல்லையோ அவ்விடத்திலிருந்து மறைந்து விடுவேன். ஆனால், என்னோடு வருகின்றவர்களின் 'பாடு' இருக்கிறதே, அது அந்தோ பரிதாபம்தான். அதனைவிடப் பரிதாபம் இவர்களின் ஆயத்தம் செய்யாத உரைகளைக் கேட்பவர்கள்!

**எப்படித்தான் மனசு வருகிறதோ?**

இதில், வேதனைக்கும் அதேவேளையில் வேடிக்கைக்கும் உரிய விடயம் என்னவென்றால்: பேச்சாளர்கள், இராமாயணம் மகாபாரதம் போன்ற நீண்ட நெடிய கதைகளைப்போல தங்கள் உரைகளைத் தொடங்கி, வளர்த்து, அதனை முடிக்கத் தெரியாமல் திண்டாடி, வேர்த்துக் களைத்து, இறுதியில், "என் உரையைச் சுருக்கமாக நிறைவுசெய்து அமருகிறேன்" எனக்கூறிச் செல்வார்கள். இப்படிச் சொல்வதற்கு, இவர்களுக்கு எப்படித்தான் 'மனசு' வருகிறதோ தெரியவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் ஒரு மாநாட்டுக்குப் போயிருந்தேன். பல துறைசார் அறிஞர் பெருமக்களாய் இருத்தல் வேண்டும்! அவர்கள் அறிவு ஊட்டும் பணிக்காக அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் அநேகர், அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளித்ததாகத் தெரியவில்லை. ஆனால், எதை எதையோ எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார்கள் என்பதைவிட எதை எதையோ எல்லாம் உளறிக்கொண்டு இருந்தார்கள் என்பதுதான் சரியாக இருக்கும். இதில் இவர்களின் கெட்டித்தனம் என்னவென்றால், இதனை, இவர்கள் மிகச் சாதுரியமாகப் புத்திக்கூர்மையோடு செய்துகொண்டு இருந்ததுதான்.

மேற்கூறப்பட்ட இம்மாநாட்டின் ஒரு நிகழ்வாகக் கருத்துக் கூறல் நிகழ்வொன்று இடம்பெற்றது. ஒரு கட்டத்தில், "உங்கள் கருத்தை இரண்டு நிமிடங்களில் கூறி முடிக்கவேண்டும்" என அந்நிகழ்வை நடத்துபவரால் கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறு கேட்கப்பட்டவர்களில் பலருக்கு ஒரு வசனம் தொடங்கி முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஏறக்குறைய நான்கு நிமிடங்கள் பிடித்தது என்றால், ஒரு கருத்தைச் சொல்லி முடிக்க இவர்கள் எவ்வளவு நேரத்தை விழுங்கி இருப்பார்கள் என எண்ணிப்பாருங்கள்!

அவர்களின் கருத்தை ஆவலோடு கேட்கச் சென்ற என் போன்றவர்களின் மனநிலையைச் சற்றுக் கற்பனை செய்து பாருங்கள்! நாம் செய்த பாவங்களுக்கு ஒவ்வொருவரும் பரிகாரம் செய்யத்தான் வேண்டும். ஆனால், இறைவன் இப்படி ஒரு தண்டனையை யாருக்கும் அனுமதிக்கக் கூடாது என்பது மட்டும் அந்நேரத்தில் என் மனதில் எழுந்த மன்றாட்டாகும்.

அதிலும் சிலருக்கு இப்படியான நிகழ்வுகள், அருமையான நடைமேடையாக – தளமேடையாக அல்லது கலை மேடையாக அமைந்து விடுகின்றது. பிறகென்ன? மத்தள வித்துவானிடத்தில் அகப்பட்ட மத்தளத்தைப் போல பார்வையாளர்களை ஒரு பின்னல் பின்னி எடுத்து விடுகிறார்கள். உண்மையில், இவர்களில் சிலர் கொலைவெறி பிடித்துப் பேச ஆரம்பித்து விடுகிறார்கள். கொலைவெறியைச் சண்டைக் களத்தில் மட்டுமல்ல இப்போது மேடைகளில் கூடப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது! ஆக, இனிமேல் கொலைக் குற்றத்தைப் பற்றிப் பேசுகின்றபோது கொலை செய்யப்படல், தற்கொலை, கருணைக் கொலை போன்ற வகைகளில் இனி 'உரையாற்றிக் கொலை செய்தல்' என்ற வகை பற்றியும் ஆய்வுசெய்ய வேண்டி வரலாம்.

**கொஞ்சம் கொஞ்சமாய்க் கொலைசெய்யும் முறை!**

ஒரு தடவை வகுப்பறையில் மாணவன் ஒருவன் ஆசிரியரிடத்தில், "சேர், கொலை செய்யிறதெண்டால் உடனே கொலை செய்வது சரியா அல்லது படிப்படியாகக் கொல்வது சரியா?" எனக் கேட்டான். அதற்கு ஆசிரியர், "தம்பி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலை செய்யவே கூடாது. அது பெரிய பாவம்" என்றார். அதற்கு அவன், "கொலை செய்யக்கூடாது என எனக்குத் தெரியும் சேர். ஆனா, தற்பாதுகாப்புக்காக கொலை செய்ய வேண்டிய ஒரு சந்தர்ப்பம் வந்திற்றுது என்றால்...?" என மீண்டும் கேட்டான். ஆசிரியர், "அப்படி என்றால், உடனே கொல்வதுதான் நல்லது!" எனக்கூற மாணவன், "அப்ப, ஏன் சேர், உடனே கொல்லாம சேவலை அறுக்கிற மாதிரி எங்கள கொஞ்சங் கொஞ்சமா அறுத்துக் கொலைசெய்யிறீங்க?" எனக் கேட்டான்.

**'எதற்கும் உதவும்'!**

இதனால்தானோ என்னவோ, சில பார்வையாளர்கள் உரைகள் நிகழ்த்தப்படும் நிகழ்வுகளுக்குச் செல்லுகின்றபோது சிறு கற்களை, 'எதற்கும் உதவும்' என்ற எண்ணத்தில் எடுத்துச் செல்கிறார்கள்போலத் தெரிகிறது!

**'சரியா இழுத்திற்றார்?...' – 'என்னத்த?...'**

நம்முடைய வழிபாடுகளின் பாடல்களிலும், மன்றாட்டுக்களிலும், காணிக்கைப் பவனியிலும் நீண்ட நேரத்தை 'முழுங்கி' விடுவார்கள். ஆனால், பிரசங்கம் இரண்டு, மூன்று நிமிடங்கள் அதிகமானால்கூட, "பிரசங்கத்தை இண்டைக்கு சரியா இழுத்திற்றார்!" என்பார்கள். ஏதோ அந்த இரண்டு, மூன்று நிமிடங்களால்தான் முழு வழிபாடும் ஓரிரு மணித்தியாலங்கள் பிந்தியது போலக் கதைசொல்லி முடித்து விடுவார்கள். தங்கள் பாட்டிலும் ஆட்டத்திலும் (மன்னிக்கவும் வார்த்தையில் தடுமாற்றம்! எனினும், கருத்தினில் நிதானம் தெரிகிறதல்லவா! அது போதும்.) மணிக்கணக்கில் இழுப்பது அவர்களுக்குத் தெரிவதில்லை! இது ஒரு பக்கத்தினரின் கதை.

மறுபக்கத்தில், சொல்லப்படுகின்ற பிரசங்கத்தைப் பற்றி ஆராய்ந்து சொல்ல வேண்டுமானால் ஒரு கட்டுரை ஒன்றையே அதற்கு ஒதுக்கிவிடலாம்! சிலர், சாதாரணமாகச் சொல்வதோ – கதைப்பதோ கூட விளங்குவதில்லை என்றால், அவர்களின் நற்செய்திப் பகிர்வு – 'பிரசங்கம்' எப்படியிருக்கும்? அதனால், அதனை இப்போதைக்கு விட்டுவிடுவோம். இன்னுமொரு சந்தர்ப்பத்தில் அதனைப்பற்றி 'ஒரு கை' பார்ப்போம்.

**'இந்தா...', என்றால் 'இல்லை'யென்றா பொருள்?**

"இந்தா செய்துதாறன்", "போங்க பின்னால வாறன்", "நீங்க போங்க அனுப்பி விடுறன்", "நாளைக்குக் கட்டாயம் எடுக்கலாம்", "நீங்க வைங்க (தொலைபேசியை), இந்தா நான் எடுக்கிறன்" போன்ற வாக்குறுதிகளை நிறைவேற்ற, ஏன் நம்மில் பலருக்குச் சில கிழமைகளும், வேறு சிலருக்குச் சில மாதங்களும், இன்னும் சிலருக்கு ஒருசில ஆண்டுகளும் பிடிக்கின்றன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று, நமக்கு 'அறளை பேர்ந்திருக்க வேண்டும்' அல்லது நினை விழந்து 'மாறாட்டக் கதை' கதைக்கவேண்டும். அப்படிப் பார்த்தாலும் 'அறளை பேந்து' போகிற வயதில் நம்மில் பலர் இல்லையே! கொஞ்சம் ஆழமாக இதனை அவதானிக்கின்றபோது இந்தப் பிந்துகின்ற போக்கு, பழசுகளை விட இளசுகளில்தான் அதிகமாக இருக்கிறது என்பது புரியும்.

**பெரும்பாலான பக்தர்களைக் கொண்ட ஒரே மதம்!**

ஒரு முறை கவியரசு கண்ணதாசன் ஒரு விழாவிற்குத் தாமதமாகச் சென்றுவிட்டார். உரையாற்றும்போது, "சிலருக்கு இந்துமதம் பிடிக்கும், இன்னும் சிலருக்கு கிறிஸ்தவமதம் பிடிக்கும், வேறு சிலருக்கு இஸ்லாமியமதம் பிடிக்கும், மற்றும் சிலருக்கு பௌத்தமதம் பிடிக்கும்: எனக்கோ தாமதம் பிடிக்கும்" என்றாராம். மற்றவர்களைச் சிரிக்க வைக்க கண்ணதாசன் சொன்ன கதை இது.

"உலகில் பெரும்பாலான பக்தர்களைக் கொண்ட ஒரே மதம் தாமதம்தான்" என்கின்ற நெப்போலியன், எதையும் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தள்ளிப் போடுகிறவர்கள் வெற்றியைத் தள்ளிப் போடுகிறார்கள் என்கிறார். அதனால்தான், 'ஒன்றே செய், நன்றே செய், அதை இன்றே செய்' என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**காலம் தப்பிப் பிறந்தவர்களா?**

பத்து மாதத்தில் பிறக்க வேண்டிய குழந்தை ஏதாவது காரணத்தை யிட்டு இரண்டு, மூன்று மாதங்களின் முன் பிறந்தாலும் அல்லது பிறக்க வைக்கவேண்டி இருந்தாலும் குழந்தையைப் பாதுகாப்பாகப் பிரசவிக்கச் செய்து காப்பாற்றுகிறார்கள் மருத்துவர்கள். இப்படி எத்தனையோ குழந்தைகள் பிறந்திருக்கிறார்கள், இன்றும் சுகத்தோடு வாழ்ந்துகொண்டும் இருக்கிறார்கள்.

ஆனால், தாயின் வயிற்றில் இருக்க வேண்டிய இருநூற்றி எழுபது தொடக்கம் இருநூற்று எண்பது நாட்களையும் கடந்து மருத்துவ பரிசோத னைகள் மூலம் குறிக்கப்பட்ட நாளையும் தாண்டி குழந்தை பிறக்கவில்லை என்றால் அது எத்தகைய உயிராபத்துக்களை ஏற்படுத்தும் என்பதை ஓரளவுக்கேனும் அறிவோம்.

நம்மில் பலர் காலந்தப்பிப் பிறந்ததால்தான் எல்லாவற்றையும் பிந்திப் பிந்திச் செய்கிறோமோ என்ற எண்ணமும் அடிக்கடி என் மனதில் வந்துபோவதில் தவறில்லைபோல்தான் தெரிகிறது என ஒரு நண்பரிடம் சொன்னேன். பதிலுக்கு அவர் சொன்னார், "பத்து என்ன பத்து! நம்மில் பல பேர் தாயின் வயிற்றில இருக்க விட்டிருந்தா, அப்படியே பதினைந்து, பதினாறு மாதத்துக்குக் கூட உயிர்தப்பி இருந்திருப்பார்கள்!" எனக் கூறிச் சிரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிவேகம் ஆபத்து நிறைந்தது

## 03

**'15 நிமிடங்கள் பிந்தலாம், 15 வருடங்கள் முந்தக்கூடாது!'**

கவியரசு கண்ணதாசன் காரில் தன் சாரதியுடன் ஒரு விழாவிற்குச் சென்று கொண்டிருந்தார். வீதியில் வாகன நெரிசலினால் விழாவுக்குக் குறித்த நேரத்தில் நிற்க முடியாத சூழலுக்குத் தள்ளப்பட்டார். எப்படியாவது கவியரசை அவ்விழாவிற்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிட வேண்டும் என்ற உயரிய நோக்குடன் கார் செலுத்துநர் அதிவேகமாகக் காரைச் செலுத்திக் கொண்டிருந்தார். கவியரசு காரின் அதிவேகத்தை அவதானித்துவிட்டு காரணத்தை வினவ செலுத்துனரும், "சேர், பத்து பதினைந்து நிமிடங்கள் விழாவுக்குப் பிந்தி விடுவோம். அதனால்தான் கொஞ்சம் வேகமாகப் போகிறேன்" என்கிறார். கவியரசு செலுத்துனரைப் பார்த்து, "தம்பி, பத்து பதினைந்து நிமிடங்கள் பிந்திச் சென்றால் பரவாயில்லை, பத்து பதினைந்து வருடங்கள் முந்திச் செல்லக்கூடாது" எனப் புன்னகைத்துக் கொண்டு சொல்கிறார்.

வாகனத்தையோ அல்லது மோட்டார் சைக்கிளையோ வேகமாகச் செலுத்துகின்றபோது – வாகனங்களில் பயணங்களை மேற்கொள்ளும்போது இவ்வுரையாடல் எப்போதும் என் நினைவுக்கு வருவதோடு வாகனத்தின் வேகத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும் உதவியாக இருக்கிறது.

**'வீடுவந்து சேர்வாரா?' அல்லது 'வீடுபேறு அடைவாரா?'**

இன்று நம்முடைய பிரதேசங்களில் வீதி விபத்துக்களால் இறந்து போகிறவர்கள் ஏராளம். நாள் பத்திரிகைகளில் வீதி விபத்துக்கள் குறிப்பிடப்படாத நாளே இல்லை என்று கூறிவிடலாம். எப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது இவ்வீதி விபத்துக்கள் மிக மோசமாக அதிகரித்து வருகின்றன.

'மரத்துடன் மோதுண்டு சம்பவ இடத்திலேயே மரணம்', 'வீதியிலிருந்து விலகிச் சென்று, அடிபட்டு, ஸ்தலத்திலேயே பலியானார்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது 'தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்தில் கணவனும் மனைவியும் உயிரிழப்பு' என்பவை பலருக்கு இன்னும் வெறும் செய்திகளாகத்தான் அமைந்திருக்கின்றன. இச்செய்திகள் பத்திரிகைச் செய்திகளாக மட்டும் இருக்கின்றனவே தவிர, அறிவு பூர்வமான ஆலோசனையாக - எச்சரிக்கையாக - பாடமாக பலருக்கு இருப்பதில்லை என்பதுதான் வேதனைக்குரிய விடயமாகும்.

குறிப்பாக, நமது பிரதேசங்களில் நடைபெறும் வீதி விபத்துச் சம்பவங்கள் பாரிய அச்சத்தை ஏற்படுத்திய வண்ணமாய் இருக்கிறது. "வீதியில் இறங்குபவர் வீடு திரும்புவாரா? வீடு பேறு அடைவாரா? என்பதை அறுதியிட்டுச் சொல்ல முடியாத அளவில்தான் வடபகுதி நிலைமை உள்ளது" என வலம்புரி ஆசிரியர் 12.04.2012 அன்று, பொறுப்பற்ற சாரதிகளும் பொறுப்பற்ற பொலிஸாரும் என்ற தமது ஆசிரியர் தலையங்கத்தில் கவலையோடு சுட்டிக் காட்டியிருக்கிறார்.

**அடிப்படைக் காரணம் அதிவேகமே**

வீதி விபத்துகளுக்கு முதன்மையானதும் தலையானதுமான காரணம் மோட்டார் சைக்கிள்கள் - வாகனங்களின் அதிகபட்ச வேகமே. வடபகுதியில் நடக்கும் விபத்துக்களுக்கான அடிப்படைக் காரணம் தனியார்துறை வாகனங்களின் அதிவேகமே என்பதையும் வலம்புரி ஆசிரியர் கோடிட்டுக் காட்டியிருந்தார். அத்துடன் போக்குவரத்துக் கண்காணிப்பில் ஈடுபடும் பொலிஸார், இலஞ்சம் பெறுவதையே குறிவைத்துச் செயல்படுகிறார்கள் என்பதையும் குறிப்பிடுகிறார்.

இதனால் சாரதிகளிடையே, 'அகப்பட்டாலும் தப்பித்துக் கொள்ள முடியும்' என்ற மனநிலை இன்னும் அப்பாவி உயிர்களைக் காவுகொள்ளவே வழிசெய்யும். எனவே, ஒழுங்கையும் சட்டத்தையும் நடைமுறைப்படுத்துவது விபத்துக்களையும் அதனால் விளையும் அநியாயச் சாவுகளைத் தவிர்க்கவும் - தடுத்து நிறுத்தவும் உதவும் என்பதையும் வலம்புரி பத்திரிகை ஆசிரியர் 12.04.2012 அன்று தமது ஆசிரியர் தலையங்கத்தில் கூறியிருக்கிறார்.

**ஏதோ ஒரு மண்டலத்திற்கு விரைவாக விரைவார்கள்!**

சிலவேளைகளில் சிலரைப் பார்க்கின்றபோது சந்திர மண்டலத்துக்குப் போவதற்காக இவ்வளவு வேகமாகப் போகிறார்களோ என எண்ணத் தோன்றும்! இவர்களின் ஓட்டத்தில் - வேகத்தில் விரைவான வேகக் கட்டுப்பாடு ஏற்படவில்லையோ, சந்திர மண்டலத்துக்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது ஏதோ ஒரு மண்டலத்திற்கு இவர்கள் செலுத்துகின்ற வேகத்திலேயே விரைவாகச் செல்வார்கள் என்பது நிச்சயமாகிவிடும்!

இன்னும் சிலர், மோட்டார் சைக்கிளைச் செலுத்துகின்றபோது விமான ஓட்டிகளை நினைத்து விடுகிறார்களோ என்னவோ! ஏனெனில், இவர்களை அவதானிக்கின்றபோது இவர்கள் மோட்டார் சைக்கிளைச் செலுத்துவதும் கிடையாது, அதனை ஓட்டுவதும் கிடையாது, அதில் 'பறக்கிறார்கள்' என்று சொல்வதுதான் சரியாக அமையும்!

அதிவேகமாகப் பயணம் செய்கின்ற அதாவது எங்கள் ஊர் வழக்கில் 'கண் மண் தெரியாமல்' மோட்டார் சைக்கிளைச் செலுத்துகின்ற இளையோர்களுக்கு - இருபாலாருக்கும் - கட்டாயமாக இவ்விடத்திலேயே ஒன்றைக் குறிப்பிடவேண்டும்: தயவுசெய்து உடனடியாகவே ஒரு நல்ல கலர் படம் எடுத்து, வீட்டில் யாரிடமாவது கொடுத்து வைத்து விடுங்கள். 08க்கு, 31க்கு, ஆண்டு நிறைவுக்கு என்று உங்கள் கலர் படங்கள் இல்லாமல் குடும்பத்தவர்கள் அலைந்து திரிய வேண்டியிருக்கும்! மற்றது, டிஜிற்றல் கட் அவுட் போடுவதற்கு, நல்ல தரம் வாய்ந்த கலர் படம் தேவை! ஆகவேதான், முன்கூட்டியே இவற்றையெல்லாம் சொல்லிவைக்க வேண்டி இருக்கிறது!

இவ்வறிவுரை, ஆண்பால் பெண்பால் இரண்டுக்கும் என விசேட குறிப்பு இங்கு இடவேண்டி இருக்கிறது! காரணம், ஆண்பால்தான் அத்துமீறி ஓடுகிறது என்றால், பெண்பால் அதையும் மீறி ஓட நிற்கிறது என்றால் பாருங்களேன்! ஓடுங்கள், மோட்டார் சைக்கிளை முறுக்குங்கள்! கலர் படத்தை மறந்துவிடாமல் எடுத்து வைத்துவிட்டு உங்கள் சவாரியைத் தொடருங்கள்!

**அவசரம்! அவசரம்! அவசரம்!**

அன்றாட வேலைக்கோ, ஏதாவது ஓர் அலுவலுக்கோ, எங்கோ ஓர் இடத்திற்கோ அல்லது ஏதாவது ஒரு நிகழ்வுக்கோ குறிப்பிட்ட நேரத்தில் நிற்கவேண்டும் என்றால் இறுதி வரை இருந்துவிட்டு அநேகமாக அவசரத்தில் புறப்படுகின்றவர்கள்தான் அதிகம்.

கால்நடையாகவோ, துவிச்சக்கர வண்டியிலோ, மோட்டார் சைக்கிளிலோ அல்லது வாகனத்திலோ செல்லுகின்றபோது அவசரத்தில் அடுத்தவரை அவதானிப்பது குறைவு. இதனால், அவசரமாகப் புறப்பட்டு, அவசரமாக விழுந்து, அவசரமாக அடிபட்டு, அவசரமான அவலச் சாவைச் சந்திக்கவும் அவசரம் காரணமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொலைபேசி = தொல்லைபேசி**

மேலும், இப்போது எல்லாருடைய கைகளிலும் தவழும் கையடக்க அல்லது கைத் தொலைபேசியை நடந்து போகிறவர்கள் ஒரு கையில் வைத்துக்கொண்டு மறு கையால் படம் கீறி அல்லது கையால் விளக்கவுரையைக் காண்பித்து, கதைக்துக் கொண்டு செல்கிறார்கள்! துவிச்சக்கர வண்டியில் போகிறவர்கள் ஒரு கையால் சைக்கிளைச் செலுத்திக் கொண்டு மற்றைய கையால் கைத் தொலைபேசியைத் தூக்கிக் காதில் வைத்துக் கொள்கிறார்கள்.

மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் ஒரு கையால் அதனைச் செலுத்திக் கொண்டு மற்றைய கையால் தொலைபேசியைக் கையாளுகிறார்கள் அல்லது தலைக் கவசத்துக்கும் செவிக்கும் இடையில், செத்தையில் சீப்பைச் செருகுவதுபோல செருகிக் கொள்கிறார்கள்.

பல வடலிகளுக்கு, இரண்டு கைகளாலேயே மோட்டார் சைக்கிளை ஒழுங்காகச் செலுத்தத் தெரியாது. அப்படி இருக்கையில், ஒரு கையில் கைத்தொலைபேசியுடன் மற்றைய கையால் மோட்டார் சைக்கிளைச் செலுத்துதுகள் என்றால் நிலைமை எப்படியிருக்கும் என நீங்களே யோசித்துப் பாருங்கள்.

இப்படிச் தொலைபேசியைக் காதுக்குள் வைத்துக் கொண்டு செல்வதால் புலன்களின் கவனம் தொலைபேசிப் பேச்சில் இருப்பதால்: அக்கம் பக்கம், பின்னால் முன்னால் வருபவர்களை அல்லது வருகிற வாகனங்களை அவதானிக்காமல் கவனக் குறைவோடு பயணித்து விபத்துக்கள் ஏற்பட நாமே காரணமாகிறோம். அதனால்தான், இது ஒருவகைத் தொல்லை தரும் பேசியாகிறது!

**போட்டி போட்டுக் கலைக்க இது நாம்பன் சவாரியா?**

வீதி விபத்துக்கள் ஏற்பட இன்னுமொரு காரணம் போட்டி போட்டுக் கொண்டு ஓடுதல் அல்லது போட்டிக்கு வாகனங்களைச் செலுத்துதல் ஆகும்! ஏறக்குறைய இப்போட்டி எப்படி நடக்கும் என்றால்: எங்கள் கிராமங்களில் மறிமாடுகள் கலைபட்டு ஒன்றுக்குப் பின்னால் ஒன்று ஓடி, ஒன்றின் மேல் ஒன்று ஏறி, ஒன்றை ஒன்று முந்துவது என இச்சவாரி நடந்தேறும்.

இச்சவாரியில் ஓடுகிற காளைகளுக்கும் நாம்பன்களுக்கும் (இளம் காளைகள்) இச்சவாரி ஒருவகைப் பொழுதுபோக்காக – களியாட்டமாக இருக்கும். ஆனால், இத்தனை காளைகள், நாம்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் வேகத்தில் சிக்கி இத்தாக்குதலில் தத்தளிக்கின்ற பசுவின் பரிதாப நிலை இருக்கிறதே! அதனை வார்த்தைகளால் சொல்லி வர்ணிக்க முடியாது. ஏறக்குறைய அதே நிலைதான், சில பஸ்களில் பயணம் செய்யும் பயணிகளின் நிலையும்!

"மூச்சுத்திணற வைத்து விடுகிறார்கள் இப்பரதேசிகள்! உயிரை, கையில புடிச்சிக்கொண்டுதான் பஸ்சில ஏறவேண்டிக் கிடக்கு! *சீ.ரீ.பி.*யை (இ.போ.ச.) தனியார் பஸ் முந்தினால், *சீ.ரி.பி.காரன்* விடமாட்டான்; தனியார் பஸ்காரனை *சீ.ரி.பி.* முந்தினால், தனியார் பஸ் காரன் விடமாட்டான். அதுகள்தான் துலைஞ்சு போனதுகள் சாகட்டும் எண்டு விட்டாலும், சும்மாகிடக்கிற எங்களையும் கொண்டுபோய் கொல்லப் பாக்கிறாங்கள் பாடையில போயிருவாங்கள்!" என்றார் தமது 'பஸ் சவாரி' அனுபவத்தைப் பகிர்ந்து கொண்ட முதியவர் ஒருவர்.

வீதி விதிமுறைகளை – ஒழுங்கு முறைகளைப் பொதுவாக அநேகர் கடைப்பிடிப்பதில்லை. வாகனம் செலுத்துபவர்களும் அப்படித் தான், பாதசாரிகளும் அதேமாதிரித்தான். வாகனம் செலுத்துபவர்கள், வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி வைத்திருப்பதுபோல வீதிகளை யும் வாடகைக்கு வைத்திருப்பதாக நினைத்துக் கொள்கிறார்கள். பலருடைய மனப்பான்மை, 'என்னுடைய கார் என்னுடைய பெற்றோல்' என்பதுதான்! அதாவது, 'என்னுடைய கார், என்னுடைய எண்ணெய், நான் எப்படியும் செலுத்துவேன்' என்பதுபோலத்தான் நடந்து கொள் கிறார்கள்.

தமிழ்நாட்டு அதிவிரைவுப் பேருந்து ஒன்றில் எழுதப்பட்டிருந்த வசனம்: 'இது பந்தயமல்ல பயணம்' என்பதாகும். நம் நாட்டு முச்சக்கர வண்டியில், "பயணி தூங்கினால் சுகமான பயணம், சாரதி தூங்கினால் இறுதிப்பயணம்" எனப் போடப்பட்டிருந்தது. 'வேகம் மரணத்தை ஏற்படுத்தும்' என நம் பிரதான வீதியெங்கும் அறிவுறுத்தல் கொடுத் திருக்கிறார்கள். ஆனால், யாரும் அதன் உட்பொருளை உணர்வதாக இல்லை. இவ்வசனங்களை நம்முடைய சாரதிகளின் நெற்றியில் பட்டைபோட்டுத் தீட்டி ஒட்டிவிட்டால் என்ன எனச் சிந்திக்கத் தோன்றுகிறது மனசு.

**தவறான அவதானிப்புக்களும் 'நோயாளிச் சாரதிகளும்'!**

அதிவேகமாகப் பயணிப்பதால் பயணநேரத்தை, எரிபொருளை மிச்சப்படுத்தலாம் எனப் பலர் நினைக்கிறார்கள். இவை தவறான அவதானிப்புக்கள் – நினைப்புக்கள் ஆகும். உதாரணமாக, வீதிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனைச் சாவடிகள் நிறைந்த காலத்தில், சில வாகனச் சாரதிகள் பல வாகனங்களை முந்தியடித்துக் கொண்டு செல்வார்கள். அவதானித்துப் பார்த்தால் இவ்வாறு முந்தியடித்துக் கொண்டு ஓடிய வாகனங்கள் சோதனைச் சாவடியில் உங்கள் வாகனத்திலிருந்து ஆகக்கூடியது இரண்டு, மூன்று வாகனங்களுக்கு முன்னால் தரித்து நிற்கும். இதே விடயத்தை வீதி அகலிப்பு நடைபெறுகின்ற நாட்களிலும் அவதானித்திருக்கலாம். ஆக, அதிவேகமாகச் செல்வதால் அவலங்கள்தான் அதிகமாகின்றன என்பதுதான் அனுபவம்.

மேலும், மற்ற வாகனங்கள் முந்திவிட்டால் சில சாரதிகள் அதனைச் சகித்துக் கொள்ள மாட்டார்கள். வேறென்ன 'கிறுக்கு ஓட்டம்' ஓடத் தொடங்குவார்கள். இப்படிப்பட்ட சில 'நோயாளிச் சாரதிகள்' இடம் அகப்படுகின்ற பயணிகள் அல்லது இவர்களுடன் சேர்ந்து பயணிப்பவர்கள் நோயாளிகளாகத்தான் மாறுவார்கள்! இவ்வாறு வீராவேஷத்துடன் வாகனங்களைச் செலுத்தி விண்ணுக்கு ஏகியவர் களும் இருக்கிறார்கள். ஆக, அதிக வேகம் அதிக ஆபத்துக்களைத் தரும் என்பதை யதார்த்த பூர்வமாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

**ஒலியெழுப்புதல்**

சில வாகனங்கள் எண்ணெய்யைத் தவிர்த்து ஒலியெழுப்பு தலில்தான் இயங்குகிறதோ (ஓடுகிறதோ) என்ற சந்தேகமும் எனக்கு வந்திருக்கிறது! அந்த அளவிற்கு ஒலியெழுப்புகிறார்கள். எப்படி இவர் களின் செவிப்பறை தாக்குப் பிடிக்கிறது என்பது ஒரு மருத்துவ ஆய்வுக்குரிய விடயம்!

இப்படியே இவர்கள் வாகன ஒலியெழுப்புதலைத் தொடர்வார் களேயானால், பலருடைய செவிப்பறை கழிப்பறையாக மாறக்கூடிய சாத்தியம் நிறையவே இருக்கிறது என்பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

**பாதசாரிகளின் கவனத்திற்கு!**

அடுத்தது பாதசாரிகள் பற்றியது. இன்று பலர், எருமை மாடுகள் வருவதுபோல வீதிகளில் வருகிறார்கள், போகிறார்கள், வீதிகளைக் கடந்து செல்கிறார்கள். கொஞ்சம் அவதானித்துச் செல்ல வேண்டும் என்பதைச் சற்றும் சிந்திப்பது கிடையாது.

எங்கேயாவது முட்டி மோதி, கால் கையை உடைத்து, பற்று *(Plaster of Paris)* போட்டு, நீட்டி நிமிர்ந்து கிடந்து கொண்டுதான் சொல்வார்கள், "இல்ல, நானும் கொஞ்சம் பாத்து, கவனமா வந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கலாம்தான்" என்று! இப்படிக் கிடப்பவர்களைப் பார்த்து, "அட மூதேவி! இந்த மூளை வீதியைக் கடக்கும்போது உனக்கு ஏன் வரேல்ல?"என்று கேட்க வேண்டும்போல இருக்கிறது. அதுதான் கேட்டுவிட்டேன். பிழையில்லைத்தானே! கேட்கவேண்டிய கேள்வி தானே என நீங்களும் நிச்சயமாக உணருவீர்கள்!

**சனத்தொகையைக் கட்டுப்படுத்த...**

சனத்தொகையைக் கட்டுப்படுத்த இனி வேறு வழிகள் தேவையில்லை. வீதிகளை அகலித்து, *காப்பற் றோட்டுகளையும்* அமைத்து, '2000ஆம் ஆண்டளவில், யாவருக்கும் புகலிடம்!' என்று இருந்ததைப்போல, '2012இல் இருந்து யாரும் சாரதியாகலாம், அனுமதிப்பத்திரம் அவசியமில்லை!' என்றொரு அமைச்சரவைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தால் சனத்தொகை எதிர்பார்க்கிற விகிதாசாரத்தைவிட அதிகமாகக் குறைவடையும் என நம்பலாம்.

இந்தக் கருத்தை எம் அமைச்சரவை அறிந்தாலே உடனடி யாகக் கூடி இம்முடிவை ஆமோதித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படிப்பட்ட அறிவுசார் அமைச்சர்கள்தானே எம் அமைச்சரவையில் இப்போது இருக்கிறார்கள்!

"முந்தி அவன் ஒண்டா கொண்டான் (கொன்றான்), இப்ப இவன் ஒவொண்டொவண்டா கொல்றான்" என்று வீதி விபத்துக்கள் பற்றி ஓய்வுபெற்ற சாரதி ஒருவர் வீதி விபத்தில் இறந்துபோன ஒருவருடைய இறுதிப்பயண நிகழ்வில் வைத்துக் குறிப்பிட்டது என் நினைவுக்கு வருகிறது.

வாகனம் - மோட்டார் சைக்கிள் செலுத்தும் வேகத்தைத் தயவுகூர்ந்து குறையுங்கள். அப்படிக் குறைக்க முடியவில்லை யென்றால் *டிஜிற்றல் கலர்* படத்தையேனும் மறந்துபோக வேண்டாம். ஒரு நேரத்தில் எதற்கும் அது உதவியாய் இருக்கும்!

*மன்னா, புரட்டாசி 2012*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆத்திரத்தை ஆக்கிரமியுங்கள்

04

### கோப உணர்வை ஆரோக்கியமாக ஆற்றமுடியும்

ஒரு பெரிய நாடக அரங்கேற்றம் கோலாகலமாக நிகழவிருந்தது. நாடகத் தயாரிப்பாளர் ஒருவர், அறிஞர் பேர்ணாட்ஷாவையும் இந்நிகழ்விற்கு அழைத்திருந்தார். பேர்ணாட்ஷாவிற்கு நண்பர்கள் குறைவு என்பதை இந்நாடகத் தயாரிப்பாளர் நன்கு அறிந்திருந்தார்.

இதனை நாடகத் தயாரிப்பாளர் மிகவும் நாசூக்கான முறையில் பேர்ணாட்ஷாவிற்குச் சுட்டிக்காட்ட எண்ணினார். "இரண்டு நுழைவுச் சீட்டுக்கள் அனுப்புகிறேன். உங்களுக்கு ஒன்று, மற்றையது உங்கள் நண்பருக்கு, அப்படி நண்பர் யாராவது உங்களுக்கு இருந்தால்!" என ஒரு குறிப்பும் வைத்து இரண்டு நுழைவுச் சீட்டுக்களையும் அனுப்பி வைத்தார்.

இதனைப் பார்த்த பேர்ணாட்ஷாவிற்குக் கொஞ்சம் கோபம் வந்து விட்டது. உடனே, "அவசர வேலை இருப்பதால் முதல் நாள் அரங்கேற்றத்திற்கு என்னால் வரமுடியாது, இரண்டாம் நாள் வருவேன், உங்கள் நாடகம் நடந்தால்!" எனப் பதில் அனுப்பிவைத்தார்.

எவ்வளவு அற்புதமாக, ஆரோக்கியமாகத் தனது கோப உணர்வை அறிஞர் பேர்ணாட்ஷா வெளிப்படுத்துகிறார் பார்த்தீர்களா?

### குடும்பத்தில் அல்ல கூட்டுக்குள் வாழவேண்டியவர்கள்

தன் குடும்பத்தைப்பற்றி உரையாடிக் கொண்டிருந்தபோது, "என்ர புருசன், சீறிச் சினக்கிறார் *பாதர்!*" எனக் குறிப்பிட்டாள் ஒரு குடும்பத் தலைவி. அக்குடும்பத் தலைவனுடனும் உரையாடினேன். அவன், "என்ர மனிசி கோழி மாதிரி அடிக்கடி கொக்கரிக்கிறாள் *பாதர்!* அப்ப நான் சீறாம, சினக்காம இருக்க ஏலுமோ?" என என்னைப் பார்த்து நியாயம் கேட்டான்.

இவர்களுடன் தொடர்ந்து உரையாடிக் கொண்டு போகப்போக ஒன்று புரிந்தது. இவர்கள் குடும்பத்தில் அல்ல, கூட்டுக்குள் இருக்க வேண்டியவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று! அதாவது மிருகக்காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு கூட்டினுள்.

**கர்ச்சிக்கிறான், கனைக்கிறான், குரைக்கிறான் மனிதன்!**

புலி உறுமும், பாம்பு சீறும், சிங்கம் கர்ச்சிக்கும், குதிரை கனைக்கும், நாய் குரைக்கும் எனச் சிறுவயதில் கற்றிருக்கிறோம். இந்த விலங்கினங்களின் ஒலி வெளிப்பாடுகளை எல்லாம் இப்போதைய மனிதன் பெற்றுவிட்டான் போலத்தான் தெரிகிறது. அதற்கான சான்றுகள் நிறையவே இருக்கின்றன.

குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான குடும்பங்களில் கணவன் மனைவியிடம் ஏதாவது கேட்டு விட்டால் மனைவி கணவனைப் பார்த்து உறுமுகிறாள், மனைவி கணவனிடத்தில் ஏதாவது வினவினால் கணவன் மனைவியை நோக்கிச் சீறுகிறான், மருமகள் மாமியிடம் நேர்மறையாகவேனும் ஏதேனும் கூறிவிட்டால் மாமி மருமகளிடம் கர்ச்சிக்கிறாள், மாமி மருமகளிடத்தில் அபிப்பிராயங்கள் ஏதாவது கூறிவிட்டால் மருமகள் மாமியாரைப் பார்த்துக் கனைக்கிறாள்.

பல வீடுகளில் இப்போது நாய்களின் தேவையே இல்லாமல் போயிருக்கிறது! குடும்பத்தில் உள்ளவர்கள் எல்லாருமே ஏதாவது ஒரு கட்டத்தில் குரைத்துக் கொண்டு இருந்தால், எப்போதும் குரைப்புச் சத்தம் வீட்டிலும் வீட்டுக்கு வெளியிலும் கேட்கக் கூடிய வாய்ப்பு இருப்பதனால் நாய்களுக்கு வேலை இல்லாமல் போவது இயல்புதானே!

**குட்டிபோட்ட நாய்கள் போன்று!**

சிலபேர்வழிகள், குட்டிபோட்ட நாய்கள் போல, எப்ப பார்த்தாலும் வள்...வள்... வள்...சள்... சள்...வள்... என்று தொட்டதற்கும் பட்டதற்கும் மற்றவர்கள் மீது பாய்ந்து கொண்டும் குரைத்துக் கொண்டும் இருப்பார்கள்.


வீட்டில் இருந்த இந்தப் பழக்கம், படிப்படியாக இன்று அலுவலகங்களிலும், மருத்துவமனைகளிலும், திணைக்களங்களிலும் ஏன் பலவகைப் பட்ட பணிமனைகளிலும் பரவியிருப்பதைக் காணக்கூடியதாய் இருக்கிறது.

பரிணாம வளர்ச்சியின் ஒரு கட்டமாகக்கூட இதனைக் கருதலாம்! இறைவனுக்கு நன்றி, டாவின் இறந்து போனான்! அல்லது டாவின், தானே முன்பு முன்மொழிந்த பரிணாமக் கொள்கையை மறுத்து, மனிதனில் இருந்துதான் பாய்ந்து பாய்ந்து திரியும் ஜீவராசி தோன்றியிருக்கும் என்றுரைத்திருப்பான்!

கடும் சினம் கொள்பவருடைய உள்ளமும் அவரைச் சுற்றியுள்ளவர்களும் எப்போதும் மகிழ்ச்சியைத் தொலைத்தவர்களாகத்தான் இருப்பார்கள். கடும் கோபம் மகிழ்ச்சியின் எதிரி எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவ்வுண்மையை வள்ளுவன், "நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் பகையும் உளவோ பிற?" அதாவது முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தை விட ஒருவனுக்குப் பகையானவை வேறு உள்ளனவோ? என்கிறார்.

**நீங்களும் ஞானியாகலாம்!**

கிரேக்க தத்துவஞானி சோக்கிரட்டிஸ் தன் நண்பர்களுடன் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார். அவர் மனைவி சாந்தப்பி இச்செயற்பாட்டை விளங்கிக் கொள்ள முடியாத ஒரு பிறவி! கழுதைக்கு எப்படித் தெரியும் கர்ப்பூர வாசனை!

தம் நண்பர்களை அனுப்பி விட்டு வருமாறு சாந்தப்பி, சோக்கிரட்டிஸ்சை மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டாள். சோக்கிரட்டிஸ் இதனை ஒன்றையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. சாந்தப்பிக்கு கடுப்பேறியது. வந்த கோபத்தில் ஒரு பாத்திரம் நிறைய தண்ணீரைக் கொண்டுவந்து அவர்கள் மேல் ஊற்றினாள்.

நனைந்த கோழியைப்போல நின்று கொண்டு சோக்கிரட்டிஸ், "முதலில் இடி இடித்தது, இப்போது மழை பெய்திருக்கிறது, அவ்வளவுதான்!" என்றவர், "தண்ணீர் பொறுமையாக இருக்கிறவரை பாத்திரத்திற்குள் பத்திரமாக இருக்கிறது, கொதிக்க ஆரம்பித்ததும் ஆவியாகி ஒன்றுமில்லாமல் போய்விடுகிறது" என்றாராம்.

தொடர்ந்து கூறுகையில், "இளையோரே! திருமணம் செய்து கொள்ளுங்கள்! நல்ல மனைவி கிடைத்தால் மகிழ்ச்சி அடைவீர்கள், கெட்ட மனைவி கிடைத்தால் தத்துவஞானி ஆகிவிடுவீர்கள்" என்று உரைத்தாராம்.

**கோப உணர்வு பொதுவானது**

கோப உணர்வு எல்லா உயிரினங்களுக்கும் பொதுவானது. நாயை விரட்டினால், அது விரட்டியவரைக் கடிக்க வருகிறது. பாம்பைத் தீண்டினால் அது தீண்டியவரைத் தீண்ட முனைகிறது. கழுதையை விரட்டினால் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கை)கால்வரிசையைக் காட்டுகிறது. இவ்வாறு எல்லா உயிரினங்களுக்கும் கோப உணர்வு உண்டு என்பதை அறியலாம்.

அந்த வகையில் எந்த மனிதனும் இக்கோப உணர்வுக்கு விதிவிலக்கல்ல. ஆனால் என்ன, சிலர் மாமியார் வீட்டுச் சீதனம்போல அல்லது ஏதோ பாட்டன், பூட்டன் சொத்தைப்போல கோபத்தை காலாகாலத்துக்கும் கட்டிக்காப்பதும் தங்கள் கோப உணர்வைப் பெருமையாக நினைப்பதும் – மதிப்பதும்தான் வினோதத்திற்கு உரியது.

**கோபத்திற்கான காரணிகள்**

"இயலாமையின் வெளிப்பாடுதான் நம் கோபம்" என்கிறார் பெனாப்போந்து இராய்முந்து என்ற இறையடியான். எப்போது பலவீனப்பட்டு நொந்துபோய் ஒன்றை அடையமுடியாது – பெறமுடியாது என எண்ணுகிறோமோ அப்போது கோப உணர்வும் கூடிவிடுகிறது! அதனைத்தான் இயலாமையின் வெளிப்பாடாகக் காண்கிறார் இப்புனிதன்.

மேலும், " 'தான்' என்ற அகந்தை உணர்வு எங்கே வேர் பிடித்து விருட்சமாக வளர்ந்துவிடுகிறதோ அங்குதான் கோபம் எனும் விசக்கனி காய்த்துக் குலுங்கும்" என்கிறார் சோக்கிரட்டிஸ்.

அகங்காரமும் ஆணவமும் கொண்டவர்களுக்கு தலையில் நிறையக் கனம் இருப்பதால் கோபமும் இயல்பாகவே இருப்பதைக் காணலாம். இதனைத்தான், கவியரசு கண்ணதாசன், "ஆசை கோபம் களவு கொள்பவன் பேசத் தெரிந்த மிருகம், அன்பு நன்றி கருணை கொண்டவன் மனித வடிவில் தெய்வம்..." எனத் தத்துவப் பாடலொன்றைப் பாடிச் சென்றான்.

நெருப்புக்குச்சி ஒன்று தீப்பெட்டியைப் பார்த்து, "நாம் இரண்டு பேரும் உரசிறம். ஆனால், நான் எரிஞ்சுபோறன். நீ மட்டும் எப்படி சும்மா இருக்கிறாய்?" என வினவியதாம். தீப்பெட்டி, "இல்ல, உனக்குத் தலையில் கனமும் சினமும் இருக்கு. அதனாலதான்!" என்றதாம்.

கோபப்படுபவர்கள் இயல்பாகவே பெரிய சத்தம்போட்டு அல்லது கூக்குரலிட்டுப் பேசுவார்கள் – விவாதிப்பார்கள் – சண்டைபிடிப்பார்கள். காரணம் என்ன தெரியுமா? அவர்கள் இதயங்களை இறுக்கிக்கொண்டு, முண்டங்களை முட்டவிடுவதால் ஏற்படுகின்ற ஒரு தாக்கம் என்றுதான் கணித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

**சினத்தினை அடைகாக்காதீர்**

முட்டைகளை அடைவைத்து – அடைகாத்து, குஞ்சுகள் பொரித்து, குஞ்சுகளை வளர்ப்பதுபோலக் கோபத்தைச் சினமாக்கி, சினத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுப்பாக்கி, வெறுப்பைப் பகையாக்கித் தாங்களும் பகைமையில் வாழ்ந்து, தங்கள் சந்ததிக்கும் இம்மரபணுவைக் கடத்திவிட்டுச் செல்கிறார்கள் சிலர்.

இதனால், கோப உணர்வு குடும்ப வாரிசுபோல சில குடும்பங்களில் வளர்ந்து குடும்பங்களைச் சீரழித்து ஊரைச் சின்னாபின்னமாக்கி மக்களின் வாழ்வைச் சீர்குலைப்பதைக் காணலாம்.

ஆகவேதான், பவுல் எபேசு நகரத்தினருக்கு எழுதிய கடிதத்தில் 4/26-27இல், "சினம் உற்றாலும் பாவம் செய்யாதிருங்கள். பொழுது சாய்வதற்குள் உங்கள் சினம் தணியட்டும். அலகைக்கு இடம் கொடாதீர்கள்" என்று அறிவுறுத்துகிறார். கடும்கோபம் அலகையிடம் - தீயோனிடம் எம்மை அழைத்துச் செல்லும் முதல் சாதனம்.

**ஆத்திரம் அறிவை மடக்கிவிடுகிறது**

ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம் என்றார்கள் நம் முன்னோர்கள். உண்மையில் கோபம் கொள்கின்றபோது நம்முடைய அறிவு செயற்படாமல் ஆத்திர (கோப) உணர்வே மேலோங்குகிறது.

கோப உணர்வு 'கதவழி'யாகி, 'கதவழி' கைகலப்பாகி, கைகலப்பு கத்திக்குத்தாகி, கத்திக்குத்து கழகச் சண்டைகளாக மாறுவதை இன்று பார்க்கலாம். அதனால்தான், 'கோபம் பின்கதவால் வருகிறபோது அறிவு முன் கதவால் வெளியேறுகிறது' என்கிறான் ஓர் அறிஞன்.

'கோபம் வந்தவன் கண்களை மூடிக்கொண்டு வாயைத் திறந்து விடுகிறான்' என்று இன்னொருவன் குறிப்பிடுகிறான். சிலர் வாயைத் திறந்தாலே சகிக்க முடியாது! கண்களை மூடிக்கொண்டு வாயைத் திறந்தால் எப்படிச் சமாளிப்பது!

எனவேதான் வள்ளுவனும், சினத்தை நாம் அடக்காவிடில் சினம் நம்மை அடக்கம் செய்துவிடும் என்பதை, "தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால், தன்னையே கொல்லும் சினம்" என்கிறார்.

**'கோபக்கனல் செந்தமிழ் பழஞ்சொற்கள்'**

அநேகர் கோபப்பட்டு விட்டால் பேசுகின்ற வார்த்தைகள் எங்கிருந்துதான் வருகிறதோ என மலைப்பாக இருக்கும். அந்த அளவுக்கு வார்த்தையில் தெளிவும், வார்த்தைத் தெரிவும் அமைந்திருக்கும். சிலர் மிகச் சிறப்பான அடைமொழிகளை எல்லாம் லாவகமாகப் பயன்படுத்துவார்கள்!

அந்த மகனே!... இந்த மகனே!... வரப்பில் பிறந்தவனே!... வயல்ல வசித்தவனே!... வக்கடையில வளர்ந்தவனே!... என 'வ' வரிசையில் வளர்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே போவார்கள். *குளோனிங்கில்* குழந்தை பிரசவித்ததுபோல பச்சையாகவே பயப்படாமல் எதுகை மோனையோடு சொல்வார்கள்.

இதனை கேட்கிறபோது ஏற்படுகின்ற இன்பம் இருக்கிறதே, அதனை உங்களுக்குச் சொல்லிப் புரியவைக்க முடியாது! வாய்ப்புக்கள் கிடைக்கின்ற போது, நின்று கேட்டு இரசித்துப் பாருங்கள், அந்தச் சுவை புரியும்! இவ்வாறு செவியூடாக உண்டாகும் இன்பத்தைக் குறித்துத்தான், 'செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்' என வள்ளுவன் பாடினானோ? எனச் சிந்திக்க வேண்டியும் இருக்கிறது.

மேற்சொன்ன விடயத்தின் அடுத்த கட்டம் இன்னும் சுவாரசியமானது. இவர்கள் இவ்வாறு பேசுகின்ற வார்த்தைகளை ஒருசில அகராதிகளில் தேடியும் கிடைக்கவில்லை. அதனால், யாழ். பொது நூலகம் சென்று இன்னும் சில பென்னம் பெரிய அகராதிகளைப் புரட்டிப் பார்க்க வேண்டி இருந்தது. அவற்றில் கூட இவற்றைக் காணமுடியாமல் போனது ஆச்சரியத்தை அளித்தது.

எனவே, அச்சொற்கள் சொல் ஆய்வாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. இச்சொற்களை இனிவரவிருக்கும் அகராதிகளில் சேர்ப்பதற்கான திட்டங்களை கலாசார திணைக்களத்தில் கையளிக்கும் முயற்சி எந்தளவிற்குக் கைகூடுமோ தெரியவில்லை!

எப்படிப் பார்த்தாலும், 'அர்த்தங்கள் பிறந்த பிறகுதானே அகராதிகள் பிறந்தன'. அந்த வகையில் நம் 'கோபக்கனல் செந்தமிழ் பழஞ்சொற்கள்' அகராதியில் இடம்பிடிப்பது நல்லது! அவ்வாறு அகராதிகளில் இடம்பிடிக்காமல் போனாலும் நம்மவர்கள், வாய்மொழி மரபில் இதன் மகிமை சற்றேனும் குன்றாமல் கட்டிக்காப்பார்கள் என்பதை அறுதியிட்டுக் கூறலாம்.

**'புகைந்துகொண்டு திரியும் மனிதர்கள்'**

இன்னும், கோபத்தினால் 'புகைந்துகொண்டு திரியும் மனிதர்கள்' இருக்கிறார்கள் ('கோபக்கனல் செந்தமிழ் பழஞ்சொற்கள்', 'புகைந்துகொண்டு திரியும் மனிதர்கள்' போன்ற இச்சொற்றொடர்கள் நம் உள்நாட்டுத் தயாரிப்புக்கள்தான். பிடித்திருக்கிறதா?). உறவுகளை முறித்து – முடித்துக் கொண்டு கோபப்பட்டவருடன் முகத்தில் முழிக்க முடியாமல், மறைந்து – பதுங்கித் திரிகின்ற மனிதர்கள் இவர்கள்!

கோபம் வருகிறது, அது வரத்தான் வேண்டும், அதனை வெளியேற்றத்தான் வேண்டும். ஆனால், அதனை ஆரோக்கியமாக வெளியேற்ற – வெளிப்படுத்தக் கற்றுக்கொள்ளுங்கள் என்பதுதான் இங்கு நினைவில் நிறுத்தவேண்டிய விடயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்ல மனிதனின் கோபம்!**

என்ன, கோப உணர்வு சில வேளைகளில் ஈடுசெய்ய முடியாத அளவுக்கு இழப்பை ஏற்படுத்துகிறது.

சொல்லுகிறார்கள் ஆத்திரம் (கோபம்) *அசிட்* போன்றது என்று. அது வைக்கப்படும் பாத்திரத்தை பாதிப்பதுடன் அது ஊற்றப்படும்போது எதன்மீது ஊற்றப்படுகிறதோ அதனையும் பாதித்து ஊற்றப்படும் இடத்தினையும் அழித்து விடுகிறது.

அந்த வகையில், "ஒரு நல்ல மனிதனுடைய கோபம் ஒருசில கணங்களே நீடிக்கிறது, சராசரி மனிதனுடைய கோபம் ஒருநாள் நீடிக்கிறது, மிகச் சாதாரண மனிதனுடைய கோபம் ஒரு கிழமை நீடிக்கிறது, ஒரு தீயவனுடைய கோபம் அவன் இறக்கும்வரை நீடிக்கிறது" என்றான் ஒரு மகான்.

அல்பெட் ஐன்ஸ்டின் என்பவர் ஓர் அறிவியல் மேதை என்பதுடன் வயலின் மீட்டுவதிலும் வல்லவர். ஒருமுறை விருந்தொன்றில் அல்பெட் ஐன்ஸ்டின் வயலின் இசைத்துக் கொண்டிருந்தார். அவ்வேளையில் ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த மிகப் பிரசித்தி பெற்ற நகைச்சுவை நடிகர் பெரங்கமோல் நார் வந்தமர்ந்தார்.

அல்பெட் ஐன்ஸ்டின் மிகவும் உணர்வுபூர்வமாக வயலின் வாசித்துக் கொண்டிருந்தார். நகைச்சுவை நடிகரான பெரங்கமோல் நார் வயலின் இசையை இரசிக்காமல் தன் நண்பர்களுடன் அரட்டை அரங்கம் செய்து கொண்டிருந்தார். இதனைப் பார்த்த அல்பெட் ஐன்ஸ்டினுக்கு கடும் கோபம் வந்தது.

வயலின் வாசிப்பதை நிறுத்திவிட்டு எழுந்து சென்று பெரங்கமோல் நாரிடம், "நான் வயலின் வாசிக்கும்போது நீங்கள் இப்படிச் சிரித்து மற்றவர்கள் இரசிப்பதைக் குழப்புகிறீர்களே! இது சரியா?"

"நீங்கள் நகைச்சுவையாய் நடிக்கும்போது நான் என்றைக்காவது சிரித்திருக்கிறேனா?" என ஒரு போடுபோட்டார்.

சும்மா கோபப்பட்டுக் கடுப்பாகி மற்றவர்கள் மீது எரிந்து, சீறிச் சினந்து விழாமல், அல்பெட் ஐன்ஸ்டினைப்போல அறிவினால் – அவ்வப்போது அன்பினால் ஆத்திரத்தின் மீது ஆதிக்கம் செலுத்துங்கள்.

மன்னா, ஐப்பசி 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் எம் பெரும் சொத்துக்கள்



## 05

**பிள்ளைச் செல்வங்கள் அவசியத்தேவை**

கடந்த இரு மாதங்களில் மூன்று இளவயதுச் சாவு நிகழ்வுகளில் பங்கெடுத்திருக்கிறேன். இரு சாவுகள் விபத்தினால் வந்தவை, மற்றையது நோயினால் ஏற்பட்டது. மூன்று வீடுகளிலும் ஒவ்வொரு பெற்றோருக்கும் இரண்டே இரண்டு பிள்ளைகள்தான். இச்சாவுகளின் பின்னர் இப்போது மூன்று வீடுகளிலுமே ஒவ்வொரு பெற்றோருக்கும் ஒரேஒரு பிள்ளைதான் உயிரோடு இருக்கிறது.

இப்பெற்றோரை – குடும்பத்தவர்களைச் சந்தித்ததில் இருந்து, இவ்விழப்பை எப்படி இவர்கள் தாங்கிக் கொள்ளப் போகிறார்கள் என்ற எண்ணமே என் மனதை இன்னும் குடைந்து கொண்டிருக்கிறது.

நம் இளம் தலைமுறையினர், முன்பு அதிகம் முகம்கொடுத்திராத பிரச்சினைகளாக உருவெடுத்திருக்கும் வீதி விபத்துக்களால் நிகழும் மரணங்கள், கடந்த முப்பதாண்டு ஆயுத பாவனையின் விளைவுகளால் ஏற்படும் நோய்த்தாக்கச் சாவுகள், உணவு உற்பத்தியில் பயன்படுத்தப்படும் இரசாயண கிருமிநாசினிகளால் உருவாகும் புதுப்புது நோய்களின் பாதிப்புக்கள், செயற்கை – *பிளாஸ்ரிக், பொலித்தீன்* கொள்கலன்களில் உணவுப்பொருட் களை நீண்டகாலம் சேமித்து வைப்பதால் ஏற்படும் தாக்கங்கள் போன்றவற்றுக் குக் கொஞ்சம் கொஞ்சமாகப் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள்.

இதனால், ஓரிரு பிள்ளைகளோடு நிறுத்திக்கொள்ளும் பெற்றோர் களுக்கு நிரந்தரமாக ஏற்படும் பிள்ளைச் செல்வங்களின் இழப்புக்கள் குடும்பங்களில் ஈடுசெய்ய முடியாத மிகப்பெரும் இழப்பாக மாறிவருகிறது.

மேலும், வெளிநாடு சென்றவர்கள் – செல்கின்றவர்கள் என்ற கணக்கெடுப்பையும் கணக்கில் வைத்துக்கொண்டு, நாட்டின் குறிப்பாக வடகிழக்கு தமிழ் மக்களின் சனத்தொகையை, ஒப்பீட்டளவில் பார்க்கும்போது சனத்தொகை வளர்ச்சியில் தமிழ் மக்களின் வளர்ச்சி வீதம் மிகவும் வீழ்ச்சி காணத்தொடங்கி உள்ளது என்றே தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தமிழ்மக்கள் சார்பான எதிர்கால அரசியல், சமூகம், பொருளாதாரம் சார்ந்த செயல் திட்டங்களுக்கு மிகப் பாரதூரமான ஆதாள பாதாள நிலைமைகளைத் தோற்றுவிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

காலத்தின் மாற்றம், நம் வருங்கால குடும்பங்களில் – குடும்ப வாழ்க்கை முறையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திவிட்டது. முன்னைய காலங்களில் நிலவிய பாரம்பரிய கூட்டுக் குடும்ப முறைகளில் (Extended Families) இருந்து, தனிக்குடும்ப அல்லது கருக்குடும்ப (Nuclear Families) வாழ்க்கை முறையாக குடும்பவாழ்வு மாறியிருப்பது ஒரு வகையில் தவிர்க்க முடியாததே.

தந்தை, மகன், பேரன் என மூன்று பரம்பரையினர் ஒரே கூரையின் கீழ் ஒன்றாக (ஒற்றுமையாக வாழ்ந்தார்களா என்பது வேறுவிடயம்!) வாழ்ந்த நிலைமாறி ஒவ்வொரு குடும்பமும் தாம் விரும்புகின்ற வகையில் தனித்தனியாகத் தங்கள் குடும்பத்தோடு வாழுகின்றமுறை முழுமையாக வந்துவிட்டது என்றே கூறலாம்.

**ஒன்றே ஒன்றுதான்! அதுவும் ஒலிம்பிக் சாதனை போன்றது!**

இன்று, குடும்பங்களில், பிள்ளைகளின் எண்ணிக்கை பொதுவாக இரண்டு அல்லது மூன்றாக இருக்கிறது. பத்திரிகைகளில் தொடர்கள் நிறைவுறும்போது 'முற்றும்' என்று முடித்துக் கொள்வதுபோல, பல பெற்றோர் இரு பிள்ளைகளோடு 'முற்றும்' என முற்றுப்புள்ளி வைத்துவிடுகிறார்கள்.

எனினும் கிராமங்களில் ஒவ்வொரு குடும்பத்திலும் மூன்று, நான்கு பிள்ளைகளைக் காண்பது இவ்விடயத்தில் கொஞ்சம் ஆறுதலைத் தருகிறது.

கொஞ்சக் காலமாக, "நாம் இருவர் நமக்கு இருவர்" என்றவர்கள் பின்னர், "நாம் இருவர் நமக்கு ஒருவர்" என்றார்கள். போகிற போக்கில், "நாம் இருவர் நமக்கு ஏன் ஒருவர்?" அல்லது "நாமே குழந்தைகள் பிறகு நமக்கு ஏன் குழந்தைகள்?" என வளருகின்ற இளம் தலைமுறை வாழத்தலைப் பட்டுவிடுமோ என ஆதங்கத்தோடு சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது!

குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான தம்பதிகள், ஒன்றே ஒன்றைப் பெற்றுவிட்டு – சந்தேகத்திற்கு இடமில்லாமல் குழந்தையைத்தான் குறிப்பிடு கிறேன் – ஒப்பாரி வைக்கிறார்கள் அல்லது ஏதோ ஒலிம்பிக்கில் உலக சாதனை படைத்துவிட்டதுபோல மார்பு தட்டிக் கொள்கிறார்கள்.

"ஒன்றை எண்டாலும் உருப்படியா வளப்பம்" எனத் தங்கள் மனச்சாந்திக்காக உபதேசமும் செய்து கொள்கிறார்கள். ஓரிரு குழந்தைகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொள்வதையே தற்காலத்தில் மாதிரியாக – *பஷனாக* – *மொடலாக* – *ஸ்ரையிலாக* பல தம்பதியினர் கைக்கொள்வதைக் கவலையோடு சுட்டிக் காட்ட வேண்டியிருக்கிறது.


புலம்பெயர்ந்து குறிப்பாக ஐரோப்பிய ஸ்கன்நேவிய நாடுகளில் வாழும் எம்மவர்கள் இந்த விடயத்தில் பாராட்டுதற்குரியவர்கள். குடும்பத்தில் மூன்று, நான்கு பிள்ளைகள் அவசியமானது என்பதைக் கருத்தில் கொண்டு அவர்கள் புலத்தில் செயல்படுவது ஈழத்தில் வாழும் நமக்கு நிச்சயமாக முன்னுதாரணமாகத் திகழ்கிறது.

புலத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் பொதுவாக மூன்று பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பது உண்மையில் போற்றுதற்குரியது. இப்பெற்றோர்களுக்கு அந்நாட்டு அரசுகளின் ஒத்துழைப்பும் உதவியும் கிடைப்பது அவர்களுக்கு இக்கடமையைப் புரிவதற்கு மேலும் சாதகமாக இருக்கிறது.

**வாழ்நாள் சாதனையாளர்கள்**

"பத்துப் பனிரெண்டு பிள்ளைகளப் பெத்துப்போட்டு அண்டைய பொண்டுகள் (பெண்கள்) கம்புமாதிரி நின்டுதுகள். ஆனா, இப்பத்தே பொண்டுகள் ஒண்டு ரண்டப் பெத்துப்போட்டு குருத்தெடுத்த தென்னங்கண்டு (தென்னங்கன்று) போல காட்சி தருதுகள்" எனக்கூறி அக்காலத் தாய்மார் களையும் இக்காலத் தாய்மார்களையும் ஒப்பிட்டுத் தன் கருத்தை மிக ஆணித்தரமாகப் பகிர்ந்தாள் ஈரைந்து பிள்ளைகளின் தாயொருவர்.

இக்கருத்துச் சொன்ன பாணியைப் பார்த்தவர்களுக்குத் தெரியும், அத்தாய்க்கு வயோதிபம் ஆகிவிட்டது: இல்லையென்றால், இன்னும் இரண்டு,



மூன்று குழந்தைச் செல்வங்களுக்குத் தாயாகி இருப்பாள்! அத்தகைய மனத்திடன் அவளிடத்தில் இருந்தது, தெரிந்தது. அத்தகைய மனத்திடம் இன்றைய இளம் தாய்க் குலத்திற்கு இருக்கிறதா என்பது கேள்வியே!

பல்கிப் பெருகி பாரினை நிரப்புங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என விவிலியத்தின் தொடக்க நூலில் கூறப்பட்ட அருள்வாக்கை நம் பேரன்மார்களும், மூதாதையர்களும் மிகக் காத்திரமாகப் பின்பற்றியதால் ஏற்பட்ட விளைவுதான் பத்து, பன்னிரண்டு பிள்ளைகளைப் பெற்றெடுத்த சமாச்சாரம்!

பல்கிப் பெருகி பாரினை நிரப்புங்கள் என்பதை அவர்கள், "பல்கிப் பெருகிப் பட்டியை (ஆடுகள், மாடுகளை அடைத்து வைக்கும் இடம்) நிரப்புங்கள் என விளங்கிக் கொண்டார்களோ என்னவோ!

மேலும், நம் பண்பாட்டில் காணப்படுவதுபோல, "பதினாறும் பெற்று பல்லாண்டு வாழ்க" (இங்கு, பதினாறு எவற்றைக் குறிப்பன என்றால்; அறம், மதிப்பு, வீரம், விழிப்புணர்வு, வெற்றி, துணிவு, செல்வம், உணவு, ஆரோக்கியம், நுகர்ச்சி, அழகு, சமுதாயம், சுற்றத்தார், வாழ்நாள், அறிவு, மகவு ஆகியவையாகும்.) என்பதை நம் முன்னோர்கள் தங்களுக்கு வசதிப்பட்டது போல புரிந்து கொண்டார்களோ தெரியவில்லை! அந்நாட்களில் பொழுது போக்குகளும் குறைவுதானே!...

எக்காரணமாய் இருந்தாலென்ன, பன்னிரண்டு, பதின்மூன்று, பதினாறு குழந்தைகள் என ஒன்றன் பின் ஒன்றாக அவர்களால் பெற்றுத்தள்ள முடிந்திருக்கிறது! அப்பப்பா, உண்மையில் இவர்கள் அதில் விற்பனர்கள்தான்! அவ்வவ்போது வரிசையில்விட்டுத்தான் தம் பிள்ளைகளைக் கணக்கெடுத் திருப்பார்கள்!

யாரால் அது முடியும்? நம்மால் அது முடியுமா? உண்மையில் அவர்கள் அந்த விடயத்தில் வாழ்நாள் சாதனையாளர்கள்தான்! எது எப்படியோ நம் முன்னோர்களின் குடும்பங்களில் பிள்ளைச் செல்வங்களுக்குக் குறைவே இல்லை என்பது மட்டும் வெள்ளிடை மலை.

அதனால்தான், இத்தனை அழிவுகளான சுனாமி, முப்பது - நாற்பதாண்டுப் போரின் பின்னரும் கொஞ்சமாவது நம்மினம் மிஞ்சிக் கிடக்கிறது.

நம் பேரன்மாரைப் பற்றி இவ்வாறு சுவாரசியமாக யோசித்தாலும், இப்படிச் சிந்திக்க எப்படி முடிகிறது என நீங்கள் நினைக்கலாம்? என்ன செய்வது, உங்களைப் போன்ற அறிவுசார் வாசகர்கள் இருக்கும்வரை நம் அறிவுத் தேடலின் சிந்தனைச் சிதறல்கள் இவ்வாறு அமைவது இயல்புதானே!

**இரண்டுபேர் உழைத்தும் போதாதா?**

முக்காலத்தைப்போல இக்காலத்தில் டசின் கணக்கில் பிள்ளை களைப் பெற முடியாது, அப்படிப் பெற்றாலும் வளர்க்க முடியாது என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகத்திற்கு இடமில்லாத ஓர் உண்மை. இதனைப் புரிந்துகொள்ள எத்த னையோ காரணங்களைப் பட்டியலிட முடியுமானாலும் ஓரிரு முக்கிய காரணங்களை நோக்கலாம்.

முற்காலங்களில் பிள்ளைகளைப் பெறுவதும் அவர்களை வளர்ப் பதும், வீட்டின் ஏனைய கடமைகளைக் கவனித்துக்கொள்வதும் தாய்மாரின் பெரும் பொறுப்பாக இருந்தது.

ஆனால் இன்று, குடும்ப உழைப்பில் கணவனுக்கு நிகராக நின்று மனைவி உழைத்தால்தான் குடும்பத்தைக் காப்பாற்ற முடியும் என்ற நிலை உருவாகியிருப்பதால் குடும்பத்தில் தாய்மார் உழைப்பில் ஈடுபடவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

மறுபக்கம் பார்த்தால் முன்னைய நாட்களில் அப்பாவின் உழைப்பில், வீட்டிலுள்ள எட்டு, பத்துப்பேர் சாப்பிட்டு ஏனைய தேவைகளையும் நிறை வேற்றக் கூடியதாக இருந்தது.

இன்று, இரண்டு பிள்ளைகளுக்காக இரண்டுபேர் ஓடியோடி உழைத்தும் உழைப்பது போதாது எனத் தங்கள் கடின உழைப்பில் நிறைவுகாண முடியாதிருக்கிறார்கள்.

இதனை ஈடுசெய்யச் சிலர் *சைட் பிஸ்னெஸ்சிலும்* ஈடுபடுகிறார்கள். அதாவது தங்கள் தொழிலின் ஊடாக வரும் பிரதான வருமானத்தோடு வேறு ஏதாவது வருமானம் தரக்கூடிய ஒரு தொழிலில் ஈடுபடவேண்டி ஏற்பட்டி ருக்கிறது.

முன்னைய காலங்களை விட இக்காலத்தில், பொருளாதாரம் அதாவது பணத்தின் செல்வாக்கு குடும்ப வாழ்வின் அத்தனை அம்சங்களையும் கட்டுப்படுத்துகிறது எனலாம். குடும்ப வாழ்வின் பல்வேறு கூறுகளில் பொருளாதாரம் முக்கியமானது. குடும்பப் பொருளாதாரம் ஸ்திரமாக இருக்கின்றபோதுதான் ஏனையவை நேர்த்தியாக அமையும்.

அதற்காக பொருளாதாரம் மட்டுமே குடும்பவாழ்வின் அத்தனை அம்சங்களையும் நிர்ணயிக்க முடியாது. உண்மையில், பொருளாதார வளத்தை கடின உழைப்பினால் பெருக்கிக்கொண்டு குடும்ப வாழ்வின் போக்கை சமூக, சமய, கலை, கலாசார, பண்பாட்டுக் கூறுகளோடு அமைத்துக்கொள்வதும் அவசியமானது.

**அடிப்படைக் காரணம் ஆசையும் அவாவும்**

இன்றைய உழைப்பினால் வாழ்க்கைத் தரம் கூடியிருக்கிற அதேவேளை வாழ்க்கைச் செலவும், வேலைவாய்ப்பின்மையும் அதிகரித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு செல்கிறது என்பதையும் கூர்ந்து நோக்கவேண்டி இருக்கிறது.

அடிப்படையில் ஆசையும் அவாவும் குடும்பங்களில் மிதமிஞ்சிப்போய் ஒரு பழைய பாடல் சொல்வதுபோல, "வரவு எட்டணா, செலவு பத்தணா, அதிகம் இரண்டணா, கடைசியில் தும்தனா, தும்தனா, தும்தனா..." என்ற நிலையில் பல குடும்பங்கள் பாதி வழியில் பயணிக்க வேண்டிய திசை தெரியாமல் நடுக்கடலில் தடுமாறுகின்ற கப்பலைப்போல தத்தளித்துக் கொண்டிருக்கின்றன.

**தேவையே இல்லாத தேவைகள்!**

வரவுக்கு மேல் செலவு செய்வது குடும்பங்களின் பொருளாதார நெருக்கடிக்குப் பிரதான காரணம் எனச் சொல்லத் துணியலாம்போல் தோன்றுகிறது.

நுகர்வுக் கலாசாரத்தின் தாக்கமும் மோகமும் இன்று எந்தளவிற்கு என்றால் கண்களில் காணுகின்ற பொருட்களை எல்லாம் வாங்கவைத்து விடுகிறது.

உண்மையான தேவைகள் இல்லாமலே பல 'தேவையே இல்லாத தேவைகளை' இன்றைய விளம்பர உலகம் அதிலும் குறிப்பாகத் தொலைக் காட்சி உருவாக்குவதில் தொடர் வெற்றிகளை ஈட்டிக்கொண்டிருக்கிறது.

வெளிச்சம் என்றெண்ணி நெருப்பில் வீழ்ந்து மடியும் விட்டில் பூச்சிகளைப்போல விளம்பர உலகில் வீழ்ந்து பொய்களையும் பொய்மை களையும் போலிகளையும் உண்மையென நம்பி உறவுகொண்டாடி மகிழ்கிறான் இன்றைய நவீன மனிதன். இந்த வலையில் சிக்கித் தவிக்கின்ற குடும்பங்கள் ஆயிரமாயிரம்.

இன்று, கடைகளே நம் வீடு தேடி வருகின்ற ஒரு யுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்! கால்நடையாகவோ அல்லது ஒரு சிறு வாகனத்தில் பொருட்களோடு நம் வீட்டுக்கு வருகின்றவன் எமது வீட்டில் என்னென்ன தேவையென அவனே பட்டியலிட்டு, அவனே முடிவெடுத்து, இறுதியில் அப்பொருள்களை நாம் வாங்க வைத்துவிடுகிறான்.

நம்மை, நம் வீட்டுக்குள்ளேயே, அதிகம் கதைக்க – பேச விடாமல், அவனே அத்தனை விளக்கத்தையும் சொல்லி முடித்து, நம் கண்முன்னால், நம் அனுமதியுடன் நமது கடின உழைப்பின் செல்வத்தை அவன் கவர்ந்துகொண்டு செல்கிறான்.

இத்தனையும், நம் வீட்டுக்குள்ளேயே நமக்கு முன்னால் நடந்தேறுவது தான் வேடிக்கை! நாம் கைகட்டி, வாய்பொத்தி நிற்க அவன் வர்த்தக உறவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்துவிட்டுச் செல்கிறான், மீண்டும் வறுக வருவதற்காய்!

இதுதான் இன்றைய விளம்பர உலகம் நமக்குத் தந்த சொகுசும் சுகமும்! சொகுசுகளைத் தந்து நம் சுகத்தைப் பறித்துக் கொண்டது!

**நான்கு குழந்தைகள் அவசியத் தேவை, உணர்வோமா?**

நான்கு ஐந்து பிள்ளைகள் இருக்கும் குடும்பங்களில் போதியளவு பொருளாதாரம் இல்லாவிட்டாலும், இருப்பதைப் பகிர்ந்து வாழும் பண்பை பிள்ளைகளிடையே காணலாம்.

ஓரிரு பிள்ளைகள் உள்ள குடும்பங்களில் பகிர நிறைய இருந்தும் சேர்க்கக்கூடியவை அனைத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற மனப்பாங்கு நிலவுவதை அவதானிக்கலாம்.

இதற்கு மாறாக, சில குடும்பங்களில் ஓரிரு பிள்ளைகளாக இருப்பினும் இருப்பதைப் பகிர்ந்து வாழவும் வளரவும் பழகிக்கொள்வதும் உண்டு. எனினும், மூன்று, நான்கு, ஐந்து பிள்ளைகள் ஒரு குடும்பத்தில் இருப்பது பிள்ளைகளின் ஆரோக்கியமான ஆளுமை வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் என்கிறார்கள் உளவியலாளர்கள்.

பொருளாதாரம் தேவை, வாழப் பொருளும் தேவை. அவ்வாறாயின் அவற்றை அனுபவிக்க, ஆரோக்கியமாக வளர ஓரிரு குழந்தைச் செல்வங்கள் போதுமா? எனவேதான், ஒரு குடும்பத்தில் நான்கு பிள்ளைகளாவது அவசியம் தேவை என்பதை உணர்ந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

பிள்ளைகளைப் பெற்றுவிட்டால் மட்டும் போதாது, அவர்களை வளர்க்க வேண்டிய வழிவகைகளையும் வகுக்கவேண்டும். அந்த வகையில், ஓரிரு பிள்ளைகள் மட்டுமேயுள்ள குடும்பங்களில் புதிய நல்வரவுகள் எதிர்வரும் ஆண்டுகளில் உதயமாக நல்வாழ்த்துக்கள்.

'ஒண்டு, இரண்டப் பெத்திற்று ஓஞ்சிருந்த எங்கள, இவர் உசுப்பி விட்டிருக்கிறார்' என பல இளம் வாசகர்களும், சில வயதாகின்ற வாசக நண்பர்களும் முணுமுணுப்பது புரிகிறது! "எங்களுக்கு வயதாகிவிட்டது என, யார் உங்களுக்குச் சொன்னது?" எனச் சிலர் கேள்வி எழுப்புவதும் புரிகிறது!

முயற்சி திரிவினையாக்கும். எது எப்படியோ, பல குடும்பங்களில் வரும் ஆண்டுகளில் குவா...குவா... ஒலிப்பது நிச்சயம்தானே!

மன்னா, தை 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் பற்றிக் கலந்துரையாடுங்கள்



**06**

**காதல் 'காலன்'!**

இளவயதுத் தற்கொலைகள் ஆங்காங்கே இப்போது அதிகரித் திருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. 2013ஆம் ஆண்டின் முதல் ஆறு கிழமைகளுக்குள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான தற்கொலைகள் நடந்திருப்பது பதிவாகியுள்ளன. யாழ். குடாநாட்டில் மேற்சொன்ன காலப்பகுதிக்குள் இரு இளவயதுத் தற்கொலைகள் நடந்திருக்கின்றன.

ஒன்று, யாழ்.பல்கலைக்கழக இரண்டாம் ஆண்டு மாணவி தன்னைத்தானே தீயிட்டுக் கொழுத்தியது. இரண்டு, ஆரம்பப்பிரிவு ஆசிரியர் ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டது. இவ்விரு சம்பவங்கள் வழியாக வருகின்ற பாடத்தினை எல்லாரும் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காக, மதுவிழி என்பவர், "தயவுசெய்து இதைப் படிக்காதையுங்கோ...!" என்ற தலைப்பில் மேற்சொன்ன சம்பவங் களின் பின்னணியில் ஒரு கட்டுரையை 10.02.2013 அன்று உதயன் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். இக்கட்டுரையைப் பல இளவயதினர் நிச்சயமாகப் படித்திருப்பார்கள் என எதிர்பார்க்கலாம்!

'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்று பிரசுரித்துவிட்டால் போதும்! இளவயதினர் முண்டியடித்துக் கொண்டு முதலில் பார்ப்பார்கள் – படிப்பார்கள் எனச் சந்தேகத்திற்கு இடமின்றிக் கூறலாம். அதனால்தான், மதுவிழி அக்கட்டுரைக்கு அவ்வாறு தலைப்பிட்டி ருக்கிறார்.

மேற்சொன்ன இரு தற்கொலைச் சம்பவங்களையும் பற்றிச் சொல்கின்றபோது, "... இவ்விரண்டு வெவ்வேறு சம்பவங்களின் பின்னும் இருக்கின்ற தூண்டுதல் காரணி ஒன்றுதான், காதல்!" எனக் குறிப்பிடுகிறார் மதுவிழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறப்பட்ட தற்கொலை சம்பவங்களுக்கான காரணங்கள் மதுவிழியினால் கூறப்பட்டவை என்பதைக் கருத்தில் வைத்துக்கொண்டு காதல் விவகாரத்தை ஆராயலாம்போல் தோன்றுகிறது.

நண்பர்களே! காதல் விவாதத்திற்கு ஆயத்தமா? காதல் விவரணம் பற்றித்தானே! பிறகு ஏன் படபடப்பு? ஏன் இந்தப் பதகளிப்பு? உங்களை காதல் செய்யக் கேட்கவில்லையே? உங்களைக் காதலிப்ப தாகவும் கூறவில்லையே? அப்ப, கொஞ்சம் அமைதியாய் இருங்கள். சும்மா, காதல்பற்றிக் கொஞ்சம் கலந்து பேசுவோம், வாருங்கள்.


**காதல் கணக்கு**

கணக்குக்கும் காதலுக்கும் என்ன வித்தியாசம்? எனக் கேட்கப்பட்டபோது, "21யும் 18யும் கூட்டினால் கணக்கு. 21, 18டைக் கூட்டிக்கொண்டு ஓடினால் காதல்!" என்று பதில் கிடைத்ததாம் என தமிழ்நாடு இறையியல் எழுத்தாளர் அருள்திரு வை.இருதயராஜ் சுகமான சுமைகள் என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

இவ்வாறாகப் புரிந்துகொள்ளப்படுகின்ற காதல் அபாயகர மானது. "காதல் கடல் போன்றது, இதில் முத்து எடுத்தவர்களைவிட மூழ்கிச் செத்தவர்களே அதிகம் என்றும், காதல் ஒரு பூந்தோட்டம், இங்கு மாலைகளைவிட மலர்வளையங்களே அதிகம் தொடுக்கப் படுகின்றன..." எனப் பிழையாகப் புரிந்துகொள்ளப்படும் காதலினால் ஏற்படும் விபரீதத்தை வை.இருதயராஜ் அடிகள் மேலும் விளக்கிக் காட்டுகிறார்.

**காதல் புனிதமானது**

உள்ளதைச் சொல்லப்போனால் காதல் என்ற உணர்வும் - உறவும் புனிதமானது. ஆகவேதான், "பிணம் போகிற பாதையில் மலர்தூவும் மக்கள் - இரண்டு மனம் போகிற பாதையில் மலர்தூவ மறுக்கி றார்கள்" எனப் புனித மான காதல் போற்றப் படாமல் இருப்பது வருத்தத்திற்குரியது என வேதனையுறுகி றான் கவிப்பேரரசு வைரமுத்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதமான காதல் உணர்வு புரிந்து கொள்ளப்படாதது கவலைக்குரியது. எனினும் இதைவிட வேதனையானது, காதல் என்று தொடங்கி வாழ்வைத் தொலைத்து நிற்பது அல்லது வாழ்வை இழந்து திரிவது! இப்படி வாழ்வை இழந்தவர்கள் எண்ணிலடங்காதவர்கள். "காதலர் தினத்தன்று கடற்கரை களைகட்டுகிறது. அதன்பின் தற்கொலை கொடிகட்டிப் பறக்கிறது" என வேதனையாய் மாறும் நிலையினையும் சுட்டிக்காட்டவேண்டி இருக்கிறது.

எனினும், "காதல் ஒன்றுதான் மனிதனை மீண்டும் மனித னாக்குகிறது" என்கிறார் கால் மாக்ஸ். உண்மையான காதல் - புனிதமான காதல் போற்றுதற்குரியது. அது வளர்வதற்கு - வாழ்வதற்கு வழிவகைகள் அமைக்கப்படல் வேண்டும்.

**காதல் பரந்து விரிந்த பொருள் கொண்டது**

உண்மையில் காதல் என்ற சொல் பரந்து விரிந்த பொருள் கொண்டது. "காதல் என்பது கடவுள் மாதிரி! இழுத்த இழுப்புக்கு வரும், இஸ்டத்துக்குப் பொருள் கொள்ளலாம்" எனக் கவிப்பேரரசு வைரமுத்து குறிப்பிடுவார்.

காதல் என்ற சொல்லின் பல்பொருள் பயன்பாட்டை பாற்கடல் என்ற நூலில் வைரமுத்துவே சுருக்கமாகக் குறிப்பிடுவார். " 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' என்று சம்பந்தர் பாடும்போது காதல் என்பது பக்தி. 'காதல் திருமகன்' என்று ராமனை தசரதன் குறித்தபோது காதல் என்பது அன்பு. 'ஆதலினால் காதல் செய்வீர்' என்று பாரதி பாடியபோது காதல் என்பது ஆண்பெண் நட்பு. 'காதலுக்கு வழிவைத்து கருப்பாதை சாத்த' என்று பாரதிதாசன் பாடியபோது காதல் என்பது உடலுறவு. 'முதியோர் காதல்' என்று (வைரமுத்து) எழுதியபோது காதல் என்பது உடல் கடந்த உணர்வு நிலை" என காதல் என்ற சொல்லின் பரந்துபட்ட அர்த்தங்களை ஓரளவுக்கேனும் புரியக்கூடியதாக இருக்கிறது.

இந்த வகையில் காதல் புனிதமானது. ஆனால், அதனைப் புனிதமாகவா பார்க்கிறார்கள்? பயன்படுத்துகிறார்கள்?

**காதல், *ஈமெயிலில்!* கலியாணம், *இன்ரநெற்றில்!* குழந்தை, *குளோனிங்கில்!***

ஆரம்ப காலத்தில் தோட்டங்களுக்குள்ளும், துரவுகளுக்குள் ளும் கிராமத்துக் காதல் வளர்ந்தது. முதல் பெற்றோரான ஆதாம் ஏவாளின் காதல் ஏதேன் தோட்டத்தில்தானே நடந்தேறுகிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் காதலே வளர்ந்து, பின்னர், கோயில்களிலும், பாடசாலைகளிலும், அலுவலகங்களிலும் கடிதக் காதலாக உருவாகி விருத்தி பெற்றது. "சந்தித்தவேளை சிந்திக்கவில்லை தந்துவிட்டேன் என்னை..." எனக் கூறும் பழைய சினிமாப்பாடல் பாணியில் காதல் விரிந்து சென்றிருக்கிறது.

இப்போதைய காதல், *ஈமெயில் காதலாக* மாற்றுரு எடுத்திருக்கிறது! என்னசெய்வது? ஈமெயிலில் காதலித்து, இன்ரநெற்றில் கலியாணம் முடித்து, குளோனிங்கில் குழந்தை பெற்றுக்கொள்ளும் காலமிது என வர்ணிக்கவேண்டி இருக்கிறது! இனிவரும் காலங்களில் இது எங்கு போய் நிற்கப் போகிறதோ?

**காதலுக்குச் செல்வாக்கில்லை, எனினும் சீர்படுத்தியிருக்கிறது!**

"நம்ம காதல மெதுவா வீட்டில சொல்லீற்றன்!" என காதலன் சொல்ல, "வீட்டில என்ன சொன்னாங்க?" எனக் காதலி ஆர்வத்தோடு கேட்கிறாள். அவன், "மெதுவாச் சொன்னதால யாருடைய காதிலையும் அது விழயில்ல" என்கிறான் வலு நிதானமாக! எப்படி எல்லாம் காதில் பூ வைப்பார்கள் தெரியுமா?

காதல், நம் இலக்கியங்களில் பெற்ற செல்வாக்கை, நடைமுறை வாழ்க்கையில் பெறவில்லை என்றுதான் கூறவேண்டும். இலக்கியங்களில் காதலைப் பற்றி எழுதுகிறார்கள், அவற்றை மக்கள் நன்றாகவே சுவைக்கிறார்கள். எனினும் நம் சமுதாயத்தில் காதலுக்கான அங்கீகாரம் கிடைக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

ஆனாலும், எதிர்ப்புக்களை எதிர்கொண்டு, சவால்களைச் சந்தித்து, தடைகளைத் தாண்டி இளைய சமுதாயம் காதலை வளர்க்கிறது - வாழ்விக்கிறது என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

நம் சமுதாயத்தில் சாதியின் பெயரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஏற்றத் தாழ்வுகளை ஒழிப்பதற்கு காதல் வைரஸ் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்திருக்கிறது என்பது கருத்தில் கொள்ளத்தக்கது. எனினும், எத்தனை எத்தனை காதல் திருமணங்கள் கைகூடினாலும் தமிழ் சாதி வைரஸ்களை அடியோடு அழிக்க முடியாதுள்ளதை ஏற்றுக்கொண்டாக வேண்டியிருக்கிறது.

காரணம், தமிழ் சாதி வைரஸ்கள் கல்லறைகளிலும்கூட உயிர்வாழக்கூடிய ஆற்றல் வாய்ந்தவை! தமிழ்மண் கல்லறைகளில் மட்டுமல்ல, சாதிகள் எப்போதோ காலாவதி ஆகிப்போன மேற்குலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளின் தமிழ் கல்லறைகளிலும் இந்தச் சாதி வைரஸ்கள் வீரியத் தோடும் வீறாப்போடும் உயிர்வாழ்கின்றன என்றுதான் சொல்லு கிறார்கள்!

**காதல் பற்றிய புதிய புரிதல்கள்!**

காதல் என்றால் பெற்றோருக்கு *அலேஜி* ஆகவும், இளை யோருக்கு *எனேஜி* ஆகவும் இருக்கிறது. அதனால்தான், "காதல் கத்தரிக்காய் மாதிரி - ஒத்துங்கிண்டா *எனேஜி*, ஒத்துக் கல்லண்டா *அலேஜி*" என்றான் ஒருவன்.

"காதல் பனை மாதிரி. ஏறினா நொங்கு சறுக்கினா சங்கு" என்றான் இன்னுமொருவன்.

"எப்படா இவ பேசுவா என்பதற்கும், எப்படா இவ பேச்ச நிறுத்துவா என்பதற்கும், இடைப்பட்ட காலம்தான், காதல்" என வேறொருவன் சொன்ன வரிகளும் நினைவுக்கு வருகின்றன. அடேயப்பா! எப்படி எப்படியெல்லாம் இக்காலத்துத் தலைமுறை காதல் பற்றிச் சித்திக்கிறது பார்த்தீர்களா?

"பொம்பளங்க காதலத்தான் நம்பிவிடாதே நம்பிவிடாதே, நம்பியதால் நொந்துமனம் வெம்பிவிடாதே வெம்பிவிடாதே, அத்தாண்டு சொல்லியிருப்பா ஆசையக்காட்டி, அண்ணாண்ணு சொல்லிநடப்பா ஆளையும்மாத்தி, ஆம்பிளையெல்லாம் அகிம்சாவாதி பொம்பள யெல்லாம் தீவிரவாதி...," என்றும்,

"ஆணோட காதல் கைரேகைபோல, பெண்ணோட காதல் கைக்குட்டைபோல..." என்றும்,

"காதல் காயங்களே நீங்கள் ஆறுங்களே சோக நெஞ்சங்களே ஜோடி மாறுங்களே பெண்கள் உள்ளங்கள் நிலைமாறி கிளைமாறுதே, ஆண்கள் உள்ளங்கள் கண்ணீரோடு அலைபாயுதே, வாழ்க்கை மெய்யானது காதல் பொய்யானது, ஆனது ஆகட்டும் கோப்பை ஏந்துங்களே..." எனவும் பாடி பெண்களிடம் காதல்பழி தீர்த்துக் கொள் கிறார்கள் கவிஞர்கள்.

இவ்வாறு, காதலின் காவலர்கள் ஆண்கள் - தற்போதைய சினிமா மொழிநடையில் காதல் அகிம்சாவாதிகள் என்றும், காதலின் 'கள்ளிகள்' பெண்கள் - காதல் தீவிரவாதிகள் எனவும் அர்த்தப்படுவது போல பல பாடல்களை அமைத்து வெற்றியும் கண்டுவிடுகிறார்கள் இன்றைய சினிமாப் படைப்பாளிகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காதல், கண்களை மறைத்து விடுகின்றதா?**

ஒருவரிடம், "உங்கட கலியாணம் Arranged Marriageஆ? (பேச்சுத் திருமணம்) அல்லது Love Marriageஆ" (காதல் திருமணம்) எனக் கேட்டபோது, அவர், " Running Marriage " என்றாராம் பதிலாக!

திருமணம் செய்தவர்கள்: 1.காதலித்துச் செய்திருப்பார்கள், 2.பேசிச் செய்திருப்பார்கள் அல்லது 3.ஓடிச் செய்திருப்பார்கள். எப்படிச் செய்திருந்தாலும், ஒருவர் ஒருவருக்கிடையிலான காதல் (அன்பு) அதிகரித்துச் செல்ல வேண்டும்.

ஆனால், காலம் செல்லச்செல்ல பல தம்பதிகளின் திருமண காதல் வாழ்வு இந்தியா பாக்கிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான உறவு போல இடைவழியில் மாறிவிடுகிறது.

ஏன், கணவன் மனைவி உறவை இந்தியா பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே ஒப்பிடவேண்டி வருகிறது என்றால், இரு நாடுகளும் விளையாட்டுக்கு மட்டும் ஒன்றுசேர்வார்கள்! அதாவது, கிறிக்கற் விளையாட்டுக்கு மட்டும்! அதுபோலதான் சில தம்பதிகளும்! உவமானம் புரிகிறதுதானே. 'அந்த' விடயம்தானே, ஐயம்திரிபடத் தெளிவாக அனைவருக்கும் புரிந்துவிடும்.

இதிலும் சுவாரசியமானது என்னவென்றால், இக்கட்டுரை எழுதி முடிந்து ஓரிரு வாரங்களில் அந்த விளையாட்டிற்கும் முற்றுப் புள்ளி வைத்துவிட்டார்கள் இருவரும் (இருநாட்டினரும்).

இருவருக்கும் விளையாட்டு ஒன்றுதான் தொடர்பாயிருந்தது, இப்போது அதுவும் துண்டிக்கப்பட்டு விட்டது. 'அதிலாவது ஒன்று சேர்ந்து, ஒற்றுமையைக் காட்டுங்களேனப்பா' என இருசாராரையும் பார்த்து இரந்து கேட்க வேண்டியிருக்கிறது!

காதல் உறவு இடைநடுவில் முறிந்துவிடக் காரணம் என்ன என்று ஆராயும்போது, காதலிக்கும் காலங்களில் நடைமுறை யதார்த் தங்கள் கண்ணில்படுவதில்லை, அப்படிக் கண்ணில் பட்டாலும் அவற்றைப் புரிந்துகொள்வதில்லை, அவ்வாறே புரிந்துகொண்டாலும் அவற்றை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை.

'காதலுக்குக் கண்ணில்லை' என்று சொல்லப்படுகிறது. காதலுக்குத்தான் கண்ணில்லாமல் போனாலும் காதலிக்கிறவர்களுக்கு என்றாலும் இருக்கிறதுதானே கண்கள்! அவ்வாறெனில், கண்ணிருந்தும் பார்ப்பதில்லை என்றுதான் பொருள் கொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்தானோ என்னவோ, காதல் என்றால், "கண்கள் செய்யும் தவறுக்கு இதயம் அனுபவிக்கும் தண்டனை" என்கிறான் ஒரு கவிஞன்.

**காதல் செய்வோமா?**

ஆக, காதலை இன்று பலர் குறிப்பாக இளவயதினர் பிழையாக, சினிமாப்பாணிக் காதலாகப் புரிந்து கொள்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

அண்மையில் வெளிவந்த ஒரு பாடல் இசைப்பதுபோல, "ஆம்பளைக்கும் பொம்பளைக்கு அவசரம், அத (அதை) காதலுண்ணு சொல்லுறாங்க அனைவரும். காதல் ஒரு கண்ணாம்பூச்சி கலவரம், அது எப்போதுமே போதையான நிலவரம்... அவ(ன்) பொழுதுபோக் குக்கு ஒரு பிகர பாக்கிறா, அவ செலவு பண்ணத்தா ஒரு லூசு தேடுறா, இங்க ரண்டுபேருமே பொய்ய பழகிறா, அது புளிச்சிப்போச்சின்னா கைகுலுக்கிப் பிரியிறா..." இப்படிப்பட்டதுதான் காதல் என தப்புக் கணக்கு போட்டுக் கொள்கிறார்கள் தற்காலத் தலைமுறையினர்.

**காதலுக்கு, சரியான கலவை வேண்டும்!**

உண்மையில், "நேசித்தல் - புரிதல் - பொருந்துதல் - மதித்தல் - சத்தியம் - சாத்தியம் எல்லாம் கூடிய கலவையே நல்ல காதல்" என்பார் கவிப்பேரரசு வைரமுத்து. இந்தக் கலவைகளில் ஒன்று குறைந்தாலோ காதல் கஸ்ரத்தில்தான் வந்து முடியும் என்பதை உணரவேண்டும், இளையோருக்கு இவ்வுண்மையை உணர்த்தவும் வேண்டும்.

அவ்வாறாயின், கள்ளக் காதலுக்கு - கணக்குவிடும் காதலுக்கு சிவப்பு வெளிச்சமும், உண்மைக் காதலுக்கு - நம்பிக்கை நிறைந்த காதலுக்கு - நாணயமான காதலுக்கு வேறென்ன பச்சை வெளிச்சமும் காட்டவேண்டியதுதானே.

கறுப்புக்கொடி, பச்சைக்கொடி காட்டுகின்ற காலம் மலை யேறிப் போனதால்தான் நிறத்தினால் அடையாளப்படுத்த வேண்டியி ருக்கிறது. என்னசெய்வது, காலத்திற்கேற்ப குறியீடுகளையும் மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

உண்மைக் காதலையும் பொய்க் காதலையும் பிரித்தறிவதற்கு நல்ல புத்தியும், தெளிந்த அறிவும், ஞானமும் இருக்கவேண்டும். இவையிருந்தால் காதல்வாழ்வு இன்று ஏன் கதிகலங்கி நிற்க வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதலைக் காதலியுங்கள்

## 07

**காதல் 'ஓட்டப்போட்டி'!**

பாடசாலைகளில் முதல் தவணையில் விளையாட்டுப் போட்டி நடைபெறுவதுண்டு. சில கிராமங்களில் இவ்விளையாட்டுப் போட்டியை 'ஓட்டப் போட்டி' என்று கிராமிய வழக்கில் அழைக்கிறார்கள். பரவலாக இவ்வாண்டும் எல்லாப் பாடசாலைகளிலும் 'ஓட்டப் போட்டிகள்' மிகச் சிறப்பாக நடைபெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வோட்டப் போட்டிகளுக்காக ஓடிப் பழகியோ என்னவோ, சில பாடசாலைகளிலிருந்து ஒருசில மாணவ மாணவியர்கள் சோடிகளாக ஓடியிருப்பதாக அறியக்கிடக்கிறது. அதுவும், இச்சோடிகள் சிறுவர்கள் என்ற வகைப்படுத்தலின் கீழ் வருபவர்கள். அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் இச்சோடி ஓட்டத்தில் யாருக்கு முதலிடம் கொடுக்கலாம் என்பதில் திக்குமுக்காடித் திண்டாடிப் போகிறார்களாம்.

காரணம், இந்த ஓட்டப்போட்டியில் இருவர் மட்டுமே ஓடுகிறார்கள். இருவரும் சேர்ந்தே ஓடுவதால் எந்த நூல் பிடித்தும் முதலிடம் யாருக்கு என்பதில் தொடர்ந்து இழுபறி நிலையே நிலவுவதாகவும், இதனால், இப்போட்டி நடுவர்களாகிய அதிபர் ஆசிரியர்கள் பெற்றோர், தங்களுக்குள் இவ்விடயத்தில் முரண்பட்டுக் கொள்வதாகவும் தெரிகிறது.

பாவம்! அதிபர் ஆசிரியர்களால் என்ன செய்ய முடியும்? அவர்கள் கல்வி அமைச்சினால் நிர்ணயிக்கப்பட்ட பாடத்திட்டத்தைத்தான் கற்பிப்பார்கள். "இல்லை, நாங்கள் விரும்புகின்ற *சிலபஸ்சைத்தான்* படிப்போம்" என்றால் இவ்வப்பாவி அதிபர் ஆசிரியர்களால் என்னதான் செய்யமுடியும்?

மேலும், ஆசிரியர்கள் வகுப்பறைகளில் மாணவர்களை இருத்தி வைத்து ஆறுதலாக அமைதியாக கற்பிப்பார்கள். 'இதுகள்', "இல்லை நாங்கள் ஓடிபோய், ஒளிந்திருந்துதான் படிக்கப் போகிறோம், *சிலபஸ்சை* முடிக்கப் போகிறோம்" என்று ஒற்றைக் காலில் நின்றால் யார் இவர்களுக்கு உதவ முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன, அந்த ஓட்டப் போட்டி வேகம், சோடாவை உடைத்ததும் *காஸ்* (Gas) வெளியேறுவதுபோல விரைவாக வெளியேறி சற்று நேரத்திற்குள்ளேயே அடங்கிவிடும். பின்பு, மூன்று நான்கு நாட்களுக்கு முன்னர் பிறந்த பூனைக் குட்டிகள்போல கண்ணைத் திறந்து பார்த்தால் எல்லாம் தர்மசங்கடமாகப் போய்விடும்.

எனவேதான், இவ்விடயத்தில் பெண் பிள்ளைகள் மிக அவதானமாக இருக்கவேண்டும். ஏனென்றால், 'பெடிகள்', அவர்களின் உசார் அடங்கியதும் மறைந்துவிடுவார்கள். பெண்பிள்ளைகள்தான் கொஞ்சக் காலம் போனதும் தங்களோடு இன்னொன்றையும் தாய்ப்பூனை காவித்திரிவதுபோல காவித்திரியவேண்டி வரும்.

எனவேதான், அதிபர் ஆசிரியர்கள் பெற்றோர் மற்றும் வழிகாட்டிகள் இவ்விடயத்தை இளையோரின் உள்ளங்களில் நன்றாகப் பதியும்படி செய்யவேண்டும் என்பது இன்றைய காலத்தின் மிக அவசரத் தேவையாக அவதானிக்கப்படுகிறது.

இது என்ன புதுச் சமாச்சாரமா? கடந்த காலத்திலும் இப்படியான ஓட்டப் போட்டிகளில் ஓடிய சோடிகள் இருக்கத்தானே செய்திருக்கின்றன என்றொரு கேள்வியை யாரும் முன்வைக்கலாம்.

உண்மைதான், அக்காலத்திற்கும் இக்காலத்திற்கும் இடையில் ஒரே ஒரு முக்கிய வித்தியாசத்தைத் தெளிவாகப் பார்க்கலாம். அது, இக்காலத் தவர்களின் வேகம்! அதிவிரைவு பேருந்துகளைப் பார்த்தோ அல்லது அதில் பயணம்செய்தோ தெரியவில்லை, 'பறக்குதுகள்'!

**காதல் ரம்மியமானது!**

"உலகத்தில் என்றுமே தீர்ந்து போகாத விஷயங்கள் இரண்டு. ஒன்று உழைப்பு, இன்னொன்று காதல். பூமி சூரியனைச் சுற்றிச்சுற்றி வருவது மாதிரி மனிதகுலம் இந்த இரண்டையும்தான் சுற்றிச்சுற்றி வரவேண்டும். சூரியனைச் சுற்றி வராவிட்டால் பூமிக்குப் பருவங்கள் இல்லை. உழைப்பையும் காதலையும் சுற்றிவரா விட்டால் மானுடத்தின் சரித்திரத்திற்கென்று சம்பவங்கள் இல்லை. உழைப்பு உலகத்தைப் புதுப்பிக்கிறது. காதல் உயிர்களைப் புதுப்பிக்கிறது. காதலையும் உழைப்பையும் கழித்துவிட்டால், விலங்குகளின் பட்டியலில் கடைசியாக மனிதன் பெயரும் எழுதப்பட்டிருக்கும்..." என்பார் கவிப்பேரரசு வைரமுத்து.

காதல் என்றாலே ரம்மியமானதுதான். காதல் புனிதமானது, அதேவேளை புதுமையானதும்கூட. காதல் உணர்வு உண்மையில் உயிரோட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்தது. உயிர் இயக்கத்தின் இருப்பிடம் என்றுகூட சொல்லக்கூடிய அளவிற்கு காதல் வலிமை படைத்தது.

ஆனால் இன்று, காதலே கத்திக் குத்துக்கும், வாள் வீச்சுக்கும், குடும்ப முறுகலுக்கும், கோஷ்டி மோதலுக்கும் காரணமாகிறது என்பதைப் பார்க்கிறபோது, என்ன கற்காலத்திலா வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ற உணர்வு வருவது தவிர்க்க முடியாததே.

இவ்வாறு காதல், விரும்பாத பல விஸ்வரூபங்கள் எடுப்பதற்குக் காரணங்களாக ஒன்று ஒருதலைக் காதல், இரண்டு பொருந்தாக் காதல் எனச் சுருக்கமாக நோக்கலாம்.

**ஒருதலைக் காதல்! பொருந்தாக் காதல்!**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகள் முறையே புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் போன்ற காதல் ஒழுக்கங்களைக் கொண்டிருந்தன எனச் சங்ககால இலக்கியங்கள் விபரிக்கின்றன. குறிஞ்சி நிலத்தில் இரவுக்குறி, பகற்குறி, பாங்கற் கூட்டம், இடம் தலைப்பாடு போன்ற காதல் ஒழுக்கங்களையும் காணலாம். இவற்றோடு கைக்கிளை, பெருந்திணை போன்ற காதல் ஒழுக்கங்களைப் பற்றியும் சங்க காலத்து இலக்கியங்கள் பேசுகின்றன.

கைக்கிளை என்பது ஒருதலைக் காதல் ஒழுக்கமாகும். தான் விரும்பும் ஒருவரை, அவர் விருப்பம் இன்றியே காதலிப்பதாகும். அநேகமாக ஆண்கள் மத்தியில் இது அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது. தான் நேசிப்பவளைத் தூக்கிக்கொண்டு போகும் சம்பவங்களை அவ்வப்போது பத்திரிகைகளின் மூலமாக அறியலாம். காரணம், இவன் காதலை, அவள் விரும்பாததால், 'அவள் நடக்கவும் மாட்டாள்', 'கூட்டிக்கொண்டு ஓட வரவும் மாட்டாள்' என்பதால் தூக்கிக்கொண்டு ஓடுகிறார்கள் என இக்காதலைப் புரிந்துகொள்ள வேண்டி இருக்கிறது. இவ்வொருதலைக் காதலைத்தான் சங்க காலத்து இலக்கியம் கைக்கிளை என்றழைத்தது.

மற்றையது, பெருந்திணைக் காதல் ஒழுக்கமாகும். இது பொருந்தாக் காதலைக் குறிக்கும். ஒருவன் ஒருத்தி மீது கட்டுக்கடங்கா காமத்தினால் அவளை அடைய முடியாது வரைபாய்தல், மடல் ஏறல் போன்றவற்றால் தனது இன்னுயிரை மாய்த்துக் கொள்ளுதலை பெருந்திணைக் காதல் என்றார்கள் சங்க காலத்தினர்.

பொருந்தாக் காதலினால் அன்று தொடக்கம் இன்றுவரை உயிரை மாய்த்தல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. வரைபாய்தல், மடல் ஏறல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவை நவீன வடிவங்களைப் பெற்று இக்காலங்களில் இவை வெவ்வேறு முறைகளில் நடந்தேறத்தான் செய்கின்றன.

**மைனர் குஞ்சுக் காதல்!**

இந்த நவீன யுகத்தில், இருவருக்கும், காதல் செய்யும் ஆணுக்கும் பெண்ணுக்கும், தேவையான மனப்பொருத்தம் மனமுதிர்ச்சி சுய விருப்பம் புரிந்துணர்வு போன்ற உள்ளம் சார்ந்த பொருத்தங்களையும், குடும்பத்தில் புரிந்துணர்வு பொருளாதார நிலை போன்ற புறக் காரணிகளையும் யார் சீர்தூக்கிப் பார்க்கிறார்கள்? சீர்தூக்கிப் பார்த்தபின், 'இது பொருந்தாக் காதல்' என்று யார் விட்டுவிடுகிறார்கள்?

பொருந்தாது என நன்கு தெரிந்தும் பொருந்தாக் காதலையும் பொருந்திக் கொண்டல்லவா புறப்பட்டு விடுகிறார்கள் தற்காலத்துத் தலைமுறையினர். குறிப்பாக, 'மைனர் குஞ்சு' தலையெடுத்ததும், தலை கீழாகத்தான் தம்பி நடக்கத் தலைப்படுகிறான். யார் என்ன செய்ய முடியும்? மைனர் குஞ்சுவின் குணமும் இயல்பும் அப்படித்தான், மைனர் குஞ்சினுடைய எழுச்சியும் கிளர்ச்சியும் ஆரம்பத்தில் அப்படித்தான் இருக்கும்! துடுப்பாட்டத் துக்குத்தான் துடியாத் துடிப்பான்!

சவாரிக்குப் பூட்டிய காளைக்கன்றுகள் மாதிரி மைனர் குஞ்சு பாயத்தான் நிற்பான்! அதற்காக, காளைக்கன்றுகள் பாய்கிற திசையில் சவாரி செய்ய முடியுமா? குறிப்பிடப்பட்ட சுவட்டு ஒழுங்கில்தான் காளைகன்றுகளைச் சவாரிசெய்யப் பழக்கவேண்டும். இல்லையென்றால் போட்டியில் இருந்து விலக்கி விடுவார்கள். இதுபோலதான், மைனர் குஞ்சைரையும் ஒழுங்கு படுத்தப் பழக்கவேண்டும். அவர் பாய்கிற திசையில் பழக்கப்பட்டால் பக்கவிளைவுகள் பயங்கரமாகத்தான் வந்து சேரும்!

ஆகவேதான், ஒவ்வொரு நாட்டின் சட்டதிட்டத்தில்கூடக் குடும்பமாய் சேர்ந்து வாழ்வதற்கான வயதெல்லையை வகுத்துச் சட்டமாக்கி வைத்திருக் கிறார்கள். பதினெட்டு ஆவதற்குள் பாய நின்றால் விளைவு என்னவாகும்? மூக்கைப் பிடித்தால் வாயைப் பிளக்கத் தெரியாத சில சின்னஞ்சிறுசுகள்கூட இந்த விஷயத்தில் சிங்கங்களாக மாறிவிடுகின்றனர்!

எனவேதான், *மைனர்* தம்பிமாரும், *மைனர்* தங்கச்சிமாரும் இவ்விடயத்தில் முதிர்ச்சி அடையவேண்டி இருக்கிறது. முதிர்ச்சி அடையாமல் வெம்பிப் பழுப்பதில் அல்லது பிஞ்சில் பழுப்பதில் எதுவித ருசியும் இருக்காது, சுவையும் இருக்காது என்று கூறுவதிலும் பார்க்க ஒரு பிரயோசனமும் இருக்காது என்றே சொல்லவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக, இளையோர் இதனைக் கொஞ்சம் ஆழ்ந்து சிந்திப்பதும், இளையோரை இவ்விடயம் குறித்து ஆழ்ந்த சிந்தனைக்குத் தூண்டுவதும் பெற்றோர், அதிபர், ஆசிரியர்களின் பாரிய பொறுப்பு என்பதையும் இவ்விடத்தில் கோடிட்டுக் காட்டவேண்டி இருக்கிறது.

எத்தனை விடயங்கள் கோடிட்டுக் காட்டப்படுகின்றன! எந்தப் பெற்றோர் அவர்களின் வீடுகளிலும், எந்த அதிபர் ஆசிரியர்கள் தம் பாடசாலைகளிலும், எந்தச் சமூகத் தலைவர்கள் தம் சமய அல்லது சமூக நிறுவனங்களிலும் இவற்றைப் பற்றிக் கொஞ்சம் சிந்திக்க விளைகிறார்கள்?

**காதல் என்பது எந்த மாதிரி?**

"காதல் என்பது *கறண்ட்* (மின்சாரம்) இல்லாத நேரத்தில வாற நுளம்பு மாதிரி! துரத்தவும் முடியாது, ஒழுங்காகத் தூங்கவும் முடியாது" எனச் சொல்லிச் சென்றான் ஒருவன். இதனைச் சொன்னவன், நல்ல நுளம்புக்கடி (காதலினால் விழுந்த அடி) வாங்கியவனாகத்தான் இருக்கவேண்டும் அல்லது போனால், இப்படிச் சிந்தனை எப்படிப் பிறக்கும்!

"காதல் என்பது *பபிள் கம்* (Bubble-Gum) மாதிரி! முதலில் இனிக்கும், பிறகு இழுபடும்" என்றான் இன்னொருவன். இவனும் *பபிள் கம்* சாப்பிட்டுப் சாப்பிட்டே காலத்தைக் கடத்தியவனாக இருக்கவேண்டும். காதலால் மிஞ்சியது இவருக்கு *பபிள் கம்* ஆகக்கூட இருக்கலாம். நடந்ததை நினைத்து *பபிள் கம்*மை சப்பிக்கொண்டு இருக்கவேண்டியதுதான்? வேறென்ன செய்வது? ஒவ்வொருவரும் தங்கள் அனுபவத்திலிருந்துதான் என்றல்ல, அனுபவத்திலிருந்தும் பேசுவதுண்டு!

காதல் பஞ்சு மாதிரி! இலேசாகப் பறக்கவும் கூடியது, இலகுவாகப் பற்றிக்கொள்ளவும் கூடியது. பற்றிக்கொள்ளுகின்ற பக்கத்தை தமக்கு அனுகூலமாகப் பார்க்கிறார்களே தவிர மற்றைய பக்கமாகிய இலகுவாகப் பறந்துபோகக்கூடிய பக்கத்தை காதலிப்பவர்கள் நோக்குவது மிகக் குறைவாகவே இருக்கிறது. அதனால்தான், "அவள் பறந்து போனாளே என்னை மறந்து போனாளே..." எனக் கவிஞர்களால் கவிதைபாட வேண்டி வருகிறது.

காதல் என்பது கைத்தொலைபேசி மாதிரி! தொடக்கத்தில் தலைமாட்டிலும் வைத்துக் கொஞ்சலாம், நாள் போகப்போக அதுவே தலையிடியாகவும் மாறலாம். தலையிடி இயற்கையாக வருவதுண்டு. சிலர், தாங்களே தலையிடிகளை உருவாக்கிக் கொள்வதுமுண்டு. தாங்களே உருவாக்கிக் கொள்கின்ற தலையிடிகள் வாழ்நாள் உபத்திரவங்கள் ஆகவும் மாறுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் என்பது சவர்க்காரம் மாதிரி! காலம் போகப் போக கரைந்து கரைந்து ஒருகட்டத்தில் இல்லாமலே போய்விடுகிறது! இன்றைய உலகில், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானவர்களின் காதல் வாழ்வும் இவ்வாறுதான் மாறிவிடுகிறது. 'புதுத் தும்புத்தடி நன்றாகக் கூட்டும்' (New broom sweeps well) என்றொரு ஆங்கிலப் பழமொழி உண்டு. அதுபோலத்தான், தொடக்கத்தில் நன்றாகத்தான் காதல் செய்கிறார்கள். காலம் போகப்போக கழுதை தேய்ந்து கட்டெறும்பானதுபோல இவர்களுடைய காதல்வாழ்வும் மாறிவிடுகிறது.

காதல் பற்றிய மேற்சொன்ன வியாக்கியானங்களை வாசித்துவிட்டு, காதல்வாழ்வில் வெற்றி கண்டவர்கள் கண்டனக்குரல் எழுப்பலாம், ஆர்ப்பாட்டப் பேரணி நடத்த ஆயத்தமாகலாம். அவர்களுக்கு மட்டும் ஒரு செய்தி: காதல் வாழ்வில் வெற்றிபெற்ற வீரர் வீராங்கனைகளுக்கு பாராட்டுக்கள். வாழ்க அவர்கள் காதல்! காதல் வாழ்வில் வெற்றிபெற்ற வீரர் வீராங்கனைகளுக்கு 'காதல் விருதுகள்' வழங்க விழாவொன்று ஏற்பாடு செய்தால் இக்கட்டுரை ஆசிரியரே முதல் ஆளாக நிற்பார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**காதல், வாழ்வை; அழகாகவும் ஆக்கும், தலைகீழாகவும் மாற்றும்!**

"...சொர்க்கம் – நரகம், இரண்டில் ஒன்று, இங்கேயே நிச்சயம், காதலித்துப்பார்" என ஓரிடத்தில் கூறுகின்ற கவிப்பேரரசு வைரமுத்து, "காதலித்துப்பார் உன் கையெழுத்தும் அழகாகும்" என்கிறார் இன்னுமொரு இடத்தில்!

இது, காதலித்துக் கையெழுத்தை அழகாக்கியவர்களைப் பற்றிய ஓர் எண்ணமே தவிர, காதலித்துத் தலையெழுத்தைத் தலைகீழாய் மாற்றிக் கொண்டவர்களின் வரலாறுகளைப் பற்றிப் பேசவில்லை என்பதையும் சிந்தையில் நிறுத்தவேண்டி இருக்கிறது.

ஆகவேதான், தற்கால காதல் பாடல் வரிகளில், "*லவ்* பண்லாமா? வேணாமா?, வேணாமா? பண்லாம?..." இதற்கு, "...என்ன சொல்லப்போற, எப்ப சொல்லப்போற?...."

எல்லாத்துக்கும் ஒரு வயசும் இருக்குதில்ல!

மன்னா, வைகாசி 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் கல்வி பாடமாகட்டும்



08

**உயிரைப் பறிக்கும் காதல்!**

'செங்கலடியில் தம்பதி படுகொலை, காதல் மோகத்தில் மகள் உடந்தை' என்ற தலைப்பில் உதயன் பத்திரிகை 16.04.2013 அன்று செய்தி ஒன்று வெளியிட்டிருந்தது.

"... இந்தக் கொலைச் சம்பவத்திற்கு காதல் விவகாரம் ஒன்றே காரணமாக இருக்கலாமெனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தகவல்கள் வெளிவந்துள்ளன. கொலைகளைச் செய்த சந்தேக நபர்களுக்குக் கொலையுண்ட தம்பதியின் மகள் செய்த உதவிகள் தொடர்பில் விசாரணைகளை நடத்திவரும் பொலிஸாருக்குப் பல திடுக்கிடும் தகவல்கள் கிடைத்திருப்பதாக அறியமுடிகின்றது... காதல் விவகாரம் ஒன்றின் எதிரொலியாக இந்தக் கொலை நடந்திருப்பது ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்திருக்கும் அதேசமயம், உணவில் நஞ்சூட்டப்பட்டு மரணமடையச் செய்ய ஏற்கெனவே எடுக்கப்பட்ட ஒரு முயற்சி தோல்வியடைந்ததையடுத்தே இவ்வாறு வெட்டிப் படுகொலைசெய்ய முடிவுசெய்யப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது..." என இக்கொடூரச் சம்பவத்துடன் கூடிய செய்தியும் நீளுகிறது.

இதற்கிடையில் 21.04.2013அன்று தினக்குரல் பத்திரிகையில் சசிகலா புஸ்பராஜா, மேற்சொன்ன சம்பவத்துடன் தொடர்புடைய அதிர்ச்சி தரும் தகவல்களை, 'காதலுக்குத் தடைபோட்ட பெற்றோரைக் கொல்ல 16வயதுப் பெண் வகுத்த திட்டம்' என்ற தலைப்பில் ஒரு நீண்ட கட்டுரையை எழுதியுள்ளார்.

இவ்விரட்டைக் கொலைகளை 16 வயதே நிரம்பிய காதலனும் அவனது இரு சகாக்களும், கொலைசெய்யப்பட்டவர்களின் மகளின் உதவியுடன், நடத்தியுள்ளனர் என்பதை நடைபெறுகின்ற விசாரணைகளிலிருந்து தெரியவருவதாக உறுதிப்படுத்துகிறார். தந்தையையும் தாயையும் கொல்வதற்கான அனைத்துத் திட்டங்களையும் செய்துகொடுத்து, அவர்களை வெட்டிக் கொலைசெய்யும்போது தனக்கு ஒன்றும் தெரியாததுபோல பக்கத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறையில் மகள் படுத்திருந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

இச்சம்பவத்தில் இரத்தத்தை உறையவைக்கும் ஒரு கட்டத்தினை இவ்விசாரணையில் ஈடுபட்ட ஒரு பொலிஸ் அதிகாரி இப்போது வெளிப் படுத்தியிருக்கிறார்! மின்விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்ட நிலையில் வீட்டிற்குள் நுழைந்த மூன்று இளையவர்களும் தாயையும் தந்தையையும் வெட்டிக்கொலை செய்யும்போது *லைற்* பிடித்துக்கொண்டு அனுசரணை வழங்கியிருக்கிறாள் 16வயது நிரம்பிய மகளார்!

19.04.2013அன்று புல்மோட்டைப் பகுதியில் இன்னுமொரு இரட்டைக் கொலைச் சம்பவம் நடந்திருக்கிறது. 28.04.2013அன்று தினக்குரல் பத்திரிகையில் எம்.நேசமணி என்பவர் இவ்விரட்டைக்கொலைச் சம்பவம் பற்றி எழுதியிருக்கிறார்.

தன் ஓரினக்காதல் தொடர்வதற்காக பெற்றோரைக் கொலை செய் வதை வேண்டாம் என்று சொல்லாமல் அவ்விரட்டைக் கொலைக்கு இணக்கம் தெரிவித்துள்ளாள் 16வயது மகளார்!

காட்டிற்கு வேட்டையாடச் செல்வதாக தந்தையை கூட்டிச்சென்ற மகளின் 20 வயதான காத(அ)லி மது குடிக்கக் கொடுத்த பின்னர் அவரை அடித்துக் கொன்றிருக்கிறாள். பின்னர் அன்றைய நாள் இரவு, திட்டம் தீட்டியபடி, தாயைக் கொல்ல மகள் கோடரியை எடுத்து தன் காதலியிடம் கொடுத்து உதவிபுரிந்திருக்கிறாள்.

"சண்டாளிகளே! ஏனடி இப்படியான கொடூர முடிவுக்கு வருகிறீர்கள்?", "சண்டாளர்களே! ஏன் இந்த படுபாதகச் செயலைச் செய்கிறீர்கள்?" என்று எங்கள் செல்ல(வ)ங்களைப் பார்த்துக் கேட்கவேண்டும்போல தோன்றுகிறது.

இவர்கள் நினைப்பதுதான் காதல் என்றால் தங்கள் பாட்டில் போய்த் தொலைய வேண்டியதுதானே! ஏன் பெற்றவர்களின் உயிரைப் பறிக்க வேண்டும்? ஏன் இப்படியான பாதகச் செயலுக்குத் துணியவேண்டும்? என்பவை போன்ற உணர்வுகள் வாசகர்களுக்கு எழுவது தவிர்க்க முடியாததே.

இவ்வுணர்வுகளுக்கு மேலாக, மேற்கூறப்பட்ட சம்பவங்கள் எதனை எதிர்வுகூற விளைகின்றன என்பதை இன்றைய சமூகம் சிந்தித்துப் பார்க்கத் தவறும் பட்சத்தில் பாரதூரமான விளைவுகளை எதிர்காலங்களில் தவிர்க்க முடியாது போய்விடும் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

**உயிரை மாய்க்கும் காதல்!**

'காதலிக்கு நஞ்சூட்டிய பின்னர் விச ஊசி ஏற்றிக் காதலன் தற்கொலை' எனத் தலைப்பிட்டு கொழும்பு வடக்கு ராகம பல்கலைக்கழக மருத்துவபீட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவன் ஒருவனும் மொரட்டுவ பல்கலைக்கழக மாணவி ஒருவரும் இறந்துபோன சம்பவத்தினைத் தினக்குரல் பத்திரிகை 25.04.2013 அன்று வெளியிட்டிருந்தது. இதுபோன்ற இன்னுமொரு சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

நீண்டகாலமாக பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவனைக் காதலித்து வந்த மாணவி இந்தியாவிற்குத் திருயாத்திரை சென்று வருவதாகக் குடும்பத் தாருடன் சென்றுள்ளாள். ஊருக்குத் திரும்புகையில் அப்பெண் புது மாப்பிள்ளையுடன் வந்திறங்கியிருக்கிறாள்.

இதனால் மனமுடைந்த அவளின் காதலனான யாழ்.பல்கலைக்கழக நான்காம் ஆண்டு மாணவன் தற்கொலை புரிந்துள்ளதாக அறியமுடிகிறது. இதனை, 20.04.2013 அன்று உதயன் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

காதலுக்காக உயிரை எடுப்பதும், காதலிக்காக அல்லது காதலனுக் காக உயிரை மாய்ப்பதும் எப்போதையும்விட இப்போது அதிகரித்திருப்பதை அவதானிக்கலாம்.

இவை கோடிட்டுக்காட்ட விளைகின்றவற்றை ஆழமான சிந்தனைக்கு எடுக்கவேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகி இருப்பதை இன்றைய இளைய சமூகம் உணரவேண்டியும், இளைய சமூகத்திற்கு உணர்த்த வேண்டியும் இருக்கிறது.

காதலுக்காக உயிரை எடுப்பதும், உயிரை மாய்ப்பதும் முற்றிலும் தவறானது, பிழையானது, தீமையானது, மனிதகுலத்திற்கும் கடவுளுக்கும் விரோதமானது என்பதை அழுத்தமாகச் சொல்ல வேண்டியும் சுட்டிக்காட்ட வேண்டியும் இருக்கிறது.

**பாலியல்கல்வி பாடமாக்கப்பட வேண்டும்**

மேற்சொன்ன கொலை, தற்கொலைச் சம்பவங்கள், காதலுக்காக உயிரை எடுத்தல், காதலனுக்காக/காதலிக்காக உயிரை மாய்த்தல் போன்ற இன்னோரன்ன சம்பவங்களை அவதானிக்கின்றபோது காதல், பாலியல் பற்றிய ஆரோக்கியமான – முழுமையான புரிதலை அநேகமான இளையோர் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதுபோலத்தான் தெரிகிறது.

இன்றைய *டிஜிற்றல்* யுகத்தின் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான சினிமாப் படங்கள், சின்னத் திரைகள், இவற்றில் காண்பிக்கப்படும் 'சின்னவீட்டுக் கதைகள்', வர்த்தக விளம்பரங்கள், மின்னியல் ஊடகங்கள் போன்றவை பாலியல் கிளர்ச்சியை, பாலியல் வெறியை ஏற்படுத்தக் கூடியவையாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வயது வேறுபாடின்றி அனைவரையும் இவை ஏதோ ஒருவகையில் பாதித்தாலும், குறிப்பாக, வளர்ந்துவரும் இளம் பருவத்தினரை பல்வேறுபட்ட பாதகமான பாதிப்புக்களுக்கும் உள நெருக்கீட்டுக்களுக்கும் உள்ளாக்குகின்றன.

அத்துடன், நம் கலாசாரத்தில் பாலியல் சம்மந்தமாகப் பேசுவது சட்டம்போடாமல் தடை செய்யப்பட்ட ஒன்றாக நோக்கப் படுகிறது. இவ்வுணர்வுகளை பொத்திப்பொத்தி வைத்து இறுதியில் உடலாலும் உள்ளத்தாலும் புழுங்கிப் போனதுதான் மிச்சம்!

அதற்காக எல்லாவற்றையும் திறந்து காட்டும்படியோ – திறந்து வைக்கும்படியோ பொருள்கொள்ளக் கூடாது. அவ்வாறு அர்த்தப்படுத்திக் கொள்ளவும் முடியாது.

அவ்வாறெனின், இவ்விடயத்தினை எவ்வாறு கையாள்வது? இதிலிருந்து இளையோரை ஓரளவுக்கேனும் பாதுகாக்க 28.04.2013 அன்று உதயன் பத்திரிகையில் 'காதல் வருது ஓடுங்கோ' என்ற கட்டுரையில் ஜெரா குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது: "முரட்டுத்தனமாகத் தாக்கும் ஊடக விளம்பரங்களுக்கு முகம்கொடுத்துப் போராடி வெல்லக்கூடிய சிறார்களை கல்விச் சமூகம்தான் உருவாக்க முன்வரவேண்டும். அது எவ்வாறெனில் மூடிமூடி வைத்திருக்கும் பாலியல் ஒழுக்கத்தை கல்வியாக்க வேண்டும். பருவத்தைத் தொடும் ஒவ்வொரு பிள்ளைக்கும் பாலியல் கல்வி அவசியப் படுகிறது. அந்த மர்மத்தில் என்ன இருக்கின்றது என்பதைத் தேடத் தொடங்கும்போதே அதன் மீதான ஈர்ப்பு அதிகமாகின்றது... கணிதம், விஞ்ஞானம், சுற்றாடல் போலப் பாலியலும் அறிவியல் ரீதியான பாடப் புத்தகமாக்கப்பட வேண்டும். அப்போதே காதலர்களிடமிருந்து அவர்களின் உயிர் தப்பிக்க வழி கிடைக்கும்."

மேலும், பதின்ம வயதையடையும் பிள்ளைகளுக்கு பெற்றோர் பாலியல் சம்மந்தமான விடயங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக விளக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படவேண்டும்.

பாலியல் சம்மந்தமாகப் பிள்ளைகளுடன் பெற்றோர் பேச இனிமேலும் பின்னடித்தால் பிள்ளைகள் தங்கள் சகபாடிகள் ஊடாகப்பெறுவது பாலியல் சம்மந்தமான ஆடைநீக்கப்பட்ட அரைகுறைத் தகவல்களாக இருக்குமே தவிர அறிவுசார்ந்தவையாக – ஆரோக்கியமானவையாக அமையாது.

இவ்வாறு சகபாடிகள், ஒலி ஒளிப் படங்கள் போன்றவை ஊடாகக் கிடைக்கும் தகவல்கள் பிள்ளைகளின் பாலியல் ஆளுமை விருத்திக்குப் பயன்படாது. பாலியல் ஆசைகளை வளர்க்கவே தீனிபோடும்.

எனவேதான், பாலியல் கல்வி பாடமாக ஆக்கப்பட வேண்டும் என்பது அத்தியாவசியமாகிறது. அப்படி ஆக்கப்படும் பட்சத்தில், ஒன்று வளரும் இளம் பிள்ளைகளுக்கான ஆரோக்கியமான பாலியல் கல்வி கிடைத்துவிடும். இரண்டு, இளையவர்களும் ஏனைய பாடங்களில் *வீக்காக* இருக்கிறார்களோ இல்லையோ இப்பாடத்தில் 'ஏ' அதி திறமைச்சித்தி பெறுவார்கள் என ஐயம்திரிபடக் கூறலாம்.

இப்பாடத்தைப் படிக்கும்படி, மீட்டல் செய்யும்படி யாரும் பிள்ளை களை – மாணவ மாணவியர்களை வற்புறுத்தவேண்டிய தேவையிருக்காது. ஒருதடவை ஆசிரியர் படிப்பிக்கும்போதே பாட விடயம் அவர்களுக்கு இலகுவாகப் புரிந்துவிடும். பலருக்குப் புத்தகங்களைக் கொடுத்தால் தாங்களாகப் படித்து முடித்துவிடுவார்கள்.

இப்பாடத்திற்கு *ரியூசன்*, மேலதிக வகுப்புக்கள் போன்றவை தேவைப்படாது. ஏனைய பாடங்களில் திறமையாகச் செய்யாதவர்கள்கூட இப்பாடத்தில் தங்கள் அதியுச்ச அறிவுத் திறனையும் வேண்டுமாயின் ஆய்வுத் தேடலையும் செய்து மிகச் சிறப்பான பெறுபேறுகளைப் பெறுவார்கள்!

இத்துறையில் சிலர் இளவயதிலேயே முதுமாணிப்பட்டம், கலாநிதிப்பட்டம் பெறுவதற்கான தகமைகளையும் பெற்று விடுவார்கள் என அறுதியிட்டுக் கூறலாம்.

**காதலி என்பவள் கடன்காரன் மாதிரிப் பாருங்கோ!**

காதலி என்பவள் கடன் கொடுத்தவள் மாதிரி! அவன் (கடன் கொடுத்தவன்), வாங்கினால் விடமாட்டான். இவள் (காதலி) தொடங்கினால் விடமாட்டாள். கடனை வாங்கிப் பாருங்க?, காதலைத் தொடங்கிப் பாருங்க?, காதலி என்பவள் கடன்காரன் மாதிரி என்பதன் பொருள், முழுமையாகப் புரிந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலிபற்றி எழுதிய ஒருவன், "காதலி என்பவள் பாட்டி சுட்ட வடை மாதிரி! ஒழுங்காகப் பாத்துக்கல்லண்ணா காக்கா தூக்கிக்கின்னு பொயிரும்" என்றான். பாவம், வடையை சுட்டு, சாப்பிட முடியாமல், அதனைப் பறிகொடுத்தவனின் பரிதாபமான வரிகளாகக்கூட இருக்கலாம். கைக்கு எட்டிய வடை வாய்க்கு எட்டாமல் போயிருக்கலாம்! காதலியின் அன்பைப் பெறமுடியாத காதலன், "மணக்க முடியாத அரும்பையும் இனிக்க மறந்த கரும்பையும் எனக்குத் தந்த இறைவனின் கணக்கை நினைத்துப் பார்க்கின்றேன்" என்கிறான்.

**காதலனும் கணவனும் ஓட்டிக்கொண்டால் நல்லா உழுக்கித்திரியலாம்!**

காதலன் கடைக்காரன் மாதிரி! கடைக்காரன், வைத்திருக்கும் பொருளை எப்படியாவது விற்றுத் தீர்த்துவிட நினைப்பான்.

அதுபோலதான், காதல் பிறந்துவிட்டது என்றால், "தம்பியவ, எப்படியாவது தூதுவிடத்தான் துரத்தித் திரிவினம்!". கடைக்காரன் *கஸ்ரமர்ரைக்* கண்டால் விடுவானோ? அதுபோலத்தான், காதலன் தான் கண் வைத்திருப்பவளைக் கண்டால் 'விடான்', விட்டுக் கலைப்பான், விட்டுவிட்டுங் கலைப்பான்!

இது இவ்வாறிருக்க, காதலனுக்கும் கணவனுக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. அதனைச் சரியாக அடையாளம் காணவேண்டும்.

தன் உழைப்பில் வாங்கிய *மோட்டபைக்கில்* அவளைக் கூட்டிக் கொண்டு போனால் அவன் காதலன். அவ்வாறு இல்லாமல், அவளின் அப்பாவின் பணத்தில் *மோட்டபைக்* வாங்கி, அவளை ஓட்டிக்கொண்டு போனால் அது அவளுடைய கணவன் என்று அடித்துச் சொல்லலாம்.

இப்படியான அனுபவ முடிவுகளை பல்கலைக்கழகங்களில் ஆய்வுகள் செய்தாலும் கண்டுபிடிக்க முடியாது. அப்படியிருக்க, எப்படித்தான் இவனின் கண்ணில் இவையெல்லாம் படுகிறதோ எனக் கட்டுரை ஆசிரியரைப் பற்றி யோசிப்பது புரிகிறது.

காதலனுக்கும் கணவனுக்கும் என்ன வித்தியாசம் என்று பார்த்தால் போதுமா? இவர்களுக்கிடையே என்ன ஒற்றுமை உண்டு என்றும் பார்ப்பது இவ்வாய்வுக்கு ஒரு முழுமை சேர்க்கும் அல்லவா! காதலனும் கணவனும் முறையே காதலியின் – மனைவியின் கைகளில் *புளோ ரையில்ஸ்* (Floor Tiles) போன்றவர்கள்! முதல் தடவையே சரியாகப் பதித்து விட்டால், ஆண்டாண்டு காலங்களுக்கும் நல்லா உழக்கிக்கொண்டு திரியலாம்.

அதாவது முதல் Impression (எண்ணப்பதிவு – *இம்பிறஸ்சன்*)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பார்கள். காதலி தன்னைப் பற்றிய கணிப்பை – எண்ணப்பதிவை ஆரம்பத்தில் சரியாகக் கொடுத்துவிட்டால், பிறகென்ன, அமத்துகின்ற சனலுக்கு அவர்கள் (காதலன்/கணவன்) ஆடிக்கொண்டிருப்பார்!

ஆனால், முதல்தடவையே *புளோ ரையில்ஸ்* சரியாக பதிக்கப் படவில்லை என்றால், வேறென்ன? காலம் பூராகவும் கறகறப்புத்தான்! எப்படி இருக்கிறது இந்தக் கண்டுபிடிப்பு! புரிகிறதா இப்போது? *புளோ ரையில்ஸ்* பதிக்கும் போதும் யோசித்துக் கொண்டுதான் பதிப்போம். ஆமா!

**தேறினால் தெரியப்படுத்துங்கள்!**


நிறைவாக, காதல் என்பது, "இரண்டு கண்களும் இரண்டு கண்களும் எதிர்ப்பட்டுக் கொள்ள, நான்கும் குருடானபின் நடக்கும் நாடகம்" என்பார் கவிஞர் மு.மேத்தா.

பலரால் இரண்டு கண்களோடே வாழ்க்கைப் பாதையில் சரியாகப் பார்த்து நடக்கமுடிவதில்லை! அதற்குள், இரண்டுடன் இன்னும் இரண்டு கண்களைச் சேர்த்து நான்கு கண்களும் குருடானபின், இருவரும் நடத்துகிற நாடகம் எப்படி இருக்கும்?

புட்டவிக்க மாக்குளைத்து கடைசியில் கழிக்கிண்டின கதையாய்த்தான் இருக்கும் இந்த நாடகத்தின் கதையும்!

இந்நாடகத்தைப் போட்டு, நடித்து, தேறினால், தெரியப்படுத்துங்கள். முயற்சித்துப் பார்ப்போம்.

மன்னா, ஆடி 2013





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியைத் தவம் ஆக்குங்கள்



09

**சீடன், குருவைவிட மேற்பட்டவனா?**

நான்கு மாணவர்கள் இரவு முழுவதும் ஒரு களியாட்ட நிகழ்வில் பங்கேற்றதால் பரீட்சைக்குச் சரியாகப் படிக்கவில்லை. அதனால், எப்படியேனும் பரீட்சையைப் பின்போடுவதே உகந்தது என்ற முடிவுக்கு வந்தார்கள். அதிபரிடம் வந்து, "*சேர்*, இரவு ஒரு முக்கிய பிரயாணம் சென்று வரும் வழியில் *கார் டயர்* ஒன்று வெடித்து, அக்காரை *கராச்சிக்கு* தள்ளிக் கொண்டுபோய், திருத்தி, வீடு வந்துசேர விடிந்தேவிட்டது. இந்த விபத்தில் நாங்கள் உயிர் தப்பியதே பெரிய புதுமை. இன்னும் அந்த அதிர்ச்சியில் இருந்து நாங்கள் மீளவில்லை. அதனால், எங்களுக்கான பரீட்சையைப் பின்போட வேண்டும்" என அழகாகச் சோடிக்கப்பட்ட வேண்டுதலோடு வந்து நின்றார்கள்.

அதிபரும், அவர்கள் சொன்ன கதையைக் கேட்டு, பரிதாபப்பட்டு, இந்நான்கு மாணவர்களுக்கும் பரீட்சையைப் பிற்போடுவதற்கு முன்வந்தார். இலகுவான, ஆனால், சற்று வித்தியாசமான விசேட பரீட்சை ஒன்று, மூன்று நாட்களின் பின் அந்நான்கு மாணவர்களுக்கு மட்டும் நடைபெறும் எனக்கூறி அவர்களை அனுப்பி வைத்தார். விசேட பரீட்சையை ஏற்றுக்கொண்ட நான்கு மாணவர்களும், அதிபரைப் 'பேய்க் காட்டிய' மகிழ்ச்சியில் வீடு திரும்பினார்கள்.

குறித்த நாளில் நான்கு மாணவர்களும் நான்கு வெவ்வேறு வகுப்பறைகளில் அமர்த்தப்பட்டார்கள். மிக மிக இலகுவான பரீட்சை: இரண்டே இரண்டு கேள்விகள்தான்! மதிப்பெண்கள் 100!

முதலாவது கேள்வி: குறித்த அந்த விபத்து நடந்த நாளில், நீங்கள் பயணம் செய்த காரின் நிறம் என்ன? இக்கேள்விக்கான சரியான விடைக்கு, மதிப்பெண்கள் 02.

இரண்டாவது கேள்வி: வெடித்த டயர் எது? சரியான விடையைத் தெரிவுசெய்யும் படி நான்கு விடைகளும் கொடுக்கப்பட்டு இருந்தன: 1.முன்பக்க வலது டயர் 2.முன்பக்க இடது டயர் 3.பின்பக்க வலது டயர் 4.பின்பக்க இடது டயர். சரியான விடைக்கு மதிப்பெண்கள் 98!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுக்குத்தான் படிச்சிப் படிச்சிச் சொல்லுகிறது: 'பொய்யச் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேணும்' என்று! புரிகிறதா இப்போது? 'சீடன் குருவை விட மேற்பட்டவன் அல்லன்' என்ற இயேசுவின் வார்த்தைகள் எவ்வளவு அர்த்தம் பெறுகின்றன என்று!

**கடவுள் பக்தியும் நல்லறிவுமுள்ள சமூகத்தை உருவாக்க...**

ஓர் ஆற்றல்வாய்ந்த ஆசிரியர் நூறு மருத்துவர்களை, நூறு பொறியியலாளர்களை உருவாக்க முடியும். ஆனால் இந்த நூறு மருத்துவர்களும், நூறு பொறியியலாளர்களும் சேர்ந்து ஆற்றல் வாய்ந்த, திறன்மிக்க ஓர் ஆசிரியரை உருவாக்க முடியாது. இங்குதான், ஆசிரியப் பணியின் தனித்துவமும் பெருமையும் சிறப்பும் தங்கியிருக்கிறது. இதனை, இன்றைய இளம் மாணவ சமூகம் நன்கு மனதில் பதித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

அதேவேளை, ஆசிரியர்களும் தம் பெரும் பெறுமதி வாய்ந்த பணியின் பொறுப்பினை உணர்ந்து பணியாற்ற வேண்டும் என்பது சுட்டிக் காட்டப் படாமலே புரிந்துகொள்ளக் கூடியது. இவ்விடயம் பற்றிச் சொல்கிறபோது நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகள், "சம்பளத்திற்காகவோ அன்றேல் பாடத்திட்டத்தை முடிப்பதற்காகவோ அல்ல, கடவுள் பக்தியும் நல்லறிவும் உள்ள சமுதாயத்தை உருவாக்க முன்வாருங்கள்" என 20ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தம் பொறுப்பில் இருந்த பாடசாலை ஆசிரியர்களுக்கு அடிக்கடி அறிவுரை கூறுவாராம்.

பிளேற்றோ என்ற மெய்யியலாளர், "நல்ல ஆசிரியர் ஒருவர் வாழ்நாள் முழுவதும் மாணவர் ஆகிறார்" என்கிறார். நல்ல திறமைமிக்க ஆசிரியர் தொடர் அறிவுத் தேடலில் – கற்றுக்கொள்ளும் செயற்பாட்டில் ஈடுபட்டால்தான் அவரின் அறிவு பெருகுவதோடு, அறிவு விருத்திபெறும்.

இவ்வுண்மையை, "எப்போது நீ கற்றலை நிறுத்துகிறாயோ, அப்போது நீ ஆசிரியனாய் இருப்பதை நிறுத்துகிறாய்" என பெரியார் இராதாகிருஷ்ணன் தெளிவுபடுத்துகிறார்.

**கல்வி இன்று கற்பிக்கப்படுகிறதா? / விற்கப்படுகிறதா?**

17.02.2013 அன்று கிளிநொச்சியில் கனகாம்பிகைபுரத்தில் அமைந்துள்ள அன்னை இல்லத்தில் புதிதாக லெபாறா (Lebara) நிறுவனத்தின் உதவியுடன் அமலமரித் தியாகிகள் துறவற சபையினரால் பாரிய நூலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அறிவுத் தேடலுக்கு வன்னிப் பகுதியில் இந்நூலகம் பெரும் ஆசீர்வாதமாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலகத் திறப்பு விழாவோடு லெபாறா நிறுவனத்தின் ஆதரவில் அமலமரித்தியாகிகளால் கல்வி ஊக்குவிப்புக்கான உதவிபெறும் மாணவ மாணவியர்களுக்கான பரிசளிப்பு விழாவும் இடம்பெற்றது. அதில் மாணவர் களின் அனுபவங்கள் பகிரப்பட்டன.

அப்பகிர்தலில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒருவன், "தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று கற்காமல் பாடசாலைக் கல்வியுடன் திறமையாகக் கற்ற காலம் ஒன்று இருந்தது. ஆனால் இன்று, பாடசாலை களுக்கு வெளியேதான் கல்வி கற்பிக்கப்படுகிறது என்பதைவிட விற்கப்படுகிற நிலை உருவாகியிருக்கிறது! அதனால், பாடசாலைகளில் பெறமுடியாத கல்வியை பாடசாலைகளுக்கு வெளியே தனியார் கல்வி நிறுவனங்களில்தான் இப்போது பெறக்கூடியதாக இருக்கிறது. இக்கல்வியை ஏழை மாணவர் களாகிய எம்மைப் போன்றோர் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று பெறுவதற்கு உதவும் அமலமரித்தியாகிகளுக்கும் அவர்களுக்கு ஆதரவாக இவ்வுதவிகளைப் புரியும் லெபாறா நிறுவனத்திற்கும் நாம் என்றும் நன்றிக்கடன்பட்டவர்கள்!..." எனக் கூறிச் சென்றான்.

பாடசாலைகள் இருப்பதும் இயங்குவதும் முக்கியமாக கல்வி புகட்டுவதற்காகவே – அறிவை விருத்தி செய்வதற்காகவே. ஆனால், பாடசா லைகளே கல்வியை வழங்க முடியாமல் போனால் சாதாரண – வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மாணவர்கள் எப்படி, எங்கு கல்வியைப் பெற்றுக் கொள்வார்கள் என்பதை இந்நாட்டின் புத்திஜீவிகள், கல்வி அதிகாரிகள், சமூக – சமயத் தலைவர்கள் சிந்திப்பதும் அவற்றுக்குச் செயல்வடிவம் கொடுப்பதும் இன்றைய காலத்தின் அவசரத் தேவையாகும்.

**கல்விக் கனவான்களின் பார்வையில் கல்வி!**

"வாழ்வைப் பயிலும் சாதனமே கல்வி" என்பார் வில்டமோ. "உலகில் கல்வி முக்கியமானது மட்டுமல்ல அதிசயமான மாற்றங்களையும் உண்டுபண்ணக் கூடியதாகும்" என்பார் ஜே.ரஸ்கிஸன். "கல்வியின் பரந்த நோக்கம் மக்களைச் சிந்திக்கத் தூண்டுவதேயாகும்" என்பார் கிரேன்மர்.

"கல்வி என் உள்ளத்திலே உலக வாழ்க்கை எப்படி நடைபெறுகிறது என்பதற்கும், எப்படி நடைபெறவேண்டும் என்பதற்குமிடையே கடுமையான போராட்டத்தை மூட்டிவிட்டது" என்பார் கால் மாக்ஸ்.

"கல்வி என்பது ஆற்றைப் போன்றது. எவ்வளவிற்கு எவ்வளவு ஆழமாயிருக்கிறதோ அவ்வளவிற்கு அவ்வளவு அது சந்தடியின்றி அமைதியாய் இருக்கிறது" என்பார் எவ்.பேக்கன். "ஒரு செடி வளர்வதற்கு என்ன என்ன தேவையோ அதைப்போன்று மனித பண்பாட்டை வளர்க்கக் கல்வி அவசியம்" என்பார் ரூஸோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்குமோ, விரிந்த அறிவைத் தருமோ, அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை" என்பார் சுவாமி விவேகானந்தர்.

"அறிவை வளர்ப்பது மாத்திரமல்ல கல்வி, உடலையும் உள்ளத்தையும் வளர்க்க வேண்டும். கல்வியின் சிறந்த நோக்கம் செயலாற்றும் சக்தியே அன்றி, அறிவு மட்டும் பெறுவதல்ல" என்பார் வேகபார்ட்.

**தொழிற்கல்வித் துறைகளில் முன்னேற்றம் வேண்டும்**

"கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" எனச் சொல்லுகிறார்கள். அது உண்மைதான் ஆயினும், இன்றைய கற்றலின் பின் கற்ற கல்விக்கு வேலை தேடித் திரிவதில் சிலரின் ஆயுள்காலங்களே அரைவாசி ஆகிவிடுகின்றன! இந்நிலையை, "கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு: ஆனால், கற்ற கல்விக்கு வேலைதேடித் தேய்ந்தது என் செருப்பு" என கூறிச் செல்கிறான் இன்றைய ஓர் இளவல்.

கற்ற கல்விக்கு தகுதியான வேலைவாய்ப்புக்கள் கிடைக்காத சூழல் ஒருபுறமிருக்க, மறுபுறம் இன்றைய கல்வி உலகானது பரந்துவிரிந்து காணப்படுகிறது என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டி உள்ளது.

பல்கலைக்கழகங்களையும், கல்விக் கல்லூரிகளையும் மட்டும் நோக்காகக் கொண்டு கல்விகற்று வேலைவாய்ப்புக்களை பெறமுடியாது என்பதைப் பெற்றோரும் மாணவரும் இனியாவது மனங்கொள்ள வேண்டும். பல்கலைக்கழகம் சென்று படிப்பது நல்லது. பல்கலைக்கழகப் படிப்பின் பின் பல்கலைக்கழகமே வேலையையும் பெற்றுத்தரும் என்ற எண்ணத்தைக் கைவிடவேண்டும். அப்படி இல்லையென்று நம்பியிருந்தால் 'வேலையற்ற பட்டதாரிகள்' என்ற அமைப்பில் நிரந்தர அங்கத்தவராக சேர்ந்துகொள்ளக் கூடிய வாய்ப்பை எதிர்காலத்தில் ஏற்படுத்தித்தரும் என உறுதியாகச் சொல்லலாம்.

தொழில்கல்வித் துறைகளிலும் வெவ்வேறு துறைசார் கல்வியையும் கற்று இன்றைய இளந் தலைமுறையினர் முன்னேற வேண்டியுள்ளது. ஆகவே, இத்துறைகளில் வளர ஆங்கில அறிவும் தகவல் தொழில்நுட்பமும் இன்றியமையாத அம்சங்களாக மாறிவருகின்றன என்பதனையும் ஆழ்ந்து நோக்கவேண்டியுள்ளது.

**கற்றுக்கொடுக்கும் இலட்சணம்!**

கல்வி கற்பிக்கும் முறை பற்றி கல்வித்துறை ஆய்வாளர் ஒருவர் மாணவர்களுக்கு ஒரு சம்பவத்தின் ஊடாக விளக்கினார். ஒருவர் ஜெர்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பட் என்ற இனவகை நாய் வளர்த்தார். அது நல்ல சுகமாக இருக்க வேண்டும் என்பதற்காக ஒருவகை எண்ணெயைக் குடிக்கக் கொடுத்து வந்தார். ஒவ்வொரு நாளும் இவ்வெண்ணெயைக் கரண்டியால் பருக்குவதே ஒரு பெரிய வேலையாக அவருக்கு மாறியது.

காரணம், அவர் கரண்டியில் பருக்கும் போதெல்லாம் அது முரண்டு பிடித்துக்கொண்டு குடிக்க மறுக்கும். ஒரு நாள் இவ்வாறு எண்ணெய் பருக்க நாயோடு மல்லுக்கட்டுகிறபோது எண்ணெப் போத்தல் தட்டுப்பட, சீமெந்துத் தரையில் எண்ணெ சிந்துகிறது. அவரை விட்டுவிட்டு ஓடிச்சென்று தரையில் சிந்திய எண்ணெயைத் தாராளமாக நக்கிநக்கிக் குடிக்க ஆரம்பித்தது அந்நாய்!

இப்போது அக்கல்வித்துறை ஆய்வாளர், "இப்படித்தான் இருக்கிறது நாம் கல்வி கற்றுக்கொடுக்கும் இலட்சணமும்!" என்றார் முடிவாக.

எண்ணெயை நாய் குடிக்கவேண்டும் என்பதுதான் நாய் வளர்ப் பவரின் எண்ணம். ஆனால், அதனை கரண்டியில்தான் நாய் குடிக்கவேண்டும் என எதிர்பார்த்தால் வீண் விபரீதம்தான் ஏற்படும்.

அதனதனை அதனதன் பாணியில் செய்ய விட்டுவிடவேண்டும். சிறுநீர் கழிக்க, ஏன் தமிழிலேயே சொல்லிவிடுவோமே, *யூறின் பாஸ்பண்ண ரொய்லெற்றுக்குத்தான்* நீ செல்லவேண்டும் என்றால் நாய் என்ன செய்யும்? அதனால் அது முடியாது, கட்டாயப்படுத்தினாலும் அதற்குத் திருப்தியிருக்காது.

நாய், கப்பைக் கண்டால் காலைத் தூக்கித் தன் கடமையைச் செய்வது தானே அதன் பாணி. கப்பு என்று சொல்லுகிறபோது, கம்பம், வேலிக்கட்டை, மரம், நடப்பட்டிருக்கும் தடி, சுவர் மூலை போன்ற நாய்க்கு அமைவான இடங்களைக் கூறலாம். பயிற்றுவிக்கப்படுகின்ற நாய்கள்கூட சிறுநீர் கழிக்க மேற்சொன்ன அமைவிடங்களையே பெரிதும் விரும்பித் தன் எசமானையும் இழுத்துக்கொண்டு ஓடிச்செல்வதை அவதானிக்கலாம். அதனதன் பாணியில் விட்டுவிடுங்கள் வெற்றி உங்களுக்குத்தான்.

**கல்வித் தவம் செய்யுங்கள்!**

யாழ்.திருக்குடும்ப கன்னியர் மட தேசிய பாடசாலையில் 12.06.2013 அன்று பாடசாலை பரிசளிப்பு நிகழ்வில் அதிபர் அருள்சகோதரி தயாநாயகி செபமாலை தமது நீண்ட அதிபர் அறிக்கையின் இறுதியில் பெற்றோரை விழித்துச் சில விடயங்கள் குறிப்பிட்டார்.

அவை யாழ்.திருக்குடும்ப கன்னியர் மட தேசிய பாடசாலை மாணவி யரின் பெற்றோருக்கு மட்டுமல்ல அனைத்துப் பெற்றோரின் கவனத்திற்கும் உரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"...கற்காதவன் இனிவரும் உலகில் வாழவே முடியாதவனாகிறான். எனவே கல்வியைத் தவமாகக் கொள்கின்ற மனோபாவத்தினை உங்கள் பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக்கொடுத்துத் திட்டமிட்டுச் செயற்படுங்கள். அதேவேளை, கல்வியில் மட்டும் கவனம் செலுத்தாமல் பிள்ளைகள் ஒழுக்கம், நல்விழுமியங்கள் போன்றவற்றினை மதித்து நடக்கின்றார்களா என்பதனையும் கவனியுங்கள். இன்று பலுகிப்பெருகிக் கிடக்கும் தொழில்நுட்பங்களுள் தொலைக்காட்சி, சினிமா, கைபேசி, இணையம் போன்றவற்றின் பயன் பாடுகளும் நன்மையைவிட தீமையையே விதைக்கின்றன. இன்று பல பிள்ளைகள் ஒழுக்கத்தில் பிறழ்வுபடுவதற்கும் கல்வியில் அக்கறையற்று இருப்பதற்கும் இவையே காரணம் என்பதனைப் பல ஆய்வுகள் தெரிவிக் கின்றன..." எனப் பெற்றோரை விழித்து அதிபர் எச்சரிக்கையாகக் குறிப்பிட்டது பெற்றோர்களால் மிகுந்த கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன.


**விழுமியக் கல்வி வேண்டும்**

மட்டக்களப்பு புனித சிசிலியா கல்லூரியின் அதிபர் அருள்சகோதரி எஸ்.எலிசபேத் அவர்களின் அலுவலகத்தின் மையப்பகுதியில், "நான் தங்களுக்கு ஒரு வேலையை ஒப்படைத்தால் மீண்டும் உங்களைச் சந்திக்கும் போது அவ்வேலையை முடித்து விட்டேன் என்ற பதிலை எதிர்பார்க்கின்றேன். மாறாக, அதை நிறைவேற்ற முடியாமைக்கான காரணத்தை அல்ல" என்ற வாசகம் பெரிய எழுத்துக்களில் பொறித்து வைக்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.

இவ்வாறான விழுமியக் கல்விமுறை மாணவ – ஆசிரிய சமூகத்தை நெறிப்படுத்த – வழிப்படுத்த நிச்சயமாக உதவும் என நம்பலாம்.

தயவுசெய்து விழுமியக் கல்வியைக் கொடுங்கள், கல்வியை விழுங்கக் கொடுத்து விக்கல் வரப்பண்ணாதீர்கள்!

மன்னா, மார்கழி 2013





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக் கலாசாரம் காக்கப்படட்டும்



**10**

### கல்வி கண் போன்றது

மாணவன் ஒருவன், தான் படிக்கும் பாடங்கள் ஒன்றும் மனதில் நிற்பதில்லை என்பதால், தனது படிப்பைத் தொடர மனமில்லாதவனாக இருந்தான். இவ்வாறு இருக்கையில், நரம்பியல் மருத்துவ நிபுணர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பு அவனுக்குக் கிடைக்கிறது.

அந்நரம்பியல் நிபுணரிடத்தில் தன் பிரச்சினையை முன்வைத்த போது, "தம்பி நீ யாருக்காவது 1000 ரூபாவைக் கடனாகக் கொடுத் திருந்தால் மறந்துபோய் விடுவாயா? இல்லையே! ஆனால், 1000 ரூபாவைக் கடனாக நீ பெற்றிருந்தால் விரைவாக மறந்து விடுவாய்! எவை தேவை, அவசியம், கட்டாயமானது, மறக்கக்கூடாது என நினைத்து வைத்திருக்கிறோமோ அவை நினைவில் நிற்கின்றன. அதுபோலதான் கல்வியும்! கற்பவை எனக்கு மிகத் தேவையானது, மிக அவசியமானது, இன்றியமையாதது எனக் கற்றால் - கருதினால் மறக்கமாட்டாய்" எனக்கூறி அம்மாணவனை படிக்கத் தூண்டினார் அந்நரம்பியல் நிபுணர்.

கல்வி நம் கண்களாக வேண்டும். "எண்என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும் கண்என்ப வாழும் உயிர்க்கு" என்றான் தெய்வப் புலவன் வள்ளுவன். அதாவது எண் என்று சொல்லப்படுவன, எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இரண்டினையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்பார்.

ஆகவேதான், எவ்வகை வறுமைச் சூழலிலும் கல்வியைக் கைவிடக்கூடாது என்பதனை ஔவை, "கற்கை நன்றே கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே" என்ற ஆணித்தரமான கருத்தை கூறிச்சென்றாள்.

அடுத்தடுத்து இழப்புக்களையும் தொடர் இடம்பெயர்வுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையும் துயரப் படலங்களையும் சந்தித்து வறுமையிலும் கல்வியைத் தொடர்ந்த நம் வன்னிவாழ் பிள்ளைகள் உண்மையில் போற்றுதற் குரியவர்கள் மட்டுமல்ல முன்னுதாரணத்திற்கும் உரியவர்கள்.

*1985, 90*களில் குப்பி விளக்குகளோடும், கொப்பேக்கடுவை குப்பிகளோடும், பதுங்கு குழிகளுக்குள்ளும் பதுங்கிக் கிடந்து படித்த அனுபவங்களை எல்லாம் இன்றைய தலைமுறையினர் அறிந்து வைத்திருப்பது கல்விக் கலாசாரத்தை - கல்விப் பண்பாட்டை மீண்டும் நம் மண்ணில் கட்டியெழுப்ப உதவியாய் அமையும்.

**கல்வியை இழப்பது வாழ்வை இழப்பதற்குச் சமமானது!**

கல்வி, இன்றைய இளையோருக்கு ஏதோ கிழவியைத் திருமணம் செய்து கொள்வதுபோல கசப்பதாகக் கூறுவார் கவிஞர் வைரமுத்து. கல்வியை இழந்தால் அது வாழ்வையே இழந்து போவ தற்குச் சமம் என்பதை இன்றைய இளையோர் சிந்தையில் நிறுத்துவது அவசியமானதும் அவசரமானதும் ஆகும். “கற்க மறுக்கிறவன் வாழ மறுக்கிறான்” எனக் கூறுவார் சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர்.

கல்வியை முற்காலத்தைவிட இன்றைய இளைய சமுதாயம் வெறுப்பதற்கு இன்றைய கல்வி முறைகளில் காணப்படும் குறைபாடு களும் காரணம் எனச் சொல்ல வேண்டியும் - சுட்டிக்காட்ட வேண்டியும் இருக்கிறது.

மாணவர்களுடன் பாடங்கள் சம்பந்தமாக கற்றல் நடவடிக் கைகளில் ஆசிரியர்கள் நேரத்தைச் செலவிடுவதைவிட பாடக் குறிப்புக் களை எழுதித் தள்ளுவதில், பௌர்ணமி விழாவுக்கு கலைநிகழ்ச்சி தயாரிப்பதில், ஆளுநரை வரவேற்பதில், அமைச்சர்களை வழியனுப்பு தலில் எனக் குறிப்பிடத்தக்க நேரத்தை வீண்விரயம் செய்கிறார்கள்.

ஏதாவது ஒரு விழாவுக்கு என அழைத்துச் செல்லப்படுகின்ற மாணவர்களும் ஆசிரியர்களும், அமைச்சரும் அவருடன் இணைந்த சகாக்களும் வரும்வரை காத்துக்கிடந்து நிகழ்வுகளை நடத்திவிட்டு களைத்து விழுந்து திரும்புவது இப்போது சாதாரண சம்பவமாகி விட்டது.

**வேலை இல்லாதவருக்கு வேலை ஆசிரியத் தொழிலா?**

“எல்லாத்துக்கும் *அப்பிளய்* பண்ணி, ஒன்றும் கிடைக்கல்ல. அதனால *ரீச்சருக்கு அப்பிளாய்* பண்ணினனான்! ஒரு மாதிரி *அப்பொயின்மன்ற் கிடைச்சிற்றுது!*” என்றாராம் ஆசிரியராக ‘வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பார்க்கும்' இக்காலத்து ஆசிரியர் ஒருவர்.

ஆசிரியப் பணி (தொழில்) எத்தகைய உயர்ந்த நிலையில் இருந்து, எத்தகைய நிலையை அது இப்போது அடைந்திருக்கிறது என்பதை இவ்வனுபவம் ஓரளவுக்கேனும் உணர்த்தும் என்பதில் ஐயமில்லை.

"அன்று, பள்ளியைக் கோவிலாகவும் ஆசான்களை தெய்வங்களாகவும் கருதிய காரணத்தினால்தான் ஒழுக்கமும், உயர்வும் தலை நிமிர்ந்து நின்றன. இன்று பள்ளிகள் எல்லாம் வியாபாரக் கூடமாகவும், ஆசான்கள் எல்லாம் கூலிக்காரர்களாகவும் மாறி விட்டதால் காதலர்கள் பெருகிக் கலைஞர்கள்தான் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள்" என்று ஒருதடவை வலம்புரி பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் படித்தது மேற்சொன்ன அனுபவத்தை உறுதிப்படுத்துவதாகவே அமைகின்றது.

இப்படிக் கூறுவதன் மூலம், ஆசிரியப் பணியின் மேன்மை எவ்வகையிலும் குன்றிவிடவுமில்லை, அதன் சிறப்பு குறைவு படவுமில்லை. சிறந்த ஆசிரியர்கள் பலர் இக்காலத்திலும் பணியாற்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், ஆசிரியப்பணி குறிப்பிட்ட சிலரால் எப்படிப் பார்க்கப்படுகிறது என்பது எம் சிந்தனைக்குரியது.

இவ்வாறு, மிக மிக உயர்வான, மிகவும் உன்னதமான கல்விப் பாரம்பரியத்தை, அடுத்த தலைமுறைக்கு மின்சாரத்தைப் போலக் கவனமாக – உறுதியாகக் கடத்தும் ஆசிரியப்பணி, வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்கும் ஒரு வேலைவாய்ப்பாக மாறினால் ஆசிரியப் பணியின் எதிர்காலநிலை என்னவாகும்?

இன்றைய ஆசிரிய நியமனங்களைப் பார்க்கின்றபோது மேற்குறிப்பிட்ட விடயம் நன்றாகப் புரியும்! பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான வெற்றிடம் நிலவுகின்றபோதும் – தேர்தலுக்காக வேலைவாய்ப்புக் கொடுக்கின்றபோதும், உடனே வேலையில்லாத பட்டதாரிகளை அழைத்து ஆசிரிய நியமனம் வழங்கப்படுகின்ற நிலைமையே இன்று நிலவுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியப் பணிக்கான - ஆசிரியராய் இருப்பதற்கான அடிப் படைப் பண்புகள் இல்லாமல் ஆசிரியப் பணிக்கு யாரையும் அமர்த்த முடியாது. பட்டதாரியாய் இருப்பது ஆசிரியராய் ஆவதற்கான தகைமையாகாது. இதனைச் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும்: ஒவ்வொரு ஆசிரியரும் பட்டதாரியாய் இருப்பது சிறந்தது, வரவேற்கத் தக்கது. ஆனால், ஒவ்வொரு பட்டதாரியும் சிறந்த ஆசிரியராக இருப்பாரென எதிர்பார்க்க முடியாது. அதனால்தான், ஆசிரியப் பணிக்கு பட்டப்படிப்பு மட்டும் தகைமையாக இருக்கமுடியாது என அழுத்திச் சொல்லவேண்டி இருக்கிறது.

**பாடசாலைகளில் இன்று, கல்வி ஒழுங்காகக் கற்பிக்கப்படுகிறதா?**

பாடசாலைகளில் கல்வி முறையாகக் கற்பிக்கப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக அவ்வப்போது கல்வித் திணைக் களத்திலிருந்து அல்லது கல்வி அமைச்சிலிருந்து மேலதிகாரிகள் பாடசாலைகளுக்கு நேரடியாகச் சென்று பாடசாலைச் சமூகத்தினரைச் சந்திப்பார்கள்.

இச்சந்திப்புக்களில் ஆசிரியர்களின் கடமைகளில் ஒன்றான படிப்பித்தல் குறிப்புக்களை ஆசிரியர்கள் ஒழுங்காக எழுதி வைத்திருக்க வேண்டும். அவற்றை, மேலதிகாரிகள் தங்கள் வருகையின்போது பார்வையிடுவார்கள்.

ஒருதடவை, தன் படிப்பித்தல் குறிப்புக்களை முழுமையாக எழுதி வைத்திராத ஆசிரியரைப் பார்த்து மேலதிகாரி ஒருவர், "நீங்க ஒழுங்காக, படிப்பிக்கிறீங்களோ இல்லையோ என்பது எனக்கு முக்கியம் இல்ல! *நோட்ஸ் ஒவ் லெசன்ஸ்சை (Notes of Lessons)* ஒழுங்கா எழுதி வைச்சிருந்தா எனக்குப் போதும்! இல்லையெண்டா, நான் பதில் சொல்ல வேண்டும்!" என்றாராம்.

இப்படி, ஒரு கல்வி அதிகாரியை அல்ல, பலரை இன்றைய சூழலில் காணலாம்!, வேண்டுமென்றால் காட்டலாம்! கல்வி அதிகாரிகளுக்கே இத்தகைய மனநிலை நிலவினால், கல்வி, எப்படிப் பாடசாலைகளில் ஒழுங்காகக் கற்பிக்கப்படும்?

**கல்வி, புள்ளிக்கான போட்டியா?**

இன்றைய கல்வி முறையைப் பற்றிச் சிந்திக்கின்றபோது 'புள்ளிக்கான போட்டி நடைபெறுகிறதே தவிர அறிவு வளர்ச்சிக்கான போட்டி நடைபெறுவதாகத் தெரியவில்லை' என்பது போலவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிகிறது. இன்றைய கல்வி முறையை அவதானிக்கின்ற கவிப்பேரரசு வைரமுத்து, "பல இளம்பெண்கள் புத்தகச்சுமை பொறுக்காமலே பூப்பெய்திவிட்டார்கள்..." எனக் கூறுகிறார்.

எங்கள் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசுச் சிறார்கள் படுகின்ற பாடு இருக்கிறதே, அது இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு! எவ்வளவு சந்தோஷமாகக் கழிக்கவேண்டிய சிறுபராயத்தை இச்சிறார்கள் தாய் தந்தையரின் சித்திரவதையில் கழித்துக் கொண்டிருக்கிறார்கள் இன்று!

விளையாடி விளையாடிப் படிக்க வேண்டிய வயதில் தங்களை விடப் பாரமான பொதிகளைச் சுமக்கிறார்கள், தங்களிலும் பார்க்கப் பெரிய மூட்டைகளை இழுத்துக்கொண்டு செய்வதறியாது திகைத்து நிற்கிறார்கள். இந்தத் துன்பத்தை யாரிடம் கூறலாம் என அங்கலாய்ப்போடு பல சிறார்கள் தங்கள் காலத்தைக் கடத்துகிறார்கள்.

இவ்வைந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் பிள்ளைகளின் பெற்றோர் பற்றிய குறிப்பும் சுவாரசியமானது! பல பெற்றோருக்குத் தங்கள் பிள்ளைகள் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் விசேடசித்தி பெறுவது, பெரிய குடும்ப கௌரவமாக மாறிவிட்டது.

தம் குழந்தைகள் 'உடும்பு பிடிக்கும்' (அதாவது குழந்தை பிறந்து ஏறக்குறைய 03 – 05 மாதங்களில்) பருவத்திலேயே, "கண்ணே, நடக்கத் தொடங்கடா செல்லமே! எங்கள் குடும்ப கௌரவத்தைக் காக்கவந்த குலவிளக்கே! ஐந்தாம் ஆண்டு *ஸ்கொலசிப்* வரப்போகிறது, வகுப்புகள் எல்லாம் ஒழுங்கு செய்தாயிற்று, வகுப்புகளுக்குப் போகத் தொடங்க வேண்டும்!" எனப் பிள்ளைகளோடு திட்டம்போடத் தொடங்கி விடுகிறார்கள் சில தாய்மார்கள்!

இந்நிலையைத்தான் எழுத்தாளர் அப்துள் ரகுமான், "தொட்டி லிலேயே வகுப்பெடுக்கத் தொடங்கிவிடுவார்கள்போல் இருக்கிறது!" என்கிறார். வகுப்புமாறி வகுப்பு, *ரியுசன் சென்ரர்* மாறி *ரியுசன் சென்ரர்* எனத் தம் ஐந்தாம் ஆண்டு *ஸ்கொலசிப்* பிள்ளைகளுடன் சில தாய்மார் பட்டுத்திரிகிற அவஸ்த்தை இருக்கிறதே, அதனைச் சொல்லிப் புரியவைக்க முடியாது!

தமிழ்நாட்டுச் சின்னத்திரை இயக்குநர்களுக்கு இவ்விடயம் இதுவரை தெரியவில்லைப் போலும்! இல்லையென்றால் ஒவ்வொரு குடும்பத்தின் *ஸ்கொலசிப்* கதைகளையும் ஒவ்வொரு தொடர் நாடகமாக ஆக்கத் தொடங்கி இருப்பார்கள். அவ்வாறு தொடர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்களாக ஒலிபரப்பினால் தங்களைப் பற்றிய கதைகளைத் தாங்களே பார்த்து இரசித்துக்கொண்டிருப்பார்கள் எங்கள் தாய்மார்கள்!

இவ்வைந்தாம் ஆண்டு ஸ்கொலசிப்பரீட்சை 2016ஆம் ஆண்டு தொடக்கம் இடம் பெறாது எனத் தேசியக் கல்வியமைச்சர் கூறியிருப்ப தாக ஒரு தகவல் வெளிவந்திருக்கிறது. அவ்வாறு நடைமுறைப் படுத்தப்படும் என்றால் ஐந்தாமாண்டு மாணவர்களுக்கு அவர்களின் வயதில் இதைப்போன்றதொரு வரப்பிரசாதம் வேறெதுவும் அமையாது எனத் துணிந்து கூறலாம்.

**கல்வி என்பது சப்புவதும் துப்புவதும்தானா?**

“இன்றைய கல்வி விரல்களைத்தான் வேலை வாங்குகிறதே தவிர மூளையை முடக்கிவிடுகிறது” என்கிறார் கவிஞர் மு.மேத்தா. கவிப்பேரரசு வைரமுத்துவோ, “இன்றைய கல்வி நல்ல குடிமக்களை அல்ல கையொப்பமிடத் தெரிந்த மரங்களைத்தான் உற்பத்தி செய்திருக்கிறது” என்பார்.

ஆகவேதான், “வாழச் சொல்லிக் கொடுக்காத, வாழ்க்கை யைச் சொல்லிக் கொடுக்காத, ஒரு சொட்டுத் தன்நம்பிக்கையைக்கூட ஊட்ட முடியாத, இந்தக் கல்விமுறை இருந்தென்ன? எரிந்தென்ன?” எனக் குமுறுகிறார் ஒரு கவிஞர்.

மேலும், “கல்வி வாழக் கற்றுக் கொடுத்திருக்கிறது, ஆனால் வாழ்க்கையைக் கற்றுக்கொடுக்கவில்லை” என்ற ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணனின் வார்த்தைகள் இன்றைய கல்வியின் தன்மையைத் தொட்டுக் காட்டுகின்றது.

கல்வி, வெற்றிலை பாக்குப் போடுவது போலாகிவிட்டது! சப்புவதும் (பரீட்சைக்கு முன் கேள்விக்கான பதில்களை மனனம் செய்வதும்), துப்புவதும் (மனனம் செய்தவற்றை பரீட்சையில் எழுதிவிடுவதும்) கல்வி என்ற துர்ப்பாக்கிய நிலையாகிவிட்டது. மனனம் செய்தல் கல்வியறிவில் வளரப் பேருதவியாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், பரீட்சையை மட்டுமே மையப்படுத் தியதாகக் கல்விச் செயற்பாடுகள் அமைந்துவிடுகின்றபோது அது ஆரோக்கியமானதாக அமையாது.

**கல்வியின் பொருள்!**

கல்வி என்ற சொல் ‘கல்’ என்ற சொல்லின் அடியிலிருந்து வருகிறது என்கிறார்கள். ‘கல்’ என்பதற்குத் ‘தோண்டுதல்’ அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அகழ்தல்' என்ற பொருளுண்டு. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கும் ஆற்றல்களைத் தோண்டி அல்லது அகழ்ந்து வெளிக் கொண்டு வருவதே கல்வியினுடைய நோக்கமாகும்.

ஆக, மாணவர்களுக்குள் காணப்படும் ஆற்றல்களை இனம் கண்டு அவற்றை வெளிக்கொண்டு வராதவரை கல்வியினுடைய முழு மையான இலக்கு அடையப்படவில்லை என்பதுதான் பொருளாகிறது.

"பாறையை உடைத்து நீர் பெறுவது போன்றதல்ல கல்வி, ஓடையைத் தோண்டி நீர் வருவது போன்றது கல்வி" என்பார் வைரமுத்து.

கற்றல் செயற்பாடுகள் இயல்பாக நிகழவேண்டும். ஆனால், கல்லில் நார் உரிப்பது போலவே கற்றல் செயற்பாடுகள் மாணவ சமுதாயத்தில் இருப்பது கவலைக்குரியது.

"கல்வி என்பது திணிக்கத் திணிக்கத் திசைமாறிப் போகும். வற்புறுத்த வற்புறுத்த வழிநழுவிச் செல்லும். அது இயல்பாக நிகழ வேண்டும்" என்பார் இறையன்பு.

**கல்வி வாழ்க்கையை வடிவமைக்க வேண்டும்**

வாழ்க்கையை வடிவமைக்க உதவ வேண்டும் என்பதிலும் பார்க்க, பரீட்சையில் அதிக மதிப்பெண்கள் பெறப்படுவதே கல்வி எனப் பார்க்கப்படுவது அறிவியல் உலகில் ஆரோக்கியமானது அல்ல. கல்வி, அறிவு விருத்தியோடுதான் பொதுவாக நோக்கப்படுகிறது. ஆனால், கல்வி ஒரு மனிதனின் ஆளுமை - ஆன்ம விருத்தியோடும் சம்பந்தப் பட்டது என்பதை இன்றைய கல்வி உலகம் ஏன் மறந்துபோய்விட்டது என்பது வருத்தத்திற்குரியது.

கல்வி, நல்லொழுக்கத்தை, நற்பண்புகளை, நல்விழுமி யங்களை மாணவர்களின் - மனிதர்களின் மனங்களில் உருவாக்க வில்லை என்றால் முறையான கல்வி போதிக்கப்படவில்லை – கல்வியின் இலக்கு எட்டப்படவில்லை என்பதுதான் பொருளாகிறது. இக்கல்வியால் பரீட்சையில் சித்திபெறலாம், ஆனால் வாழ்க்கைத் தேர்வில் *றிப்பீற் எக்ஸாம்தான் (Repeat Exam)!*

மன்னா, தை 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைத் தெரிவுக்கான முன் தீர்மானம்



## 11

**மனைவிமார் *மாபியா* போன்றவர்களா?**

*மாபியா* (Mafia) என்றால் 'குற்றச்செயல்களில் ஈடுபட்டு பணம் பறிக்கும் குற்றவாளிகளைக் கொண்ட இரகசியமான குழுவினர்' என அகராதி விளக்கம் தருகிறது. இவர்கள் வழிப்பறிக் கொள்ளையர்களாகவும், கடல் கொள்ளையர்களாகவும் அடையாளம் காணப்படுகின்றனர்.

பொதுவாக பணம், பெறுமதியான சொத்துக்களைச் சூறையாடுவது, கடத்திச்சென்று கப்பம் வாங்குவது போன்றவை *மாபியாக்* குழுக்களின் நோக்கங்களாக இருக்கின்றன.

அதேவேளை, ஆங்காங்கே பணத்திற்காக உயிர்களைப் பறித்த சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றன. இத்தாலி, ஸ்பெயின் போன்ற ஐரோப்பிய நாடுகளிலும், சோமாலியா, நைஜீரியா போன்ற ஆபிரிக்க நாடுகளிலும் *மாபியா* குழுக்கள் காணப்படுகின்றன.

*மாபியாவுக்கான* விளக்கம் இவ்வாறிருக்க, மேற்சொன்ன தலைப்பிலுள்ள கேள்வி, "மனைவிமார் *மாபியா* போன்றவர்களா?" என்பதற்கான பதில், "இல்லை, இருக்காது, இருக்கவே இருக்காது!" என்பதாகத்தான் அமையவேண்டும்!

எனினும், "*மாபியாக்களிலும்* பார்க்க மனைவிமார் பயங்கரமானவர்கள்" எனக் குறிப்பிட்ட ஒருவன், "*மாபியாக்கள்* பணத்தை அல்லது உயிரை எடுப்பார்கள், மனைவிமார் இரண்டையும் எடுப்பார்கள்!" எனச் சொல்லி முடித்தான்.

இதனை வாசித்ததன் பின் எத்தனை *மாபியா* மனைவிப் படையணிகளின் முற்றுகைகளுக்கு யாம் உட்படவேண்டி வருமோ எனக் கொஞ்சம் பயமாகவும் இருக்கிறது! காரணம், நல்ல பல அன்புள்ள பாசமுள்ள மனைவிமார்களை *மாபியாக்களுக்கு* ஒப்பிடுவது எவ்வளவு *சீரியஸ்* ஆனது எனச் சிலர் சிந்திக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது இவ்வாறிருக்க, 'அவன் எவனோ இதைச் சொன்னான் என்று, இவன் எவனோ இதை எழுதுகிறான்' எனக்கூறிவிட்டு அன்புள்ள மனைவிமார் தங்கள் பணிகளைத் தொடரவேண்டியதுதான்.

***மாபியா* அணுகுமுறை!**

சில குடும்பத் தலைவிகளைப் பார்க்கின்றபோது *மாபியா* குழுக்களில் அங்கத்துவம் வகிப்பவர்கள் போலவும்படுகிறது! ஏனெனில், இக்குடும்பத் தலைவியர் *மாபியாக்களைப்* போல பயங்கரத் தோற்றத்தையும், நடை உடை பாவனைகளையும் கொண்டிருக்கிறார்கள்!

இதனால்தானோ என்னவோ, சில குடும்பத் தலைவர்கள் மிக அத்தியாவசியத் தேவைகளான சாப்பிடுவது, தண்ணீர் குடிப்பது போன்றவற்றுக்கு மட்டும் வாயைத் திறக்கிறார்கள். மற்றப்படி, இவர்கள் அம்மாவின் சொல்கேட்டு நடக்கின்ற நல்ல பிள்ளைகளாக இருந்து கொள் கிறார்கள்.

தவிர்க்கக்கூடிய உள்வீட்டு அசம்பாவிதங்களைத் தவிர்த்துக்கொள் வதற்கு இக்குடும்பத் தலைவர்கள் கையாளுகின்ற ஒரு யுக்தியென்றுகூட மேற்குறிப்பிட்ட நடத்தையைக் கூறலாம்.

உண்மையில் இக்குடும்பத் தலைவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான தற்காப்பு வழிகளைத் தெரிந்து வைத்திருக்கின்ற ஞானிகளாகவே அவர்களைக் கருதவேண்டியிருக்கிறது.

அதேவேளை, சில ஆண்களைச் சமாளிக்க சில மனைவியர் *மாபியாக்களாக* மாறவேண்டிய கட்டாயமும் இருக்கிறது என்பதையும் ஏற்றுக்கொள்ளவேண்டி இருக்கிறது.



ஏனென்றால், பொறுப்புள்ள குடும்பத் தலைவர்களாக அவர்கள் முழுமையாகச் செயற்படாதவிடத்து *மாபியா* அணுகுமுறை தான் பொறுப்பற்ற குடும்பத் தலைவர்களில் எதிர்பார்க்கப்படும் நேர் மறை விளைவுகளைத் தருமென்றால் குடும்பத் தலைவியர் *மாபியா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுகுமுறையைக் கடைசி ஆயுதமாகப் பயன்படுத்துவதில் குற்றமோ குறையோ இல்லை என்றுதான் நியாயப்படுத்த வேண்டியிருக்கிறது.

பொறுப்பற்ற குடும்பத் தலைவர்களை பொறுப்புமிக்கவர்களாக உருவாக்க இனியாவது உருவாகட்டும் *மாபியா* மங்கையர் படையணியினர்!

**மனைவியர் ஒளியாக மிளிரவேண்டியவர்கள்**

மேற்கூறப்பட்ட கருத்துக்கள் சுவாரசியமாகச் சொல்லப்பட்டாலும், 'மனைவி' என்ற வார்த்தை எப்படி வந்தது, எத்தகைய அர்த்தத்தைக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டால் மனைவியர் ஒளியாக மிளிர்வர் எனத் துணிந்து கூறலாம்.

'மனைவி' என்ற வார்த்தை இரு வார்த்தைகளில் இருந்து வருகிறது. 'மனை' என்றால் வீடு என்று பொருள். 'வி' என்றால் விளக்கு என்று அர்த்தம். அதாவது, மனைவி, வீட்டுக்கு விளக்காக இருப்பவள் என்று அர்த்தம் பெறுகிறது. 'மனைக்கு விளக்கு' என்பதுதான் காலவோட்டத்தில் மருவி 'மனைவி' ஆனது என்று கூறுபவர்களும் உண்டு. அப்ப, மனைவிமார் வீட்டின் விளக்குகளாக விளங்கவேண்டியவர்கள்தானே!

**"மாங்கல்யம் தந்துநானேன்..."**

"மாங்கல்யம் தந்துநானேன் மமஜீவன் கேதுனா கண்டேட் டே பத்நாமி சுபகே சஞ்சீவ சரதஸ்ஸம்..." என்ற மந்திரமானது, 'இது புனிதமான கயிறு. நான் நல்ல படியாக ஜீவித்திருக்க வலிமை தருவது. இதை நான் உன் கழுத்தில் அணிவிக்கிறேன். நீ எல்லாவித நலன்களும் சிறப்புக்களும் பெற்று நூறு வயது வாழ்வாயாக' என்ற அர்த்தத்தில் இந்து சமயத் திருமணச் சடங்கில் தாலி கட்டும்போது ஆசிகூறப்படுகிறது.

இதேபோல கிறிஸ்தவ திருமணத் திருவருட்சாதனத்தில், "என் அன்பிற்கும் பிரமாணிக்கத்திற்கும் அடையாளமாக இந்தத் திருமாங்கல யத்தைத் தந்தை மகன் தூயஆவியின் பெயரால் அணிந்துகொள்ளுங்கள்/ அணிந்துகொள்கிறேன்" என மணமக்கள் இருவரும் தம் அன்பை வெளிப் படுத்துகிறார்கள்.

ஆயினும், பெரும்பாலான எங்கள் இராஜகுமாரர்களும் இராஜ குமாரிகளும் (திருநிறைச் செல்வர்களும் செல்விகளும்) தாலி கட்டுவதில்/ தாலியை அணிந்துகொள்வதில் காட்டுகின்ற ஆர்வத்தை, மேற்சொன்ன ஆசீர்களின் பொருள் உணர்ந்து வாழ்வதில் வெளிப்படுத்துவதில்லை என்று நினைக்கிறபோது இதயம் கனக்கிறது.

ஆண்டவர் இயேசுகூட அருள்கொடை பெற்றவர்தான் உண்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லற வாழ்வைப் பொருளுணர்ந்து வாழமுடியும் எனத் தமது போதனையில் குறிப்பிடுவதை மத்தேயு19/11இல் காணலாம். அருள் இல்லையென்றால் வாழ்வதன் பொருள் இருக்காது என்பதனைத் தம்பதியினர் எப்போது உணரப்போகிறார்களோ?

**மணமக்கள் மல்யுத்தக்காரர்கள் மாதிரியா?**

திருமணச் சடங்கின்போது நம்பியும் நங்கையும் (மணமக்கள்) கைகுலுக்கிக் கொள்கிறார்கள் அல்லது கைபிடித்துக் கொள்கிறார்கள். இதன் வெளிப்படையான அர்த்தம் ஒருவரை ஒருவர் வாழ்த்துகிறார்கள், ஏற்றுக் கொள்கிறார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்திருக்கும். இக்கைகுலுக்கலை வேறொரு கோணத்தில் இருந்து பார்த்தால் இதன் ஆழமான இன்னுமோர் அர்த்தம் புலப்படும்.

மல்யுத்தக்காரர்களும் மல்யுத்தத்திற்கு முன் கைகுலுக்கிக் கொள்கிறார்கள்தானே! அதுபோலதான் மணமக்களும் இப்போது கைகுலுக்கிக் கொள்கிறார்கள், இனிமேல்தான் மல்யுத்தக்காரர்களைப்போல பிரண்டு உறுண்டு விளையாட இருக்கிறார்கள். யாருக்கு வெற்றியென்று அதன் பின்னர்தான் தெரியவரும்!

ஆண் பெண் இருவருக்கும் இடையிலான இம்மல்யுத்த விளையாட்டில் பொதுவாக ஆண்கள் தோற்றுப்போனாலும், தாங்கள் தோற்றுப்போவதாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். 'ஆம்பிள (ஆண்) தோற்றுப்போவதா?' என்ற *கொம்பிளக்ஸில்* உழல்பவர்கள் தோல்வியை எவ்வாறு ஏற்றுக்கொள்வார்கள்? தோற்றுப்போனவர்கள் தோல்வியை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் வென்றவர்களுக்கு யார் தோற்றவர்கள் என்று விளங்கும்தானே!

மல்யுத்த விளையாட்டைப்போல நடுவரை வைத்துத் தீர்மானிக்கின்ற போட்டியென்றால், ஒரு நடுவரை வைத்து யார் வெற்றிபெற்றவர்கள் என இலகுவாகத் தீர்மானித்துக் கொள்ளலாம். என்னசெய்வது?, நடுவரை வைத்துக்கொண்டு விளையாடுகின்ற விளையாட்டா 'அந்த விளையாட்டு'!

**அடுத்தவனுடைய *ஓடர்ரைப்* பார்த்து ஆசைப்படக்கூடாது!**

திருமணம் செய்து கொண்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்றால் *றெஸ்ரோறன்ற்க்கு* நண்பர்களுடன் சாப்பிடப் போகின்றவர்கள் போன்றவர்கள்.

ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவையானதை *ஓடர்* கொடுத்துப் பெற்றுக்கொள்கிறார்கள். பின்னர், அடுத்தவன் தனக்குப் பிடித்ததுபோல் *ஓடர்* கொடுத்து வைத்திருப்பதைப் பார்த்ததும், "அடே, அதனை நானும் *ஓடர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திருக்கலாம்" என யோசிக்கிறார்கள். இதுபோலத்தான் திருமணமும்!

தங்களுக்குப் பிடித்தாற்போல்தான் துணையைத் தேடிக்கொள்கி றார்கள் அல்லது தெரிவு செய்து கொள்கிறார்கள். எனினும் அடுத்தவன் தனக்குப் பிடித்தாற்போல் தன் துணையைத் தெரிவு செய்ததும், "அடடா, நாம அவதிப்பட்டுட்டமே! நம்மளும் இவன்ர துணையைப்போல கண்ணழகியா, காதழகியா, கொஞ்சம் சிவப்பான ஆளா தெரிவு செய்திருக்கலாம்!" என்று பெருமூச்சு விடுகிறார்கள்.

அதனால்தானோ என்னவோ சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி மாதங்களில் காற்றில் வெப்பநிலையின் அளவு அதிகரித்துக் காணப்படுகிறது. காரணம், இக்காலங்களில்தானே திருமணங்களும் அதிகமாக நடைபெறு கின்றன. திருமணங்களும் அதிகமாக நடைபெற நடைபெற மேற்சொன்னது போல மற்றவர்களின் *ஓடர்களைப்* பார்த்ததும் பெருமூச்சுக்களும் அதிகரிப்பது இயல்புதானே!

'சித்திரைப் புத்திரன் கூடாது' என்றொரு மனப்பயம் இருப்பதால் ஆடி மாதத்தில் பொதுவாகத் திருமணங்கள் நடைபெறுவதில்லை. ஆடிமாதத்தில் திருமணம் நடைபெறுவதற்கும் 'சித்திரை புத்திரன்' பிறப்பதற்கும் என்ன தொடர்பு எனச் சிலர் கேள்வி எழுப்புவது புரிகிறது? இதுகூட விளங்கவில்லை என்றால் என்ன செய்யமுடியும்?

ஆடி மாதத்தில் திருமணம் நடைபெற்றால் பொதுவாக அவ் வாண்டைத் தொடர்ந்து வருகின்ற சித்திரை மாதத்தில் குழந்தை கிடைப்பதற்கு வாய்ப்புக்கள் அதிகமாயிருக்கும். அதனால்தான், ஆடி மாதத்தில் திருமணங்கள் இடம்பெறுவதில்லைப்போலத் தெரிகிறது. கணக்கைச் சரியாகச் செய்து பார்த்தீர்களே என்றால் ஆடி மாதத்திற்கும் சித்திரை மாதத்திற்கும் இடையி லான தொடர்பு மிகத் துல்லியமாகத் தெரியவரும்!

இன்று, உலகளாவிய ரீதியில் புவி வெப்பமடைந்து வருவதால் ஏற்படும் பல எதிர்மறை விளைவுகளைப் பற்றிப் பல திறத்தாரும் பேசி வருகிறார்கள்.

எக்காரணங்களால் புவி வெப்பமடைகிறது என்பது பற்றியும் தொடர் ஆராய்ச்சிகளை ஒருபுறம் நடத்தி வருகிறார்கள். புவி வெப்பமடைவதைத் தடுப்பதற்குப் பல வழிவகைகளையும் மேற்கொள்ள முயன்று வருகிறார்கள்.

புவி வெப்பமடைவதற்கு சில வேளைகளில் தம்பதியரின் வெப்பப் பெருமூச்சுக்களும் ஒரு காரணமாக இருக்கலாம்போல் நம்முடைய ஆய்வுத்தேடல் சொல்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அண்ணோய்! புதுப்புது *மொடல்களை* நம்பி, மோசம் போகக்கூடாது!**

வெளிநாட்டவர் ஒருவர் ஆண்களைப் பற்றிச் சொல்கின்றபோது, ஆண்கள் நான்கு விடயங்களில் பொதுவாகத் திருப்திகொள்ள மாட்டார்கள் என்கிறார். அவை: 1.கைத்தொலைபேசி, 2.மோட்டார் சைக்கிள்/கார், 3.தொலைக்காட்சி, 4.மனைவி ஆகியவையாம்! ஏன் தெரியுமா? அயலில் எப்போதுமே உயர்தரமான வகைமாதிரிகள் (Better Models) மாறிக் கொண்டே இருப்பதால்தானாம்!...

அண்ணோய்! ஆண் சிங்கங்களே! அயல் வீடுகளில் பலவகை *மொடல்கள்* மாறிக்கொண்டிருக்கும்! அயல் வீட்டு *மொடல்களைப்* பார்த்து, அவற்றைப்போல வடிவான *மொடல்களாக* மாற்ற எண்ணி, கையிலுள்ள சுமாரான *மொடல்களை* கைநெகிழ்ந்து போகாமல் பார்த்துக்கொள்வது புத்திசாலித்தனமானது. அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட கதையாகாமல் பார்த்துக்கொள்வது உசிதமானதுபோல் தெரிகிறது.

**இடம்பெயரும் 'சனிப்பெயர்ச்சி'!**

பலருடைய திருமண – குடும்ப வாழ்க்கையில் இராசிப்பலன், சனிப் பெயர்ச்சி, நட்சத்திரம், சாஸ்த்திரம் போன்றவை எவ்வாறான தாக்கத்தைச் செலுத்துகிறது என்பதை தென்னிந்திய திருச்சி மறைமாவட்ட அருள்தந்தை வை.இருதயராஜ் அழகாகக் குறிப்பிடுவார்.

காதலனும் காதலியும் உல்லாசமாகப் போய்க்கொண்டிருந்தபோது முள் ஒன்று அவள் பாதத்தில் குத்த அவன் துடிதுடித்துப் போனான்.

இங்கு கவனிக்க வேண்டியது: அவள் பாதத்தில் குத்த, அவன் துடிதுடித்துப் போவதை! "சனியன் புடிச்ச முள்! இதுல கிடக்கிது. கண்ணே கவனம், நாம்தான் பாத்து வரவேணும்" என்றான் அவன்.

காதலர்களான இவர்கள், திருமணமாகி, ஆறு மாதங்களின் பின் அதே வழியால் வருகிறபோது மீண்டும் முள் அவள் குதியில் குத்துகிறது. இப்போது அவன், "சனியனே! உனக்குப் பாத்து வரத் தெரியாது? கழுத (கழுதை), கண்ணிருக்குத்தானே பாத்து நடவன்!" என்றானாம்.

இவ்விடத்தில் அருள்தந்தை வை.இருதயராஜ் கண்டுபிடித்த கண்டுபிடிப்புத்தான் மிக முக்கியமாக அவதானிக்கப்பட வேண்டியது. இக்கண்டுபிடிப்புக்களை திருமணத்திற்காக ஆயத்தம் செய்யப்படுகின்ற வகுப்புகளிலோ அல்லது திருமண கருத்தமர்வுகளிலோகூடச் சொல்லிக் கொடுத்திருப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கண்டுபிடிப்பு இதுதான், காதலிக்கின்றபோது அதாவது திருமணத்திற்கு முன் முள்ளில் இருந்த 'சனியன்' திருமணமாகிய பின் இடப்பெயர்ச்சி அடைந்து மனைவியிடம் வந்த சேர்கிறது. இதற்குப் பெயர்தான் 'சனிப்பெயர்ச்சி'. வாரநாட்களில் படிப்படியாக உருவாகும் சச்சரவுகள் வார இறுதி நாட்களில்தானே உச்சநிலை அடைகின்றன!

சில தம்பதிகள் எப்படியான சனிப்பெயர்ச்சியால் துன்புறுகிறார்கள் என்று இப்போதாவது புரிகிறதா?

**சனிப்பெயர்ச்சி அல்ல மனப்பயிற்சி வேண்டும்**

இத்தகைய சனிப்பெயர்ச்சியை இராசிப்பலனோ, நாள் நட்சத் திரமோ, சாஸ்திரமோ ஒன்றும் செய்துவிட முடியாது. இவ்வாறான சனிப் பெயர்ச்சி களைப் போக்குவதற்கு அல்லது விரட்டுவதற்கு மனப்பயிற்சி அவசியமானது.

இவ்விடத்தில் திருமணவாழ்வுபற்றி ஒருவன் குறிப்பிடுவது தம்பதி களின் ஆழ்ந்த சிந்தனைக்குரியது: "திருமணவாழ்வு சரியாக அமையாவிட்டால் அதற்குக் காரணம் இங்கே இருக்கும் இரண்டு பிடிவாதக்காரர்கள்தானே தவிர, எங்கோ இருக்கும் ஒன்பது கிரகங்கள் அல்ல" என்ற இந்த வார்த்தைகள் உண்மையில் திருமணவாழ்வு பற்றி அநேகர் வைத்திருக்கின்ற மூடக் கொள்கைகளையும் மூடநம்பிக்கைகளையும் தவடுபொடியாக்குகின்றன என்றே கொள்ளவேண்டும்.

இதுக்குப் பிறகும் ஜாதகம், இராசிப்பலன், நாள்நட்சத்திரம் என நம்மவர்கள் செல்வார்களானால், 'அவர்களுக்கு ஐயோ கேடு' என்ற ஆசீர்வாதத்தைத் தவிர வேறென்ன ஆசீர்வாதத்தை ஆசிக்கமுடியும் என்று சொல்லுங்களேன்?

மன்னா, மாசி 2014





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதிச் சாக்கடையில் நீச்சலாடுவதா!



12

**'மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில்!'**

அரசன் அமைச்சரைப் பார்த்துச் சிரித்தான். சிரிப்புக்கான காரணத்தை அமைச்சர் வினவினான். அரசனோ, "நானும் நீயும் நீராடச் சென்றதாக ஒரு கனவு கண்டேன். அதில் சிரிப்பு என்னவென்றால் இருவரும் நீரில் அடித்துச் செல்லப்பட்டு நான் பன்னீரிலும் நீ ஒரு குட்டையிலும் கிடக்கக் கண்டேன்" என்றான். இப்போது அமைச்சர் சிரித்தான். அரசன் ஆச்சரியப்பட்டான், காரணத்தைக் வினவினான். அமைச்சரோ, "நானும் ஒரு கனவு கண்டேன்! நீங்கள் கண்ட கனவின் தொடர்ச்சிதான்! ஆனால், மிகுதியைக் கூறினால் நீங்கள் மிகுந்த மனவேதனை அடைவீர்கள்...!" என்றான்.

அரசனோ அமைச்சர் கண்ட கனவினை அறியாமல் அவனை விடுவதாக இல்லை. அதனால் அமைச்சர், "அரசே, நீரில் அடித்துச் செல்லப்பட்டு நீங்கள் பன்னீரிலும் நான் குட்டையிலும் கிடந்தது உண்மைதான்! அதன்பின் நான் கண்ட கனவில், நாம் இருவரும் நாய் உருவம் எடுத்து ஒருவரை ஒருவர் நக்கிக்கொண்டோம்!" என்றபோது அரசனின் புருவங்கள் அன்றுதான் அவ்வாறு அகல விரிந்தன.

கடந்த மூன்று தசாப்த இடம்பெயர்வு வாழ்க்கையில் நாம் ஒருவர் ஒருவரில் தங்கி, ஒருவர் ஒருவரைத் தாங்கி, ஒருவர் ஒருவருக்கு உதவி செய்து, ஒரு குடும்பத்தவர்கள் தேவையில் உள்ளபோது அடுத்த குடும்பத் தவர்கள் அவர்களுக்கு இடம்கொடுத்து, உணவு படைத்து, உதவியளித்து, ஆதரித்து, ஆறுதலளித்து பல வழிகளில் ஒன்றாக வாழ்ந்தோம்.

இப்போது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான குடும்பங்களைத் தவிர ஏனையவர்கள் தங்கள் சொந்தக் கிராமங்களுக்கு நிரந்தரமாகச் சென்று விட்டதால் பழையபடி வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில்! ஏறிய கதையாக நம் வாழ்வு மாறிக்கொண்டிருக்கிறதா என்று கேள்வி எழுப்பக்கூடிய அளவிலான சூழ்நிலைகளே உருவாகி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புழுத்துப் புரையோடிப் போனவைகள்!**

ஒரு சேமக்காலைக்குக் குறுக்கே சுவர் ஒன்று நீண்ட பல தசாப் தங்களாகக் கட்டப்பட்டிருந்தது. ஆராய்ந்தபோது ஒருபக்கம் 'உயர் சாதியினருக்கு', மற்றைய பக்கம், 'தாழ்ந்த சாதியினருக்கு' எனக் கூறப்பட்டது. அச்சுவரினைப் பல இளைஞர்கள் சேர்ந்து இடித்துத் தகர்த்துக் கொண்டி ருந்தார்கள்.

இதனைக் கண்ணுற்ற ஒரு பெரியவர், "பழைய புழுத்துப்போன – புரையோடிப்போன சமுதாய முறைமைகளை மாற்ற இளம் தலைமுறை ஒன்று முகிழ்ந்திருக்கிறது" என அவர்களை வெகுவாகப் பாராட்டினார்.

அவர்களில் ஒருவன், "நீங்க ஒன்று! விபரம் தெரியாமப் பேசுறீங்க! எத்தனை நாளா இந்த மண்சுவரை இடித்து *கொங்கிறீற்* போடவேணும் என்றிருந்தோம்! அது, இப்போதுதான் கைகூடியிருக்கிறது!..." என்றான். பெரியவரின் தலையில் கோடை இடி விழுந்ததுபோல் இருந்தது!

**கடந்த காலத்தில் கற்றுக்கொண்டதை கைவிட்டு விட்டோமா?**

2004ஆம் ஆண்டு மார்கழித்திங்கள் 26ஆம் நாள் காலை ஏற்பட்ட சுனாமித் தாண்டவம் ஓரிரு நிமிடங்களிலேயே முடிந்துபோனது. ஆனால், இப்பேரழிவில் இறந்த ஆயிரமாயிரம் பேர்களின் உடலங்களை மீட்டெடுக்க நாட்கள் – வாரங்கள் ஆகின. *பக்கோவால்* கிடங்குகள் கிண்டி ஓரே கிடங்கில் ஐம்பது பேர், நூறு பேர் என்று அடுக்கி அடக்கம் செய்ததையெல்லாம் மறந்து போனோமா?, முப்பது ஆண்டுகால யுத்தத்தில் பல தடவைகளில் பெரும் தொகையில் கொல்லப்பட்டவர்களை ஒன்றாகச் சேர்த்து அடக்கம் செய்தவை நினைவுகளில் இருந்து நீங்கி விட்டனவா? என மீள் கேள்விகள் எழுப்பவேண்டி இருக்கிறது.

குறிப்பாக, 2009ஆம் ஆண்டு வன்னிப்பிரதேசத்தில் நடந்தேறிய பெரும் போரில் இறந்துபோன ஆயிரமாயிரம் பேர்களை அவசர அவசரமாக ஒன்றாகப் போட்டு அடக்கம் செய்துவிட்டதை சௌகரியமாக மறந்து விட்டோமா? அல்லது அவற்றை நினைக்க இப்போது எமக்கு நேரம் இல்லாமல் போனதா? கொல்லப்பட்டவர்களைப் பதறிப்பதறி அகப்பட்ட இடத்தில் நிலத்தைக் கிளறி உடலங்களை அரையும் குறையுமாக அடக்கம் செய்துவிட்டு உயிரைக் காப்பாற்ற ஓடியது எம் மனங்களில் ஏன் இன்னும் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை!

மனங்கள் மரத்துப்போய் விட்டனவா – மரணித்துப்போய் விட்ட னவா? மனங்கள் ஏன் இன்னும் மாற மறுக்கின்றன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமத்துவம் எப்போது சாத்தியமாகும்?

"சமரசம் உலாவும் இடமே நம் வாழ்வில் காணா சமரசம் உலாவும் இடமே. சாதியில் மேலோர் என்றும் தாழ்ந்தவர் தீயோர் என்றும் பேதமில்லாது எல்லோரும் முடிவில் சேர்ந்திடும் காடு, தொல்லை இன்றியே தூங்கிடும் வீடு, உலகினிலே இதுதான் நம் வாழ்வில் காணா சமரசம் உலாவும் இடமே..." என ஒரு பழைய பாடலை சீர்காளி கோவிந்தராஜனின் குரலில் இன்றும் கேட்கலாம். நம்முடைய பிரதேசங்களின் உள்ள சில சேமக்காலைகளிலேயேனும் இச்சமரசம் எப்போது ஏற்படுமோ என ஏக்கத்தோடு காத்திருக்க வேண்டி இருக்கிறது.

## உயர்குடி மக்கள் அவர்கள்!

நம்முடைய 'உயர்ந்த ...', 'தாழ்ந்த ...' என்ற பாரம்பரிய வகைப் படுத்தல் அப்படியே இருந்துகொண்டிருக்க, இதன் நவீன வடிவங்கள் வெவ்வேறு கோலங்களில் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இதனை 2009 சித்திரை பெண்கள் மலரில் பொன்.கண்ணன் 'நாங்கள் மேட்டுக்குடி மக்கள்' என்ற தலைப்பில் பின்வருமாறு எழுதியிருந்தார். "நாங்கள் மேட்டுக்குடி மக்கள் (உயர்குடி மக்கள்). வீட்டில் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ள மாட்டோம். நாங்கள் அறையில் அடைந்து கிடப்போம். நாங்கள் எங்கு செல்கிறோம், எப்போது வருகிறோம் என்பது மற்றவர்களுக்குத் தெரியாது. வீடே பற்றி எரிந்தாலும் அவரவர் உடமைகளைப் பாதுகாத்துக் கொள்வோம். அடுத்த வீட்டில் துக்கமா? அது எங்களுக்குக் கவலை இல்லை. மொத்தத்தில் எங்கள் வீடு ஒரு தீவு. அதில் வாழும் நாங்கள் ஒவ்வொருவரும் தனித்தீவு. ஏனென்றால் நாங்கள் மேட்டுக்குடி மக்கள்" எனக் கோடிட்டுக் காட்டுகிறார்.

## தமிழருக்குரிய தனிக்குணம்!

முத்தமிழன் முகவரி என்ற நூலில் கவிக்கோ அப்துள் ரகுமான் தமிழரின் தனிக் குணத்தினைக் கோடிட்டுக் காட்டுவான். "...'தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கோர் குணமுண்டு' என்று நாமக்கல்லார் பாடினார். அதென்ன தமிழனுக்கென்றோர் தனிக்குணம் என்று சிந்தித்தேன், புரிந்தது. தனித் தனியே பிரிந்து சண்டையிடும் குணம். சாதி எனப் பிரிந்தான் சமயம் எனப் பிரிந்தான் மீதி இருந்தவனோ கட்சி எனப் பிரிந்துவிட்டான்..." எனத் தொடர்கிறார்.

## சமுதாயம் என்பது சம+ஆதாயம்

'சமூகம்' என்ற சொல்லுக்குச் 'சாதி' என்றொரு பொருளுண்டு. ஆக, 'சாதி' என்ற பழைய சொல்லுக்குப் பதிலாக 'சமூகம்' என்ற சொல்லை இப்போது அதிகமாகப் பயன்படுத்துகிறோம். இவ்வாறு அழைப்பது நாகரிகமாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றுவதுபோல நினைத்துக் கொள்கிறோமே தவிர, 'உயர்ந்தவன்', 'தாழ்ந்தவன்' என்ற மனநிலையில் இருந்து நாம் மாறவில்லை – விடுபடவில்லை என்பதையே இது புலப்படுத்துகிறது.

கலப்புத் திருமணங்கள் நடக்கின்றன, அதனால் உறவுகள் உருவாக்கப்படுகின்றன, எனினும் முழு அளவிலான சமுதாய மாற்றம் (Radical Change) இடம் பெற்றதற்கான அறிகுறிகளோ அடையாளங்களோ தெரிய வில்லை. இவ்விடயத்தில், கலப்புத்திருமணம், நட்புறவை ஏற்படுத்துதல் போன்ற புற மாற்றங்கள் விரும்பியோ விரும்பாமலோ ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன.

ஆனால், அக மாற்றம், உதாரணமாக எல்லா மனிதர்களும் உயர் – சம மதிப்புக்குரியவர்கள் என்ற மனப்பாங்கு இன்னும் எம் தமிழ் சமூகத்தில் வளர்ச்சியடைய வேண்டிய நிலையில்தான் இருக்கிறது.

சமூகத்தை, சமுதாயம் என்றும் அழைக்கிறோம். சமுதாயம் என்ற சொல்லிற்கு க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி முதல் பொருளாக, 'மக்கள் தொகுதி' (Society) என்றும், அடுத்து 'ஒரு குறிப்பிட்ட தொழில், துறை முதலியவற்றைச் சேர்ந்தவர்களின் தொகுதி', 'இனம்' எனவும் அர்த்தப் படுத்துகிறது.

நான்குபேர், பத்துப்பேர், நூறுபேர் கூடி வருவதால் – சேர்ந்து வாழ்வதால் அது சமுதாயமாகாது. 'சம+ஆதாயம்' எங்குள்ளதோ அங்குதான் சமுதாயம் இருக்கிறது – வளர்கிறது என்பார் கவிமணி சி.தேசிகவிநாயகம் பிள்ளை. 'சம+ஆதாயம்' என்னும்போது சமத்துவம், சம உரிமை, சம கடமை, சம கண்ணியம், சம(க) வாழ்வு, சம உடைமை எங்குள்ளதோ அங்கு சமுதாயம் இருக்கிறது – வாழ்கிறது என்பார்.

**ஓடும் உதிரமும் வழிந்தோடும் கண்ணீரும் ஒன்றே**

ஆகவேதான், ஆசிய ஜோதியை எழுதிய கவிமணி சி.தேசிக விநாயகம்பிள்ளை புத்தபிரான் சிறுவனுக்குக் கூறும் அறிவுறுத்தல் பகுதியில், "ஓடும் உதிரத்தில் – வடிந்து ஒழுகும் கண்ணீரில், தேடிப் பார்த்தாலும் – சாதி தெரிவதுண்டோ அப்பா? எவர் உடம்பினிலும் சிவப்பே இரத்த நிறமப்பா எவர் விழிநீரும் உவர்ப்பே இயற்கைக் குணமப்பா" என்று மனித குலத்தின் ஒற்றுமையைக் கூறுவார்.

தொடர்ந்து, "பிறப்பினால் எவர்க்கும் – உலகில் பெருமை வராதப்பா! சிறப்பு வேண்டுமெனில் – நல்ல செய்கை வேண்டும், அப்பா! நன்மை செய்பவரே – உலகம் நாடும் மேற்குலத்தார், தீமை செய்பவரே – அண்டித் தீண்ட ஒண்ணாதார்" என்று பாடும் கவிமணி குறுகிய சமூக வரையறைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ஏற்றத் தாழ்வுகளைத் தகர்த்தெறிந்து சமத்துவ – சகோதரத்துவ சமுதாயம் படைப்பதை அவரின் கவிதைகளில் அவதானிக்கலாம்.

எனினும், "சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை, சாற்றும் கால் நீதி வழுவா நெறி முறையில் – மேதினியில் இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர் பட்டாங்கில் உள்ளபடி" என நல்வழியில் காணக்கிடக்கிறது.

பொருள் என்னவெனில், 'இரண்டே சாதிகள்தான் உலகிலே உள்ளன. துன்புறுவோருக்குத் துணைபுரிவோர் உயர்ந்த சாதியினர், உதவிபுரியாதோர் தாழ்ந்த சாதியினர், உண்மை நூல்கள் போதிப்பதும் இதுவே' என்பது உயரிய நோக்கில் வகுக்கப்பட்டிருக்கிறது என்பது நம் கவனத்திற்குரியது.

**இலக்கியமாக இருக்கிறதே தவிர இலட்சியமாகவில்லை!**

"சாதிகள் இல்லையடி பாப்பா! – குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம், நீதி, உயர்ந்தமதி, கல்வி — அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்" எனப் பாப்பா பாடலில் கூறுகிறார் மகாகவி பாரதி.

தொடர்ந்து முரசு எண்பதில், "சாதிப் பிரிவுகள் சொல்லி – அதில் தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார். நீதிப் பிரிவுகள் செய்வார் – அங்கு நித்தமும் சண்டைகள் செய்வார். சாதிக் கொடுமைகள் வேண்டாம் – அன்பு தன்னில் செழித்திடும் வையம், ஆதரவுற்றிங்கு வாழ்வோம், – தொழில் ஆயிரம் மாண்புறச் செய்வோம்" என முரசறைந்து மனிதர் தங்களுக்குள்ளே உருவாக்கிக் கொண்ட சாதி அடிமைத்தளைகளை வேரறுத்தான் மகாகவி பாரதி.

"மயானத்தில் புதைக்க வேண்டிய சாதிப் பேயின் விதைகளை இந்த மனித இதயங்களில் விதைத்தது யார்?" எனக் குமுறுகிறான் கவிப்பேரரசு வைரமுத்து.

அறிஞர்களும் கவிஞர்களும் சமத்துவம் – சகோதரத்துவம் பற்றி எழுதுகிறார்கள், பேசுகிறார்கள். அவற்றை இலக்கியமாக மக்கள் சுவைக் கிறார்களே தவிர வாழ்வின் இலட்சியமாகக் கொள்ளவில்லை! கலை வடிவங்களாக இரசிக்கிறார்களே தவிர அவற்றைக் கருத்தில் எடுத்துச் செயற்படுத்துவதாகத் தெரியவில்லை!

**உயர்வு மனப்பான்மை**

2001ஆம் ஆண்டு யாழ்.போதனா மருத்துவமனையில் ஆன்மகுரு வாக நான் பணியாற்றிக் கொண்டிருந்த மிக இக்கட்டான காலமது. மிகக் கடுமையான இராணுவ மோதல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. குழந்தை ஒன்றுக்கு ஓ *நெகற்றிவ்* ('O' Negative) இரத்தம் அவசரமாகத் தேவைப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகை இரத்தம் உடையவர்கள் ஒப்பீட்டளவில் மிகமிகக் குறைவு! அப்படியிருந்தும் ஒருவாறு ஒருசிலரைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களைச் சம்மதிக்க வைத்துக் குருதி நன்கொடைக்குத் தயார்ப்படுத்தியாயிற்று.

இருப்பினும், அக்குழந்தையின் பெற்றோர் தாங்கள் 'உயர் சமூகத்தினர்' என பெருமைப்பட்டுக் கொள்வதோடு மற்றவரைக் 'குறைந்த' நிலையில் வைத்துப் பார்ப்பவர்கள் என்பதால் – மனிதம் ஒன்றுதான் – அவர்களில் ஓடும் இரத்தம் ஒன்றுதான் என்பதை இவர்கள் நன்கு புரிந்து கொள்ளவேண்டும் என்ற காரணத்தினால், "ரத்தம் கொடுக்க இருவர் ஆயத்தம். ஆனால், அவர்கள் உங்கள் சமூகத்தைச் சாராதவர்கள்!" எனத் தெரியப் படுத்தவேண்டி இருந்தது.

"ஐயோ! அதையெல்லாம் இப்ப பார்க்கேலுமோ? தயவுசெய்து உடனடியா ஆக்களை வரச்சொல்லுங்கோ!" என்றார் குடும்பத் தலைவன் கைகளைக் கூப்பிக்கொண்டு!

அவர் சொன்னது சரிதான்! அந்நேரத்தில் அதைப் பார்க்க இயலாதுதான். "ஒரு நேரம் வரும்! அப்போது நாங்கள் யார் என்பதைப் பார்ப்பீர்கள்?" எனச் சூசகமாகச் சொன்னாரோ என்னவோ!

ஐயனே அப்பனே! ஒப்பிலா மணியே!... நம்மவர்களின் மேற் குறிப்பிட்ட மனநிலை எப்போது மாறுமோ என்றுதான் அப்போதும் மன்றாட வேண்டி இருந்தது, இப்போதும் மன்றாடவேண்டி இருக்கிறது!

**ஏன் இங்கு மட்டும் பார்ப்பதில்லை!**

"ஐயா, என்ர பிள்ளையின்ர உயிரக் காப்பாத்துங்கோ!..." எனக் கதறி அழும்போது மருத்துவர் என்ன சமூகத்தினன் எனப் பார்த்தா மருத்துவம் செய்யப் போகிறார்கள்?

தங்கள் பிள்ளைகள் முதல்நிலை பெறவேண்டும் என முண்டியடித்துக் கொண்டு முன்னணி ஆசிரியர்களிடம் செல்லும்போது அவர் எந்த சமூகத்தவர் என்று பார்த்தா செல்லுகிறார்கள்?

தொழில் கிடைக்கவேண்டும், காரியங்கள் கைகூடவேண்டும் என்று முயற்சிக்கும்போது அதிகாரிகள் எச்சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்று பார்த்தா சலுகைகளை நாடுகிறார்கள்?

கூடிக் குடிக்கும்போது – அடிக்கும்போது 'சோசலிசம்' (Socialism) பேசுகிறார்கள், விடிந்ததும் – வெறி முறிந்ததும் 'சாதிசம்' (யான் உருவாக்கிய புதிய சொல்! அகராதிகளில் காணமுடியாது! வேண்டுமென்றால் இனி எழுதப்படும் அகராதிகளில் சேர்த்துக்கொள்ளலாம்!) பார்க்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'கோட்டை' தகர்ந்து கொண்டிருக்கிறது!**

புலம்பெயர் மண்ணில் வாழ்ந்துகொண்டிருக்கும் நம் முதலாவது தலைமுறையினர் சாதிக் கோட்டையை தக்க வைத்துக்கொண்டுதான் இருந்திருக்கிறார்கள்! ஆனால், புலம்பெயர் மண்ணில் பிறந்து வளருகின்ற நம் இளம் பிள்ளைகள் இச்சமூகத் தீமைக்கு 'ஆப்பு அடிக்க' ஆரம்பித்திருக்கிறார்கள்.

நம் தமிழ்ப் பெற்றோர் தங்கள் பிள்ளைகள், "அப்பனே முருகா! இவன் தமிழ்ப் பிள்ளையாப் பாத்துப் பிடிச்சாலே போதும்!" – "என் ஆண்டவனே! இவள் தமிழ்ப் பெடியனாப் பாத்துக் கட்டினாலே காணும்!" என்ற கட்டத்தில் வந்து நிற்கிறார்கள் என்றால் நிலைமை எப்படி மாறியிருக்கிறது என்பதைக் கணித்துக்கொள்ளலாம்.

தங்கள் சமூகப் பெருமைகளையும் அந்தஸ்துக்களையும் வைத்துப் பெருமை பேசியதோடல்லாமல் மற்றவர்களைக் கீழ்த்தரமாகக் கருதிய பலர் இன்று பேசா மடந்தையராகக் கூனிக் குறுகி நிற்கிறார்கள். கால – உலக – சூழல் – சமூக மாற்றம் இவர்களை மாற்றிக்கொண்டிருக்கிறது. சாதி போன்ற நம் அடிமைத்தனங்களை அழித்தொழிப்பதற்கு ஆண்டவனால் வந்த வரப்பிரசாதம்தான் புலம்பெயர் வாழ்வு என்றுகூடச் சொல்லலாம் போலத் தெரிகிறது.

**நாய்களின் வால்களை நிமிர்த்த முடியாது நறுக்கவே முடியும்!**

"யாதும் ஊரே யாவரும் கேளிர்..." (எல்லா ஊரும் என்னுடைய ஊரே எல்லா மனிதரும் என் உறவினரே) என 2000 ஆண்டுகளுக்கு முன்பே உலகளாவிய சகோதரத்துவத்தை, கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடியாகிய தமிழ்க்குடி முன்மொழிந்து வழிமொழிந்து வாழ்ந்து காட்டியது. இப்பெரும் பெருமைக்குரிய அக்குடியே சாதி என்ற சாக்கடையில் மிக நீண்ட காலமாக நீந்தி நீராடி நீச்சலடித்து மகிழ்கிறது.

கவிக்கோ அப்துள் ரகுமான், "...-'இல்லை இன்னும் நான் இந்தச் சாதிதான்' என்கிறாயா? அப்படியென்றால் பிரேதமே! உயிருடையவர்கள் மத்தியில் உனக்கென்ன வேலை?..." என்கின்ற வார்த்தைகளால் சாதிக் கிருமியை சாகடிக்கிறார்.

இவ்வார்த்தைகள் மூடப்பட்டிருக்கும் நம் உள்ளக் கதவுகளை ஊடறுத்து இற்றைவரையில் உள்நுழைந்திருக்கவேண்டும்! எனினும், இவ்விடயத்தில், என்னத்தைச் சொன்னாலும் நாய்களின் வால்களை நிமிர்த்த முடியாது, நறுக்கவே முடியும்!

*மன்னா, பங்குனி 2014*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகமாற்றம் அவசியம்



## 13

**நான் சரி நீ பிழை**

துறவிகள் நால்வர் ஓர் ஆச்சிரமத்தில் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு விசேஷ விரதத்தை மேற்கொண்டு வந்தார்கள். குறிப்பிட்ட ஓர் ஆண்டில் தாங்கள் மௌன விரதம் ஒன்றை மேற்கொள்ளலாம் என முடிவு செய்தார்கள்.

எனவே, மௌனவிரதத்தை ஆச்சிரமத்தில் இருந்து மேற்கொள் கிறபோது ஆச்சிரமத்திற்கு வருகின்ற அடியவர்கள் தங்கள் மௌன விரதத்தைக் குழப்பிவிடுவார்கள் என நினைத்த நான்கு துறவிகளும் தங்கள் ஆச்சிரமத்தை விட்டு குக்கிராமம் ஒன்றுக்குச் சென்று அவ்விரதத்தை மேற்கொள்ளலாம் என்ற தீர்மானத்திற்கு வந்தார்கள்.

அதன்படியே கிராமம் ஒன்றுக்குச் சென்றார்கள். மௌன விரதத்தின்போது தங்களுக்குப் பணிபுரிவதற்காக ஒரு பணியாளனையும் அழைத்துச் சென்றார்கள். ஏழு நாள் மௌனவிரதம் ஆரம்பமானது. முதல் நாள் வெற்றிகரமாக நிறைவுக்கு வந்தது.

இரண்டாம் நாள் மாலை நான்கு துறவிகளுக்கும் தேவையான உணவுப் பொருட்களைப் பெற்று வருவதற்காக நகருக்குச் சென்ற பணியாளன் மாலைப் பொழுதாகியும் வந்து சேராததினால் நான்கு துறவிகளும் அங்கலாய்த்துப் போயினர். இவ்வாறான நிலையில் அப்பணியாளன் அவசர அவசரமாக வந்து கொண்டிருந்தான்.

அப்போது முதல் துறவி அப்பணியாளனைப் பார்த்து, "போன உனக்கு நேரத்திற்கு வரத்தெரியாதா?" எனக்கேட்டார். முதலாவது துறவி பேசியதைக் கேட்ட இரண்டாவது துறவி, "மௌனவிரதத்தில் இருப்பவர்கள் கதைக்கக் கூடாது என்று உனக்குத் தெரியாதா?" எனக் கேள்வி எழுப்பினார். இதனைக் கண்ணுற்ற மூன்றாவது துறவி இரண்டாவது துறவியைப் பார்த்து, "அவன் கதைச்சான் என்று நீ ஏன்ரா மடையா கதைச்சாய்?" எனக் கேட்டார். இவை எல்லாவற்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாக இருந்து அவதானித்துக் கொண்டிருந்த நான்காவது தலைமைத்துறவி மற்றைய மூன்று துறவிகளையும் பார்த்து, "இங்கு, நான் மட்டும்தான் கதைக்க இல்ல!" என்றாராம் நிறைவாக.

**'நான்மறையைக் கற்றவனா, நான் மறையக் கற்றவனா ஞானி?'**

"நான்மறையைக் கற்றவனல்ல ஞானி, 'நான்' மறையக் கற்றவனே ஞானி" என்ற கவிப்பேரரசு வைரமுத்துவின் வார்த்தைகள் எம் ஆழ்ந்த சிந்தனைக்குரியது. மேற்குறிப்பிட்ட நான்கு துறவியர்களின் ஏழு நாள் மௌனவிரதம் எப்படி நடந்து முடிந்திருக்கும்?, எத்தகைய மனநிலையுடன் இவ்மௌனவிரதத்தை செய்திருப்பார்கள்? போன்ற வினாக்கள் எம் சொந்த வாழ்க்கைத் தியானத்திற்கும் உரியன.

சின்னப் பானை சீக்கிரம் வழியும் என்ற பழமொழியைக் கேட்டிருக்கிறோம். நிறை குடம் தழும்பாது என்பார்கள் நம் முன்னோர்கள். 'காய்க்கிற மரம் எப்போதும் தாழ்ந்து நிற்கும்' என்பார் அருள்தந்தை பற்றிக் ஞானப்பிரகாசம். இவையெல்லாம் நம் நாளாந்த அனுபவங்களில் இருந்து நாம் கற்றுக்கொள்கிற பாடங்களும் பெற்றுக்கொள்கிற படிப்பினைகளும் ஆகும்.

சின்னப்பானை குறித்துக்காட்டும் குறுகிய மனப்பான்மை இருக்குமானால் நம்முடைய கண்ணோட்டமும் குறுகியதாகவே இருக்கும். குறைகுடமாக நம் ஆளுமை இருக்குமானால் நிறைவாய் ந(ா)ம் வாழ்வை வாழ முடியாது.

காய்களை – கனிகளைத் தாங்கியிருக்கும் மரத்தின் கொப்புக்கள் நிமிர்ந்து நிற்க முடியாது, அவை தாழ்ந்தே இருக்கமுடியும் என்பது தவிர்க்க முடியாததாய் இருப்பதை அவதானித்திருக்கிறீர்களா? இவ்வாறே, பண்புள்ள - பண்பட்ட மனிதர்கள் - பண்பானவர்கள் தங்களைத் தாங்களாக ஏற்றுக்கொண்டு மற்றவர்களை எப்போதும் உயர்வாக நோக்குவார்கள் - மதிப்பார்கள்.



இதனைத்தான் பொய்யா மொழிப் புலவன் வள்ளுவனும், "பணியுமாம் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து" - பெருமையுடையவர் எப்போதும் பணிவாகவே நடந்து கொள்வர். சிறுமை உடையவரோ தம்மைத் தாமே எப்போதும் வியந்து பாராட்டிக் கொள்வர் எனக் கூறுகிறார்.

**தவிர்க்க முடியாத மாற்றம்**

இன்றைய உலகில் நாளும் பொழுதும் மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றன. ஒருவகையில் இம்மாற்றங்கள் தவிர்க்க முடியாதவைகளாகவும், இன்னொரு வகையில் அவசியமானவை களாகவும் மாறியிருக்கின்றன.

உடையலங்காரத்தில் மாற்றம் உணவுப்பழக்கத்தில் மாற்றம், வாகனங்களில் மாற்றம் வாழ்க்கை முறைகளில் மாற்றம், கல்வித் திட்டத்தில் மாற்றம் கலாசாரக் கூறுகளில் மாற்றம், குறிக்கோள்களில் மாற்றம் குடும்ப வாழ்வதனில் மாற்றம்!

இவ்வாறு, சீப்புத் தொடக்கம் செருப்புவரை அனைத்தும் மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றன. மாற்றம் ஒன்றைத் தவிர மற்றயவை எல்லாம் மாறிக்கொண்டே இருக்கின்றன என்கிறார்கள்.

ஆயினும் மனிதன், புற மாற்றங்களை ஏற்றுக்கொள்ளத் தன்னை அனுமதிக்கின்ற அளவிற்கு உள்ளார்ந்த - மனதார்ந்த - நல்வாழ்விற்கான - நற்செயல்களுக்கான மாற்றங்களை ஏற்றுக் கொள்ள முன்வருவதும் அதனை நடைமுறைப்படுத்துவதும் அரிதா கவே இருக்கிறது.

**மாற்றத்தின் உச்சம்**

தொழில் நுட்ப வளர்ச்சியானது இன்றைய உலகை மாற்றத் தின் உச்சிக்கே அழைத்துக்கொண்டு போய்விட்டது. நவீன தொடர்பு சாதன தொழில் நுட்பங்களான முகநூல் (*Face book*), ஸ்கைப் (*Skype*), ருவிற்றர் (*Twitter*) போன்றவை எங்கோ ஒரு மூலையில் நடைபெறும் ஒரு நிகழ்வை அடுத்த கணமே உலகின் எம்மூலையில் இருந்தாலும் அறியக்கூடியதாக - பார்க்கக்கூடியதாக வைத்துவிடுவது மட்டுமல் லாமல் அந்நிகழ்வின் எதிரொலிப்புக்களை உடனடியாகவே வெளிப் படுத்தவும் வழிசமைத்திருக்கிறது.

அந்தளவிற்கு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியானது சிகரத்தைத் தொட்டுக்கொண்டிருக்கிறது. உலகமே சுருங்கி ஒரு கிராமமாகிவிட்டது போன்ற ஒரு நிலையைப் பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ள - வாழ்க்கையை லேசாக்க - வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்த என இன்றைய நவீன தொழில் நுட்பங்கள் அனைத்துத் துறைகளிலும் மிக உச்சப் பயன்பாட்டை வழங்கிய வண்ணமே இருக்கின்றன.

**நவீன தகவல் தொடர்பு சாதனங்களால் மலிகின்ற தீமைகள்**

இந்நவீன தொழில் நுட்பப் பயன்பாட்டினால் நன்மைகள் நிறையவே விளைந்திருப்பினும் பல்வேறுபட்ட தீமைகளும் இன்று மலிந்து வருவதைக் கவலையோடு கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டி இருக்கிறது.

நவீன தொழில் நுட்பங்களின் தவறான பயன்பாட்டினால் வன்செயல்களும், வன்முறைகளும், துஷ்பிரயோகங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. எனவே, நவீன தொழில் நுட்பத்தின் பயன்பாடுகளுக்கு அப்பால் அதிகரித்துவரும் தீமைகளைப் பற்றியும் விழிப்பாயிருக்க வேண்டி இருக்கிறது.

அண்மையில் வெளிநாடு ஒன்றில் வசிக்கும் கணவனும் ஈழத்தில் வாழும் அவர் மனைவியும் *ஸ்கைப்பில்* உரையாடிக்கொண்டு இருந்திருக்கிறார்கள். இருவருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறால் கணவன் *ஸ்கைப்பில்* பார்த்துக்கொண்டு இருக்கக்கூடியதாகவே மனைவி தூக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளாள். இச்சம்பவம் தைத்திங்கள் 2014இல் நடந்ததை பத்திரிகைகளும் சுட்டிக்காட்டி இருந்தன.

இவ்வாண்டு மாசித்திங்கள் முதல்வாரத்தில் குருநாகலில் மேற்சொன்னதைப் போன்ற சம்பவம் ஒன்று நடந்திருக்கிறது. பாடசாலை ஒன்றில் கல்விகற்கும் மாணவி ஒருத்தியின் முகநூலில் அவளது படம் அவளின் காதலன் எனச் சந்தேகிக்கப்படும் இளைஞனுடன் போடப்பட்டு இருந்ததாக இம்மாணவியின் பாடசாலை அதிபர் அவளைப் பகிரங்கமாக எச்சரித்துவிட்டு அவளின் பெற்றோரை மறுநாள் பாடசாலைக்கு அழைத்துவரச் சொல்லியிருக்கிறார். வீடுசென்ற அம்மாணவி பெற்றோருக்கு நடந்ததைத் தெரிவிக்காமல் அறைக்குள் சென்று கடிதம் ஒன்றை எழுதி வைத்துவிட்டுச் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டிருக்கிறாள். மேலும் 2014 மாசித்திங்கள் முகநூலின் விபரீதத்தால் காலியில் 19 வயது யுவதி தற்கொலை செய்துகொண் டுள்ளாள்.

நவீன தொழில்நுட்பப் பயன்பாட்டால் நாளும் பொழுதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறும் மிகச் சோகமான - மிகத் துக்கமான - மிக வேதனையான சம்பவங்களுக்கு இவை ஒருசில மாதிரிகளே!

ஆக, எத்தகைய மாற்றம் சமுதாயத்தில் நிகழ்ந்திருக்கிறது என்பதை இறையியலாளன் செபஸ்தியான் காப்பன் பின்வருமாறு அவதானிக்கிறார்: "காசே நமது தெய்வம் ஆகிவிட்டது; கடைகளும் சந்தைகளுமே நம் கோவில் ஆகிவிட்டன; புதுப்புது சொகுசுகளையும் சுகங்களையும் வாங்கி அனுபவிப்பதே நமது வழிபாடு ஆகிவிட்டது; விளம்பரங்களைப் பார்ப்பதே நம் காட்சித் தியானம்; அடுத்து என்ன பொருளை வாங்கலாம் என்பதே செபம்; போட்டி பொறாமையும் விருப்பு வெறுப்பும் சண்டை சச்சரவுமே நமது வாழ்க்கை முறையாகி வருகின்றன" என்கிறார்.

**நாம் நமக்கிடையில் அந்நியர் ஆகிவிட்டோமா?**

இன்றைய நவீன தொழில் நுட்பப் பயன்பாட்டினால் தொடர்புகள் வளர்ந்திருக்கின்றன. ஆனால், உண்மையான உறவுகள் வளர்ந்திருக்கின்றனவா? என்றால் அது ஆய்வுக்கு உரியதே!

எமக்கு அயலில் உள்ளவர்களே அன்னியப்பட்டுப்போய் கிடக்கின்ற அவலநிலை உருவாகி வருகிறது. அடுத்த தெருவில் இருப்பவரோடு கைத்தொலைபேசியிலும் அடுத்தறையில் இருப்பவரோடு எஸ்.எம்.எஸ்.சிலும் செய்திகளைப் பரிமாறிவிட்டு "செய்திப் பரிமாற்றம் செய்கின்ற நவீன 'றோபோ'கள்" ஆக நாம் மாறிவருவதை மனவேதனையோடு எண்ணிப் பார்க்கவேண்டி இருக்கிறது.

எம்மோடுகூட வாழ்பவர்களும் எம் அருகில் இருப்பவர்களும் அன்னியப்பட்டுக் கிடப்பதை ஏன் நாம் இன்னும் உணரவில்லை? அயல்வீட்டில் யார் இருக்கிறார்கள் என்றுகூடத் தெரியாமல் எப்படி அடுத்தவரை நாம் அன்புசெய்ய முடியும்?

ஆகவே, இத்தகைய அந்நிய வாழ்க்கை முறையிலிருந்து விடுபட்டு மனிதர்களை நேசிக்கும் உண்மை மனிதர்களாக வேண்டும். 'பிறர் நமக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நாமும் அவர்களுக்குச் செய்யும்' மனப்பாங்கு வாழ்க்கை முறையாக மாற ஒவ்வொரு மனிதனிலும் அடிப்படையான மன(அக)மாற்றம் தேவைப்படுகிறது.

'எல்லாரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களே தவிர தங்களை மாற்ற யாரும் தயாரில்லை' என்பது எவ்வளவு உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானது என்பதை எம் வாழ்வில் நாம் கட்டாயமாகப் புரிந்து கொள்ள வேண்டி இருக்கிறது.

ஏனெனில், "தனிமனித மாற்றம் என்பது சமூக மாற்றத்திற்கு சமாந்தரமாக நடைபெறவேண்டிய தவிர்க்க முடியாத அவசியமான தொரு செயற்பாடு ஆகும்" என எழுத்தாளர் மீராபாரதி கூறுவார்.

**யாருக்குத் தேவை மனமாற்றம்?**

பொதுவாக, அடுத்திருப்பவர் / 'அயலான் திருந்தவேண்டும் - மனம் மாறவேண்டும்' என நினைக்கிறோமே தவிர 'நான் மாற வேண்டும்', 'எனக்குள் (என்னில்) மாற்றம் தேவை' என எண்ணுபவர்கள் மிகக்குறைவு என்பதை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டியிருக்கின்றது.

ஆகவேதான், "காலம் கனிந்துவிட்டது, கடவுள் ஆட்சி நெருங்கி வந்துவிட்டது, மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்..." என்ற மாற்கு1/15இல் குறிப்பிடப்படும் இயேசுவின் முதல் வார்த்தைகளானது மனமாற்றத்திற்கான அழைப்பாக இருப்பதைப் பார்க்கலாம். ஆக, இயேசு மனிதர்களை ஒப்புரவாக்கும், மனங்களைத் துப்பரவாக்கும் பணிக்காகவே வந்தார் என்பதை அவரின் போதனைகளில் இருந்து புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

**அக மாற்றம் அவசியமானது**

மனமாற்றம் என்ற சொல்லுக்கு கிரேக்க மொழியில் பயன் படுத்தப்படும் *மெற்றநொய்யா (Metanoia)* என்ற சொல்லானது 'தீமையி லிருந்து விலகிக் கடவுளை முழுமையாக ஏற்றுக்கொண்டு வாழும் மனநிலை' எனக் கருதப்படுகிறது. அதாவது ஒருவரின் எண்ணத்தில், சொல்லில், செயலில், நடத்தையில் ஏன் முழு மனிதத்திலும் ஏற்படும் நேர்மறை மாற்றமே உண்மையான மனமாற்றம் என்ற சொல் குறித்துக்காட்டும் பொருள் எனப் புரிந்துகொள்ளலாம்.

எனவேதான், "நீங்கள் உங்கள் உடைகளை அல்ல உங்கள் உள்ளங்களைக் கிழித்துக் கொள்ளுங்கள்..." என்ற யோவேலின்(2/13) வார்த்தைகள் புற(வெளி) மாற்றங்களைத் தவிர்த்து அக(உள்) மாற்றங்களை நம் வாழ்வினில் ஏற்படுத்த அழைக்கிறது.

இந்து சமயமும் மனமாற்றத்தின் தேவையை வலியுறுத்து கிறது. செய்த வினையிருக்க தெய்வத்தை நொந்து என்ன பயன்? என்ற பொருளை உள்வைத்து, "நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன - நீ மனமே மாற்றிப் பிறக்க வகையறிந்தாய் இல்லையே!" எனச் சித்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினத்தார் பாடுவார்.

இதே விடயத்தை சித்தர் சிவவாக்கியர் கூறுகின்றபோது, "காசி காசி என்று கால்கடுக்க ஓடினீர், காசியோடு ஆடினும் கறுப்பு வெள்ளை ஆகுமா? ஆசை பாசம் விட்டு நீர் ஐவரும் ஒடுங்கினால் காசிநீரும் உமக்குள்ளே காதலாகும் உண்மையே" எனக் கூறுவார்.

அதாவது இந்தியாவில் காசி என்ற இடத்திற்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறையனுபவம் பெறச் செல்கிறார்கள். ஐம்பொறிகளை அடக்கி வாழ்தலின் வழியாகவே காசி (இறை) அனுபவத்தை நாம் பெறமுடியுமே தவிர, காசிக்குக் கால்கடுக்க நடந்துசென்று நேர்த்திக்கடன் முடித்துத் தீர்த்தம் ஆடினாலும் நம் கர்மங்கள் நம்மைவிட்டு அகலாது எனப் பொருள்படுகிறது மேற்சொன்ன வரிகள்.

**'மூவொரு இறைவன்' - 'மும்மணிகள்' - 'முப்பொருள்கள்'**

கிறிஸ்தவம், ஒரே இறைவன் மூன்று ஆட்களாக (தந்தை, மகன், தூய ஆவியானவர்) இருக்கிறார்கள் என்கிறது.

பௌத்தம், மும்மணிகள் பற்றிப் பேசுகிறது: 'புத்தம்' (பௌத்த நெறியை), 'சங்கம்' (பௌத்த துறவியர்களின் கூட்டம்), 'தர்மம்' (ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய தர்மம்) எனப் போதிக்கிறது. இதுவே, 'புத்தம் சங்கம் தர்மம் கச்சாமி' என மந்திரமாக வளர்ந்துள்ளது.

சைவசித்தாந்தம், 'பதி', 'பசு', 'பாசம்' ஆகிய முப்பொருள்கள் பற்றிப் பேசுகிறது. இவை சமயங்களுக்கு இடையேயான ஒருவகை ஒருமைப்பாடு – கோட்பாடு – உடன்பாடு எனலாம்.

**மும்மலங்கள்!**

சமஸ்கிருதத்தில் உருவான முப்பொருள் எண்ணக்கருவானது 'பதி' கடவுளையும், 'பசு' ஆன்மாவையும், 'பாசம்' பந்தங்களையும் தமிழில் குறித்துக் காட்டுகின்றன. 'பசு' என்ற ஆன்மா, 'பாசம்' என்ற பந்தங்களில் இருந்து விடுபட்டு – விடுதலை அடைந்து 'பதி' என்ற கடவுளை அடைவதே வீடுபேறு (முக்தி) அடைவதற்கான வழியாகும்.

'பாசம்' என்று சொல்லப்படுகின்ற பந்தங்களை அடிப்படையில் மூன்றாக வகுக்கிறார்கள். அவை: ஆணவம், கன்மம், மாயை ஆகும். இவற்றை மும்மலங்கள் (அழுக்குகள்) என்றும் அழைக்கிறார்கள். காரணம், மனிதனை வாட்டி வதைக்கும் மூன்று பெரும் தீமைகளாக இவை இனம் காணப்படுகின்றன. ஆகவேதான் இவற்றை மும்மலங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சைவசித்தாந்தம் அழைக்கிறது.

சுருங்கக் கூறின், கன்மம் என்பது, ஒருவர் செய்கின்ற செயல்கள் ஒவ்வொன்றுக்கும் கைமாறு எதிர்பார்ப்பதாகும். மாயை என்பது, நிலையில்லாதவற்றை நிலையானவை எனக் கருதுவதாகும். ஆன்மா ('பசு'), கன்மம், மாயை ஆகிய பந்தங்களை அழித்தாலும் ஆணவத்தை (அகங்காரம் - மமகாரங்களை) எளிதில் அழிக்க முடியாததாகிறது.

பெருங்காயம் இருந்த பாத்திரத்திலே அதன் மணம் இருப்பது போல ஆணவம் அவ்வளவு எளிதில் மறைந்துபோகாது எனக் கருதப்படுகிறது. கிறிஸ்தவத்தில் ஏழு தலையான பாவங்களுள் ஆணவம் முதலாவதாகக் குறிப்பிடப்பட்டிருப்பது இச்சிந்தனைக்கு மேலும் வலுச்சேர்க்கிறது.

**ஆணவத்திமிரின் உச்சம்**

எறும்புகளின் மாநாடு ஒன்று நடைபெற்றதால் எல்லா இடங்களில் இருந்தும் எறும்புகள் வரிசை வரிசையாகச் சென்று கொண்டிருந்தன. அவ்வழியே யானைத் தம்பதிகள் இருவர் வந்தனர். பெண் யானை இரக்கப்பட்டு, "பாவங்கள் எறும்புகள், பல வரிசை களிலே வருகின்றன. மிதித்துவிடுவோம்! எனவே, நாம் வேறு பாதையால் செல்வோம்" என ஆண் யானையிடம் கூறுகிறது. அவ்வாண் யானையும் பெண் யானையின் ஆலோசனையின்படி திரும்பி வேறு வழியால் தங்கள் பயணத்தை மேற்கொள்கின்றன.

இதனை அவதானித்த எறும்புத் தலைவர்களின் ஒருவர், "எம் படை நிரைகளைப் பார்த்து யானைகள் இரண்டும் பயந்து தாம் வந்த வழியே திரும்பி விட்டன!" என்கிறது. இதனைக் கேட்ட இன்னுமொரு எறும்புக் கூட்டத் தலைவன், "பாவம், அவர்களை நாம் ஒன்றும் செய்யாது விட்டுவிடுவோம். உயிரைக் காக்கத் தப்பி ஓடுகின்ற யானைகளை நாம் தாக்கக்கூடாது!" என்றதாம்.

ஆணவம் அறிவை மயக்கி மழுங்கடித்து விடுகிறது என்பது எந்தளவிற்குச் சரியான அனுமானம் என்பது இக்கதையில் இருந்து தெளிவாகிறது.

'நம்மிடம் ஏதோ இருக்கிறது என்பது நம்பிக்கை, நம்மிடம் எதுவும் இல்லை என்பது அவநம்பிக்கை, நம்மிடம் இல்லாதது எதுவுமில்லை என்பது ஆணவம்' எனக் கூறுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவத்தின் - 'தான் என்ற செருக்கு'இன் ஒரு வெளிப்பாடு எப்படிப்பட்டது என்றால் விவிலியத்தின் லூக்கா18/9இல் காணப்படும் பரிசேயனைப்போல தம்மைத் தம் தகுதியிலும் பார்க்க மிக உயர்வாக கருதுவதோடல்லாமல் மற்றவர்களை மிக இழிவாக நோக்குகிற மனப்பாங்காகும்.

**மனமாற்றத்தின் மாதிரி**

மனமாற்றத்தின் ஒரு மாதிரியாக விவிலியத்தில் லூக்கா நற்செய்தியில் வரும் சக்கேயுவைக் (லூக்கா19/1-10) கொள்ளலாம். சக்கேயு உண்மையான - முழுமையான - மகிழ்ச்சியான மனமாற்றம் அடைகிறான்.

இவனின் மனமாற்றத்தை மூன்று நிலைகளாக நாம் நோக்க முடியும். 1.தன்னிலை உணர்தல்: சக்கேயு தன் தாழ்நிலையை உணர்ந்தவனாகத் தன் தீவினையைப் பணிவோடு ஏற்றுக்கொள்கிறான். 2.இயேசுவைக் காணத் தீர்மானித்தல்: இனிமேலும் பழைய வாழ்க்கையைத் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்த சக்கேயு, இயேசுவைச் சந்திப்பது என்ற தீர்க்கமான முடிவொன்றுக்கு வந்து இயேசுவைச் சந்திக்கிறான். 3.மாற்றத்தை வாழ்க்கையில் வெளிப்படுத்தல்: தான் அடைந்த விடுதலையை - தான் பெற்றுக்கொண்ட புதுவாழ்வை வாழ்ந்து காட்டுகிறான்.

**மனம் மாறுவோம் மாற்றம் காண்போம்**

எனவே, ஓர் இறையடியான் வேண்டுவதுபோல, 'இறைவா, மாற்றக்கூடியதை மாற்றுவதற்கான மனப்பக்குவத்தையும் மாற்ற முடியாததை ஏற்றுக்கொள்வதற்கான மனத்துணிவையும் இவை இரண்டிற்கும் இடையிலான வித்தியாசத்தைக் கண்டறியும் ஞானத்தையும் தந்தருளும்' என மனமாற்றம் ஏற்பட நாம் செபிக்கலாம் - செயற்படுத்தலாம்.

'பொய்மையில் இருந்து மெய்மைக்கும், இருளில் இருந்து ஒளிக்கும், சாவில் இருந்து வாழ்விற்கும் அழைத்துச் செல்வாய் சாந்தி, என்றும் சாந்தி, இன்ப சாந்தி' என்றும் அனுதினம் மன்றாடலாம் - மனம்மாறலாம்.

*மன்னா, சித்திரை 2014*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தகால வடலிப் பருவம்



## 14

**கா(மோ)தல் திருமணமா, பேச்சுத் திருமணமா?**

திருமணம் பற்றிப் பேசுகின்றபோது, “கா(மோ)தல் திருமணம் தான் சிறந்தது”, “இல்லை, பேச்சுத் திருமணம்தான் சிறந்தது” என இரு பகுதியினராகப் பிரிந்துநின்று வாதிட்டுக் கொள்கின்றவர்கள் இப்போதும் இருக்கிறார்கள். ஆனால், உண்மையில் ஒருவரை “ ‘தூக்கிட்டுச் சாகவிரும்புகிறாயா?’, அல்லது ‘சுடுபட்டுச் சாகவிரும்புகிறாயா?’ ” என்பதைப் போன்றதுதான் இவ்விவாதம் எனக் கூறுபவர்களும் உண்டு!

இவ்வாறான சிந்தனைகள் காதல், திருமணம், இல்லறம் என்ற நல்லறம்பற்றிச் சொல்ல வருகின்ற வேளைகளில் நம்முடைய கலந்துரையாடல்கள், கருத்தாடல்கள், கருத்துப் பகிர்தல்கள் சுவாரஸ்யமாக இருப்பதற்காகச் சொல்லப்படுகின்ற துணுக்குகள் என்றுகூடக் கொள்ளலாம். எனினும், அத்துணுக்குகளிலும் ஆழமான பொருள் பொதிந்திருக்கிறது என்பதைக் கூர்ந்து நோக்குகின்றபோதுதான் அவற்றை நம் சிந்தனைக்குள் எடுத்துக்கொள்ளக் கூடியதாயிருக்கும்.

காதல் திருமணத்தை ‘மோதல் திருமணம்’ எனச் சொல்லப் பட்டிருப்பதையும் மேலே தலைப்பில் அவதானிக்கலாம். காரணம் இல்லாமல் இல்லை! பல காதல் திருமணங்கள் மோதலில் தொடங்கி மோதலில் முடிவுறுவதால் காதல் திருமணத்தை ‘மோதல் திருமணம்’ என்று மேலும் ஓர் அடைமொழியால் அழைக்க வேண்டியதாயிற்று!

இதனை நியாயப்படுத்த நம் ஊர்களில், ஒழுங்கைகளில், வீதிகளில் இளையோர் குழுக்களிடையே ஒருத்தியைக் குறித்து நடைபெறும் குழுமோதல், வீட்டுக்குள்ளேயே மகள்(ன்) - பெற்றோர் மோதல், காதலிக்கும் இருவரின் வீட்டாருக்கும் இடையிலான கருத்து மோதல், இதுவே வளர்ந்து நாளடைவில் கைகலப்பு மோதல் என இம்மோதல்களின் பல வடிவங்களைப் பார்க்கலாம். இம்மோதல்களுக்குள்ளும் ‘வெட்டி ஓடி’ காதலில் வெல்பவர்களும் இருக்கத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கிறார்கள். வாழ்க, அவர்கள் காதல்! வளர்க, அவர்கள் காதலால் ஏற்படும் மோதல்!

**பருவமறியாப் பாவையரின் பருவக்கோளாறு!**

இப்போது கொஞ்சக்காலமாக வயதுக்குவந்த இளம் பெண்பிள்ளைகளில் சிலர், பாடசாலையில் பயிலும் மாணவிகள் உட்பட, இடையிடையே காணாமல் போவதாக அறிய முடிகிறது. ஓரிரு கிழமைகளின் அல்லது மாதங்களின் பின்னர் அவர்கள் கண்டுபிடிக்கப் பட்டு மீண்டும் வீட்டிற்கு வந்து சேர்வதாகவோ அல்லது கூட்டி வரப்படுவதாகவோ தெரிய வருகிறது.

இவர்கள் சென்றிருக்கக்கூடிய இடங்களைத்தேடி அலைகின்ற பெற்றோர் அவர்களை அழைத்துவரச் சொல்லொணாத் துன்பப் படுவதாகவும் அறியமுடிகிறது.

இவர்கள் எங்கு போனார்கள்? எதற்காகப் போனார்கள்? என்னசெய்யப் போனார்கள்? யாருடன் போனார்கள்? என்பதை எல்லாம் அறியத் துடிக்கின்ற உங்களின் துடிப்புப் புரிகிறது! ஆயினும், யாரிடமாவது அறிவித்துவிட்டுச் சென்றால்தானே காரணத்தைச் சொல்லமுடியும்! அப்படிச் சொல்லிவிட்டுச் செல்லுகின்ற சமாச் சாரமா இது? என்றும் இன்னுமொரு புறத்தில் யோசிக்கவேண்டி இருக்கிறது!

என்னசெய்வது 'பருவமறியாப் பாவையர்கள்' பருவக் கோளாறினால் 'அதை' எவ்வாறு செய்யலாம் என அறியாமல் இவ்வாறு செய்து விடுகிறார்கள்! "அவன் நாசமறுந்தவன் கூப்பிட்டான் எண்டு, நீ நாசமாப்போக போனியே அடி!" எனப் பருவமறியா இப்பாவையர் களை மட்டும் இவ்விடயத்தில் பெற்றோர் குற்றம் சுமத்த முடியாது. காரணம் இந்த 'வில்லி'க்குப் பின்னால் ஒரு 'வில்லன்' இருக்கிறான் என்பதையும் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

வில்லனும் வில்லியும் இணைந்து விளையாடினால் விளை யப்போவது 'வில்லங்கம்'தானே! அந்த வில்லங்கம் நடந்தேறுவதற்கு முன் ஒருவாறாக வில்லனையும் வில்லியையும் பெற்றோரும் அவர்தம் உறவினரும் விலக்கிவிடுகிறார்கள். தாங்கள் செய்வது வில்லங்கத்தில் முடியும் என்று உணர்ந்து கொள்கின்ற பிள்ளைகள் தவறுகளைத் திருத்திக்கொண்டு முன்னேறுகிறார்கள். மற்றவர்கள் வில்லங்கத்தை விலைகொடுத்து வாங்கி வாழ்நாள் முழுவதும் அவ்வில்லங்கத்தைச் சுமந்து துன்பப்படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்ககாலக் காதல் சமகாலக் காதலாகிவிட்டதோ!**

இன்றைய பெற்றோர் அலைவதைப்போல சங்ககாலத்திலும் தன் மகள் காதலனுடன் சென்றுவிட்டாள் என்று அறிந்த தாயொருத்தி அவளைத்தேடிப் புறப்படுகிறாள். தேடிச்செல்லும் வழியில் வருவோர் போவோரிடம் தன் மகள் பற்றி விசாரிக்கிறாள்.

அவர்களோ, "சந்தனம் மலையில் பிறந்தாலும் அது மலைக் குச் சொந்தமல்ல, முத்து கடலில் பிறந்தாலும் அது கடலுக்குச் சொந்தமல்ல, இசை யாழிலே பிறந்தாலும் அது யாழுக்குச் சொந்த மல்ல, அவ்வாறே உன் மகள் உன் வயிற்றில் பிறந்தாலும் அவள் உனக்கு உரியவள் அல்ல, மாறாகக் காதலனுக்குரியவளே" என அவர்கள் கூறிவிடுவதாகக் கலித்தொகையில் (பாலைக்கலி, பாடல் 08) சொல்லப்பட்டிருக்கிறது.

கலியுகத்தில் நடப்பதை கலித்தொகையே அன்று கூறிவிட்டது என்று அமைதி காண்பதைத் தவிர வேறு மார்க்கம் என்ன இருக்கிறது! அத்துடன் இன்றைய இளவல்கள், 'உங்களுக்குத் தெரிந்ததுபோல எங்களுக்கும் இலக்கியம், இலக்கிய வரலாறு எல்லாம் தெரிந்துதான் நாங்களும் வாழ்க்கைத் தெரிவுகளைச் செய்கிறோம்! சங்ககாலத்தில் செய்யாததையா நாங்கள் சமகாலத்தில் செய்துவிட்டோம்!' என நியாயப்படுத்திச் செயல்படுகிறார்களோ என்றுகூடச் சிந்திக்கத் தோன்றுகிறது.

**நோக்கி நோக்கி, 'நொக்கியா'வானதோ!...**

"அட பெண்ணே! என் காதலைச் சொன்னபோது கண்ணை மூடினாய், உன் கண்கள் என்ன நுளம்பு வலையா? அல்லது மீன் வலையா?" எனக் கேள்வி எழுப்பினான் ஒரு கவிஞன். அதாவது நுளம்பு வலையைப்போல என்னை உன் உள்ளத்தின் உள்ளே அனுமதிக்க மாட்டாயா? அல்லது மீன் வலையைப் போல உன் உள்ளத்தின் உள்ளே நுழைந்த என்னை வெளியேற விடமாட்டாயா? என்று இதனைப் பொருள் கொள்ளலாம்! எனினும், இப்போது யாரையா இந்த நுளம்பு வலைகளோடும் மீன் வலைகளோடும் நிற்கிறார்கள்?

அவனவனும் ஆளுக்கொரு நொக்கியாவை (*Nokia Phone*) வைத்துக்கொண்டு, 'அவனும் ேந(ெ)நாக்கியா (*Nokia*) அவளும் ே(ெ)நாக்கியா' (*Nokia*) என்றல்லவா கலைத்துத் திரிகிறார்கள். "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்..." என்றுதான் கம்பன், இராமன் சீதையைக் குறித்து கம்பராமாயணத்தில் பாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருப்பதாகப் படிப்பித்திருக்கிறார்கள். அதனைத்தான் இன்றைய இளவல்கள் கணினி முறைப்படுத்தி அடிக்கடி நோக்கி, நோக்கி, நோக்கி, நோக்கி... ‘பே(ெ)நாக்கியா’ வாக்கி வைத்திருக்கிறதோ என்றுகூடச் சொல்லத் தோன்றுகிறது.

**காதலர்களின் தியாகங்கள்?**

ஒரு காதலனும் காதலியும் தங்கள் காதலுக்காகச் செய்த தியாகங்களைப் பற்றி தங்களுக்கிடையில் பேசிக்கொண்டார்கள். காதலி காதலனிடம், “இதோ பார், உனக்காக என்ர அப்பா, அம்மா, சகோதரங்கள், உறவுகளையே உதறி எறிந்துவிட்டு வந்திட்டன்” என்றதற்கு அவன், “உனக்காக, நான், பெத்த பிள்ளையையே தூக்கி வீசிற்று வந்திற்றன்!...” என்றானாம்.

எப்படி இருக்கிறது இந்தச் சங்கதி? இவனாவது தன்னை மறந்த நிலையில் தன் குடும்பத்தை – மனைவி பிள்ளைகளை உதறிவிட்டு வந்த உண்மையைக் கக்கிவிட்டான், சிலர் வைத்துக்கொண்டே காதலிப்பதாக வருவார்கள்! அதுதான் கவனமென்கிறது கண்மணிகளே!

“கவனமா போய்வரவேணும்...”, “தேவையில்லாத சோலிகளுக்குப் போகக்கூடாது...” என்றெல்லாம் பெற்றோர் - ஆசிரியர் சொல்லும்போது மேற்சொல்லப்பட்ட குறிப்புக்களையும் சேர்த்துத்தான் சொல்லுகிறார்கள் என்பதைக் கண்மணிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆக, உண்மைக் காதலுக்கு ‘டாங் டாங்’ மணியும் பொய்க் காதலுக்கு ‘டங் டங்’ மணியும் அடிக்கக் தெரிந்திருக்கவேண்டும். இல்லையென்றால், வாழ்க்கைக்கே ‘துக்க மணி’ அடிக்க வைத்து விடுவார்கள் சிலபேர்வழிகள்! எத்தனையோ மணிகளைப் பற்றிக் கேட்டிருப்பீர்கள். ஆனால், காதலை வைத்துக்கொண்டு மணிமணியாய் சொல்லும் இவர், என்ன மனி(ணி)தர் எனத் தாங்கள் எண்ணுவதும் புரியாமலில்லை!

**உணர்ச்சிநிலையில் மட்டுமல்ல அறிவுநிலையில் செயற்படவேண்டும்**

பொதுவாகக் காதலிப்பது சுகமான அனுபவமாக இருந்தாலும் காதலிப்பதால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பது, காதலிப்பதால் ஏற்படக்கூடிய சவால்கள், சமுதாயத்தில் நிலவும் காதலுக்கு எதிரான தீவிரப்போக்கு போன்றவைகளால் காதலுக்குத் தடைவிதிக்கப்படுகிறது. இந்நிலையைக் கோடிட்டுக்காட்ட விரும்புகின்ற வதிரி சி.இரவீந்திரன் காதல் பற்றி எழுதுகின்றபோது, “அவன்+அவள் =



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல்; சாதி+சமயம், தகுதி+தரங்கள் தடுத்து மறித்தன" எனச் சுவையாகச் சொல்கிறார்.

பொதுவாகக் காதல்செய்யத் தொடங்குகின்றபோது காதலிப்பவர்கள் உணர்வுநிலையில் (*Feeling Level*) செயற்படுகிறார்கள் அல்லது உணர்ச்சிநிலை எண்ணங்களுக்கு முதலிடம் கொடுப்பவர்களாகிறார்கள். இவ்வாறு உணர்வு அல்லது உணர்ச்சிநிலையில் செயற்படுவது இயற்கையானதும் இயல்பானதும்கூட என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டி இருக்கிறது.

உணர்வுநிலையில் செயற்படுகிறபோதிலும் அறிவுநிலையில் (*Intellectual Level*) செயற்படுவது புறந்தள்ளப்படக்கூடாது என்பதனையும் கருத்தில் வைத்துக்கொள்வது காதலர்களுக்குக் கட்டாயமானது.

ஒவ்வொருவரின் காதலையும், ஒவ்வொருவரும் காதலிப்பதன் சூழமைவையும் தனியே உணர்வுகளின், உணர்ச்சிகளின் பாதிப்புக்கு உள்ளாக்காமல் புற மெய்ம்மைகளைக் (*Objectively*) கருத்தில் கொள்வது வாழ்க்கையை யதார்த்தபூர்வமாக வடிவமைக்க உதவியாக அமையும் என்பதையும் கவனத்தில் எடுத்துக்கொள்வது மிக அவசியமானது.

அதிகமான பெற்றோர் காதல் விவகாரத்தில் பட்டறிவுடன் செயற்படுவதால் கள நிலைமைகளையும், குடும்ப நிலைமைகளையும், ஏனைய காரணிகளையும் கருத்தில்கொண்டு காதலுக்கான சமிக்கையை பிள்ளைகளுக்குச் சார்பாக 'லேசாக' தெரிவிக்க மாட்டார்கள் என்றே கூறவேண்டியிருக்கிறது.

காதலுக்குச் சார்பான சமிக்கை தராவிட்டாலும் பறவாயில்லை, காதலுக்கான தடையை விதித்து, இக்காதலையும் காதலர்களையும் கண்காணிக்கப் புலனாய்வுகளையும் முடுக்கிவிடுகிறார்கள்.

வேறென்ன, சின்னச்சின்ன விடயங்களும் இதனால் ஊதிப் பெருப்பிக்கப்படுவதும் உண்டு. இதனைத்தான், சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி என்றொரு பழமொழியால் கூறிகின்றார்கள் போல! சில காதல் சோடிகளுக்கு இதனால் அதிஸ்ரம் அடிப்பதும் உண்டு! இதனால், 'யா(ஆ)ரு குத்தியும் அரிசியாகினால் சரிதானே' எனச் சோடிகள் ஓடிவிடுவதும் உண்டு, வாய்ப்புக்கள் சரியாக அமைந்தால் கூடிவிடுவதும் உண்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடத்தில் ஒன்றைத் தெரியாமல்தான் கேட்கவேண்டி இருக்கிறது, காதலிக்கும்போது எப்படியெல்லாம் பேசுகிறார்கள்! திருமணமாகித் தொடக்க நாள்களில் எப்படியெல்லாம் புழுகித் தள்ளுகிறார்கள்! எங்கிருந்துதான் அவ்வளவு ஐடியாக்களையும் பேசுகி றார்களோ என வியப்பாக இருக்கும்! அவ்வளவிற்கு சுவாரஸ்யமான சம்பாசனைகள் நடைபெறும்!

எனினும், காதல் செய்த பெண்ணையோ அல்லது ஆணையோ கலியாணம் செய்து கொஞ்சக் காலம் செல்வதற் குள்ளேயே அவர்கள் காட்டுகின்ற அன்பு, பாசம், இரக்கம், விட்டுக் கொடுப்பு, தியாகம் எல்லாம் படிப்படியாகக் குறைந்து வற்றிப்போய் விடுகின்றனவே!

உண்மையில், காலம் செல்லச்செல்லத்தான் அன்புறவு, அன்புணர்வு, புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்புப் போன்றவை இன்னும் அதிகரிக்கவேண்டும். ஆனால், நடைமுறையில் அவ்வாறு காண்பது அரிதாகவே உள்ளது. இல்லையென்றால், ஏன் இன்று இளம் குடும்பங்களின் குடும்பப் பிரச்சினைகளுக்கு நியாயம் கேட்டு நீதிமன்றங்கள் நிரம்பி வழிய வேண்டும்? இல்லையென்றால், ஒரு காலத்தில் காதலர்களாக இருந்தவர்கள் இப்போது கணவன் மனைவி யாகி ஆளுக்கொரு சட்டத்தரணி வைத்து ஏன் வழக்காடவேண்டும்?

நல்ல காலம்! ஒரே தம்பதிகளில், ஒருவர் ஒருவருக்கு எதிராக வழக்காடும்போது, ஒரே சட்டத்தரணியே இருவருக்காகவும் வழக்காட முடியாது என்றொரு நடைமுறை இருப்பது! இல்லையென்றால் நம் தம்பதியினர், தம் இருவருக்கும், ஒரே சட்டத்தரணியையே, மலிவாக வழக்காட வைத்துவிடுவார்கள்.

உண்மையாகக் காதலிப்பவர்கள், காதலிக்க எண்ணியிருப் பவர்கள், காதலித்துக் குடும்ப வாழ்வில் இணைய இருப்பவர்கள், ஏற்கெனவே இல்லற வாழ்வில் இணைந்திருந்து காதலிக்க வேண்டி யவர்கள் அதாவது தம்பதியினர், தங்களுக்கிடையில் இவற்றைச் சிந்தித்து செயல்படுத்தினால்தான் குடும்பங்கள் உருப்படும்! காதல் வாழ்வு வசப்படும்! உண்மைக்காதல் சரிப்படும்!

*மன்னா, சித்திரை 2014*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருவாகுவோம்!
# உருவாக்குவோம்!!



15

**ஆசிரியரின் ஆளுமைத்திறன்**

ஒரு மாணவர் மீது, ஆசிரியர் கொண்டுள்ள ஆதிக்கத்தை கல்வியியலாளர் வொட்சன் பின்வருமாறு விபரிக்கிறார்: "நன்கு வளர்ச்சியடைந்த ஒரு டசின் சிறார்களை எனக்களித்து நான் கூறும் விதமாக இவர்களை வளர்க்க எனக்கு வாய்ப்பினை வழங்குங்கள். ஒவ்வொரு பிள்ளையையும் ஒவ்வொரு துறையில் ஒரு நிபுணராக உருவாக்குவேன். ஒரு மருத்துவராக, சட்டத்தரணியாக, கலைஞராக, தலைசிறந்த வணிகராக, தேவைப்படின் ஒரு பிச்சைக்காரனாக, திருடனாகக்கூட உருவாக்க என்னால் முடியும்" என்கிறார்.

வொட்சனின் மேற்சொன்ன ஆழ்ந்த அனுபவம் எந்தளவிற்கு உண்மையானது என்பதனை கல்வியலாளர் கோதாரியின் பின்வரும் கூற்று: "ஒரு நாட்டின் எதிர்காலமே வகுப்பறையில்தான் இருக்கிறது" என்பது உறுதிப்படுத்துகிறது.

பாருங்கள், எத்தகைய தாக்கத்தை ஆசிரியர்கள் மாணவர்கள் மீது செலுத்த முடியும்! அத்தகைய அர்ப்பணிப்போடும் தியாக உணர்வோடும் ஆசிரியர்கள் முன்னைய காலங்களில் விளங்கினார்கள். அத்துடன், ஆசிரியர்களின் வழிநடத்துதல்களை அன்றைய மாணவர்களும் கேட்டு நடந்தார்கள்.

ஆனால் இன்று, மாணவர்கள் சொல்ல ஆசிரியர் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலைகள் உருவாகிவிட்டன என்றுதான் சொல்லவேண்டி இருக்கிறது. முன்னைய காலங்களில் ஆசிரியர்களைக் கண்டு மாணவர்கள் மரியாதை செலுத்திய – பயந்த காலம் மலையேறிப் போய் இப்போது மாணவர்களைப் பார்த்து ஆசிரியர்கள் மரியாதை செலுத்த – பயப்படவேண்டி இருக்கிறது.

மேலும், முன்னைய காலங்களில் ஆசிரியர்கள் சொல்வதை, அவர்களின் ஆலோசனைகளை மாணவர்கள் மட்டுமல்லாது பெற்றோர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டு நடந்தார்கள். இன்று, பிள்ளைகளை ஆசிரியர் கொஞ்சம் கடிந்து கொண்டாலே ஆசிரியர், மாணவர்களினதும் பெற்றோர்களினதும் கண்டனங்களுக்கு உள்ளாக நேரிடுகிறது.

சில இடங்களில் ஆசிரியர்களுக்கு எதிராகக் கடும் தாக்குதல்களும் நடத்தப்பட்டிருக்கின்றன. என்ன செய்வது! ஆசிரியர்களை மதிக்கின்ற நவீன வடிவங்கள் இவையென்று எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்!

ஆசிரியர் என்றால், 'மாதா பிதா குரு தெய்வம்' ('குரு' என்ற சொல் இங்கு ஆசிரியரைக் குறிக்கிறது) என்ற நிலையில் வைத்துப் பார்க்கப்பட்ட நிலை மாறி இன்றைய தலைமுறை எங்கு வந்து நிற்கிறது – எந்தத் திசையில் பயணித்துக் கொண்டிருக்கிறது என்பதையாவது கொஞ்சம் புரிந்துகொண்டால் சரி!

**பாடசாலைப் 'பூசை' விசேஷம், வீட்டுப் 'பூசை' அதிவிசேஷம்!**

கொஞ்சக் காலங்களுக்கு முன்னர் இருந்த நிலைமைகளே வித்தியாச மானவை. பாடசாலையில் மாணவர்களுக்கு அடி விழுந்துவிட்டது என்றால், மாணவர்கள் அதனை வீட்டில் வந்து பெற்றோருக்குச் சொல்ல மாட்டார்கள்.

பிள்ளை பிழை செய்யாதிருப்பினும், "நீ ஏதோ பிழை செய்திருக் கிறாய். அதனால்தான் அதிபர் / ஆசிரியர் அடித்திருக்கிறார்" என எச்சரித்து, வீட்டில் பெற்றோரும் 'பூசை' (அடியினால் நடைபெறும் அபிஷேகந்தான் 'பூசை' என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது.) கொடுப்பார்கள் என்பது, எல்லாக் குடும்பங்களிலும் எழுதப்படாத சட்டமாகவே இருந்து வந்திருக்கிறது.

அதிலும், தந்தை அல்லது தாய் ஆசிரியராக இருந்தால் – அரச ஊழியர்களாக இருந்தால் பாடசாலையில் தனிக் கவனிப்புகளும், வீட்டில் வழிபாடுகள் இல்லாத விசேஷ பூசைகளும் இடம்பெறும்.

அதனால், பாடசாலையில் அடி விழுந்தாலும் அதுபற்றி எவ்வித தகவலும் வீட்டிற்கு வந்துசேராமல் பார்த்துக் கொள்வதில் மாணவர்கள் கவனமாயிருப்பார்கள். ஏனென்றால், 'அடி விழுந்தது' என்ற தகவல் வந்து சேர்ந்தாலே பூசைக்கான ஆயத்த வேலைகள் வீட்டில் ஆரம்பமாகிவிடும் என்பதால்!

இத்தகைய அணுகுமுறை எந்தளவிற்கு ஆரோக்கியமானது அல்லது எந்தளவிற்கு இத்தகைய நடைமுறைகள் நன்மை பயக்கக்கூடியவை என்பவை எல்லாம் இன்று விவாதத்திற்குரியவை. இவ்வாறான பூசைமுறை வழிநடத்தல்களை இன்றைய உளவியல் ஏற்றுக்கொள்வதுமில்லை. எனினும், இத்தகைய பூசைமுறை சார்ந்த வழிமுறைகள், சற்று எதிர்மறையாயினும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் நன்னெறியில் வளர்வதற்கு, முன்னேறுவதற்கு அனுகூலங்களாக இருந்துள்ளன என்பதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.

எனினும் முன்னைய காலங்களில் சில அதிபர்களின், ஆசிரியர்களின் கண்மூடித்தனமான தாக்குதல்களாக: கையில் அகப்படும் பொருளால் எடுத்து அடித்தல், மேலதிகாரிகளின் அல்லது வீட்டிலுள்ளவர்களின் மேலுள்ள கோபத்தை அகப்பட்ட மாணவனில் வெளிப்படுத்தல், காரணம் இல்லாமல் தொட்டதற்கும் பட்டதற்கும் அடித்தல் போன்றவற்றை இங்கு ஆதரிப்பதாக அர்த்தப்படுத்திக்கொள்ளக் கூடாது.

இன்றைய காலத்தில், இத்தகைய தாக்குதல்களை நடத்தினால் 'கம்பி எண்ணவேண்டிவரும்' அல்லது கடுமையான பதில் தாக்குதல்களுக்கு முகம்கொடுக்க வேண்டிவரும் என்பதால், இத்தகைய வழிநடத்தல் முறைகளுக்கு எந்த ஆசிரியரும் துணிவதில்லை.

**ஆசிரியர், அவர் யார்?**

ஆசிரியர் என்ற சொல் 'ஆசு', 'இரியர்' ஆகிய இரு சொற்களில் இருந்து வருகிறது. 'ஆசு' என்றால் குற்றம், 'இரியர்' என்றால் நீக்குபவர். ஆகவே, ஆசிரியர் என்றால் 'குற்றம் நீக்குபவர்' என்பது பொருளாகிறது. அதாவது அறியாமையை நீக்குபவர், அறிவின்மையைப் போக்குபவர் மட்டுமல்ல அறிவைப் புகட்டி அறிவொளி காட்டுபவர் என்றும் அர்த்தமாகிறது.

இக்காரணத்தினால்தான், 'ஆசிரியர்கள், அறியாமை இருள் அகற்றும் ஞான விளக்குகள்' என்பார் மெய்யியலாளர் சோக்கிரட்டிஸ். இதனால்தானே, 'எழுத்தறிவித்தவன் இறைவன்' என அறிவை ஊட்டுபவர்களை – ஆசான்களை தெய்வ நிலைக்கு உயர்த்திப் பெருமைப்படுத்தினார்கள் தமிழ் முன்னோர்கள்.

பார்த்தீர்களா? ஆசிரியர்கள் என்றால் சும்மாவா? புரிகிறதா ஆசிரியர்களின் மேன்மையும் பெருமையும் அவர்கள் தம் சிறப்பும்!

**ஆசிரியர்கள், துன்பமாகவும் தொந்தரவாகவும் மாறிவிட்டார்களா!**

ஆனால், ஆசிரியர்களை இன்றைய மாணவ சமுதாயம் துன்பமாகவும் தொந்தரவாகவும் நோக்குகிறது.

பாடம் கற்பிப்பதற்காக ஆசிரியர் வகுப்புக்குள் வந்தபோது ஒரு மாணவன் வாய்விட்டுச் சிரித்தான். அப்போது ஆசிரியர், "தம்பி, ஏன் சிரிக்கிறாய்?" எனக் காரணத்தை வினவினார். அவனோ, "பெரிதாகக் காரணம் ஒன்றும் இல்ல *சேர்!* நீங்கதானே சொன்னீங்க, துன்பம் வரும்பொழுது வாய்விட்டுச் சிரிக்கவேண்டும் என்று, அதனாலதான் நீங்க வரும்போது நான் சிரித்தேன்" என்றான் வலு நிதானமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னசெய்வது ஆசிரியர்களை துன்பமாகவும், தொந்தரவாகவும் பார்க்கத் தலைப்பட்டிருக்கிறது, இன்றைய வளர்ந்துவரும் இளம் தலைமுறை!

**பிரத்தியேகமாக அமைக்கப்படும் தண்ணீர் பந்திகள்!**

அக்காலத்தில் ஆசிரியர்கள் 'அரை அடித்தாலோ' அல்லது 'பாவித்தாலோ' மற்றவர்களுக்குத் தெரிந்துவிடும். அதனால், அவர்கள் அப்படி 'அரை அடிப்பது' மிக மிகக் குறைவு! எப்போதாவது, ஒருநாள், அதுவும் யாருக்கும் தெரியாமல் விசேஷ சந்தர்ப்பங்களில் 'பாவித்திருப்பார்கள்'!

ஆனால், இக்காலத்து இளைய தலைமுறையினர் அதிலும் குறிப்பாக மாணவர்கள் 'முழுசு' அடித்துவிட்டு மிக நேர்த்தியாக – நிதானமாகச் செல்கிறார்கள் என்பதை நினைக்கின்றபோது இத்தலைமுறை எவ்வளவு தூரத்திற்கு வளர்ந்திருக்கிறது என்பது புரியும்!

தற்போது பரவலாக, கொண்டாட்டங்களில் இவ்விளைய தலைமுறையினருக்கு என்று சொல்லி 'பிரத்தியேகமான தண்ணீர் பந்தி' (போத்தல் விவகாரத்தைக் குறிப்பிடுகிறேன்) அமைக்கப்படுவதாக அல்லது ஒதுக்கப் படுவதாகச் சொல்லுகிறார்கள் ஒருசில பெரியவர்கள்.

இளையோருக்கான பிரத்தியேகமாக அமைக்கப்படுகின்ற தண்ணீர் பந்தி இல்லாமல் கொண்டாட்டங்கள் இப்போது இளையவர்களுக்கென இடம்பெறுவதில்லை என்ற அளவிற்கு நிலைமை மாறியிருக்கிறது என்றால், மிகுதியை நீங்களே கணித்துக் கொள்ளுங்கள்!

**குருபக்தி**

நாற்பத்தி நான்கு ஆண்டுகள் ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் மகாதேவன் தன் ஆசிரியப் பணி அனுபவங்களை ஈழநாடு பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.



அக்கட்டுரையில் இன்றைய காலத்தில் குரு பக்தி எவ்வாறிருக்கிறது? என்பது பற்றி மகாதேவன் ஆசிரியர் குறிப்பிட்டதைக் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள் 1992 ஆவணித் திங்கள் 06இல் காரைக்கால் சிவன் கோயிலில் தன் சொற்பொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் குறிப்பிட்டிருக்கிறார். அதனை, கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் வார்த்தைகளிலேயே தருகிறேன்.

"நான் ஒரு சந்தியில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது மிதி வண்டியில் வந்து கொண்டிருந்த ஒருவர், கடாரென்று தன் வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு ஓடிவந்து என் காலில் விழுந்து வணங்கினார். யாரென்று தெரியவில்லை. தூக்கி நிறுத்திவிட்டு 'நீ யாரப்பா?' என்று கேட்டேன். அதற்கு அவன் 'சேர், நான் உங்களிடம் படித்தவன். அப்போது நான் மிகவும் குழப் படிகாரன். நீங்கள்தான் எனக்குப் புத்தி சொல்வீர்கள். நானோ கேட்பதில்லை. அதனால் என்னைத் துன்புறுத்தியாவது படிக்க வைத்தீர்கள். அதனாற்றான் இன்று நல்ல நிலையில் இருக்கிறேன். யாழ்ப்பாண மருத்துவமனையில் வைத்தியராக இருக்கிறேன்' என்றான். இது 1950 அளவில்.

பிறகு 1960 அளவில் அதே சந்தியில் என்னைக் கண்ட ஒருவர் மிதிவண்டியை விட்டுக் குதித்தார். தன்னை அறிமுகம் செய்தார். அவரும் எனது மாணவன்தான், ஆனால் காலில் விழவில்லை.

1970இல் இவ்வாறு நிகழ்ந்தது. ஒருவர் என்னை நோக்கி வந்தார். கையில் புகைத்த சிகரட்டை வீசிவிட்டு என்னிடம் வந்தவர் மிதிவண்டியில் இருந்தவாறே என்னுடன் பேசினார். அவரும் எனது மாணவனே.

1975இல் என்னிடம் நெருங்கிய மாணவன் புகைத்து வந்த சிகரட்டை முதுகிற்குப் பின்னால் மறைத்தவாறே என்னுடன் பேசினார். தலைக்கு மேலால் புகை போய்க்கொண்டிருந்தது.

1979இல் என்னைக் கண்ட எனது மாணவன் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டான். பிறகு 'சேர் நீங்கள் சுருட்டு பற்றுகிறனீங்கள், உங்களிடம் நெருப்புப்பெட்டி இருக்கும். ஒருக்கால் தருவீங்களோ?' என்றான்.

இவற்றையெல்லாம் குறிப்பிட்ட மகாதேவன் ஆசிரியர், 'நான் 1989ஆம் ஆண்டைச் சந்திக்க விரும்பவில்லை' எனக் கடைசியாகக் குறிப்பிடு கிறார்" எனக் குருபக்தி அதாவது ஆசிரியர் – மாணவர் உறவின் பரிணாம வளர்ச்சியை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் குறிப்பிடுகிறார்.

என்னசெய்வது? ஆசிரியரின் காலில் விழுந்து ஆசீர் வாங்குவதில் தொடங்கிய குருபக்தி ஆசிரியரின் கையில் கப்பைக் (Glass) கொடுத்து *சியஸ்* சொல்கின்ற அளவிற்கு பரிணாம வளர்ச்சி கண்டிருக்கிறது என்றால் குருபக்தி இனி வளர்வதற்கு இடம் எங்கிருக்கிறது?

**மூன்று வகையான மாணவர்கள்**

நன்னூல் சூத்திரம் மாணவர்களை மூன்று வகையாகப் பார்க்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்நிலை மாணவர்கள், அன்னப்பறவை அல்லது பசு போன்ற வர்கள். அன்னப்பறவை போன்று தெளிந்து, தெரிவுசெய்து உண்பவர்கள் அல்லது பசுவைப் போன்று உண்டதை மீண்டும் இரைமீட்டி அசைபோட்டு உண்பவர்கள். விளைவாக, முதல்தரமான பயனைக் கொடுப்பவர்கள்.

இடைநிலை மாணவர்கள், கிளியைப் போன்றவர்கள். சொல்வதையே மீண்டும் கிளிப்பிள்ளைபோல மீட்டுபவர்கள்.

கடைநிலை மாணவர்கள், ஓட்டைப்பானை போன்றவர்கள். பானையாகிய தலைக்குள்ளும் ஒன்றும் இருக்காது, தலைக்குள் ஒன்றும் இல்லையென்று ஏதும் அறிவுறுத்தினாலும் உள்ளே சென்று ஒன்றும் தங்காது. நன்னூல் சூத்திரத்தின் படி இன்றைய சூழலில் எவ்வகை மாணவர்கள் அதிகம் என்பதை இன்றைய இளம் மாணவ தலைமுறையினர்தான் தீர்மானிக்க வேண்டும்!

**மாணவர்கள் பற்றிய *மொடேன் அவுட்லுக்***

மேற்சொன்ன நன்னூல் சூத்திரத்தில் மிக ஆழமான உண்மை இருக்கிறது. எனினும், இவ்வணுகுமுறை ஒருவகையில் பழமை வாய்ந்த கண்ணோட்டம் என்பதால் புதிதாகச் சிந்திக்க வேண்டி இருக்கிறது. அவ்வாறா யின், இன்றைய சூழமைவில், மாணவர்களின் வளர்ச்சிப் படிநிலைகளை மேலும் மூன்று வகையாகப் பார்க்கலாம்போல் தோன்றுகிறது.

இது கொஞ்சம் *மொடேன் அவுட்லுக்தான்* (Modern Out-Look)! *இம்மொடேன் அவுட்லுக்கை* வாசித்துவிட்டு அறிவுகெட்டு மயங்கி விழுந்து விடாதீர்கள். எதற்கும் கீழ்வரும் பகுதியை வாசிக்கும்போது ஓர் ஆளைப் பக்கத்தில் வைத்திருப்பது நல்லதுபோல்படுகிறது.

வாசித்துவிட்டு, "தலை சுற்றுகிறது!", "*பிறசர்* கூடிற்றுது", "*சுகர்* நல்லா குறஞ்சிற்றுது", "கிறுதி வருகிறது" என்று மட்டும், இக்கட்டுரையை எழுதி யதற்காக கட்டுரை ஆசிரியரின் மீதோ, இக்கட்டுரையைப் பிரசுரித்ததற்காக பத்திரிகை ஆசிரியரின் மீதோ தயவுசெய்து பழிபோடாதீர்கள்!

இதுதான் அந்த *மொடேன் அவுட்லுக்!* இதனை மூன்று வகையாகப் பார்க்கலாம். கொஞ்சக் காலத்திற்கு முன்னர், மாணவர்கள் தூரத்தில் நின்றுகொண்டு ஆசிரியருடன் கதைப்பார்கள் அல்லது ஆசிரியரைக் கொஞ்சம் தூரத்தில் கண்டுவிட்டால் வேறு வழியால் செல்வார்கள்! இது முதல்வகை ஆகும்.

இது சரியானதா, தவறானதா? என நோக்குவதற்கப்பால், இவை யெல்லாம் மாணவர்கள் ஆசிரியரின் மேல் வைத்திருக்கும் மரியாதையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியிலும்தான் என்பதைச் சற்றுப் புரிந்துகொள்ள வேண்டும்.

இப்போது, அந்த இடைவெளிகள் எல்லாம் குறைக்கப்பட்டு, மாணவருக்கும் ஆசிரியருக்கும் இடையே நெருக்கம் ஏற்பட்டிருக்கிறது! எப்படி என்றால், அருகில் நின்று ஆசிரியரின் கையைப்பிடித்து – பகிடி அடித்துப் 'பைம்பல்' விட்டுக் கதைக்கும் அளவிற்கு மாணவர்கள் வளர்ந்திருக்கிறார்கள். ஆசிரியர்களால் என்ன செய்யமுடியும்? பாவம் அவர்கள், சகித்துக்கொள் கிறார்கள். *மொடேன் அவுட்லுக்கில்* இது இரண்டாம் வகையாகும்!

மூன்றாவது வகையானது, மாணவர்களைக் கண்டதும் ஆசிரியர் வேறுவழியால் செல்வது – 'தப்பினேன் பிழைத்தேன்' என ஓடிச் செல்லுகின்ற நிலையாகும்! இல்லையென்றால், "*சேர், பாட்டி* (Party) ஒன்று போடுவோமா?" அல்லது, "*சேர்*, வீட்டில *ஆன்ரி* எப்படி சுகமாக இருக்கிறாங்களா?" அல்லது, "கொஞ்ச நாளா, *ரியூசனுக்கு*, மகளக் காணோமே *சேர்*!" எனக் கேட்டுவிடுவார் களோ என நினைத்து மாணவர்களுடைய கண்ணில் இருந்து மறையவேண்டிய சூழல் உருவாகியிருக்கிறது இன்றைய ஆசிரியர்களுக்கு!

என்னசெய்வது, துஷ்டனைக் கண்டால் தூர விலகு என்கிறது ஆன்றோர் வாக்கு. இச்சூழ்நிலையில், வேறு தெரிவுகள் இல்லாத இடத்தில் தப்பியோடி இவர்களுடைய கண்ணிலிருந்து தலைமறைவாகுவதைவிட இவ்வாசிரியர்களால் என்னதான் செய்யமுடியும்?

**'இதுகள்' எவ்வாறு உருப்படும்!**

ஓர் ஆசிரியர் தன் வகுப்பு மாணவர்களுக்கு அறிவுரை கூறினார்: "பிள்ளைகளே! உங்களோடு முக்கியமான ஒரு அனுபவத்தை நான் பகிர்ந்து கொள்ள வேண்டும். அது என்னவென்றால், இதே பாடசாலையில் படிச்சி, இதே பாடசாலையில் பரீட்சை எழுதி, இப்ப, இதே பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றுகிறேன் என்றால் பாத்துக் கொள்ளுங்களேன்!" என்றாராம் பெருமையோடு.

அவர் கூறிமுடிந்ததும் மாணவன் ஒருவன், "*சேர்*, இந்தப் பாடசாலை யில் படிச்சா வேற இடத்தில் வேல தரமாட்டாங்க என்று, எங்கட அப்பாட்ட அப்பவே திரும்பத் திரும்ப சொன்ன *சேர்*, கேட்டாரா அவரு! இப்ப, உங்க நிலமதான் எங்களுக்கும்!" என்றானாம் மிக உறுதியாக!

ஓர் ஆசிரியர் அண்மையில் தற்கொலை செய்ய முயற்சித்ததாக ஏதோ ஒரு பத்திரிகையில் படித்த ஞாபகம் இருக்கிறது! அதற்கான காரணம் இப்போதுதான் புரிகிறது!

மன்னா, வைகாசி 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவனை இழந்தவர்களுக்கு வாழ்வாதாரம்



16

**'காக்கைக்குக் கனவிலும்...'**

மகனைப் பாடசாலை ஒன்றில் புதிதாகச் சேர்ப்பித்தார் தந்தை. பாடசாலையில் இருந்து திரும்பிய முதல் நாளே, "செக்ஸ் (Sex) என்றால் என்ன அப்பா?" எனக் கேட்டான்.

தந்தை யோசித்தார், "பதினாறு வயதில கேட்கிற கேள்வியை ஆறு வயதில் கேட்கிறான். யாரும் இதனைப் பற்றிச் சொல்லி இவனைக் கெடுக்கிறதுக்கு முன் நானே இதனைப் பற்றிச் சொல்லிவிடுவேன்!" என நினைத்தவர் ஆதிப் பெற்றோரான ஆதாம் ஏவாளோடு தொடங்கி, ஆண் பெண் உறவு, கணவன் மனைவி உறவு என விலாவாரியாக விளக்கித் தள்ளினார்.

கொஞ்ச நேரத்திற்குள் குழப்பமடைந்த சிறுவன் அழாக் குறையாக, "நீங்க சொன்ன இவ்வளத்தையும் எப்பிடியப்பா இவ்வளவு சின்ன இடத்தில் எழுதிறது?" எனக் கையிலிருந்த அப்பிளிகேசன் போம் ஒன்றைக் காண்பித்தான். அதில் Name, Age இவற்றுக்குப் பின்னால் Sex எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

**சமூகத்தை வேரறுக்கும் தீமைகள்**

2013 கார்த்திகைத் திங்கள் நடத்தப்பட்ட வடமாகாண சபைத் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட வடமாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் யாழ்ப்பாணம் வரணியில் மாசித் திங்கள் 02ஆம் நாள் பொது நிகழ்வு ஒன்றில் பங்குகொண்டு உரையாற்றியபோது இரு சமூகத் தீமைகளைக் குறிப்பாகத் தொட்டுக் காட்டியிருக்கிறார்.

கணவனை இழந்த பெண்கள் விபசாரத்திற்குத் தூண்டப் படுவது, மற்றையது பாடசாலை மாணவர்களிடையே போதைப்பொருள் பழக்கத்தை ஏற்படுத்துவது போன்றவைகளைச் சிலர் மறைமுகமாக ஊக்கப்படுத்தி வருவதாகச் சொல்லியிருக்கிறார். நமது மண்ணில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை சந்தித்திராத மிகப் பெரும் சவால்களாக இவற்றை இன்று நோக்க வேண்டி இருக்கிறது.

இத்தீமைகளை வெற்றிகொள்ள சமுதாய மட்டத்தில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி இவற்றைத் தடுத்து நிறுத்த உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனில், நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் சமூகத்தை வேரறுக்கும் மிகப்பெரும் தீமைகளாக இவை மாறிவிடுவதை யாராலும் எதனாலும் தடுக்க முடியாது போய்விடும்.

**பெண்ணின் பெருமை**

"சைவத்தில் சக்தியாக பார்வதி, பிரம்மனின் சக்தியாக சரஸ்வதி, வைணவத்தில் சக்தியாக லட்சுமி, கிறிஸ்தவத்தில் பெண்ணின் பெருமையாக மகிமையான மரியாள், குரானில் பெண்களுக்கு சமத்துவ உரிமை" எனப் பெண்ணின் சிறப்பை சமயங்களில் இருந்து எடுத்துக்காட்டுகிறார் வெப்பமுடன் என்ற நூலின் ஆசிரியர் இயேசு சபை அருள்பணியாளர் ஜெரி.

புரட்சிக்கவி பாரதி, "பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா! பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா! தண்மை இன்பம்நற் புண்ணியஞ் சேர்ந்தன தாயின் பேரும் ஸதியென்ற நாமமும்" என்றும், "பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி பேணி வளர்க்கும் ஈசன் மண்ணுக்குள் சில மூடர் - நல்ல மாதர் அறிவைக் கெடுத்தார். கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி காட்சி கெடுத்திடலாமோ பெண்கள் அறிவை வளர்த்தால் - இல்லம் பேதமை அற்றிடும் காணீர்" எனவும் பாடிப் பெண்மையைப் பெருமைப்படுத்தினார்.

தமிழ் மணம் கமழ, "மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா பங்கயக் கைந்நலம் பார்தலவோ - இந்தப் பாரினில் அறங்கள் வளருதம்மா" என பெண்களாய் பிறப்பதன் பெருமையை கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை பாடினார்.

**பெண் விளம்பரப் பொருளா?**

பெண்மையை - பெண்களைத் தெய்வ நிலையில் வைத்துக் கொண்டாடிப் பெருமை கொண்ட சமுதாயம் இன்று எவ்வாறு பெண் மையை - பெண்களை நோக்குகிறது என்பது ஆழ்ந்த சிந்தனைக் குரியது.

பெண் இன்றைய வர்த்தக உலகத்தில் ஒரு விளம்பரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொருளாக - உடல் இன்பத்தை அனுபவிக்கும் உயிராகப் பார்க்கப் படுவது மிகவும் வேதனைக்குரியது. துர்ரதிஷ்டவசமானது.

இந்நிலையினை, "பெண் ஓர் ஊதுவத்தி! அவளின் நேற்று - எரிந்து விட்டது. இன்று - எரிந்து கொண்டிருக்கிறது. நாளை - கறுப்பாக இருக்கிறது" என இக்காலக் கவிஞன் ஒருவன் எழுதுகிறான்.

"தங்கமே! என் தங்கமே என்று தாயும் தந்தையும் கொஞ்சியதால் தானோ அந்த உயிருள்ள தங்கங்கள் தங்க நகை கேட்டும் தண்டிக்கப்படுகிறார்கள்" என நியாயமான கேள்வி எழுப்புகிறார் கவிஞர் மு.மேத்தா.

"பெண் தன்னை விற்றுக்கொண்டால் விபச்சாரமாம். ஆண் தன்னை விற்றுக்கொண்டால் திருமணமாம்" என இன்றைய ஆணாதிக்கச் சிந்தனையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார் கவிக்கோ அப்துள் ரகுமான்.

**தாலாட்டின் பரிணாம வளர்ச்சி!**

பெண்களின் வாழ்க்கைமுறையை இன்றைய உலகப் போக்கு நிறையவே மாற்றியிருக்கிறது. இயல்பான சூழ்நிலையில் இருந்து எத்தகைய நெருக்கீடுகளுக்கு அவர்கள் உள்ளாகி வாழுகிறார்கள் என்பதனைத் தாலாட்டுப் பாடல் அடைந்த பரிணாம வளர்ச்சியின் ஊடாக மிகத் துல்லியமாகப் புரிந்துகொள்ளலாம்போல் தோன்றியது.

எனவேதான், தாலாட்டுப் பாடல்களை வைத்துக்கொண்டே காலமாற்றத்தினைக் கணித்துக்கொள்ள ஒருவகைப் பரீட்சார்த்த முயற்சி செய்யப்படுகிறது.

*1980களுக்கு முன் தாலாட்டு இவ்வாறாகப் பாடப்பட்டது:*

"ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ
ஆரடிச்சோ நீயழுதாய்? அரிய கண்ணால் நீர்வழிய?
அடிச்சாரைச் சொல்லியழு ஆக்கினைகள் பண்ணி
வைப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமி அடிச்சாளோ மல்லிகைப்பூச் செண்டாலே?
பாட்டி அடிச்சாளோ பால்வார்க்குஞ் சங்காலே?
ஆச்சி அடிச்சாளோ அமுதூட்டுங் கையாலே?
அண்ணா அடிச்சானோ அரைஞாண் கயிற்றாலே?
ஆண்பனையின் நுங்கே! ஆணில்கோதா மாம்பழமே!"
கூப்பிட்டு நான் கேட்பேன் குஞ்சரமே கண்வளராய்!"

இவ்வாறு தாயினால் குழந்தை நித்திரையாகும்போது, அழும்போது, குளிப்பாட்டும்போது எனப் பல சந்தர்ப்பங்களில் பாடப்பட்டது.

1990களில் நம் மண்ணில் பாடப்பட்ட தாலாட்டு பின்வருமாறு:

"கருவறையின் வேலிக்குள்ளிருந்து
கம்பிவேலிக்குள் கண்மலர்ந்த
கண்மணியே!

மனையொன்று தானின்றி
மாதா இவள் தவிக்கையிலே
மழை வெள்ளக் கூட்டமது
மடைதிறந்து பாய்கையிலே
நலம்புரி நிலையமெனும்
அனல்சூழ் அரங்கத்திலே
வந்துபிறந்தாயோ - வைரமணியே!

இரு கைகள் இல்லையடா
என்னவனே உனைத்தூக்க
இடதுகை இழந்தேனடா
எறிகணை எனைத்தாக்க
கருதந்த உனதப்பா
காணாமல் போனதெங்கே?
ஒருதுணை தானின்றி
உயிர்வாழும் தாய் இங்கே?

துக்கமும் கண்ணீரும் தவிர
சொல்லிடச் சொந்தமில்லை
சுந்தரம் உனக்குப் பாலூட்ட
என்னிடம் மார்பு இல்லை.
போர்க்காலம் தானதிலே
மார்பிழந்த மங்கையருள்
மாதா இவளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புட்டிப்பால் ஊட்டுகிறேன்,
புதுமலரே சுவைத்திடடா.
புதுக்காலம் பூக்குமடா,
அதுவரை பொறுத்திரடா!"

எனப் புரட்சி என்பவர் போர்க்காலத் தாலாட்டாக அமைத்திருக்கிறார்.

2000ஆம் ஆண்டுகளில் ஆரம்பித்து, இற்றைவரை பாடப்பட வேண்டிய நவீன தாலாட்டுக்கு இப்போது வார்த்தை வடிவம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. சுவைத்துத்தான் பாருங்களேன்!

கண்ணே! - என்
காவாலிப் பயலே (மகளே)!
காதுகிளியக் கத்தாதேயடா(டி)!

நீ முளிக்கும் முன்பே
உன்னம்மா
வெளிக்கிட்டு வேலைக்கு ஓடிட்டா!
என்னால்
என்ன செய்ய முடியும்?

அம்மாவைக் கேட்டளாதே
அவ அஞ்சு (ஐந்து) மணிக்குத்தான்!
அப்பாவைக் கேட்டளாதே!
அவர் அவவுக்குப் பிறகுதான்!
அண்ணா, அக்கா, தம்பி தங்கை
இருந்தால்தானே அவர்களை நீ கேட்க?
உன்னை
ஒன்றை
ஒன்றேயொன்றைப் பெற்றுவிட்டே
ஒப்பாரி வைக்கிறாள் உன்னாத்தை!

கண்ணே!
கத்திக் கத்திக்
களைத்துப் போகாதேயடா(டி)!
காலையில்
கரைத்து வைத்த பால் இருக்கிறது!
உனக்கு ஆக்கிய சாப்பாடு
அப்படியே *பிறிஜில்* இருக்கிறது!

அதற்கிடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கக்கா' செய்திடாதே கண்ணே!
இல்லையென்றால்
பம்பஸ்சோடுதான் படுத்துறங்குவாய்!
அதனையும் மீறினால்
உன்னம்மா வந்துதான்
அதனை அவிட்டெறிவாள்.

கண்ணே!
கத்திக் கத்திக்
களைத்துப்போகாதேயடா(டி)!
கத்திய களைப்பிலேனும்
கண்ணுறங்கடா(டி) என் செல்வமே!

தாலாட்டுப் பாடல் அடைந்த பரிணாம வளர்ச்சி வீட்டின் விளக்காக இருந்த - இருக்கிற தாய்மாரின் வாழ்க்கைமுறையில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கிறது என்பதும் எத்தனை எத்தனை புதிய சவால்களுக்கு அவர்கள் முகம் கொடுக்கவேண்டி உள்ளது என்பதும் ஓரளவுக்கேனும் புரியும்.

**அவர்கள் பார்வையில் இவர்கள்?**

1987ஆம் ஆண்டு மார்கழித்திங்களில் பெண்கள் ஆய்வு வட்டத்தினால் வெளியிடப்பட்ட 'சொல்லாத சேதிகள்' என்ற கவிதை நூலில் ஈழத்தில் உள்ள 12 பெண் கவிஞர்களால் 25 கவிதைகள் எழுதப்பட்டிருக்கின்றன.

அதில் அ.சங்கரியால் எழுதப்பட்ட முதல் கவிதையில் 'அவர்கள் பார்வையில்' என்ற தலைப்பில் இன்றைய உலகில் பெண் எவ்வாறு பார்க்கப்படுகிறாள் என்பதைக் கணித்துக்கொள்ளலாம்.

"அவர்கள் பார்வையில்
எனக்கு
முகமில்லை
இதயமில்லை
ஆத்மாவுமில்லை.

அவர்கள் பார்வையில்
இரண்டு மார்புகள்
நீண்ட கூந்தல்
சிறிய இடை
பருத்த தொடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளே உள்ளன.

சமையல் செய்தல்
படுக்கை விரித்தல்
குழந்தை பெறுதல்
பணிந்து நடத்தல்
இவையே எனது கடமைகள்.

கற்புப் பற்றியும்
மழை பெய்யெனப் பெய்வது பற்றியும்
கதைக்கு
அவர்கள்
எப்போதும் எனது உடலையே
நோக்குவர்.

கணவன் தொடக்கம் கடைக்காரன் வரை
இதுவே வழக்கம்."

**பெண்களுக்கெதிரான வன்முறைகள்**

பாரதி கண்ட புதுமைப்பெண்ணுக்கு நூற்றாண்டு விழாவும் கொண்டாடியாயிற்று! ஆயினும் பெண்களுக்கெதிரான துஷ்பிரயோகங்களுக்கும் வன்முறைகளுக்கும் உள்நாட்டு நிலைமைகளைப் பொறுத்தவரை வயது ஏறிக்கொண்டு போகிறதே தவிர பெண்களின் மாண்பும் மரியாதையும் உரிமைகளும் மதிக்கப்படுகிறது என்பது பெரும் கேள்வியாகவே தொக்கி நிற்கிறது!

ஆம், 'பெண்களுக்கெதிரான வன்முறைகள் நிறுத்தப்படவேண்டும்' எனச் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. எனினும் எக்காலத்தையும்விட போர்க் காலத்திலும் போரின் பின்னான காலத்திலும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டது - விடப்படுகின்றன.

இல்லையென்றால் பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஏன் எப்போதும் கண்டிராத தொகையாகத் தொடர்ந்து இடம்பெற வேண்டும்?

**போரின்போதும் போரின் பின்னரும் பெண்கள் சந்திக்கும் சவால்கள்**

2010ஆம் ஆண்டின் இறுதியில் போரினால் வடகிழக்கில் 89,000 கணவனை இழந்த பெண்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் வடக்கில் 40,000 கிழக்கில் 49,000 பேர் கணவனை இழந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களாவர்.

கணவனை இழந்த இப்பெண்களில் 12,000 பேர் 40 வயதுக்குக் குறைந்தவர்கள். மேலும், மேற்சொன்ன தொகைகளை வைத்துக் கொண்டு போரினால் இவ்வளவு தொகைப் பெண்கள்தான் தங்கள் கணவர்களை இழந்திருக்கிறார்கள் என்று இவ்வெண்ணிக்கையை மட்டுப்படுத்திவிட முடியாது.

ஏனெனில் அரசியல் காரணங்களின் நிமித்தம் கைதிகளாகவோ அல்லது தடுப்புக்காவலிலோ இவர்கள் தடுத்து வைக்கப்பட்டு இருக்கலாம் என்று எதிர்பார்த்தவண்ணம் காத்திருப்பவர்கள் இன்னும் ஒரு பெரும் தொகையினராக இருக்கிறார்கள் என்பதும் இங்கு கோடிட்டுக்காட்டத்தக்கது.

**பெண்களின் மாண்பு மதிக்கப்படவேண்டும்**

2013ஆம் ஆண்டு கார்த்திகைத்திங்கள் 22ஆம் நாள் மட்டக் களப்பு மாவட்டத்தில் கணவனை இழந்த பெண்களுக்கான மாநாடு ஒன்று அரச சார்பற்ற நிறுவனமான விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் நடத்தப்பட்டிருக்கிறது.

வடகிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட கணவனை இழந்த பெண்களை ஒன்றுகூட்டி யுத்தத்திற்குப் பின்னர் அவர்கள் வாழ்க்கை பற்றியும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றியும் கலந்துரையாடியுள்ளனர்.

அக்கலந்துரையாடலில், முதலில், பெண்கள் - தாய்மார் - மனைவிமார் தாங்கள் சமுதாயத்தில் சமத்துவமின்றி நடத்தப்படுகின்றமையையும் இளக்காரமாகக் கருதப்படுகின்றமையையும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அடுத்து, வெவ்வேறு பதிவுகளுக்காக ஆண் அலுவலர்கள் தங்கள் இல்லங்களைத் தரிசிப்பதும், நிதி நிறுவனங்களிடம் இருந்து பெறும் கடனைக் கட்ட முடியாதபோது தாம் பாலியல் உறவுக்கு நிர்ப்பந்திக்கப்படுவதையும் கோடிட்டுக் காட்டியுள்ளனர்.

மேலும், பிள்ளைகளை வளர்த்தெடுப்பதில் பொருளாதார நெருக்கடிகள், மற்றும் பெண் பிள்ளைகளைப் பாதுகாப்பதில் எதிர்கொள்ளும் சிரமங்கள் ஆகியவை மேற்சொன்ன மாநாட்டில் வெளிக்கிளம்பிய இன்றைய பெண்கள் சந்திக்கும் சவால்களில் சிலவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வாழ்வாதாரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

மூன்று தசாப்த காலமாகப் பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காவுகொண்ட கொடுமையான ஓர் உள்நாட்டு ஆயுதப் போர் வெளிநாடுகளின் தலையீடுகளுடன் கொடூரமான முடிவைச் சந்தித்து ஐந்தாண்டுகள் நிறைவுற்றிருக்கிறது. இப்போராட்டத்தில் பெண்கள் மிகவும் மோசமான பாதிப்புக்களைச் சந்தித்தவர்கள் ஆவர்.

எனவே, பெண்களின் மாண்பும் உரிமைகளும் மதிக்கப்பட தொடர் விழிப்புணர்வுகளைச் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் சென்று சேரும்படி ஏற்படுத்தல் வேண்டும்.

பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறைகளும் துஷ்பிரயோகங்களும் நிறுத்தப்பட செயல்திட்டங்கள் உருவாக்கப்படல், பாதிப்புற்ற பெண்களுக்கான ஆற்றுப்படுத்தல் திட்டங்கள் ஊக்குவிக்கப்படல், ஆடம்பர கோயில் கோபுரங்களையும் ஆலய முகப்புகளையும் கட்டி உயர்த்துவதில் கோடிப் பணத்தைக் கொட்டாமல் கணவனை இழந்த பெண்களுக்கு உறுதியான வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதற்கு - மேம்படுத்துவதற்கு தொழிலகங்களை நிறுவுதல், சுயதொழில் முயற்சிகளை ஊக்குவித்தல் போன்றவற்றை சமய - சமூக நிறுவனங்கள் முன்னெடுத்தல், கணவனை இழந்த இளவயதுப் பெண்கள் மறுவாழ்வு பெறக்கூடிய நிலைகளை உருவாக்குதல், அவர்கள் பிள்ளைகளின் கல்விக்கு உதவுதல் போன்ற நற்திட்டங்களை முன்மொழியவும் செயற்படுத்தவும் சமய - சமூக - அரசியல் தலைவர்கள் முன்வர வேண்டும்.

*மன்னா, ஆனி 2014*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறைவாக்கினன் மனம் வேண்டும்

## 17

**வெளியில் இருந்து ஆதரவு!**

"என்னடி, அரசியல்வாதியைக் காதலிப்பதாகச் சொன்னாய். அப்ப, எப்ப திருமணம்?" எனக் கேட்ட நண்பிக்கு அவள், " 'நம்மட திருமணத்திற்கு உங்கட வீட்டில எல்லாருமே பெரும் எதிர்ப்புக் காட்றதால, நீ அவங்க சொல்லுற மாதிரியே அவங்க விரும்பிற இடத்தில திருமணத்தச் செய்! நான் வெளியில இருந்து ஆதரவு தாறன்' என்கிறாண்டி அந்தப் பாவிப் பயல்!" எனப் பதில் நிறுத்தினாள்.

நம் நாட்டின் எத்தனையோ சோகங்களுக்கும், சொல்லொணாத் துன்பங்களுக்கும், அழிவுகளுக்கும், பிரிவினைகளுக்கும் பிரதான காரணமானவர்கள் அரசியல்வாதிகள்தான். நாட்டு நலனையும், மக்களின் நல்வாழ்வினையும் முன்வைத்துச் செயற்பட வேண்டியவர்கள் தங்களின் வருவாயையும், செல்வாக்கையும் வளர்த்துக் கொள்வதில்தான் கருத்தாய் இருக்கிறார்கள்.

இவ்விடயத்தைக் குறிப்பிடும்போது, "அரசியலில் 'நாணய'த்தை இழந்தால்தான் குடும்பத்திற்கு 'நாணய'த்தைச் சேர்க்கலாம். ஒரே வார்த்தையில் இரு பொருள் வைத்தது எவ்வளவு சுகமாக இருக்கிறது பார்த்தீர்களா!" என்ற கவியரசு கண்ணதாசனின் கூற்று சிந்திக்கத் தக்கது.

**அரசியல் பிச்சைக்காரர்கள்**

தேர்தல் காலங்களில்தான் பிச்சைக்காரர்கள் அதிகமாய் இருக்கிறார்கள். பொருளாதாரப் பிச்சைக்காரர்களோடு அரசியல் பிச்சைக்காரர்களும் வாக்குப்பிச்சை கேட்டு வருவதுதான் அதற்குக் காரணம். தேர்தல் காலங்களில், 'நாங்கள் உங்கள் நண்பர்கள்', 'நாங்கள் உங்கள் தோழர்கள்', 'நாங்கள் உங்கள் உறவினர்கள்', 'நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை நம்பலாம்' என்றெல்லாம் உள்ளத்தையும், உணர்வுகளையும் தொட்டுச் சொந்தம் கொண்டாடுகிறார்கள். இந்நடிகர்களுக்குப் பிற்பாட்டுக்காரர்களும் நிறையவே இருக்கிறார்கள்.

தேர்தல் காலங்களில் வீடுவீடாக வருகிறார்கள், வீதி வீதியாகச் செல்கிறார்கள், உதவி ஒத்தாசை புரிகிறார்கள், பிரச்சினைகளைக் கேட்கிறார்கள், துப்பரவு சிரமதானப் பணிகளைச் செய்கிறார்கள், தங்களைச் சார்ந்த ஒருசிலருக்கு வேலை வாய்ப்பை வழங்குகிறார்கள், எதிர்காலத் திட்டங்கள் போடுகிறார்கள், வாக்குறுதிகளைக் கொடுக்கிறார்கள், தேர்தல் முடிந்ததும் இவர்களின் அறிக்கைகள், நேர்காணல்கள் மட்டும் அவ்வப்போது ஊடகங்களில் வெளியாகின்றன. இவற்றோடு தமக்கு வாக்குச் சேர்த்த ஒருசில இடங்களில் அபிவிருத்திப் பணிகளைச் செய்கிறார்கள்!

அத்துடன், வெளிநாட்டு தூதரகங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் செய்யும் வேலைத் திட்டங்களின் முடிவில் திறப்பு விழாக்களுக்குத் தாங்களும் வந்து நின்று தங்களுடைய தயவில்தான் எல்லாம் நடக்கிறது என்பதுபோல ஒரு 'குறும்படம்' காட்டிவிட்டுச் சென்று விடுகிறார்கள்.

இதனைக் குறிப்பிடுகின்றபோது, "வந்தாக போனாக வாசலுல நின்னாக, வாக்குறுதி மந்திரத்தை வாய்கிழியச் சொன்னாக, வாய்கிழியச் சொல்லிவிட்டு வாக்குகளக் கேட்டாக, வாக்குகள வாங்கிப்புட்டு வந்தவழி போனாக, போனவுகள காணலியே போன இடம் தெரியலியே!" என்ற சு.பாண்டியனின் வரிகள் நினைவுக்கு வருகின்றன.

**சொற்போர் அரசியல்**

"தனக்கு ஒன்றும் தெரியாவிட்டாலும் எல்லாம் தெரிந்தவர் போல் நடிப்பவன்தான் அரசியல்வாதி. வாக்காளர்கள் முட்டாள்களாக இருந்தால் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சட்டசபைக்குச் செல்பவர்கள் அயோக்கியர்களாகத்தான் இருப்பார்கள். அரசியல் என்பது அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம்" என அரசியல் வாதிகளைக் காரசாரமாக விமர்சிக்கிறார் அறிஞர் பேர்ணாட்ஷா. இவ்வறிஞரின் வரைவிலக்கணத்திற்கு உட்பட்டவர்கள் மேற்கூறப்பட்ட இருதரத்தாரிலும் இன்னும் நிறையவே இருக்கத்தான் செய்கிறார்கள்.

இன்று, மாறி மாறிச் சொற்போர் புரிவதிலும், குற்றம் சுமத்துவதிலும் நம் அரசியல்வாதிகளின் காலங்கள் போய்விடுகின்றன. இவ்வரசியல்வாதிகள் தங்களின் சுயநல நோக்குகளை அடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது சமயத் தலைவர்களைப் பயன்படுத்தி ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்களாக வலம் வருகின்றார்கள்.

**அன்றைய அரசர்களின் நல்லாட்சிக்குக் காரணம்**

அன்று, அரசர்கள் நல்லாட்சி செய்யப் புலவர்கள் முக்கிய பங்காற்றி இருக்கிறார்கள் என்பது வரலாறு. அரசர்களின் அவையில் அரச பிரமுகர்கள், சேனாதிபதிகள், மந்திரிமார்கள், சேவகர்கள் போன்றவர்களுடன் புலவர்கள் முக்கிய இடம் வகித்தார்கள்.

அயல்நாட்டு அரசர்களுடன் சமாதானமாய் வாழ்வது, சமாதானத்தூது செல்வது, மக்களை நீதி நெறியில் வழிநடத்துவது பற்றி அரசர்களுக்கு ஆக்கபூர்வமான அறிவுரைகளையும், ஆலோசனைகளையும், வழிமுறைகளையும் சொல்லிக் கொடுத்தார்கள்.

இதனைத் தமிழ் மரபிலும், விவிலிய மரபிலும் அவதானிக்கலாம். கடவுள் நம்பிக்கை கொண்ட அரசர்கள், ஏன் இறை நம்பிக்கை இல்லாத அரசர்கள்கூட இறைவாக்கினர்களின் ஆலோசனைகளைக் கேட்டு அவற்றை மதித்து, ஏற்றுச் செயற்படுத்தினார்கள். அதேவேளை, அரசர்களுக்கு இவர்கள் சவாலாகவும் விளங்கினார்கள். பல சந்தர்ப்பங்களில் நீதியை நிலைநாட்ட, அரசர்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கும் ஆளானார்கள்.

எனினும் தங்களின் கடமையில் - பொறுப்பில் - அழைப்பில் இருந்து சற்றும் விலகாமல் இப்புலவர்களும், இறைவாக்கினர்களும் தம் அறிவுறுத்தல் பணியை - இறைவாக்குப் பணியை பல சவால்களுக்கு முகம் கொடுத்து, ஆற்றி வந்திருக்கிறார்கள் என்பதை வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன.

**ஏனோ நித்திய மௌனம்?**

ஆனால், இன்று நிலைமை வேறு விதமாக உள்ளது. சமயத் தலைவர்கள், அரசியல்வாதிகளின் பிடிக்குள் அல்லது அவர்களின் ஆளுகைக்குள் அல்லது அவர்களின் முற்றுகைக்குள் அகப்பட்டுக் கொண்டார்கள் போலத்தான் தோன்றுகிறது!

தாமாக, பாரபட்சமின்றி, சுதந்திரமாக, துணிவாகத் தம் கருத்துக்களைக் கூற முடியாத ஊமைகளாகக் கைகட்டி, வாய்பொத்தி நிற்கிறார்கள் (ஒருசிலரைத் தவிர — அவர்களுக்குத் தலைவணங்குகிறோம்). இதனால் உண்மைகளை உரத்து, உரைக்க முடியாமல் மதில் மேல் பூனைபோல் தங்களின் நிலைப்பாடுகளையும், இராஜதந்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திப்புக்களையும், ஊடகவியலாளர்களுடனான நேர்காணல்களையும் வைத்துக்கொள்கிறார்கள் அல்லது நித்திய மௌனம் காக்கிறார்கள்.

ஏன் இந்த மௌனம் என விளங்க முடியாதிருக்கிறது? இதுவரை காத்த மௌனத்தால் எத்தனை தீமைகள் தடுத்து நிறுத்தப்படாமல் இதுவரை காலமும் அரங்கேறி இருக்கின்றன?

**பாரபட்சமற்ற பக்கச்சார்பற்ற நீதி விசாரணை வேண்டும்**

இந்நாட்களில் உலக நாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் குறிப்பாகச் சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்றன இலங்கையில் 2009ஆம் ஆண்டு நடந்த இறுதிக்கட்டப் போரினைப் பற்றிய பாரபட்சமற்ற, பக்கச்சார்பற்ற நீதி விசாரணை வேண்டும் என மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுத்த வண்ணமுள்ளன.

இத்தருணத்திலாவது, வன்னிப் பிரதேசத்தின் சனத்தொகையில் இவ்வளவு வீதமானவர்கள் அல்லது இவ்வளவு எண்ணிக்கையான கத்தோலிக்கர்கள் 2008ஆம் ஆண்டில் அங்கு வாழ்ந்திருக்கிறார்கள்.

2008, 2009ஆம் ஆண்டுகளில் நடந்த போரில் ஆகக்குறைந்தது இவ்வளவு தொகையான வன்னி மக்களை அல்லது கத்தோலிக்கச் சகோதரங்களையும், காணாமல்போன குருவையும் நாம் இழந்திருக் கிறோம் என ஏன், வெளி உலகிற்கு உரத்து உரைக்க முடியாது?

நம்மிடம்தானே பதிவுகள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. நமது திருச்சபைதானே கையும் கணக்குமாய் இருக்கும் திருச்சபை! அதாவது பிறப்பு, திருமுழுக்கு, முதல்நன்மை, உறுதிப்பூசுதல், திருமணம் எனப் பதிவுகளோடு இருக்கும் திருச்சபை. அநேகமாக பதிவுப் புத்தகங்கள் அழிந்திருக்கலாம். அதனால் என்ன? புத்தகப் பதிவுகள்தானே அழிந்தன, நினைவுப் பதிவுகள் எம்மோடுதானே இருக்கின்றன!

பொறுப்புவாய்ந்த சமயத் தலைவர்கள் இவ்விடயத்தில் மௌனம் கலைத்து தங்கள் மனச்சான்றுக்காவது செவி கொடுப் பார்களா?

மண்ணோடு மண்ணாய் மடிந்து போன ஆயிரமாயிரம் உறவுகளுக்கும், இருக்க இல்லிடம் இல்லாமல் இன்றும் ஏதிலிகளாய், நடைப்பிணங்களாய்த் திரியும் சகோதரர்களுக்கும் நீதி கிடைக்க இவர்கள் இறைவாக்கினர் ஆவார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போர்க்குணம் தெரியாமல் போர்த்திக்கொண்டு வருகின்றார்களோ?**

நம் நாட்டுத் தலைவர்கள் போர்க் காலங்களில் போர்க் குணத்தோடும், போர் முகத்தோடும் செயற்பட்டவர்கள் இப்போது அதே போர் முகத்தோடும், போர்க் குணத்தோடும் வெளியே வர முடியாத காரணத்தினால் போர்த்திக் கொண்டு வெவ்வேறு வடிவங்களில், வித்தியாசமான உருவங்களில் வருகிறார்கள். இதுதான், 'மர்ம மனிதன்' – 'கிறீஸ் மனிதன்' விவகாரம் என விளங்கிக் கொள்ளத் தோன்றுகிறது.

மக்களைக் கதிகலங்கச் செய்கின்ற, இது போன்ற பிரச்சினைகள் பற்றியே குரல் எழுப்புவதற்கும்கூட திராணி இல்லாத நம் தலைவர்கள் இருக்கிறார்கள் (மீண்டும் ஒருசிலருக்குத் தலை வணங்குகிறோம்) என்பதை நினைக்கிறபோது எம்மையே நாம் பார்த்துப் பரிதாபப்பட வேண்டி இருக்கிறது.

**'நெற்றிக்கண் திறப்பினும்...'**

தமிழர் வரலாற்றில், மாரி போல் வாரி வழங்கிய பாரி மன்னனின் வளர்ச்சி கண்டு சகிக்க முடியாத சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் அறநெறி தவறிப் பாரியுடன் போரிட்டனர்.

அவர்களின் நெறி பிறழ்ந்த, வஞ்சகச் செயலைப் புலவர் பெருமான் கபிலர் சுட்டிக்காட்டி அவர்களின் மனச்சாட்சியைச் சுட்டெரித்தார். இந்த வீரம் மிக்க நல்லறிவு புகட்டும் மரபில், "நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே" என்றார் நக்கீரர்.

இறைவாக்கினன் நாத்தான், "நீயே அம்மனிதன்" (2சாமுவேல்12:5) எனத் தாவீது அரசனைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றினார். "விரியன் பாம்புக் குட்டிகளே" என யூத மத, சமூகத் தலைவர்களான பரிசேயரையும், சதுசேயரையும் எச்சரிக்கிறார் திருமுழுக்கு யோவான் (மத்தேயு3:7). "அந்தக் குள்ளநரியிடம் போய்ச் சொல்லுங்கள்" என ஏரோதுவுக்கு (லூக்கா13:32) அழைப்பாணை அனுப்புகிறார் இயேசு. இத்தகைய 'இறைவாக்கினன் மனம்' நம் சமய, சமூக, அரசியல் தலைவர்களுக்கு உண்டாகுமா?

*மன்னா, ஐப்பசி, 2011*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உரிமைகளுக்காகப் பாடுபடுங்கள்

18

**யார் யாரோ விளையாட நாங்கள் பந்துகளானோமா?**

அரசியல் பற்றிக் குறிப்பிடுகின்றபோது, "ஒன்றின்மேல் ஒன்றைக் குறிபார்த்து எறிந்து குண்டு விளையாடினோம், கோலி விளையாடினோம், இன்று எவரெவரோ வந்து எறிந்து விளையாட, நாமே குண்டுகளானோம்" என்பார் கவிஞர் மு.மேத்தா.

நான்கு குடும்பப் பெண்கள் தங்கள் கணவன்மார்களைப் பற்றிப் பேசிக்கொண்டார்கள். "என்ர புருசன் *கொண்டக்ரரடி*. எப்ப பாத்தாலும் 'வாசல்ல நிக்காத உள்ள போ, வாசல்ல நிக்காத உள்ள போ,' என்று தொல்லைப் படுத்திறாரடி" என்றாள் ஒருத்தி. பதிலுக்கு மற்றவள், "அது பறவாயில்ல. நான் ஒரு வாத்தியாரக் கட்டிகிண்டு படுற பாடு! 'வீட்டு வேல செய்யாட்டி கதிரையில ஏத்தி விடுவன்' எண்டு கஸ்ரப்படுத்திறாரடி" எனக் கூறி முடிப்பதற்குள் அடுத்தவள், "என்ர புருசன் *றவிக்* பொலிஸ்காரனடி. அடிக்கடி கை நீட்டுவாரு. அந்த நேரத்தில எல்லாம் ஐம்பது ரூபாய கைக்குள்ள வைச்சிற்றா நீட்டுன கைய மடக்கீருவாரு" என்றாள்.

நான்காமவள், "நீங்க எல்லா தப்பீற்றீங்கடி! நான் முடிச்சிருக்கிறது ஓர் அரசியல்வாதியை. நான் கற்பமாயிருக்கிறன் எண்டு சொல்ல, 'அது எதிர்கட்சி ஆட்கட வேலையாத்தா இருக்கணும்' என்கிறாரடி அந்த மனுசன்!" எனக்கூறி முடித்தாள்.

**சமாதானமும் சிறுபான்மை இன மக்களின் உரிமைகளும் பகற்கனவா?**

"முப்பது ஆண்டுகாலப் போர் முடிவுக்கு வந்து இரண்டு ஆண்டுகளாகியும் சமாதானமும் சிறுபான்மை இன மக்களின் உரிமைகளும் பகல் கனவாகவே இருக்கிறது" என இலங்கை ஆயர் மன்ற செயலர் ஆயர் நோபட் அன்றாடி அவர்கள் குறிப்பிட்டிருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. அமலமரித்தியாகிகளால் உருவாக்கப் பெற்ற சமூகத்துக்கும் சமயத்துக்குமான நிலைய நாற்பது ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் புரட்டாசி 03, 2011இல் இதனைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், "சிறுபான்மையினரின் உரிமைகள் பெரும்பான்மை மக்களால் மதிக்கப்படவில்லை. பெரும்பாலானோர், மூன்று தசாப்தப் போரின் பின்னர் கூட பல்மொழி, பல்சமய, பல்பண்பாட்டு தீர்வை ஏற்பதற்கு விரும்புகிறார்கள் இல்லை" எனக் குறிப்பிட்ட ஆயர் அவர்கள், "கடந்த காலத்தை இலேசாகப் புதைத்துவிட்டு, உண்மையான சமாதானத்தை உருவாக்க முடியாது. கடந்த காலக் காயங்களை ஆற்றக் கற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறது. இழைத்த தவறுகளில் இருந்து பாடம் படிக்க வேண்டிய தேவை இருக்கிறது" எனவும் கருத்து உரைத்திருக்கிறார்.

தொடர்ந்து, எதிர்காலச் சமாதானப் பணிகள் பற்றியும், தற்கால நிலைமைகள் பற்றியும் குறிப்பிடுகையில், "இதனால், நாட்டின் அர்த்தமுள்ள சமாதானத்திற்காகப் பணியாற்றுவது சவாலாக மாறியிருக்கிறது. வெவ்வேறு அபிப்பிராயங்களையும், மற்றவர்களின் யோசனைகளையும் வரவேற்கும் மனநிலை இப்போது குறைந்து கொண்டு போகிறது. படையினருக்கும், அரசியல்வாதிகளுக்கும் இடையிலான உறவைப் பற்றிக் கேள்வி எழுப்பவேண்டி இருக்கிறது. அரசியல்வாதிகள், சட்டத்தையும் ஒழுங்கையும் தம் கையில் எடுத்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள். ஆகவே, அரசியல் செல்வாக்குகளைக் கடந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு இருக்கிறது" என்றும் கூறியிருக்கிறார்.

**நீதியான தீர்வுத்திட்டம் வழங்கினாலேயே நிலையான சமாதானம்**

மேலும், மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு அவர்கள் பி.பி.சீ. செய்தி நிறுவனத்துக்கு அண்மையில் அளித்த செவ்வி ஒன்றில், "உண்மையை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்துடன் தமிழ் மக்களின் பிரச்சினையை அணுகவேண்டும்" எனக் குறிப்பிட்டு, "...தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களை ஆட்சியாளர்கள் உணர்ந்து, நீதியான அரசியல் தீர்வுத் திட்டத்தை வழங்க முன்வந்தால் மட்டுமே நாட்டில் நிலையான சமாதானத்தையும் ஐக்கியத்தையும் எதிர்பார்க்க முடியும்" எனத் தெளிவாக மீண்டும் கூறியிருக்கிறார்.



கொழும்பு மறைமாவட்டத்திலிருந்து வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் 'த மெசஞ்சர்' (The Messenger) பத்திரிகை ஆசிரியர் 2011 கார்த்திகை 06இல் வெளியிட்ட பத்திரிகையின் ஆசிரியர் தலைப்பில், 'தமிழ் மொழியை உத்தியோகபூர்வ மொழியாக ஏற்றுக்கொண்டால் தமது கருமங்களை ஆற்று வதற்கு அது ஏதுவாகவும் இருக்கும்' எனத் தமிழ் மக்கள் கேட்கும் அழுத்தமான வேண்டுகோள் நியாயமானதே எனக் கூறியிருக்கிறார். தொடர்ந்து, "...இத்தகைய தமிழர்களின் நியாயமான வேண்டுகோளைச் சிங்கள அரசியல் தலைவர்கள் நிறைவேற்றாமல் போனதனால்தான் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் உருவாகவும், அவர்கள் ஆயுதம் தூக்கவும் காரணமாகியது. ஏனெனில் அவர்களின் தலைவர்கள் பேச்சு வார்த்தைகளின் ஊடாக நியாயமான வேண்டுகோளை நிறைவேற்றுவதில் தோல்வி கண்டனர். இந்த வரலாறு திரும்பத் திரும்ப மீட்டப்படாதிருப்பதாக. ஆனால் தற்போதைய அரசு துரதிஷ்டவசமாக விபரீதமான வழியை தெரிந்தெடுத்துக் கொள்வதோடு அதிகாரங்களை மாகாண சபைகள் நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக இராணுவ மனிதனை கிழக்கு மாகாணத்தின் அரச அதிபராக நியமித்து, வடக்கில் அத்துமீறிய அதிகாரத்தை (Veto Power) இராணுவத்திற்குக் கொடுத் துள்ளது. மாகாண சபைகளைப் பலப்படுத்தி மத்திய அரசின் அதிகாரத்தை, இராணுவ பலம் உட்பட, அநாவசிய வழியில் மக்கள் நிர்வாகத்தின்மீது பிரயோகிக்காமல் செயற்படுவதற்கு இதுவே தருணமாகும். அரசு அடுத்த ஆண்டு தொடக்கத்தில் வடக்கு – கிழக்கு மாகாணசபைத் தேர்தல்களை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், தெரிந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் வடக் கிலும் கிழக்கிலும் தம் அதிகாரத்தை செயற்படுத்த அனுமதிப்பது அவசிய மானது. இதுவே தமிழ் மக்களின் தொடர்ச்சியான அழுத்தமான வேண்டு கோளாய் இருக்கிறது..." எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

இப்படி, சமூக அக்கறை கொண்ட ஒருசில தலைவர்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார்கள். மற்றவர்கள் தங்கள் இருக்கையைப் பாதுகாத்துக் கொண்டு நாட்களை நகர்த்துகிறார்கள் அல்லது பட்டும் படாமலும் ஏதாவது சொல்லுகிறார்கள் அல்லது யாருக்கும் பிரயோ சனம் இல்லாத 'சந்தை அரசியல்' பேசுகிறார்கள்.

**எது பொருத்தமற்ற அரசியல்?**

கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கருதினால் மல்கம் றஞ்சித் அவர்கள், "கடுமையான இனவாத, மதவாதக் கோட்பாடுகளை கத்தோலிக்க திருச்சபை வன்மையாகக் கண்டிக்கிறது. அதே நேரம் மதகுருமார் அரசியலில் ஈடுபடுவது பொருத்தமற்றது. எந்தவொரு மதகுருவையும் கட்சி அரசியலுக்குப் பொருத்தமானவர் எனக் கருதமுடியாது" என்று குறிப்பிட்டதாக 2011 கார்த்திகை 08இல் வலம்புரிப் பத்திரிகையில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து கூறுகையில், "...யாழ்.மறைமாவட்டத்திலிருந்து வெளிநாட்டுக்குச் சென்று தற்போது பொருத்தமற்ற அரசியலில் ஈடுபட்டு வரும் இம்மானுவேல் அடிகளாரின் நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது" என்றும் கூறியிருக்கிறார்.

**இறைவாக்கினன் பணி**

முதலில், பேராயர் அவர்கள், தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளுக்காக இதய சுத்தியுடன் குரல் கொடுத்தால் – செயற்பட்டால் அதற்குத் தமிழ் மக்களாகிய நாங்கள் நன்றிக் கடன்பட்டவர்கள். அடுத்து இம்மானுவல் அடிகளாரின் குரல் கட்சி அரசியலைக் கடந்து தேசத்தின் குரலாக இல்லாவிட்டாலும் உரிமையிழந்த தமிழ் மக்களின் குரலாக ஒலிக்கிறது.

"...எவ்வாறாயினும், மனித ஆள்களுடைய அல்லது சமூகக் குழுக்களுடைய உரிமைகளைக் கடுமையாக மீறக்கூடிய ஏகாதிபத்திய அல்லது சர்வாதிகார முறைகளை ஓர் அரசு கையாளுமேயாயின் அது மனிதத்தன்மை யற்ற செயலாகும்" என இரண்டாம் வத்திகான் சங்க இன்றைய உலகின் திருச்சபை என்ற கொள்கைத் திரட்டின் 75ஆவது கூறில் சொல்லப்பட்டிருக்கிறது.

மனிதத் தன்மையற்ற யாருடைய செயலாக இருப்பினும், அதனை சுட்டிக்காட்டுவது ஒவ்வொரு அருள்பணியாளனுடைய இறைவாக்கினன் கடமையும் அழைப்புமாகும். அதை இம்மானுவல் அடிகள் செய்கிறார். தொடர்ந்தும் செய்யவேண்டும்.

**உரிமைகளுக்காக உரத்துக் குரல்கொடுங்கள்**

நம் மக்களின் உரிமைகளுக்காக உரத்துக் குரல் கொடுக்க வேண்டிய காலம் இதுதான். இப்போது பேசாமல் நம் தலைவர்கள் வேறு எப்போது பேசப்போகிறார்கள்? சலுகைகளைப் பெற்றுக் கொள்ளப் பழக்கப்பட்டவர்கள் உரிமைகளைப் பற்றி எப்படிச் சிந்திக்க முடியும்?

சாதாரண, பெரும் எண்ணிக்கையிலான மக்கள் தங்கள் பிழைத்தலுக்கான போராட்டத்தோடு மினக்கட்டுக் கொண்டிருக்க அநேக தலை வர்கள் தங்கள் இருக்கைகளுக்கான போராட்டத்தில் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

'உயரமாய் வளர்ந்திருக்கும் மரங்கள் எல்லாம் உயர்ந்த மரங்கள் என்றுதான் நினைத்தோம்! ஆனால், அவை எல்லாம் உயர்ந்தவை அல்ல,' என எப்போதோ படித்த வரிகள் இப்போது நினைவுக்கு வருகின்றன.

உயர் நிலையில் – உயர் தகைமையில் – உயர் பதவியில் ஏன் உயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியில் உள்ள பெரும்பாலானவர்கள் தங்களைப் பார்த்துக் கொள்ளும், தங்களின் கதிரைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் முனைப்பில்தான் இப்போது உள்ளனர். இதனைச் சொல்கிறபோது, 'சில பெரியவர்கள் தாங்கள் சிறியவர்களாகி விடுவோமோ என்ற பயத்தில், பல சிறியவர்களைப் பெரியவர்கள் ஆக்காமல் வைத்திருக்கிறார்கள்' என ஒரு பெரியவர் கூறுவது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

**அரசியல் அக்கறை**

இக்கட்டத்தில், "தனி மனிதன் நோய்வாய்ப்பட்டால் சிகிச்சை அளிக்கலாம். ஒரு தேசத்தின் ஒழுங்கும் சனநாயகமும் நோய்வாய்ப்பட்டால் யாரால் திருத்த முடியும்?" என நா.பார்த்தசாரதி எழுப்புகின்ற கேள்வி நோக்கத்தக்கது.

முன்னாள் இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி தன் அமைச்சர் ஒருவரிடம் 05 நிமிடங்கள் மட்டும் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் படி கேட்டிருந்தார். எனினும் அவர் சரியாகப் 15 நிமிடங்கள் உரை நிகழ்த் தினார். அதனால் இந்திரா காந்தியின் அதிருப்திக்கு ஆளானார்.

வருத்தமுற்ற அமைச்சர் அவ்வுரையை எழுதி ஆயத்தம் செய்து கொடுத்த தன் செயலரிடம், "உம்மிடம் 05 நிமிட உரையை அல்லவா கேட்டிருந்தேன். ஏன் 15 நிமிட உரையை எழுதினீர்?" எனக் கோபம் கொண்டு ஆவேசத்தோடு கேட்டார்.

அவன், "நான் 05 நிமிட உரையைத்தான் எழுதினேன். ஆனால், அம்மூலப் பிரதியோடு நீங்கள்தான் இரண்டு *போட்டோ கொப்பிகளையும்* தரச் சொன்னீர்கள்!" எனப் புன்முறுவலோடு பதிலளித்தான்.

எழுதிக்கொடுத்த உரையை இரண்டு தடவை திரும்பத் திரும்ப வாசிப்பதுகூடத் தெரியாமல் பேசியிருக்கிறார் என்றால் இப்பேர்ப்பட்டவர் களின் அரசியல் அக்கறையை, அரசியல் சாணக்கியத்தை என்ன என்பது! அன்னை இந்திரா காந்தியின் இந்த அமைச்சரைப்போல எத்தனை எத்தனை அமைச்சர்கள், புத்திஜீவிகள், மேன்மை தங்கிய மேதைகள் நம் அமைச்சர் அவையில், நம் ஆலோசனைக் குழுக்களில், நம் ஆணைக்குழுக்களில் இருக்கிறார்களோ!...

மன்னா, கார்த்திகை 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சலுகைகளுக்கு விலை போகக் கூடாது

19

**தகுதியும் தகைமையும்**

தந்தை ஒருவர் தன் ஒரே மகனின் ஆற்றலை இனம்கண்டு அத்துறையில் அவனை வளர்த்தெடுக்க வேண்டும் என எண்ணினார். அவன் அறையில் பத்தாயிரம் ரூபா பணத்தையும், ஒரு கூடையில் சுவையான அப்பிள் பழங்களையும், சிறந்த சில புத்தகங்களையும் வைத்தார். "பணத்தை இவன் எடுத்துக் கொண்டால் அவனைப் பெரிய முதலாளியாக்க வேண்டும், பழங்களை எடுத்துக் கொண்டால் விவசாயி ஆக்கலாம், புத்தகங்களை எடுத்துக் கொண்டால் அறிஞனாக்க வேண்டும்," எனத் தனக்குள்ளே நினைத்துக் கொண்டார்.

அறைக்குள் சென்ற மகன் பணத்தைப் பையில் போட்டுக் கொண்டான், பழங்களை சாப்பிட்டுக் கொண்டு புத்தகங்களை வாசித்துக் கொண்டிருந்தான். மகன், அரசியல்வாதியாக ஆவதற்குரிய அத்தனை அறிகுறிகளும், அடிப்படைத் தகைமைகளும் இருப்பதைத் தந்தை அப்போதே உணர்ந்து கொண்டார்.

**விதையில்லாமல் விளைவது!**

"விதை இல்லாமல் புல் முளைக்கிறது. வேரில்லாமல் ரோமம் முளைக்கிறது. விதையும் வேருமில்லாமல் அரசியல் முளைக்கிறது" என்கிறார் கவியரசு கண்ணதாசன். அரசுகளைப் பற்றியும், அரசியல் வாதிகளைப் பற்றியும் இவர் கூறுகின்றபோது, "கிட்லறின் சிந்தனை அவனைப் போரில் இறக்கிற்று. நேருவின் சிந்தனை போரைத் தடுத்தது. சனநாயகத்தில் அரசியல்வாதிகளின் சிந்தனை முட்டாள்களை அதிகப்படுத்திற்று. முட்டாள்களின் சிந்தனை அவர்களை போன்றவர் களையே அரசாங்கத்திற்குக் கொண்டுவந்து வைத்தது. இவற்றை யெல்லாம் பார்த்துத்தான் மனிதர்கள் சிந்திக்கத் தெரியாத நாய்க்குட்டிகளிடம் பிரியம் காட்டினார்கள்" என விமர்சிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொள்கை இல்லாத கோழைகள்!**

ஒரு சிலரைத் தவிர்த்து, கொள்கையோ கோட்பாடுகளோ இல்லாத அரசியல்வாதிகளைத்தான் பெரும்பாலும் காணக்கூடியதாக இருக்கிறது. பணம் வருகிறது, பதவி கிடைக்கிறது என்றால் அரசியல் சிற்றரசர்கள், அரசியல் பேரரசர்களிடம் சரணாகதி அடைந்து விடுகின்றார்கள். எதிர்ப்பு அரசியலைத் தவிர்த்து ஒத்துப்போகும் அரசியல், இசைந்துபோகும் அரசியல் எனத் தாங்களே தமக்கேற்றாற் போல் பெயர்களை வைத்துக்கொண்டு சரணாகதி அரசியல் நடத்து கிறார்கள்!

**கல்லறை மட்டிலும் கவனமாயிருங்கள்!**

அரசியல்வாதி ஒருவர் இறந்து போனால் அவரது கல்லறையில் பின்வருமாறு எழுதி வைக்கலாம் எனக் கவிஞர் மு.மேத்தா கல்லறை வரிகள் என்ற கவிதையில் கூறுகிறார். "உண்மையைச் சொல்லப் போனால் இவரது புகழ்பெற்ற உண்ணாவிரதப் போராட்டம் இங்குதான் ஒழுங்காக நடக்கிறது" அல்லது "தயவுசெய்து அரசியல் பேசாதீர்கள் இவன் எழுந்தாலும் எழுந்துவிடுவான்" எனப் பொறித்து வைக்கலாம் என்பார். நம் அரசியல்வாதிகள் அடக்கம் செய்யப்பட்ட கல்லறைகளில் நின்று கொண்டு வாசிப்பதாக வர்ணித்துக் கொண்டால் மேற்சொன்ன வார்த்தைகளின் அர்த்தங்களை முழுமையாகப் புரிந்து கொள்ளலாம்.

**சலுகைகளுக்காக சரணடையாதீர்!**

நாட்டுத் தலைவர்களின், அமைச்சர்களின், அதிகாரிகளின் அற்ப சொற்ப சலுகைகளுக்காக – அவர்கள் தயவுக்காக எலும்புத் துண்டைக் கண்டதும் உடம்பையே வாலாக வளைத்து நிற்கும் நாயைப் போல அடிபணிந்து போகும் குணநிலையில் இருந்து – மனநிலையில் இருந்து நம் அரசியல், நிர்வாக, சமயத் தலைவர்கள், புத்திஜீவிகள் முற்றாக விடுபட வேண்டி இருக்கிறது.

'மாற்றங்களை உருவாக்கக்கூடிய நல்லுள்ளம் படைத்தவர்கள் செயலற்று, மௌனமாய் இருப்பதால்தான் அநீதர்கள் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்' அநீதிகளும் பெருகிக் கொண்டிருக்கின்றன என்பதை நினைவில் நிறுத்த வேண்டியிருக்கிறது. சோ. இராமசாமி சொல்வதுபோல, "மிகச்சிறிய மனிதர்களை மிகப்பெரிய நாற்காலிகளில் அமர்த்தி விடுகிறோம்" என்பதால்தான் இந்நிலை ஏற்படுகிறது என்பதை எண்ணிப்பார்க்க இன்னும் எவ்வளவு காலம் நம்மவர்களுக்கு எடுக்குமோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில அரசியல்வாதிகள், சமூக - சமய தலைவர்களின் ஆயுள் காலம், அறிக்கை விடுவதிலும், அனுதாபம் தெரிவிப்பதிலும் முடிவடைந்துவிடும் போலிருக்கிறது! இப்பேர்ப்பட்டவர்களை நினைக்கிற போது, "உழைப்பவர்கள் இந்தத் தேசத்தில் சிலையில்கூட உழைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். தலைவர்கள் சிலையில்கூட பேசிக் கொண்டுதான் இருக்கிறார்கள்" என ஒரு கவிஞன் சொன்ன வரிகள் மேற்கூறப்பட்டவர்களுக்குப் பொருத்தமானதாகவே தெரிகிறது. இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் கவிஞர் மு.மேத்தா சொல்வது போல, "கைதட்டலுக்குள் இவர்கள் காணாமல் போகிறார்கள். இவர்களை முதுகில் தட்டும் வரை நாடு முன்னேறாது" என்பார்.

**அகிம்சைக்கு ஆமிப் பாதுகாப்பு**

இன்றைய நம் நாட்டு அரசியல்வாதிகளைப் பற்றிச் சிந்திக்கின்ற போது, "அகிம்சை பேசும் ஆளுநருக்கு *ஆமிப்* பாதுகாப்பு...!" என்று ஓரிடத்தில் நான் குறிப்பிட்டது ஞாபகம் இருக்கிறது. இன்றைய நிலைமைகளை அவதானிக்கின்றபோது அரசியல் காய் நகர்த்தல்கள் சமய, சமூக, நிர்வாக கட்டமைப்புகளுக்குள் மிக வேகமாக ஊடுருவி இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

தூய மறை வாழ்வுக்குள் அரசியல் தன்மையில் விளங்கும் ஆதிக்கம், ஆன்மீகம் வளர முட்டுக்கட்டையாக – பெருந்தடையாக இருந்துகொண்டே இருக்கும். இது எப்படிப்பட்டது என்றால், கவலைக்கிடமான நிலைதான். *ஒப்பரேசன் சக்சஸ்*, ஆனா, ஆள்த்தப்பாது!' என்பதைப் போன்றது.

**கட்டெறும்புகளை இனியாவது கவனிப்போமா?**

ஆகவேதான், " 'உங்களுக்குச் சோறு போடுவேன்' என்று சொல்வதன் மூலமே, உங்கள் பசியைத் தீர்க்கக் கூடிய சக்தி அரசியல்வாதி ஒருவனுக்குத்தான் உண்டு" என்கின்ற கவியரசு கண்ணதாசன், "அரசியல் சட்டத்தை உருவாக்கும் பொறுப்பை மனிதர்களைக் கொண்ட அரசியல் நிர்ணயசபையிடம் ஒப்படைத்ததைவிட கட்டெறும்புகளிடம் ஒப்படைத்திருந்தால் ஓர் ஒழுங்கு முறையை அவை கற்பித்திருக்கும்" என அரசியல் நடத்துவதற்கான ஆலோசனையும் கூறுவார். நம்முடைய மாநாடுகளை நடத்த முன் கட்டெறும்புகளை இனியாவது கவனிப்போமா? அவை நமக்கு நல்ல *அனிமேற்றராக (Animator)* முடியும்.

*மன்னா, மார்கழி 2011*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வை நோக்கி



20

**எப்படியும் கருதலாம்**

இந்தியாவின் பண்டிதநேரு பிரதமரானபின் அமெரிக்கா சென்றிருந்தார். 'நியு யோக் ரைம்ஸ்' பத்திரிகையாளர்களின் கேள்வி களுக்கு விடையளிக்கையில் கவனமாகப் பதிலளிக்கும்படி அறிவுறுத்தி இருந்தார்கள். எல்லாப் பத்திரிகையாளர்களும் கேள்விகள் கேட்டு முடிந்தபின் 'நியு யோக் ரைம்ஸ்' பத்திரிகையின் லிப்மேன், "இந்தியப் பிரதமருக்கு அமெரிக்க இரவு விடுதிக்குச் செல்லும் எண்ணம் உண்டா?" எனக் கேட்டதற்கு பண்டிதநேரு, "நியு யோர்க்கில் இரவு விடுதிகூட இருக்கிறதா?" என கேள்வி கேட்டவரிடமே திருப்பிக் கேட்கிறார். மறுநாள் பத்திரிகையின் தலைப்புச் செய்தி பின்வருமாறு இருந்தது: "நியு யோர்க்கில் இரவு விடுதி இருக்கிறதா?' - இந்தியப் பிரதமர் ஆவல்!"

**உடனடித் தேவை அரசியல் தீர்வே**

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜேம்ஸ் வோட்டன், ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சின் அரசியல் விவகாரப் பணிப்பாளர் மக்ஸ் வேல்கீகெல், இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் கிறிஸ் நொறிஸ், யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமல்டா சுகுமார் ஆகியோர் யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களை 05.01.2012 காலையில் சந்தித்துள்ளனர். இச்சந்திப்பில், "தமிழ் மக்களின் உடனடித் தேவை அரசியல் தீர்வே – பிரிட்டிஸ் தூதுவரிடம் யாழ்.ஆயர் வலியுறுத்து" எனத் தினக்குரல் பத்திரிகை 06.01.2012 அன்று தலைப்புச் செய்தி தீட்டியிருந்தது.

மேலும், "தமிழ் மக்களுக்கு தற்போது உடனடியாகத் தேவைப் படுவது நிரந்தர அரசியல் தீர்வே என நேற்றுக்காலை தன்னைச் சந்தித்துப் பேசிய பிரிட்டிஸ் நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையிலான குழுவினரிடம் யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார். தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல்வாதிகளுடன் அரசு பேச்சுக்களை நடத்தி தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வொன்றைத் துரித கதியில் முன்வைக்க வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்துள்ளார்..." என இச்செய்தி தொடர்கிறது.

உதயன் பத்திரிகை இதே சந்திப்பை விபரிக்கையில், "தீர்வுக்கு அரசு பின்னடிப்பு தமிழர் மத்தியில் அதிருப்தி – பிரிட்டிஸ் எம்.பியிடம் யாழ்.ஆயர் எடுத்துரைப்பு" எனத் தலைப்புச் செய்தியாக *06.01.2012* அன்று வெளியிட்டிருந்தது. வீரகேசரி பத்திரிகை, "இலங்கையில் அரசியல் தீர்வு ஏற்படுவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் – யாழ்.ஆயர்" என *06.01.2012*இல் தலையங்கம் இட்டிருந்தது.

"பிரிட்டனிலுள்ள தமிழர்களை திருப்பி அனுப்ப வேண்டாம் – யாழ்.ஆயர் வலியுறுத்தல்" என்ற தலைப்பிட்டு, "புலம்பெயர்ந்த தமிழர்களை திருப்பி அனுப்புவதை பிரித்தானியா மீள் பரிசீலனை செய்ய வேண்டும்" எனவும், "இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகளுடன் அரசு இதயசுத்தியுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்" எனவும், "தமிழ்மக்கள் தமது அபிலாஷைகளைப் பிரதிபலிக்கக்கூடிய தீர்வைத்தான் எதிர்பார்க்கிறார்கள். கடந்தகால யுத்தத்தில் மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களின் மனதில் அமைதியை ஏற்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு யுத்தத்தில் ஈடுபட்டவர்களிடம் இருக்கிறது" என ஆயர் சுட்டிக்காட்டியிருப்பதாக வலம்புரி பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

மேலும் ஆயர் கூறுகையில், "அதேவேளை யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகள் போதுமானதாக இல்லை. மீள் குடியேற்ற நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டியது அவசியம். கிளிநொச்சி, முல்லைத்தீவு மக்கள் நீண்ட தூரத்திற்குத் தமது அன்றாடத் தேவைகளை நிறைவேற்ற நடந்து திரிகின்றனர். குறிப்பாக வைத்தியசாலைகளுக்குச் செல்வதற்குப் பல கிலோமீற்றர் தூரம் நடக்க வேண்டியுள்ளது. அத்தோடு வீதிகளும் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்து காணப்படுகின்றன. யுத்தகாலத்தில் இருந்ததைவிடப் பரவாயில்லை என்ற போதிலும் புனரமைப்புச் செய்ய வேண்டிய நிலையிலேயே வீதிகள் உள்ளன. யுத்தத்தின் பின்னரான அபிவிருத்திப் பணிகள் மக்களுக்குத் திருப்தி அளிப்பதாக இல்லை. மாற்றங்கள் ஏற்பட்டு மக்கள் மகிழ்ச்சியாக வாழ்வதற்குரிய சூழல் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம்" என ஆயர் கோடிட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டியுள்ளதாக வலம்புரி பத்திரிகை 06.01.2012 அன்று மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

**ஆயர்களின் சந்திப்புக்கள் மிக முக்கியமானவை**

எல்லாப் பத்திரிகைகளுமே யாழ்.ஆயரின் மேற்குறித்த சந்திப்பைத் தலைப்புச் செய்தியாக வெளியிட்டு இருந்தன. இச்சந்திப் புக்கு ஊடகங்கள் இவ்வளவு முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றன என்றால், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எவ்வளவு ஆர்வத்தோடு நம் ஆயர் அவர்களின் அவதானிப்புக்களை மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக் கிறார்கள் என்பது புரியும். உண்மையில் இச்சந்திப்பில் வெளிப்படுத்திய கருத்துக்கள் பல தரத்தினராலும் - அரச அரசசார்பற்ற உள்நாட்டு சர்வதேச மட்டங்களில் கூர்ந்து கவனிக்கப்படும் என்பது சந்தேகத்திற்கு இடமில்லாத விடயமாகும். அவ்வகையில் இச்சந்திப்பில் யாழ்.ஆயர் வெளிப்படுத்திய கருத்துக்கள் இந்நேரத்தில் மிக முக்கியத்துவமும் பெறுமதியும் வாய்ந்தவை ஆகும்.

மேலும், அரசின் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் கார்த்திகை 03ஆம் நாள் 2010இல் திருமலை-மட்டக்களப்பு ஆயர் கிங்ஸ்சிலி சுவாம்பிள்ளை அவர்கள் கொடுத்த மனித உரிமைகளின் இன்றைய நிலை, காணாமல் போனோர் பற்றி கண்டறியப்பட வேண்டிய உண்மைகள், தடுத்து வைக்கப்பட்ட வர்களின் விடுதலை போன்ற உள்ளடக்கத்தைக் கொண்ட வாக்கு மூலங்கள் இன்றும் உன்னிப்பாக அவதானிக்கப்படுகின்றன. 2012ஆம் ஆண்டு சத்திய சாய் சேவா சமித்தியின் புதுவருட பஜன் வழிபாட்டில் பங்குகொண்டு, "பேச்சுவார்த்தையில் நேர்மையோடும், நாணயத்தோ டும், அர்ப்பணத்தோடும் ஈடுபட வேண்டும்" எனவும் ஆயர் கிங்ஸ்சிலி சுவாம்பிள்ளை வேண்டியுள்ளார்.

**கற்றும் அறிந்தோமா?**

அரசின் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை வெளியானதில் இருந்து மனித உரிமை அமைப்புக்களும் நாடுகளும் அவ்வறிக்கையின் சாராம்சங்கள் பற்றிய கேள்விக் கணைகளைத் தொடுத்த வண்ணம் இருக்கின்றன. குறிப்பாக, "போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்த நல்லிணக்க ஆணைக்குழு தவறிவிட்டது" என மனித உரிமை அமைப்புக்கள் கடுமையாக விமர் சிக்கின்றன. மேலும், "போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும்" எனச் சர்வதேச நெருக்கடிக்கான குழு வலியுறுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும், "...இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப் பட்ட போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்யப்பட்டு, இக்குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது" என வலம்புரி பத்திரிகை 19.12.2011இல் செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்சொன்ன தகவல்களை ஏனைய பல ஊடகங்கள் தொடந்து வெளியிட்ட வண்ணமுள்ளன. மேலும், 'நல்லிணக்க ஆணைக்குழுவின் போர்க்குற்றங்கள் தொடர்பான பரிந்துரைகள் ஏமாற்றமளிக்கின்றன' எனக் கனடாவும் பிரித்தானியாவும் அண்மையில் வெளியிட்ட கருத்தும் கவனிக்கத்தக்கது.

**நல்லிணக்கத்துக்கு முன் நல்மனம் வேண்டும்**

ஆயினும், "நல்லிணக்க ஆணைக்குழு மக்களின் பிரச்சி னையை சீராக ஆராய்ந்துள்ளது – கர்தினால் ரஞ்சித் ஆண்டகை" எனத் தலைப்பிட்டு, "ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரது இலங்கை தொடர்பிலான அறிக்கையை விட ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, பொது மக்கள் பிரச்சினை குறித்துச் சீராக ஆராய்ந்துள்ளது" மேலும், "யுத்தச் சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து இந்த அறிக்கை சிறப்பாக ஆராய்ந்துள்ளது. இந்த முயற்சி இலங்கையின் சொந்த முயற்சி என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்" என 24.12.2011இல் வலம்புரி பத்திரிகையின் செய்திக் குறிப்பில் சொல்லப்பட்டுள்ளது.

தொடர்ந்து, "இது மாத்திரமே தீர்வு என எதிர்பார்த்திருக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும், அனைத்துப் பிரச்சினைகளை யும் சர்வதேச சமூகத்திடம் முறையிடும்போது, சமாதான முயற்சிகளை அது சீர்குலைக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்" எனவும் வலம்புரி குறிப்பிட்டுள்ளது.

இக்கருத்துக்களை 22.12.2011 அன்று ஜனாதிபதி தலைமையில் அலரிமாளிகையில் நடைபெற்றிருக்கிற கிறிஸ்து பிறப்புவிழா நிகழ்வில் கருதினால் மல்கம் றஞ்சித் தெரிவித்திருக்கிறார். இதுதான் அரச தலை வர்களுக்கு மேதகு கருதினால் அவர்களால் வழங்கப்பட்ட 2011ஆம் ஆண்டுக்கான கிறிஸ்மஸ் நற்செய்தி!

"வெளியில போய்வரக் கூடியதா இருக்கு, கொழும்புக்கு நல்ல பஸ்கள் ஓடுது, எல்லாச் சாமான்களும் கிடைக்கிது, புது றோட்டுக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் போடுறாங்க, வேற உங்களுக்கு என்ன பிரச்சினை?..." என்று தமிழ் மக்களாகிய எங்களைப் பார்த்து இன்றும் கேட்கின்ற பரிசுத்தமான மனிதர்கள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள்! ஒரு மக்கள் இனத்தின் வாழ்வு வெளியே போய் வருவதோடும், தின்னுவதோடும், *றோட்டோடும்* முடிந்துவிடுகிறது அவர்கள் பார்வையில்!

பசுமாட்டுக் கூட்டங்களும் பட்டியிலிருந்து வெளியே போய் வருகின்றனவே! அவை, சமான்கள் வாங்கி நம்மைப்போல் சமைத்துத் தின்னாமல் போனாலும், தாங்களாகவே தீனியைத் தேடிக் கொள்கின் றனவே! மேலும், *றோட்டுக்களை* யாரும் அவைகளுக்கு அமைத்துக் கொடுக்காமல் தாமாகவே அவை தமக்கு அமைத்துக் கொள்கின் றனவே! தீர்க்கமாகத் தியானித்தால், பசுமாட்டுக்கூட்டம் பட்டிக்குள் வாழ்கின்றது, நாங்கள் படை நடுவில் வளர்க்கப்படுகிறோம் அந்தப் பசு மாட்டுக் கூட்டத்தைப்போல!

தற்போது, தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தையைப் பற்றி 'யாழ்த்தொனி' புரட்டாசி – மார்கழி இதழில் யாழ். அமலமரித் தியாகிகளின் முதல்வர் 'மலையைக் கிண்டி எலியொன்றைப் பிடித்த கதையாய் இருக்கிறது' என வர்ணிக்கிறார்.

**ஆயனை நம்பியிருக்கும் ஆடுகள்**

இந்நிலையில், வலம்புரி ஆசிரியர், "...தமிழ்ப் பகுதியில் இருக்கக்கூடிய மேதகு ஆயர் பெருமக்களேனும் தமிழ் அரசியல் தலைமைகளை ஒற்றுமைப்படுத்தி அவர்களை வழிப்படுத்தி தமிழினத்தை ஒரே பாதையில் பயணிக்கச் செய்து உரிமையை வென்றெடுக்கும் வழிகளைத் தீட்டவேண்டும். இத்திட்டத்தை ஆயர்கள் சிலர் போற்றுதற்குரிய வகையில் செய்கிறார்களாயினும் விலகு நிலையில் இருப்போரும் உள்வரவேண்டும் என இறைவனின் பெயரால் இப்புனித நாளில் அழைக்கின்றோம். வருக." என கிறிஸ்து பிறப்பு நாளில் தமது பத்திரிகை ஆசிரியர் கருத்தாகக் கூறிநிற்கிறார்.

மன்னா பத்திரிகை ஆசிரியர் மார்கழி இதழில் வடக்கு-கிழக்கு தமிழ் மறை மாவட்டங்களின் ஆயர்களின் ஒருமித்த குரல், ஆட்சி யாளர்கள் மட்டத்திலும் சர்வதேச சமூகத்திலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனச் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களுக்கு எத்தனை எத்தனை பிரமுகர்கள், தூதுவர்கள், அமைச்சர்கள், அரசியல்வாதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரையில் சென்றுவிட்டார்கள்! அம்மக்கள் தமது அன்றாட தேவைகளை நிறைவேற்ற நீண்ட பல கிலோமீற்றர்கள் நடந்து திரிவதை ஓர் ஆயனின் கண்கள் மட்டும் அவதானித்திருக்கின்றன! அதனால்தான், இந்த ஏழைமக்கள் கடவுளின் பிரதிநிதிகளான ஆயர்களின் மீது இன்னும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

**ஒருமித்து ஒத்திசைவாக ஓங்கி ஒலிக்கவேண்டும்**

எழுபத்தைந்து பேர் அடங்கிய வடகிழக்கின் சிவில் சமூக அமைப்பு ஒரு நல்ல - ஆக்கபூர்வமான முயற்சி. இவர்கள், விழிப்போடும் விவேகத்தோடும் தொடர்ந்து இடைவிடாமல் இயங்கிக்கொண்டு இருக்க வேண்டியவர்கள். எல்லாக் குரல்களும் இனி ஒருமித்து ஒத்திசைவாக ஓங்கி ஒலிக்கவேண்டும் என்பதுதான் எங்களின் - மக்களின் இந் நாட்களின் மன்றாட்டு.

உண்மையில், எம் உரிமைகளுக்கான குரல் இக்காலத்தில் தான் இன்னும் வீரியமாக விஸ்வரூபம் எடுக்க வேண்டியிருக்கிறது. உதாரணத்திற்கு மட்டும் ஒன்றைப் பார்க்கலாம்: "தமிழர்களுக்கு அக சுயநிர்ணய உரிமையுண்டு. அதனடிப்படையில் தமது பரம்பரைப் பிரதேசங்களில் வாழ்கின்ற தமது மக்களை ஆள்வதற்கும், தமது மக்களை முன்னேற்றுவதற்கும் இயற்கையான உரிமையுண்டு. இது இலங்கையின் அரசியலமைப்பில் மாற்றப்பட முடியாமலும், அழிக்கப்படாமலும் இருக்கவேண்டும்" என மன்னார் ஆயர் உரத்து உரைத்திருக்கிறார். இனியென்ன, ஒருமித்து ஒத்திசைவாக ஓங்கி ஒலிக்க வேண்டியதுதானே.

**சத்தமில்லாத யுத்தம்!**

இன்று, சத்தமில்லாத யுத்தம் ஒன்று பல முனைகளில் உச்ச வீச்சில் - போர்க்கால செல் வீச்சைவிட மோசமாக - நடைபெற்றுக் கொண்டிருக்கிறது! இச்சத்தமில்லாத யுத்தத்தில் உடனடியான உயிர்ச்சேதங்கள் இல்லைத்தான். ஆனால், கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு, நிலம், பொருளாதாரம், உரிமை, சர்வதேச உறவு என எம் வாழ்வோடு தொடர்புடைய அம்சங்கள் அனைத்தும் பெரும் சிதைவுக்கு - பறிப்புக்கு - அழிவுக்கு உள்ளாகி வருகின்றன. இச்சவால்களைச் சந்திக்க, எதிர்கொள்ள, முறியடிக்க ஆடுகளாகிய எங்களுக்கு ஆயன்(ர்)களே! தொடர்ந்து வழிகாட்டுங்கள். நாம் உம்வழி நடப்போம்.

மன்னா, மாசி 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உசுப்பேத்திவிட்டு ஓடுகாலி ஆக்காதீர்கள்

# 21

**அந்தக் கள்வர்கள் யார் யார்?**

இந்தியாவில் 97 வயதில் ஒரு குருவானவர் கடும் நோயுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இறுதி நேரம் வந்துவிட்டது என்பதை உணர்ந்த அவர், தான் சாவதற்கு முன்பதாக கலைஞர் கருணாநிதியையும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கையும் காணவேண்டும் எனத் தமது இறுதி விருப்பத்தைத் தெரிவித்திருந்தார். அவரின் விருப்பம் உரியவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

"எதற்காக இந்த வயதான காலத்தில் என்னைச் சந்திக்க இவர் விரும்புகிறார்? எது எப்படி ஆனாலும், இவரைச் சந்திப்பதால் எனக்கு நன்மைதான். அத்துடன் உயிருடன் இருந்தால் அடுத்த தேர்தலுக்குக் கத்தோலிக்கரிடையே நிறைந்த செல்வாக்கு உருவாகும்!" எனக் கலைஞர் தனக்குள்ளே நினைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தார்.

"இக்குருவைச் சந்திப்பதால் ஈழத்தமிழர்களுக்குச் செய்த பாதகங்கள் எல்லாம் தீர்ந்து போய்விடும். அதனால் இச்சந்திப்பைப் சரியாகப் பயன்படுத்திக் கொள்வோம்" எனப் பிரதமர் மன்மோகன் சிங்கும் வந்தடைந்தார். இவர்கள் இருவரும் வருவதை அறிந்த ஊடக சமூகத்தினர் வாள்களோடும் தடிகளோடும் பந்தங்களோடும் அல்ல, புகைப்படக் கருவிகளோடும் படப்பிடிப்புச் சாதனங்களோடும் திரண்டு வந்தனர்.

மிகவும் தளர்ந்து போயிருந்த அக்குருவானவர் சைகை காட்டி கலைஞரை இடது பக்கமும் பிரதமர் மன்மோகன் சிங்கை வலது பக்கமும் வரச் சொன்னார். இருவரின் கைகளையும் பற்றிக் கொண்ட அக்குருவானவர் ஒன்றும் பேசவில்லை. சற்று நேர அமைதியின் பின் கலைஞர், "அடிகளாரே, எங்கள் இருவரில் இவ்வளவு பாசமும், நேசமும் வைத்திருக்கிறீர்கள் என்று அறிவோம். ஆயினும் உங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடைய இந்த மரண வேளையில், இத்திருநாட்டில் இவ்வளவு பிரபலங்கள் இருக்கக்கூடியதாக, எங்களை ஏன் அழைத்தீர்கள்? அடிகளாரே பேசுங்கள்! உம் அடியவர்கள் கேட்கிறோம்" என வினய மாக வேண்டினார்.

"என் வாழ்நாளில், என் ஆண்டவராம் இயேசுவையே அனைத்திலும் முற்று முழுதாகப் பின்பற்றி வாழ்ந்து வந்தேன்" எனக் குருவானவர் கூற, "அது உண்மைதான்" என்று பிரதமர் மன்மோகன் சிங் ஆமோதித்தார். கலைஞரோ, "ஆமேன், அல்லேலூயா, ஆமேன், அல்லேலூயா" என மகிழ்ச்சி மிகுதியால் அக்களித்தார். குருவானவர் மிகவும் நிதானமாக, "இயேசு இறக்கும்போது இரு கள்வர்களுக்கு நடுவே இறந்தார். அது போலவே நானும் இறக்க விரும்புகிறேன்" எனக்கூறி ஆவியைத் துறந்தார்.

என் நண்பர் ஒருவர் எனக்கு அனுப்பிய ஈமெயில்தான் இது. அவன் இரு கள்வரின் பெயர்களையும் குறிப்பிடவில்லை. நான் அவ்விரு கள்வர்களின் பெயர்களைக் குறிப்பிட்டிருக்கிறேன். அவ்வளவுதான்! அடுத்து, இதே குருவானவர் இலங்கையில் வாழ்ந்து, இறந்திருந்தால் வலது, இடது ஆகிய இரு பக்கங்களிலும் இரண்டு வரிசைகளில்தான் நம்நாட்டு அரசியல், சமய முக்கியஸ்தர்களை நிறுத்தியிருப்பார் என்ற கருத்தை மறுக்க மாட்டீர்கள் என்றும் துணிந்து கூறலாம்!

**'பேச வேண்டாம்' = பேசக் கூடாது!**

'கலைஞர் ஐயா... தயவுசெய்து பேசவேண்டாம்' என்ற தலைப்பில் நாம் தமிழர் இயக்க நிறுவுனர் செந்தமிழன் சீமான் வழங்கிய நேர்காணலை இரா.தமிழ்க்கனல் தொகுத்திருந்தார். இதனை ஜூனியர் விகடன் வெளியிட, அக்கட்டுரையை வலம்புரி பத்திரிகை 28.04.2012 அன்று பிரசுரித்திருந்தது. அக்கட்டுரையில் முக்கிய சில பகுதிகளைப் பார்ப்போம். "...65 ஆண்டு கால சுதந்திர இந்தியாவில் மிகப்பெரிய வலிமையான கட்சியை நடத்தும் கலைஞரின் முழக்கமே மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்பதுதான். இந்தியாவிலேயே இந்த நிலைமை என்றால் இலங்கை ஜனநாயக நாடே இல்லை. அது பௌத்த மத நாடு. அங்கு ஒரு சிங்கள பௌத்தனைத் தவிர, யாருமே தலைமை அமைச்சராக வர முடியாது.

அங்கே எப்படி மாநில சுயாட்சி கிடைக்கும்? இதை உணராத கலைஞர் மாநில அதிகாரம் பெற வேண்டும் என்று ஈழத்தமிழருக்கு அறிவுரை சொன்னார். இப்போது, ஈழத்தை அடையும் வரை ஓயமாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேன் என்று சொல்கிறார். நியாயப்படி அவர் ஈழத்தை அழிக்கும் வரை ஓயமாட்டேன் என்றுதான் சொல்லியிருக்க வேண்டும்.

அண்ணன் திருமாவளவன் சென்னையில் ஈழ ஆதரவு மாநாடு நடத்தியபோது, அதற்கான விளம்பரங்களில் ஈழம் என்ற வார்த்தையை காவல்துறையைக் கொண்டு அழித்தவர் நீங்கள். அதை மறைக்க முடியுமா? ஈழம் என்ற சொல் இருக்கக் கூடாது என்பதற்காக இலங்கைத் தமிழர்கள்... இலங்கைத் தமிழர் என்று பேசி வந்தவர். தொடர்ச்சியாக, என்னை ஐந்து முறை சிறைப்படுத்தினீர்கள்? நான் என்ன பேசினேன். இன்றைக்கு நீங்கள் பேசியிருப்பதைத்தானே அன்றைக்கு நான் பேசினேன்.

இறுதிப்போர் காணொளிக் காட்சியைப் பார்க்க முடியவில்லை என்கிறீர்கள். இந்தக் காணொளிக் காட்சியை அச்செடுத்து வீடு வீடாகக் கொடுத்தபோது, கொடுத்தவர்களைத் தேடித்தேடி சிறைப்பிடித்தீர்களே ஏன்? நீங்கள் இன்றைக்குச் சொல்லும் ஈழ விடுதலைக்காகத்தானே தம்பி முத்துக்குமார் தீக்குளித்தான்.

ஏன் நீங்கள் அவனுக்காக, ஒரு இரங்கலைக்கூடத் தெரிவிக்க வில்லை. அவன் மரணத்துக்காகத் திரண்ட இளைஞர்களின் எழுச்சியை கல்லூரி விடுதிகளை மூடி ஏன் அடக்கினீர்கள்? பெரும் ஊடகம் வைத்திருக்கின்ற நீங்கள் அதைப் பற்றிச் சிறு செய்திகூட அதில் வெளியிடவில்லையே ஏன்? இன்றில்லாவிட்டால் நாளை மலரும் என்று நீங்கள் சொல்லும் ஈழத்துக்காகத்தானே வழக்கறிஞர்கள் போராடினார்கள். ஏன் அவர்களைக் காவல்துறையை விட்டு வெறிபிடித்த மாதிரி அடித்தீர்கள்.

ஈழம் அடையும் வரை ஓயமாட்டேன் என்ற என் தலைவர் பிரபாகரன் அந்த ஈழ மண்ணில் கருவியோடு நின்று கொண்டு இருந்த போது ஏன் நீங்கள் சொல்லவில்லை? பல்லாயிரக்கணக்காக மாவீரர்கள் சிந்திய இரத்தம் வீண்போகாது என்று இப்போது சொல்கிறீர்கள். மாவீரர்கள் கல்லறைகளைக் கட்டினதைவிட வேற காரியத்தில் கவனம் செலுத்தியிருக்கலாம் என்று அப்போது சொன்னது ஏன்? தேவையில்லாமல் ஈழத்தைப் பற்றிப்பேசி தமிழகத்தில் வீணாக அரசியல் செய்கிறார்கள் என நீங்களும் உங்கள் பிள்ளைகளும் நாடாளுமன்றத் தேர்தலில் பேசினீர்களா இல்லையா?

அந்த மக்களின்மீது இவ்வளவு அக்கறையும் பற்றும் கொண்டிருக்கிற நீங்கள் போர்க்குற்ற வீடியோவை உங்களின் ஊடகத்தின் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடாதது ஏன்? இறுதிப்போரில் எதிரியால் உருக்குலைக்கப்பட்ட தமிழ் உறவுகளைக் காப்பாற்ற தமிழகம் முழுவதும் குருவி சேர்த்தது போல அத்தியாவசிய மருந்துப் பொருட்களைச் சேகரித்தார்களே தமிழ் இளைஞர்கள். அவர்களை எல்லாம் வேட்டையாடிச் சிறப்பு முகாம் களில் அடைத்து வைத்தீர்களே ஏன்?

சிங்களவர்கள் கோபப்படும்படி நடந்து கொள்ளக்கூடாது என்று அப்போது சொன்னீர்கள். இன்று நீங்கள் ஈழத்துக்காகப் பேசுவதற்கு கோத்தபாய ராஜபக்ச கோபப்படுகிறாரே? ஈழத் தமிழர் களுக்காக கண்ணீராக வருகின்றது என இன்று சொல்கிறீர்களே. அன்று இறுதிப்போரில் தமிழக் குழந்தைகள் கரிக்கட்டையாகக் கிடந்த படங்கள் வரும் போது பத்திரிகையின் அதே பக்கங்களில் உங்கள் பிள்ளை மதுரையில் பிறந்தநாள் கேக் வெட்டிக் கொண்டாடிய படமும் வந்ததே ஐயா? மறக்க முடியுமா எங்களால்?

இன்று நாக்கூசாமல் சகோதர யுத்தம் என்று பேசுகிறீர்கள். உங்கள் பிள்ளைகளுக்கு இடையில் நடப்பது என்ன அன்பு முத்தமா? அ.தி.மு.க.வும் தி.மு.க.வும் ஒன்றாக இருக்க முடியாதா? எம்.ஜி.ஆரை ஏன் நீக்கினீர்கள்? வை.கோவை ஏன் நீக்கினீர்கள்? ஐயா கலைஞரே! நீங்கள் தமிழ் இனத்துக்கு இனியாவது நல்லது ஏதாவது செய்யலாம் என நினைத்தீர்கள் என்றால் இதுபோலப் பேசாமல் அமைதியாக இருங்கள். நீங்கள் இருக்கும் திசை பார்த்து வணங்குகிறோம்' என சீற்றத்துடன் முடித்திருக்கிறார் சீமான். இதற்குக் கலைஞர் கருணாநிதி என்ன பதில் சொல்வாரோ?" எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**வேண்டாம் என்றாலும் விடுகிறீர்கள் இல்லையே!**

இந்த அரசியல் விவகாரங்களுக்குள் இறங்கக் கூடாது என்றுதான் நினைத்திருந்தேன். ஆயினும் இது பற்றி இனிமேலும் எழுதாமலோ, பேசாமலோ இருக்க முடியவில்லை! இதனை எழுது வதால் மனம் சற்று ஆறுதல் அடையுமாதலால் என் சுயநலனுக் காகவே எழுதுகின்றேன்!

கலைஞர் ஐயாவுக்குத் திடீர் எனப் பிறந்திருக்கும் ஞானம் பற்றி என்னவென்று சொல்வது! "தமிழீழத்திற்கான பலத்தை உருவாக்கிய பின் இந்த உலகத்திலிருந்து விடைபெற விரும்புகிறேன்" எனக் கூறியதற்கு, "தமிழீழம் பற்றிப் பேசும் தகுதி கருணாநிதிக்குக் கிடையாது" என வை.கோ. முழங்கியிருக்கிறார். இதனை 27.04.2012இல் ஊடகங்கள் தெரிவித்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், "ஈழத்தமிழர்கள் மீது இன்றைக்குக் காட்டும் உணர்வு பூர்வமான அக்கறையை இலங்கையில் போர் நடைபெற்றபோதே காட்டி யிருக்கக் கூடாதா என்ற ஆதங்கம் உலகெங்கும் பரவிக் கிடக்கும் தமிழர் களுக்கு இருப்பதை என்னால் புரிந்து கொள்ளமுடிகின்றது. இறுதிப் போரின்போது ஆயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் கொல்லப்பட்டதை தடுத்து நிறுத்தியிருக்கலாம் என்று எண்ணுகின்றனர். ஆனால், கேட்ப வர்களுக்குத் தெரியும் விடுதலைப் புலிகள் வெற்றியைப் பெறாமல் வீழ்ந்து போனதற்குக் காரணம் ஓரணியாய் நின்று போரிடாததுதான். ... இறுதி யுத்தம் நடைபெற்றபோது அதைத் தடுத்து நிறுத்துவதற்கு தமிழக அரசும் மத்திய அரசும் இயன்றவரை எல்லா நடவடிக்கைகளை யும் செய்தது..." என நயமான வார்த்தைகளால் நவின்றிருக்கிறார் கலைஞர்.

ஒன்று, 'ஆயிரமாயிரம் பேர் கொல்லப்படுவதை நினைத்திருந் தால் கலைஞர் தடுத்து நிறுத்தியிருக்கலாம் என்று நினைப்பவர்களுக்கு' கலைஞர், பதில் கூறாமல் சொதப்புகின்ற வார்த்தைகளால் விளை யாட்டுக் காட்டியிருக்கிறார். அதாவது செப்படி வித்தை காட்டியிருக் கிறார். அவருக்குத் தெரியாத விளையாட்டு எது? அவர் விளையாடாத விளையாட்டுத்தான் எது?

இரண்டு, 'இறுதிப் போரை நிறுத்த மாநில அரசும், மத்திய அரசும் இயன்ற வரை எல்லா நடவடிக்கைகளையும் செய்தது' என நாக் கூசாமல் கலைஞர் அப்போதும் சொன்னார், இப்போதும் சொல்கிறார். அரசியலில் பொல்லாத பொய்கள் சொல்லுகிறார்கள்தான், ஏற்றுக் கொள்கிறோம். முழுப் பூசணிக்காயைச் சோற்றுக்குள் மறைக்கின்ற கதைகளை எல்லாம் கேட்டிருக்கிறோம். ஆனால், இந்த வயதிலும் கலைஞர் ஐயா இப்படித் திருகுதாளம் போடுகிறாரே என எண்ணும் போது மனம் பேதலித்துப் போகிறது. இதனைச் செய்ய இவரால் இந்த வயதில் எப்படி முடிகிறது?

மூன்று, இறுதிப் போர் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தபோது 'போரை நிறுத்தாவிடில் நீராகாரம் கூட அருந்தாது உண்ணாவிரதம் இருந்து உயிரை மாய்ப்பேன்' எனச் சூளுரைத்து விட்டு, காலை 10 மணி யளவில் குளிரூட்டும் இயந்திரங்கள் மத்தியில் அவரின் உண்ணா விரதத்தை ஆரம்பித்து அதேநாள் மதியம் 12 மணியளவில், 'போர் நிறுத்தப்படுவதாக உறுதிமொழி கிடைத்திருப்பதால் கலைஞர் ஐயா உண்ணாவிரதத்தைக் கைவிடுகிறார்' என ஊடகங்களில் பிரசாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து, பழரசம் பருகி அந்த உண்ணாவிரதத்தை முடித்தவர் அல்லவா! எப்படித்தான் இவர்கள் இத்தகைய கேவலங்களைச் செய்யத் துணிகிறார்களோ?

றோம் நகர் பற்றி எரியும்போது நீரோ மன்னனால் பிடில் வாசிக்க முடியும் என்றால், ஏன் கலைஞர் ஐயாவால் முள்ளிவாய்க்கால் மூச்சுத்திணறி, மூச்சடங்கியபோது பழரசம் பருகி 'கதைவிட' முடியாது?

இத்தனையையும் கலைஞர் ஐயா மாறாட்டத்தில் சொன்னாலோ அல்லது செய்தாலோ ஓரளவிற்கு மனம், 'அது அவருடைய வயதுதானே' என ஏற்றுக் கொள்ளும்! ஆனால், அவர் நல்ல சுய நினைவோடும், அறிவோடும் இற்றைவரை சொல்வதும், செய்வதும்தான் தாங்க முடியாத துன்பத்தைத் தருகிறது.

இதன் பின்னர் மீண்டும் 30.04.2012அன்று நடைபெற்ற சந்திப்பில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில், "விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் போன்ற போராளிகளுக்கு எப்போதும் சாவு இல்லை" என்றிருக்கிறார். மேலும், தமிழீழம் குறித்து ஆராய விரைவில் 'டெசோ' மாநாடு என்றும் 29.05.2012இல் கூறியிருக்கிறார்.

"எத்தனையோ பேரை எத்தனையோ வழிகளில் காலன் வந்து காவுகொண்டு போகிறான்! ஆனால், இப்படிப்பட்ட யோக்கியமானவர்களை அவன் விட்டு வைப்பதன் காரணம்தான் என்னவோ?" எனக் கலைஞர் குறித்து ஆதங்கப்பட்ட ஒருவர் குறிப்பிட்டது மிகப் பொருத்தமான இடத்தில் நினைவுக்கு வருகிறது.

**கலைஞர் ஐயாவுக்கு ஒரே ஒரு ஆலோசனை மட்டும்!**

ஐயா, நீங்கள் தமிழைப் பற்றிப் பேசுங்கள். அதைப் பேசிப் பேசித்தானே வாழ்ந்தீர்கள், வளர்ந்தீர்கள், சம்பாதித்தீர்கள். பிறகேன், தமிழரைப் பற்றி அதிலும் ஈழத்தமிழரைப் பற்றிப் பேசுகிறீர்கள்? இப்போதுதான், அன்றைய நாட்களைப் போல நிறைய சினிமாப் படங்கள் வெளிவருகின்றனவே. முன்புபோல படங்களுக்கு கதை, வசனம், பாடல்கள் எழுதிச் சம்பாதித்து இருக்கலாமே! மேலும், எங்களை வைத்து அரசியல் நடத்தியே இவ்வளவு காலமும் நன்றாக உழைத்து விட்டீர்கள். இவ்வளவு காலமும் உழைத்தது போதாதா ஐயா? இனிமேலாவது எங்களை வைத்து உங்கள் அரசியலை நடத்தாமல்-நகர்த்தாமல், எங்களை எங்கள் பாட்டில் வாழ விடுங்களேன், உங்களுக்குக் கோடி புண்ணியம்!

மன்னா, ஆடி 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருமித்து ஒன்றாய் செயலாற்றுங்கள்



## 22

**அனுபவம் புகட்டிய பாடம்**

வின்சன் சேர்ச்சில் தன் அரசியல் வாழ்வின் வெற்றி தோல்விகளைப் பற்றி மனம் திறந்து உரையாற்ற ஆரம்பித்தார். வாழ்க்கை அனுபவங்கள் தந்த பாடங்களைப் பற்றி வியாபித்துச் சொன்னார்.

அவரின் இவ்வனுபவத்தைக் கொச்சைப்படுத்தும் நோக்குடன், "*சேர்* சேர்ச்சில் அவர்களே, உங்கள் அனுபவம் வியப்புக்குரியது. ஆனால், அனுபவம் என்பது மூடர்களுக்குத்தானே பாடம் கற்றுக்கொடுக்கும்!" என்றான் ஒருவன்.

வின்சன் சேர்ச்சில் அவன் கருத்தை ஏற்றுக்கொள்வது போல தலை அசைத்துவிட்டு, "ஆமாம், நீர் கூறுவது உண்மைதான். அதனால்தான் அவற்றை உமக்குச் சொல்கிறேன்!" எனப் பதிலளித்தார் அப்புத்திசாலிக்கு!

**'சிம்மாசன நோய்'!**

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய மூவாசைகளைப் பற்றிப் பாரம்பரியமாகச் சொல்லி வருகிறார்கள். இவ்வாசைகளைவிட இன்னுமொரு ஆசையைப் பற்றி எழுத்தாளர் அப்துள் ரகுமான் 'மரணம் முற்றுப்புள்ளி அல்ல' என்ற நூலில் சிம்மாசன நோய் என்ற தலைப்பில் எழுதுகிறார்.

"...மூவாசையை விடப் பெரிய ஆசை சிம்மாசன ஆசை. அதனால் தான் மூன்றையும் கொடுத்தாவது அதைப்பெற முயலுகிறான் மனிதன். அதிகாரம் விசித்திரமான சாராயம். அதைக் குடிக்கிறவன் தன்னை மறப்பதில்லை, பிறரை மறந்து விடுகிறான்..." என அவர் குறிப்பிடுகிறார்.

எந்த அளவிற்கு சிம்மாசன ஆசை நாம் வாழும் உலகைப் பீடித்தி ருக்கிறது என்றால் சிம்மாசனங்களில் அமர்வதற்காக அல்லது தம் இருக்கை களைத் தொடர்ந்து தக்க வைப்பதற்காக அல்லது இருப்பவனைக் கவிழ்த்து விட்டு அவ்விருக்கையில் ஏறிக் குந்துவதற்காக மனிதர்கள் படுகின்றபாடு — செய்கின்ற பிரயத்தனம் இருக்கிறதே, சொல்லிமாளாது! அது இறைவனை மையப்படுத்தி இயங்கும் சமய — மத அமைப்புக்களையும், நிறுவனங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட விட்டுவைத்த பாடில்லை என்றே தோன்றுகிறது. சொன்ன விளக்கம் போதும்! இதற்கு அப்பால் அமைதி காப்பது நல்லது என்றேபடுகிறது.

**'நடந்தவை எல்லாம் நன்றாகவே நடந்தன?'**

27.05.2012 அன்று மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சி மாநாடு நடந்திருக்கிறது. வீராவேசப் பேச்சுக்கள், திகில் ஏற்படுத்தும் தீர்மானங்கள், பட்டாபிசேகம் எனப் பல விடயங்கள் நடந்திருக்கின்றன.


"நடந்தவை எல்லாம் நன்றாகவே நடந்தன, நடக்கிறவை எல்லாம் நன்றாகவே நடக்கின்றன, நடக்கப்போகிறவை எல்லாம் நன்றாகவே நடக்கும்..." எனக் கீதை கூறும். அதுபோல, 2012 தமிழரசுக் கட்சி மாநாட்டில் நடந்தவை நன்றாகவே நடந்தன! என்றே எண்ணவேண்டியுள்ளது.

ஆனால், நடக்கிறதையும் நடக்கப்போவதையும் பார்த்தால் மகாகவி பாரதி பாடியதுபோல, "நெஞ்சு பொறுக்குதில்லையே நெஞ்சு பொறுக்கு தில்லையே, இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால், நெஞ்சு பொறுக்குதில்லையே நெஞ்சு பொறுக்குதில்லையே!..." என மன ஆறுதலுக்காக வேனும் இச்செய்யுளை அடிக்கடி சொல்லவேண்டி இருக்கிறது.

மேலும், பாரதி கூறுவதுபோல, 'எண்ணமோ பெரிது காரியமோ சிறிது. எல்லாவற்றுக்கும் சத்தமும் சந்தடியும் நிறைந்த காலமிது. நாம் எம் பணிகளை அமைதியாகவே செய்ய விரும்புகிறோம்' என்ற உறுதியான மனநிலையோடு தமிழ் தேசிய கூட்டமைப்பினர் செயற்பட்டால் எல்லாருக்கும் நன்மை பயக்கும் என்பது பலதரப்பட்டவர்களின் கருத்தாகும். எப்போதும் போல நமக்குள்ளே பழங்கதைகளைப் பேசிப்பேசியே காலத்தைக் கடத்தாது ஆக்கபூர்வமான செயல்களில் புலன்களைச் செலுத்துவது பயன்தரும்.

**தமிழரின் முக்குணங்கள்**

கலாநிதி மு. வரதராசனார் திருக்குறளுக்குப் பொருள் விளக்கம் எழுதியவராவார். தமிழினம் பற்றியும் ஆய்வுகளையும் அவர் செய்திருக்கிறார். அதில் போட்டி, பொறாமை, ஒற்றுமையின்மை ஆகிய முக்குணங்கள் தமிழர்களோடு இயல்பிலேயே இருக்கிறது என்கிறார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.வரதராசனாரின் ஆய்வு முடிபு, சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஓர் ஆய்வு முடிபுதான். மக்களின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் இவற்றைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டிய கடப்பாடு அவர்களுக்கு இருக்கிறது என்பதை அழுத்திக் கூறவேண்டி இருக்கிறது.

**தமிழ் தேசியக் கூட்டமைப்பின் குத்துக்கறணம்?**

தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருக்கும் சிலர் தங்கள் நிலைப் பாடுகளில் அவ்வப்போது குத்துக்கறணம் போடுவதையும், 'குண்டக்க மண்டக்க' பேசுவதையும் – கருத்துக் கூறுவதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இதனைத் தமிழ் சிவில் சமூகம் ஒருசில சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டி இருந்தது. குத்துக்கறணம் போட்டு விளையாடுகிற வயதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் உள்ள பலர் இல்லை என்பதை, அதில் உள்ளவர்கள் கொஞ்சம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அப்படி இல்லையென்று, குத்துக்கறணம் போட்டு விளையாட முனைந்தால் ஊட்டி முறிந்து முண்டமாய்தான் கிடக்க வேண்டி வரும்! அப்படி, ஊட்டி முறிந்து முண்டத்தோடு முனங்கிக் கொண்டிருக்கின்ற சிலர் இருக்கி றார்கள் என்பதைக் குத்துக்கறணம் போட அவ்வப்போது நினைப்பவர்கள் ஞாபகப்படுத்திக் கொள்வது நல்லது.

**தமிழ் கூட்டமைப்புக்குள்!**

பிரதேசசபைத் தேர்தல்களின் பின்னர், தமிழ் தேசிய கூட்டமைப் பிற்குள் சில குள்ளநரிகளும் ஊடுருவி இருப்பதுபோல ஆங்காங்கே சில அடையாளங்கள் தென்படுகின்றன. தனிப்பட்ட, வெறும் சுயநல தேவைகளை நிறைவு செய்வதற்காகக் குறுக்கு வழிகளைச் சிலர் நாடுகிறார்கள்போலத் தெரிகிறது.

பொறுப்பில் உள்ள கூட்டமைப்பினர், 'எங்களுக்கு எல்லாம் தெரியும்!' என நினைப்பார்களேயானால் எல்லாம் கவிண்டு கொட்டி, 'எப்பிடி இருந்தநா, இப்பிடி ஆயிற்றனே' என்ற விவேக்கின் நகைச்சுவைத் துணுக்கைப்போல சிலருடைய அரசியல் வாழ்வும், இன்னும் சிலரின் அரசியல் பிரவேசமும் மாறிவிடும் என்பதையும் சுட்டிக்காட்டுவது தவிர்க்க முடியாததாகிறது!

கவனமாக – விவேகமாக – விழிப்பாக இருந்து சொல்லாலும் செயலாலும் நேர்மையோடும் மனச்சுத்தியோடும் செயற்பட வேண்டியது கூட்டமைப்பினரின் இக்காலத்துத் தலையாய கடமையும் பொறுப்புமாகும். இதனை உறுதிப்படுத்துவது பொறுப்பானவர்களின் கடனாகும்.

ஊர்களில், கிராமங்களில், மக்களிடையே வேண்டாத – தகாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளையும் பிரிவினைகளையும் உருவாக்கிக் காலத்தை ஓட்டலாம் என இனிமேலும் நினைக்காமல் செயலாற்ற முன் வருவார்களேயானால், அது கூட்டமைப்புக் கூடியிருக்க உதவியாய் இருக்கும்.

**தமிழ் சிவில் சமூகம்**

தமிழ் சிவில் சமூகத்தின் முன்னெடுப்புகள் காலத்தின் தேவையும், பாராட்டிற்கு உரியவையுமாகும். தமிழ் தேசிய கூட்டமைப்பினர், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளையும் நீண்டகால அபிலாஷைகளையும் வென்றெடுக்கத் தமிழ் சிவில் சமூகத்தினரின் ஆலோசனைகளுக்குச் செவிசாய்ப்பது, அவர்களுக்கு நிச்சயமாய் உதவியாய் இருக்கும்.

இல்லை என்று தாங்கள் நினைத்தபடி செயற்படுவார்களேயானால், 2013ஆம் ஆண்டு அதாவது அடுத்த மே தினத்திற்கு கட்டியிருக்கின்ற வேட்டியைக் கழற்றித் கொடுத்தாலும் கோவணத்தோடு நின்று கொடிபிடிக்க வேண்டி வரலாம்! கோவணத்திற்கு அடுத்த கட்டம் எப்படி இருக்கும் என்பதை நீங்களே கற்பனை செய்து கொள்ளலாம்!

**சிவில் சமூகத்தைத் தலைமை தாங்கும் ஆயன்**

தமிழ் சிவில் சமூகத்தினுடைய பிரதிநிதிகளுக்கு தலைமை தாங்குபவராக மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு அவர்கள் திகழ்கிறார். ஆயர் அவர்களின் அரசியல் நிலைப்பாடுகள், கடந்த பல ஆண்டு களாக குரல் இழந்த நம் மக்கள் சார்பான செயற்பாடுகள் அனைத்தையும் நோக்குகிறபோது அவரின் ஆயத்துவ ஆளுமையும், ஆடுகளின் மீது ஆயனுக் குள்ள அக்கறையும் மிகத் துல்லியமாகப் புலப்படுகிறது.

01.03.2012இல் மன்னார் ஆயருடன் 31 அருட்பணியாளர்கள் இணைந்து ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு, 'மனித உரிமை மீறல்கள் மற்றும் போர் குற்றங்கள் தொடர்பில் உண்மைகள் ஏற்கப்பட்டு பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்பட வேண்டும்' என்ற தலைப்பில் கடிதம் ஒன்று அனுப்பி வைத்தனர்.

இது தொடர்பாக பி.பி.சி. செய்தி நிலையத்தினால், 'இக்கருத்து, உங்கள் தனிப்பட்ட கருத்தா அல்லது கத்தோலிக்கத் திருச்சபையினுடைய ஒட்டுமொத்தக் கருத்தா?' என ஆயர் இராயப்பு யோசேப்பிடம் வினவப்பட்டது. 'உண்மையைச் சொல்வதற்கு ஒரு பெரிய கூட்டத்தை வைத்துக் கொண்டுதான் சொல்லவேண்டும் என்றல்ல. உண்மையை, தனித்தும் சொல்லத் தயங்கேன். இது எங்களுடைய தனிப்பட்ட கருத்துத்தான்...' எனக்கூறி, தமது நிலைப்பாட்டை எப்போதும்போல துணிவோடு நிலை நாட்டியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய தைரியம் – துணிவு ஆயருக்கு இருக்க வேண்டும். அது நம் ஆயருக்கு இருக்கிறது.

**கைகொடுப்போம், ஆயரின் கரங்களைப் பலப்படுத்துவோம்**

ஆக, இப்போது அவரின் கரங்களுக்கு நாம் கட்டாயமாக வலுச் சேர்க்க வேண்டியது நமது பாரிய கடன். அந்த வகையில்தான், தென்னிலங்கை அருட்பணியாளர், துறவியர், பொதுநிலையினர் என 61 பேர் 12.03.2012 அன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை மையத்திற்கு மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக, மன்னார் ஆயரின் – அவருடன் கையொப்பமிட்ட 31 அருட்பணி யாளர்களின் நிலைப்பாட்டை ஆதரித்துக் கடிதம் அனுப்பியிருந்தனர். பாராட்டப் பட வேண்டிய விடயம் மட்டுமல்ல நம் பிரதேசத்துப் பொது அமைப்புகளாலும், ஒன்றியங்களாலும், சிறப்பாகத் திருச்சபை சார்ந்த எல்லாத் தரத்தில் உள்ளவர்களாலும் பின்பற்றப்பட வேண்டிய ஒன்று என்பதையும் குறிப்பிட்டுக் காட்டாமல் இருக்க முடியாது.

மன்னார் ஆயர் மீது *சி.ஐ.டியினர்* கடுமையான விசாரணை நடத்தி யிருப்பதாகப் பத்திரிகைகள் 12.05.2012இல் செய்தி வெளியிட்டிருக்கின்றன! இவ்வாறான விடயங்கள் மட்டில் நம் சிந்தனைகள் என்ன? எம் கூட்டுச் செயற்பாடுகள் எப்படித் தொடர்ந்து அமையப் போகின்றன?

இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டுதான் 27.05.2012 அன்று மன்னார் புனித செபஸ்தியார் ஆலயச் சூழலில் நடத்தப்பட்ட அமைதிப் பிரார்த்தனை அமைந்திருந்தது என்பதை நோக்க வேண்டியிருக்கிறது. மிகக் காத்திரமான செயற்பாடு ஒன்று நடந்தேறி இருக்கிறது.

**ஐயகோ இறைவா!**

கடுமையான போர் நடந்த காலமாகிய 2009இல், இரண்டு தடவைகளாக நம் நாட்டு ஜனாதிபதி திருத்தந்தை 16ஆம் பெனடிக்ரை சந்தித்திருக்கிறார். இச்சந்திப்புக்களை ஏற்பாடு செய்து கச்சிதமாக இக்காரி யங்களை முடித்தவர் கொழும்புக் கருதினால் மல்கம் றஞ்சித் அவர்கள் என்று சொல்லப்படுகிறது.

இவ்வாண்டு 2012 பங்குனியில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்குப் பாதகமான தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருந்தது அனைவரும் அறிந்ததே. இதனால் சர்வதேச நெருக்குவாரங் களைச் சரி செய்வதற்கும், தற்போது இலங்கையை ஆளும் தரப்பு மட்டில் நல் அபிப்பிராயத்தை ஏற்படுத்தவும் மீண்டும் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ரைக் கடந்த வாரம் நம் ஜனாதிபதி சந்தித்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சந்திப்பின் ஒரு பகுதியாக ஜனாதிபதியுடனும், அவரின் பரிவாரங் களுடனும் கருதினால் மல்கம் றஞ்சித் அவர்கள் வத்திக்கானில் கேக் வெட்டிக் கொண்டாடி இருக்கிறார் என்பதைக் *கலர்* படங்களுடன் 17.06.2012 அன்று மெசஞ்சர் பத்திரிகை பிரசுரித்திருக்கிறது!

ஐயகோ இறைவா! அடக்குமுறையாளர்களோடும் ஆக்கிரமிப்பாளர் களோடும் நடுவர்கள் கூட்டுச் சேர்ந்திருக்கிறார்கள். 'இறைவா, நீயாவது நீதியின் பக்கம் – உண்மையின் பக்கம் நிற்பாய் என நம்புகிறோம்' என்றே மன்றாடவேண்டி இருக்கிறது.

**இடைவிடாத வேண்டுதல்!**

அப்படியாயின், இரத்தம் தோய்ந்த பூமியில் நின்று கொண்டு, வீழ்ந்து கிடக்கிற – அநாதரவாய் ஆக்கப்பட்டு, அல்லல்பட்டு, அலைக்களிக்கப்படுகின்ற ஏழை மக்கள் சார்பாக பெரும் நம்பிக்கையின் சின்னங்களாய் திகழுகின்ற வடகிழக்கு ஆயர்கள், ஏன் இணைந்து நின்று எம் மக்களின் இருப்புக்காகக் குரல் கொடுக்கக் கூடாது? காரணம் இவர்கள் பேச்சு ஒன்றுதான் இப்போது கேட்கப்படக்கூடிய நிலையிலும், சர்வதேச ரீதியில் ஏதாவது சாதிக்கக்கூடிய நிலையிலும் இருக்கிறது.

நிலைகுலைந்து, சீரழிந்து, பலவீனமுற்று, காயப்பட்டு, நோயுற்று, வழிதவறி, பரிதவித்து நிற்கும் ஆடுகளுக்காக மறைக்கல்வி ஆண்டில் ஒன்றுசேர்ந்து ஒரே மடலில் கையொப்பமிட்டு அறிவித்ததுபோல குறைந்த பட்சம் எம் இருப்புக்கான ஏக்கத்தை ஏனும் நிலைநிறுத்தலாம்தானே என்பது சிதறுண்டு வாழும் ஆடுகளின் இடைவிடாத வேண்டுதல்! ஆண்டவனிடத்திலும் ஆயர்களிடத்திலும்!

**நடுநிலைமை என்று நழுவக்கூடாது!**

நீதிபதியாக நியமிக்கப்பட்டார் முல்லா நகூருதீன். நீதிமன்றச் செயற்பாடுகளை அறிந்து கொள்வதற்கு முன்பே, வழக்கு ஒன்று வந்துவிட்டது. இரண்டு பேர் தமது வாதங்களைக் காரசாரமாக முன்வைத்தனர்.

முதலாமவர் சொன்ன வாதத்தைக் கேட்ட முல்லா, "நீ கூறுவது சரிதான்" என்றார். பின்னர் பிரதிவாதியான இரண்டாம் ஆள் சொன்னதைக் கேட்ட முல்லா, "நீ கூறுவது சரிதான்" எனப் பதிலளித்தார். இருவருக்கும், "நீ கூறுவது சரிதான்" என முல்லா கூறியதைக் கேட்ட நீதிமன்ற உதவியாளர், "முல்லா, இவர்கள் இருவரும் கூறியது சரியாக இருக்க முடியாதே!" எனச் சொன்னதற்கு, முல்லா, "நீ கூறுவதும் சரிதான்" என்றாராம்.

நடுநிலைமை வகிக்க வேண்டும்! அதைவிடுத்து 'நாங்கள் பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவர்கள்' என்று சொல்லி மதில்மேல் பூனையாய் இருந்துவிட முடியாது. மக்களின் அபிலாஷைகளை – மக்கள் எதிர்கொள்ளும் அன்றாட பிரச்சினைகளை – உண்மை, யதார்த்த நிலைகளை எடுத்துச் சொல்ல வேண்டிய நேரங்களில் மௌனிக்க முடியாது. தகுந்த சந்தர்ப்பங்களைத் தவறவிடாமல் பயன்படுத்தி இவ்விடயங்களைத் தொடர்ந்து வெளிப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டியது, பொறுப்பு வாய்ந்தவர்களின் தலையாய அறக்கடனாகும்.

**தொடர் செயற்பாடுகள் மிகமிக அவசியம்**

வெளிநாடுகளில் இருந்து வருகின்ற இராஜதந்திரிகள் செய்கின்ற சந்திப்புக்களின்போது மேற்சொன்ன விடயங்களைக் கூறிவிட்டால் மட்டும் போதாது. அதனோடு நம் கடமை முடிந்து போவதில்லை.

நமது மண்ணின் மக்களின் இருப்புக்கான அரசியல் தீர்வு, சுபிட்சமான – சுதந்திரமான வாழ்வு பற்றி உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் தொடர்ந்து நினைவூட்டல்களைச் செய்ய வேண்டி இருக்கிறது. இல்லை என்றால், இன்னும் கொஞ்ச நாட்களில் நம்மை மேற்கத்தேயமும் மறந்து விடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

புலம்பெயர்ந்த நம்மவர்களோடு அர்ப்பணிப்புமிக்க ஒருசிலர் இப்பணியை மிகவும் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். எனவே, இச்செயற்பாடு ஒரு தொடர் செயற்பாடு என்பதை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். இதைத் தொடர்ந்து அர்ப்பணிப்போடு செய்வோமா? இதைத் தொடர்ந்து பிளவுபடாமல் செய்வார்களா?

மன்னா, ஆவணி 2011





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியையும் உண்மை யையும் நிலைநாட்டுங்கள்



## 23

**மன்னிக்கப் பழக, நம்மைப் பழக்கிக்கொள்ள வேண்டும்**

ஓய்வுநிலை ஆசிரியர் ஒருவர் இக்கட்டுரைத் தொடரினை வரி விடாமல் வாசிக்கின்ற ஓர் அன்பர். ஓரிரு வாரங்களுக்கு முன்னர் என்னைச் சந்தித்தபோது, "உங்களின் கட்டுரைகளை வரிவிடாமல் வாசித்து அனுபவிக்கிறேன். அதேவேளை, வரிகளுக்கிடையிலும் நீங்கள் சொல்வதையும் புரிந்துகொள்கிறேன். ஆனால், நாம் மன்னிக் கவும் பழகிக்கொள்ள, நம்மைப் பழக்கிக்கொள்ள வேண்டும்தானே!..." எனக் கனிவான வேண்டுகோள் விடுத்து என் கவனத்தை ஈர்த்தார்.

எமக்கும் எம்மக்களுக்கு எதிராக நேரடியாகவோ மறைமுகமா கவோ கைகோர்த்து நின்று செயற்பட்ட - செயற்படுகின்ற திருநிலை சார்ந்தோரையும், திருநிலை சாராதோரையும் மன்னிக்க வேண்டும். இது, சரியானதும் சந்தேகத்திற்கு இடமில்லாததுமான கிறிஸ்தவ மனப்பான்மையாகும்.

மகாத்மா காந்தி கூறுவதுபோல 'கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல் என்ற விதியைப் பிற்பற்றுவோராக இருந்தால் நாம் எல்லாரும் ஒற்றைக்கண்ணராகத்தான் மாறியிருப்போம்' என்ற சிந்தனை மனங்கொள்ளத்தக்கது. எனினும் அதனோடு இணைந்த இன்றியமை யாத இன்னுமொரு விடயம் இருக்கிறது என்பதை யாரும் 'லேசாக' மறந்து போகக்கூடாது.

**'எழுபது தடவை ஏழுமுறை!...'**

இயேசுவின் இறுதி வேண்டுதல்களில் ஒன்று: "தந்தையே! இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை" (லூக்கா23:34) என்பதாகும்.

அறிந்து, நன்றாகத் தெரிந்து, வேண்டுமென்றே வாழத்துடிக் கும் ஒரு மக்கள் இனத்தின் இருப்பைக் கேள்விக்குறியாக்கி, அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி எல்லாம் அடிமைப்படுத்த முடியுமோ அப்படியெல்லாம் அடிமைப்படுத்தி, செயற்படுகின்றவர்களையும் அதற்குத் துணை போகின்றவர்களையும் எப்படி மன்னிப்பது? எத்தனைமுறை மன்னிப் பது? ஏன் மன்னிக்க வேண்டும்? போன்ற அடிப்படையான கேள்விகள் உள்ளத்தை இன்னும் குடைந்துகொண்டுதான் இருக்கின்றன.

மேற்சொன்ன வினாவிற்கு, “ஏழுமுறை மட்டுமல்ல, எழுபது தடவை ஏழுமுறை என நான் உனக்குச் சொல்கிறேன்” (மத்தேயு 18:22) என இயேசுவின் மேற்கோள் காட்டப்படலாம். இழைக்கப்பட்ட அநீதி களுக்கு பரிகாரம் செய்யப்படாமல் எவ்வாறு மன்னிப்பு சாத்தியமாகும்? ‘மன்னிக்க வேண்டும்’ என்பதற்கு மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. எனினும், மன்னிப்பதற்கான மனமும், சந்தர்ப்பமும், சூழலும் அமையவும் வேண்டும் அல்லவா!

எமக்கெதிராகத் தீமை செய்பவர்களை மன்னிக்கவேண்டும். அதேசமயத்தில் உண்மையை மறைக்காமல், தீமையைச் சுட்டிக் காட்டும் துணிவும் வேண்டும், நீதியை நிலைநாட்டத் துணியவும் வேண்டும். உண்மைகள் கண்டறியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் மன்னிப்பு இயல்பாக இடம்பெறுவது சாத்தியமாகும்.

**நீதிநிலைநாட்டப்பட வேண்டும்**

“உங்களை வலக் கன்னத்தில் அறைபவருக்கு மறு கன்னத்தை யும் திருப்பிக் காட்டுங்கள்” (மத்தேயு5:39) என்கின்ற இயேசு, “நான் தவறாகப் பேசியிருந்தால் தவறு என்னவெனக் காட்டும். சரியாகப் பேசியிருந்தால் ஏன் என்னை அடிக்கிறீர்?” (யோவான் 18:23) எனக் கன்னத்தில் அறைந்தவனைப் பார்த்துக் கேட்பதன் பொருளென்ன என்பதையும் நம் சிந்தனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்.

இதில்தான் இன்னுமொரு ஆழமான அர்த்தம் பொதிந் திருக்கிறது. இயேசு, “உங்களை வலக் கன்னத்தில் அறைபவருக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்” என்றாரே தவிர, ‘வலது கன்னத்தில் அறைபவனுக்கு மறு கன்னத்தைத் திருப்பித், திருப்பித், திருப்பித், திருப்பிக் காட்டுங்கள்’ எனக் கூறவில்லை! அத்துடன், ‘...சரியாகப் பேசியிருந்தால் ஏன் அடிக்கிறீர்?’என நீதியைக் கேட்கத் துணிவுவேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டுகிறார்.

ஆக, “நீதிநிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற் றோர்: ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர்” (மத்தேயு 5:6) என்றும், “நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்: ஏனெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணரசு அவர்களுக்குரியது" (மத்தேயு 5:10) எனவும் இயேசு நீதி நிலைநாட்டுவோரையும், நீதிக்காக துன்புறுகிறவர்களையும் விசேட விதமாக நோக்குகிறார். நீதிக்காக உழைப்போருக்கு விண்ணரசு உண்டென்று இயேசு உறுதியாய்க் கூறுகிறார் (மத்தேயு 5:10).

**வன்னிப் பயணம்**

2012ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் நான்கு தடவைகள் வன்னிப் பிரதேசத்திற்குச் சென்றிருந்தாலும் புதுக்குடியிருப்புக்கு அப்பால் முள்ளிவாய்க்கால் ஊடாகச் செல்லமுடியாத நிலைமையே நிலவியது. 2012 ஆவணி மாதம் முதல்முறையாக முள்ளிவாய்க்கால் ஊடாக வட்டு வாகல் அடைந்து முல்லைத்தீவுக்குச் சென்று வரக்கூடியதாக இருந்தது.

அங்கு, கண்ணில் பட்ட விடயங்களே குருதியை உறைய வைத்தது என்றால் 2009 வைகாசியில் நடந்த போர் நடவடிக்கைகள் எவ்வாறு இருந்திருக்கும்?

**ஜனநாயக சோசலிசக் குடியரசு!**

எங்கள் மண்ணில் எங்கள் மொழியில் அறிவிப்புப் பலகைகளை வாசிப்பதற்குக்கூட நாதியில்லையே என்றெண்ணியபோது இதயம் ஒரு கணம் நின்று துடித்தது. இது வெறும் வார்த்தைகள் அல்ல உடலும் மனமும் அனுபவித்த ஓர் அவல அனுபவம். அறிவிப்புப் பலகைகளில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே எழுதி வைத்திருக்கிறார்கள்!

1956இல் 'சிங்களம் மட்டும்', எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டார நாயக்க மூலம் அறிமுகமானது. 1956ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை (2012) சரியாக 56 ஆண்டுகள் கடந்த நிலையில், இக்கொள்கையில் ஒருவாறாக ஒருபடி முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள்: 'சிங்களம் ஆங்கிலம் மட்டும்' என்று! இந் நாட்டைத்தான், 'ஜன நாயக சோசலிசக் குடியரசு' என அழைக்கின்றார்கள்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'எலும்பும் இரும்பும்' ஆன முள்ளிவாய்க்கால் பிரதேசம்**

"முள்ளிவாய்க்கால் சென்று என்ன பார்த்தீர்கள்?" எனப் பலர் உள்நாட்டில் இருந்தவர்களும் வெளிநாட்டிலிருந்து கதைத்தவர்களும் கேட்டார்கள். "எலும்பும் இரும்பும்" என்றேன். "இதைப் பார்க்கத்தானா இவ்வளவு தூரம் சென்றீர்கள்?" எனச் சிலர் விபரம் கேட்டார்கள்.

என்ன செய்வது முள்ளிவாய்க்காலில் மிஞ்சிக்கிடப்பது அவை தானே! இன்னும் சில நாட்கள் சென்றால் அவற்றைக்கூட பார்க்க முடியாத சூழல்தான் நிலவுகிறது. அவற்றைக்கூட விற்றுப் பிழைத்துக் கொண்டிருக்கிறது ஒருவகையான ஜீ(ஆ)வ(தி)ரா(வா)சிக் கூட்டம்!

அங்கு, எரிந்து குவியலாய்க் கிடக்கும் இரும்புகளிடம் கேட்டால் நடந்த கதை சொல்லும்! அங்கு, பொசுங்கிப்போன மரங்களிடம் கேட்டால் விளைந்த கொடுமை விளக்கும்! அங்கு, சிதறுண்டு சிதைந்து போய் கிடக்கும் வீடுகளைக் கேட்டால் நடந்து முடிந்த கொடூரம் கூறும்! அங்கு நடந்து திரியும் நாய்களிடம் கேட்டால்கூட உண்மைநிலை பகரும்!

இவற்றைப் பகிர்ந்து கொள்ளும் சுதந்திரம்கூட அங்கு வாழ்கின்ற வன்னி மக்களுக்கு இல்லையே என்பதால்தான் மரங்களிடமும் மாடுகளிடமும் இவற்றைக் கேட்டறிய வேண்டி இருந்தது.

அந்த மண்ணில் நின்றுகொண்டிருந்தபோது ஒன்று மட்டும் உறுதியாய் மனதை உறுத்திக் கொண்டிருந்தது: இறைவாக்கினன் எசேக்கியல் இறைவாக்குரைத்ததுபோல 'மரணித்துப் போன இந்த மனிதர்களும் மாண்டுபோன இந்த மனிதமும் ஒருநாள் உயிர்பெற்றெழு வார்கள்' என்பதுதான் அது!...

**காட்சிப் பொருளானோம்/அனுதாபத்துக்குரியவரானோம்!**

புதுக்குடியிருப்பைக் கடந்ததும் மந்துவில் என்னுமிடத்தில் *வோர் மியூசியம்* வைத்திருக்கிறார்கள். ஒரு வீரனை ஒன்பது கோழைகள் கூட்டுச்சேர்ந்து கேவலமாய் தாக்கி கோழைத்தனமாய் கொன்றுவிட்டு தங்கள் வீரதீரச் சாதனைகள் என்று கொக்கரித்துக் கொள்கிறார்கள். இக்கொக்கரிப்பைப் பார்ப்பதற்கு தென்பகுதியிலிருந்து வன்னிப் பிரதே சத்திற்கு மக்கள் படையெடுத்த வண்ணம் இருக்கிறார்கள்.

அவர்களின் பெரும்பாலானோரின் பார்வைக்கு வன்னி மண்ணும், வன்னி மக்களும் தற்போது *எக்சிபிசன்* ஆகியிருக்கிறார்கள். அதாவது, வன்னியும் வன்னிமக்களும் ஒருவகையான காட்சிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாக மாற்றப்பட்டிருக்கிறார்கள்! வடக்கிற்கு வரும் தென்பகுதியின் மற்றுமொரு சாராருக்கு, இம்மக்கள் 'அனுதாபத்துக்குரியவர்கள்' ஆகியிருக்கிறார்கள்.

இவற்றுக்கு அப்பால் தென்பகுதியில் இருந்து வருபவர்களால் சிந்திக்க முடியாதுள்ளது. கழிவிரக்கம் கொள்கிறார்களே தவிர மனம்திறந்து எம்மக்களின் உரிமை வாழ்வுபற்றி அவர்களால் யோசிக்க முடியாதிருக்கிறது. இருப்பினும் அவர்களிடையே ஆங்காங்கே ஒருசில ஜீவன்கள் நம் மக்களின் உண்மை நிலையை உணரத்தான் செய்கின்றன. உணர்ந்து, அவர்களால் என்ன செய்யமுடிகிறது?

**நாங்கள் தோற்றுப்போனவர்களா? அவர்கள் வெற்றிபெற்றவர்களா?**

'முள்ளிவாய்க்காலோடு நாங்கள் தோற்றுப்போனவர்கள்' என நாம் நினைக்கிறோம். 'முள்ளிவாய்க்காலிலிருந்து நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம்' என அவர்கள் நினைக்கிறார்கள். நாங்கள் தோற்றுப் போனவர்களும் அல்ல, அவர்கள் வெற்றிபெற்றவர்களும் அல்ல!

அடிப்படை அரசியல் பிரச்சினையைத் தீர்க்க போர்வழியை இரு தரப்பினரும் பின்பற்றியதே இரு சமூகத்தினருக்கும் மிகப்பெரிய இழுக்கும் தோல்வியும்தானே! பின்பு, எப்படி ஒருசாரார் மறுசாராரை வெற்றிகொள்ள முடியும்?

ஆபிரிக்க நாட்டு சமூகவியலாளர் பவுலே பரேரே என்பவரின் கருத்துப்படி, 'ஒரு சமூகம் அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை பெறவிரும்பினால் அடிமைப்படுத்துபவரும் அடிமைப்படுத்தப்படுபவரும் அறியாமை என்ற இருளிலிருந்து முதலில் விடுபட வேண்டும்' என்கிறார்.

அடிமைகளாய் இருக்க நாம் பழகிக்கொண்டோம். அடிமைப் படுத்த அவர்கள் பழகிக்கொண்டார்கள். பின்பு, நமக்கும் அவர்களுக்கும் ஏது விடுதலை? நம் நாட்டுக்கு ஏது சுதந்திரம்?

**இராணுவக் குறைப்புக்குப் பதில், குவிப்பு!**

"நாங்கள் இராணுவத்தால் சூழப்பட்டிருக்கிறோம்" என யாழ்.ஆயர் காலச்சுவடு என்ற பத்திரிகையில் சுட்டிக்காட்டியிருப்பதாக பாதுகாவலன் 19.08.2012 அன்று தலைப்புச் செய்தி தீட்டியிருந்தது. "போருக்குப் பின் தமிழர் பகுதிகளில் இருந்துவரும் இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்படும் என எதிர்பார்த்தோம். ஆனால் அப்படி நடக்கவில்லை, இராணுவம் மேலும் அதிகமாகக் குவிக்கப்பட்டிருக் கிறது. அது மக்களின் இயல்பு வாழ்க்கையை முழுமையாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கிறது..." எனக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

"நாங்கள் இராணுவத்தால் சூழப்பட்டிருகிறோம்" என்றால், 'நாங்கள் இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டிருகிறோம்' என்றும் அர்த்தம் கொள்ளலாம். வேறென்ன, அதுதானே நடக்கிறது, அதைத் தானே அவர்கள் மிகச் சாதுரியமாகச் செய்துவருகிறார்கள். அன்றும் அப்படித்தான், இன்றும் அப்படித்தான். இனி அவர்கள், என்றும் அப்படித்தான் இருக்கப்போகிறார்கள் என்பதற்கு இப்போது நடக்கின்ற அரசியல் நகர்வுகளும் இராணுவ நிகழ்வுகளும் கட்டியம் கூறுவது போலவே தென்படுகிறது.

யாழ்.சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழுவினர் 24.08.2012 அன்று யப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அக்காசியை யாழ். ஆயர் இல்லத்தில் சந்தித்தபோது இதே விடயத்தைச் சுட்டிக்காட்டி யுள்ளனர். "யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் முடிவடைந்துள்ள போதிலும் தமிழ் மக்களின் அடிப்படை வாழ்வியலில் எள்ளளவும் முன்னேற்றம் ஏற்படவில்லை. மாறாக இராணுவப் பிரசன்னம் அதிகரித்து வருகின்றது. இதனால் அரசாங்கம் கூறும் சமாதானத்தின் பயனாக தமிழ் மக்கள் எதனையும் அனுபவிக்க முடியவில்லை" எனத் தெரிவித்துள்ளனர்.

**ஐக்கியநாட்டு மனித உரிமைகள் பேரவையிலிருந்து!**

மீண்டும், ஐக்கிய நாட்டு மனித உரிமை அதிகாரிகள் யாழ். ஆயரையும் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழுவின் பிரதிநிதிகள் சிலரையும் 17.09.2012 அன்று யாழ்.ஆயர் இல்லத்தில் சந்தித்துள்ளனர். இச்சந்திப்பில் மிக முக்கியமான விடயங்களை ஐக்கிய நாட்டு மனித உரிமை அதிகாரிகளிடம் இவர்கள் எடுத்துக்கூறி இருந்ததாக ஊடகங்கள் 18.09.2012இல் செய்தி வெளியிட்டுள்ளன.

**ஐக்கியநாட்டு மனித உரிமைகள் பேரவைக்கு!**

யாழ்.ஆயரினதும் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்கு மான குழுவினரதும் கருத்துக்களை வைத்துப் பார்க்கிறபோது ஒருசில முக்கிய விடயங்கள் பற்றி தமிழ்ச் சமூகமாகச் சேர்ந்து கரிசனை கொள்ள வேண்டி இருக்கிறது.

1.இராணுவ மயமாகின்ற நம் நிலங்கள், 2. அத்துமீறிய நில ஆக்கிரமிப்புக்கள், 3.அரசியல் தீர்வு குறித்து குறைந்த பட்ச அக்கறை கூடக் காட்டாத அரசின் நிலை போன்றவைகளைப் பற்றி நாம் தொடர்ந்து சிந்திக்கவும் இவற்றை எதிர்கொள்ளச் செயல் திட்டங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுத்து உடனடியாகச் செயற்படவும் வேண்டியுள்ளது.

இவ்வாண்டு இறுதிப்பகுதியில் அல்லது அடுத்தாண்டு முற்பகுதியில் ஜெனிவாவில் நடைபெறயிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு 'வடகிழக்குத் தமிழர்களாகிய எங்களின் இன்றைய நிலை' என்ற தலைப்பில் அறிக்கை தயாரித்து ஒரு கையெழுத்து வேட்டையே நடத்தி ஐக்கியநாட்டு மனித உரிமைகள் பேரவைக்கும் சர்வதேசத்திற்கும் உண்மையைப் புரியவைக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது.

மேலும் ஐக்கிய நாட்டு மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு இவ்வாண்டின் இறுதிப் பகுதியில் விஜயம் செய்யும் சந்தர்ப்பத்தில் இதனை நேரில் கையளிக்கக் கூடிய வாய்ப்பும் இருக்கிறது. அத்துடன் முள்ளிவாய்க்கால் தொடர்பான சர்வதேச நீதி விசாரணையையும், காணாமல் போனோர், அரசியல் சிறைக்கைதிகள் போன்றோரின் நீதி விசாரகைளையும் ஆரம்பிக்கக் கோரி சர்வதேச மட்டத்தில் வலியுறுத்த முடியும்.

**செயற்பட இதுதான் நேரம், செய்வோமா?**

இக்கையெழுத்து வேட்டையில், எம்மத்தியில் உள்ள சர்வமதத் தலைவர்கள், ஆயர்கள், கோவில் *(Temple)* – தேவாலய *(Church)* குருக்கள், புத்திஜீவிகள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் - விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், பொது அமைப்புகளின் - சங்கங்களின் - சாமாசங்களின் - நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஆசிரிய சமூகத்தினர், சட்டத்துறையினர், பொதுமக்கள் என அத்தனை பேரையும் இணைத்துக் கொள்வது மிக முக்கியமானது.

'சம்பளத்தைக் கூட்டு' என்று மாதக்கணக்கில் எதிர்ப்புத் தெரிவித்து, பகிஸ்கரிப்புச் செய்து, தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் நம் பேராசிரியத் திலகங்கள், மேற்சொன்ன ஆக்கபூர்வமான செயற்பாடு போன்றவற்றிலும் ஆர்வத்தோடு ஈடுபடலாம் அல்லவா!

இப்போது கேள்வி எதுவெனில், யார் மணிகட்டுவது என்பது தான்? மனித உரிமைப் பணிகளில் ஈடுபடும் நம் பணியகங்கள் ஆயினும் இப்பேர்ப்பட்ட காத்திரமான விடயங்களை முன்னெடுத்துச் செயலில் குதிக்கலாமே? செயற்பட இது நேரம், செய்வோமா?

*மன்னா, கார்த்திகை 2012*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியின்படி செயற்படுங்கள்



## 24

**மரியாதை!**

ஜேர்மனியில் கிட்லரின் சர்வாதிகார ஆட்சி நிலவிக்கொண்டிருந்த காலம் அது. ஒரு தடவை கிட்லர் மாறுவேடத்தில் சினிமா பார்க்கச் சென்றிருந்தான். திரையரங்கில் திரைப்படம் முடிந்ததும் கிட்லரது உருவப்படம் தோன்றும்போது அனைவரும் எழுந்து நின்று வணக்கம் செலுத்தவேண்டும் என்ற எழுதப்படாத சட்டம் இருந்தது.

மாறுவேடத்தில் இருந்த கிட்லர் மட்டும் எழுந்துநின்று வணக்கம் செலுத்தவில்லை. கிட்லருக்கு அருகில் இருந்தவன் எழுந்து நின்று வணக்கம் செலுத்தியபடி கிட்லர் என்று தெரியாமல் மாறு வேடத்தில் இருந்த கிட்லரிடம், "நண்பா, அமர்ந்திருந்து அவனை அவமரியாதை செய்ய ஆசைதான். ஆனால், வெளிப்படையாகச் செய்தால் என் தலைபோய்விடும்! அதனால்தான், நீ அமர்ந்திருந்து செய்யும் அவமரியாதையை, நான் எழுந்து நின்றே செய்கிறேன்" என்றானாம்.

**சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு ஏன்?**

"அபிவிருத்தியின் அடையாளங்களை விட போரின் வடுக்கள் பெரிதாய் உள்ளன" என ஐக்கிய நாட்டு அதிகாரிகளுடனான சந்திப்பில் யாழ்.ஆயர் எடுத்துரைத்ததாக வலம்புரி பத்திரிகை 18.09.2012இல் தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருந்தது.

மேலும், "நாட்டில் யுத்தம் ஏற்படக் காரணமாக இருந்தது எது என்பதை ஆராய்வதைவிடுத்து அபிவிருத்தி செய்தால் மட்டும் போதும் என்ற எண்ணப்பாட்டுடன் அரசாங்கம் செயற்படுகின்றது. யுத்த காலத்தில் இறந்தவர்களுக்காக அஞ்சலிகூடச் செலுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலையில் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர்" என யாழ்.ஆயர் கவலையோடு தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வடக்கில் சுதந்திரமான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலையே இப்போது காணப்படுகிறது. மக்களை ஒன்று திரட்டிக் கூட்டங்கள் நடத்துவதற்குக்கூட அனுமதியில்லை. வடக்கில் தமிழ் மக்களின் பேச்சுச் சுதந்திரத்திற்குத் தொடர்ந்தும் முட்டுக்கட்டைகள் ஏற்படுத்தப்படுகின்றன" என யாழ்.ஆயர் பிரான்சு தூதுவரிடம் 09.01.2013 அன்று காலை 10.30மணிக்கு நடந்த சந்திப்பில் கூறியுள்ளதாக உதயன் பத்திரிகை "வடக்கில் தமிழர்களுக்கு கருத்துச் சுதந்திரம் மறுப்பு" என்ற தலைப்பில் 10.01.2013அன்று செய்தி வெளியிட்டிருந்தது.

" 'சிவில் நிர்வாக விடயத்தில் இராணுவத் தலையீடு ஏன்?' என யாழ்.வந்த பிரான்சுத் தூதுவர் கேள்வி" என உதயன் பத்திரிகையில் தலைப்புச்செய்தி வெளியிடப்பட்டிருந்ததும், "யாழ்.பல்கலை மாணவரின் விவரம் - திரட்டுகிறது இராணுவம்" என்ற தலைப்பில் இதே நாளில் 10.01.2013அன்று வெளியிடப்பட்ட செய்தியும் யாழ்.ஆயரின் கருத்தை மேலும் உறுதிப்படுத்துவதாகவே தெரிகிறது.

**ஈழத்துக் கத்தோலிக்க ஆயர்களின் வடபகுதி வருகை**

இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள், போரின் பின்னரான காலத்தின் கள நிலைமைகளை நேரில் கண்டறியும் நோக்கில் நான்கு நாள் பயணத்தை மேற்கொண்டு 2013 தைமாதம் 08, 09, 10, 11ஆம் திகதிகளில் வடக்குக்கு வந்திருந்தார்கள்.

முதலில் மன்னார் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து விட்டு முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளுக்கும் பயணம் செய்து மக்களுடனான சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தார்கள்.

**அவர்கள் கண்கள் திறந்தனவா?**

இச்சந்திப்புக்களின் வழியாக எம்மாவு சீடர்களின் பயணத்தில், " 'அப்போது அவர்கள் கண்கள் திறந்தன' " (லூக்கா24:31) என்பது போன்ற ஓர் அனுபவம் குறிப்பாக நம் தென்பகுதி ஆயர்களுக்கு போரின் பின் வன்னிப் பகுதியைப் பார்த்த பின்பு ஏற்பட்டிருக்க வேண்டும் என்றுதான் கூறவேண்டும்.

அவ்வாறெனில், "இத்தனை நாள்களும் அவர்கள், கண்களை, மூடிக்கொண்டா இருந்தார்கள்?" அல்லது "அவர்கள் கண்கள், மூடப்பட்டா இருந்தன?" என யாரும் கேட்கத் துணியலாம்.

மேலும், "சரி, இப்போதாவது திறந்திருக்கிறது: இப்போது திறந்த கண்கள், இனி எப்போது மீண்டும் மூடிக்கொள்ளும்!" என்பவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற ஆதங்கங்கள் நிறைந்த கேள்விகள் இயல்பாக எழுவது புரிகிறது. அவற்றுக்கான பதில்களை அவன்தான் அறிவான்!


**கொஞ்சம் காரமான கலந்துரையாடல்தானாம்!**

ஆயர்களுடன் நடந்த கலந்துரையாடல் மன்னாரில் சூடு பிடித்ததாகத்தான் சொல்லுகிறார்கள். "பிடிக்கத்தானே வேண்டும்! நாங்கள் இங்கு செத்து மடிந்துகொண்டிருந்தபோது அதனைத் தடுத்து நிறுத்த முடியாவிட்டாலும் அரசின் தப்புத் தாளங்களுக்கு ஏற்றால்போல நடந்துகொண்டதையும் அறிக்கை விடுத்ததையும் நாங்கள் எப்படி மறக்க முடியும்?" என்று இவர்கள் வருகை குறித்துப் பேசிக்கொண்டிருந்தபோது ஒருவர் குறிப்பிட்டார்.

மன்னாரில் இடம்பெற்ற மேற்சொன்ன கலந்துரையாடலில் இக்கட்டுரை ஆசிரியர் கலந்துகொள்ளவில்லை. அதனால், எத்தனை பாகைச் சூட்டில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது என்பதை துல்லியமாகக் கணிக்க முடியவில்லை.

கிளிநொச்சியில் நடந்த கலந்துரையாடலில் ஏனைய அருள்பணியாளர்களோடு இக்கட்டுரை ஆசிரியருக்கும் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்தது. ஆர்ப்பாட்டம் இல்லாமல் காத்திரமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன என்றுதான் சொல்லவேண்டும்.

இக்கலந்துரையாடலுக்குத் தலைமை தாங்கிய யாழ்.ஆயர் இன்னும் கொஞ்ச நேரத்தை ஒதுக்கியிருந்தால் இன்னும் காரசாரமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கும் என எதிர்பார்த்திருக்கலாம். குறிப்பாக, கிளிநொச்சியில் இடம்பெற்ற பொதுநிலையினர் - பொதுமக்கள் ஆகியோருடனான கலந்துரையாடலில் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, இராணுவ மயமாக்கலை நிறுத்துதல், இராணுவத் தலையீடற்ற சிவில் நிர்வாகத்தை உடன் உருவாக்குதல் போன்ற கருத்துக்கள் தெளிவாக ஆயர்களிடத்தில் முன்வைக்கப்பட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுநிலையினரின் கருத்துக்கள் ஆயர்களினால் கூர்ந்து நோக்கப்பட்டிருக்கின்றன என்பதை, மறுநாள் ஆயர்களைச் சந்தித்த போது உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

**இராணுவத்தின் நில ஆதிக்க ஆக்கிரமிப்பு**

முல்லைத்தீவுப் பகுதிகளுக்குச் சென்று திரும்பிய ஆயர்களுடன் மறுநாள் கிளிநொச்சி பங்குப் பணிமனையில் அருள்பணியாளர்களுடனான கலந்துரையாடல் இடம்பெற்றது. வடபகுதியில் வெளிப்பார்வைக்கு சிவில் கட்டமைப்பு இருப்பதாகத் தெரிகிறது. ஆனால், உண்மையில், இராணுவ ஆட்சிதான் நடக்கிறது என்பது பல்வேறு ஆதாரங்களுடன் எடுத்துக் கூறப்பட்டது.

நில ஆக்கிரமிப்பினால் தம் சொந்தக் கிராமங்களில் வாழ்ந்த மக்கள் தங்கள் கிராமங்களுக்குச் சென்று, வாழமுடியாமல் இருக்கும் துர்ப்பாக்கிய நிலைமைகள் சுட்டிக்காட்டப்பட்டன.

உதாரணமாக, யாழ்.வலிகாமம் பிரதேச செயலர் பிரிவில் இருபத்திநான்கு கிராம சேவையாளர் பிரிவுகள், முல்லைத்தீவு கேப்பாப்புலவு கிராமம், மன்னார் முள்ளிக்குளக் கிராமம் போன்றவை இன்னமும் இராணுவ பிடியில் இருப்பது மட்டுமல்லாது இக்குடியிருப்புக்களை அபகரித்து நிரந்தர இராணுவப் படை முகாம்கள் அமைக்கப்படுவதும் கோடிட்டுக் காட்டப்பட்டன.

வடபகுதியின் வெற்று நிலங்களில் அரசின் திட்டமிட்ட குடியேற்றங்கள் போன்றவை ஆயர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டன.



மேலும், மக்களின் அன்றாட அலுவல்களில் இராணுவத்தின் அத்துமீறல்கள் மிக மோசமாக அதிகரித்துவிட்ட நிலை, பாடசாலைகள், ஏனைய அலுவலகங்களில் இராணுவத்தின் அத்துமீறிய தலையீடு ஆதாரங்களுடன் முன்வைக்கப்பட்டன.

**பொறுப்புக்கூறல் வேண்டும்**

இறுதிப்போரில் கொல்லப்பட்டவர்கள், போரின்போது கைது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டுக் காணாமல் போனவர்கள், சிறைகளில் உள்ளவர்களின் விபரம் பற்றிய பொறுப்புக்கூறல் இன்னமும் வெளிப்படுத்தப்படாத வைகளாகவே உள்ளன.

காணாமற்போன அருள்பணியாளர்களான பிரான்சிஸ் யோசப், ஜிம்பிறவுண் போன்றவர்களுக்கு என்ன நிகழ்ந்திருக்கிறது என்பவை பற்றிய தெளிவுகள் வேண்டும் என்பதும் எடுத்துக் கூறப்பட்டன.

**துன்புறும் மக்களின் குரலாக மன்னார் ஆயர்**

இறுதிப் போரில் 'பூச்சிய இழப்பு' என அரசின் பொய்யான பிரச்சாரத்தை உலக நாடுகள் ஒருநேரத்தில் நம்பின.

ஆனால் இன்று, இறுதிப்போரில் இறந்துபோன அல்லது காணாமல் போனவர்கள் என மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு அவர்களினால் தெரிவிக்கப்பட்ட கருத்துப் படிப்படியாக ஏற்றுக்கொள் ளும் நிலை உருவாகி வருகிறது.

துன்புறும் தமிழ் மக்களின் குரலாக மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு அவர்கள் விளங்குவது (ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அந்நேரத்தில் அங்கு பிரசன்னமாக இல்லாதபோதும்) ஏனைய ஆயர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

**இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு இன்றியமையாதது**

மேலும், இனப் பிரச்சினைக்கான அடிப்படைக் காரணங்கள் கண்டறியப்படாமல், அவற்றைத் தீர்க்காமல் அரசு அபிவிருத்தி வேலைத்திட்டங்களோடு இப்பிரச்சினைக்கு முடிவுகாண நினைக்கிறது. இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காணப்படாமல் இழுத்தடிக்கப் படுகிறது.

அபிவிருத்தி வேலைத்திட்டங்களோடு நின்றுவிடாமல் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு முதன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்துத் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டது.

'நாங்கள் வென்றவர்கள், அவர்கள் தோற்றுப்போனவர்கள்' *(Victor and Vanquished Mentality)* என்ற மனநிலையைக் கைவிட்டு எல்லா மக்களையும் சமத்துவமாய் நோக்குகின்ற பார்வை அரசுக்கு இருக்கவேண்டும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

**தமிழர்கள் ஒரு தேசிய இனத்தவர்கள்**

தமிழர்கள், தனித்துவமான ஒரு தேசிய இனத்தவர்கள். தங்களுக்கென்று சமூக, சமய, மொழி, கலை, கலாசார, பண்பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளங்களைக் கொண்டு வாழ்பவர்கள். தமிழர்கள் ஒரு தேசிய இனத்தவர்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வடையாளத்தை அழிக்கத் தற்போதைய அரசு பலதரப் பட்ட இன அழிப்பினை மேற்கொள்கிறது. அதன் வெளிப்பாடுதான் இராணுவ மயமாக்கம், நில ஆக்கிரமிப்பு போன்றவையாகும் என எடுத்தியம்பப்பட்டது.

**நேருக்கு நேர்!**

இக்கட்டுரை ஆசிரியரால் கருதினால் மல்கம் றஞ்சித் அவர்களிடம் அவரால் வெளியிடப்படும் செய்திக் குறிப்புக்கள் பற்றி விசனம் தெரிவிக்கப்பட்டது. கருதினால் அவர்கள் இரத்தினபுரி ஆயராக இருந்தபோது சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் உழைத்து வருபவர்போலத் தென்பட்டார்.

ஆனால், கருதினாலாகிய பின் அவரின் கருத்துக்கள் தமிழர் களுக்குப் பெரும் ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் அளிக்கின்றன. அவர் உண்மையைக் கூறவேண்டும், நீதி நிலைநாட்டப் பாடுபட்டு உழைக்க வேண்டும் என நேருக்கு நேராக அவரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

**வன்னி, மறைமாவட்டமாக வேண்டும் என்ற கோரிக்கை**

வன்னிப் பிரதேசமானது மறைமாவட்டமாக வேண்டிய மேய்ப்புப்பணித் தேவை இருப்பது அழுத்தம் திருத்தமாக ஆயர்களிடத் தில் முன்வைக்கப்பட்டது.

போரின் பின்னரான வன்னி மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பி மேம்படுத்துவதற்கும் அவர்களுக்கு உரித்தான மேய்ப்புப்பணி அலுவல்களை முறையாக முன்னெடுப்பதற்கும் நாளடைவில் வன்னிப் பிரதேசமானது, மறைமாவட்டமாக வேண்டிய அவசியம் பொதுநிலை அவையினராலும் திருநிலை அவையினராலும் எடுத்துக்கூறப்பட்டது.

**ஆயர்களின் பதில்மொழிகள்**

மேற்சொன்ன கருத்துக்களை எல்லாம் ஒட்டுமொத்தமாகக் கருத்தில் வைத்துக்கொண்டு ஆயர்கள் சிலர் தங்களுடைய கருத்துக் களைப் பகிர்ந்து கொண்டார்கள். அவற்றில், தமிழ் மக்களின் சவால் களில் மத்தியில் தாங்கள் உடன் இருப்பதாகத் தெரிவித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரினால் ஏற்பட்ட அழிவுகளையும் போரின் பின்னர் நிலவும் இராணுவத் தலையீடுகளையும் அவதானிப்பதாகவும், இலங்கை ஒரு பல்லின, பல்சமய, பல்சமூக, பல்பண்பாட்டு நாடாக இருப்பினும் பெரும்பாலானவர்கள் மத்தியில் இலங்கை ஒரு 'சிங்கள பௌத்த நாடு' என்ற எண்ணமே மேலோங்கி நிற்பதால்: இத்தகைய நிலைப்பாட்டைத் தகர்க்கத் தாங்கள் தங்களால் ஆனவற்றைச் செய்து வருவதாகவும் குறிப்பிட்டார்கள்.


தாங்கள் ஒரு செய்திக் குறிப்பைத் தெரிவிக்கின்றபோது அது தென்பகுதியில் பலருடைய பலத்த விமர்சனங்களுக்கு உள்ளாகுவதோடு அவற்றை வெளியிடுகின்றபோது தாங்கள் அனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்துச் செய்யவேண்டி இருப்பதாகவும் கூறித் தங்கள் அபிப்பிராயங்களையும் நியாயப்பாடுகளையும் சாதுரியமாகவும் சாமர்த்தியமாகவும் சமயோசிதமாகவும் முன்வைத்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

**செவிடன் காதில் ஊதிய சங்காகாமல் இருக்க அருள்புரியும்!**

ஆயர்களுக்கு, வடக்கை வந்து பார்த்துவிட்டோம் என்ற நிறைவு. எங்களுக்கு, எங்கள் நிலைப்பாடுகளை ஆயர்களிடம் எடுத்துச் சொல்லிவிட்டோம் என்ற மகிழ்வு. இந்நிறைவிலும் மகிழ்விலும் எம் ஆயர்களுக்காகவும் எமக்காகவும் ஒரே ஒரு பிரார்த்தனையை மட்டும் செய்தேன்.

ஆயர்களுக்காக, "இறைவா நாங்கள் செய்த வேண்டுதல்கள், பரிந்துரைத்த விண்ணப்பங்கள் செவிடன் காதில் ஊதிய சங்காக மாறாமல் இருக்க அருள்புரியும்" என்பதும்: எமக்காக, "நாங்கள் இலவுகாத்த கிளிகளாய் ஆகாமல் இருக்க அருள்புரியும்" என்பதுமாகும்.

*மன்னா, மாசி 2013*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எம் வாழ்வுரிமைக்காகப் போராடுங்கள்

25

**"காணிநிலம்வேண்டும் பராசக்தி காணிநிலம்வேண்டும்!..."**

"இடம்பேர்ந்து கிடந்து இப்பிடியே சாகேலாது!", "சொந்த வீட்டுக்குப் பொயிரவேணும், எத்தின நாளைக்கு இப்பிடியே கிடந்து அலக்களியிறது?", "சொந்த வீட்டுக்குப் போயிர வேணும் அல்லது செத்துப்போயிர வேணும்! இப்பிடியே கிடந்து சீரழிய ஏலாது! நாங்க படுகிற வேதன யாருக்குத் தெரியப்போது!", "என்ர வீட்டுக்குப் போறதுக்கு இவனிட்ட கையேந்த வேண்டிக்கிடக்கு!", "கொஞ்ச காலமா உயிர்களக் குடிச்சான், மிஞ்சினதுகள நடைபிணமா றோட்டில அலையவிட்டான். இதுதான் இவண்ட ஆட்சியில நமக்குக் கிடச்சது", "இதற்கிடையில, 'மத்தியில கூட்டாட்சி மாகாணத்தில சுயாட்சி' என அவனுக்கு வால் பிடிக்கினம் அவை! இவை, கூட்டணிக்காரர், இப்பிடி ஆர்ப்பாட்டத்துக்கு வருவினம், ஏதாவது முழங்கிவிட்டு போச்சினம் எண்டா அடுத்த ஆர்ப்பாட்டத்துக்குத்தான் ஆட்களை காணலாம்!", "பாதர்மாரைக் கண்டது மனதுக்கு ஒரு ஆறுதல்! அடிவிழுந்தாலும் சாட்சிக்கு ஆளிருக்கிறபடியால் கொஞ்சம் துணிவா நிண்டு அடி வாங்கலாம்!" போன்றவை 29.04.2013 அன்று 24 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய வலிவடக்கு தமிழ் மக்களின் 6381ஏக்கர் காணி அபகரிப்புக்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்ற மக்கள் பகிர்ந்து கொண்ட மனக் குமுறல்களில் சிலவாகும்.

"காணிநிலம் வேண்டும் பராசக்தி காணிநிலம் வேண்டும்" என்ற மகாகவி பாரதியின் புரட்சிப் பாடல்தான் நினைவுக்கு வந்தது. எங்களை நினைத்துப் பாரதி இவ்வாறு பாடினானோ என எண்ணத் தோன்றுகிறது.

**காணித் தகராற்றின் வெள்ளிவிழா!**

பக்கத்து வீட்டுக்காரனின் காணியைத் தங்கள் காணியோடு சேர்த்து அடைப்பது, புதிதாக வேலி அடைக்கின்றபோதும் மதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுகின்றபோதும் அயல்வீட்டாரின் காணியில் கொஞ்சம் பிடித்து முறையே அடைப்பது அல்லது கட்டுவது, அடுத்தவருக்குரிய காணியை அதன் பெறுமதி குறைத்துக் கபடமாகக் கவர்ந்துகொள்வது, நிலத்திற்கு உரியவனுக்குத் தெரியாமல் உரிமையாளரின் அனுமதி இல்லாமல் தந்திரமாகக் கைச்சாத்திட்டுப் பெற்றுக்கொள்வது, காணி உறுதிகளை போலியாகப் பெற்று காணிகளுக்கு உரிமைகொண்டாடுவது போன்ற அனைத்தும் நில அபகரிப்புக்கு ஒப்பானவைதான்.

நம் கிராமங்களில் காணிச்சண்டைகளைப் பற்றி ஒரு கலாநிதிப்பட்டத்துக்குரிய ஆய்வொன்றையே மேற்கொள்ளக்கூடிய அளவிற்கு இதன் தீவிரமும் இப்பிரச்சினைக்கான தீர்வைக் காண வேண்டிய தேவையும் இருக்கிறது.

சில குடும்பங்களில் இக்காணிப் பிரச்சினைகளுக்கு வெள்ளி விழா, பொன்விழா, வைரவிழா, ஏன் நூற்றாண்டு விழாக்களைக்கூடக் கொண்டாடக்கூடிய வாய்ப்பு இருக்கிறதுபோல் தெரிகிறது.

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி" என்ற பெருமை நமக்கு இருப்பதுபோல 'காணித் தகராறின் வெள்ளிவிழா', 'பொன்விழா' போன்ற பெருமைகளும் நம்மத்தியில் நிறையவே இருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

காணித் தகராற்றுக்கு விழா எடுத்தால் எப்படியிருக்கும் எனக் கற்பனைசெய்து பார்த்ததன் விளைவுதான் பின்வருவது! ஒரு காணித் தகராற்றின் வெள்ளிவிழாவைக் கொண்டாட அழைப்பிதழ் அனுப்பு வதென்றால் அது எப்படியிருக்கும்? 'யாவும் கற்பனையல்ல' என்பதை முதலில் தெரிவித்துக்கொண்டு அழைப்பிதழுக்கு வருவோம்.

திருமண அழைப்பிதழ்போல இருவீட்டார் அழைப்பாகத்தானே அது இருக்கவேண்டும்!

அப்படியானால், "செபஸ்தியான் செபமாலை, செபமாலை அன்புராசா ஆகிய நாம், எம் காணித் தகராற்றை ஆரம்பித்து 25 ஆண்டுகள் வெற்றிகரமாக நிறைவுறுவதால், அத்தகராற்றின் வெள்ளிவிழாவைக் கொண்டாடத் தீர்மானித்துள்ளோம். ஆதலால், அந்நிகழ்விற்குத் தாங்களும், குடும்ப சமேதரராய் கலந்து எம் காணித் தகராற்று மகிழ்வில் பங்கெடுக்கும்படி அழைத்து நிற்கிறோம்" எனக் குறிப்பிட்டுத் தகராறு நடைபெறும் நல்லநாள் (அல்லது நல்ல நாட்கள்), சுபநேரம் ஆகியவற்றையும் குறித்து அழைப்பிதழை அனுப்பி வைக் கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இவ்விழாவிற்கு வருகை தருகின்ற விருந்தினர்களும், "இரு வீட்டாரும் இக்காணித் தகராற்றின் வெள்ளிவிழாவை மட்டுமல்ல பொன், வைர விழாக்களையெல்லாம் கண்டுகளிக்கவேண்டும். மேலும், உங்கள் காணித்தகராற்றின் அருமைபெருமைகளை எல்லாம் உங்கள் பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும் கட்டிக்காப்பார்களாக - கண்டுகளிப்பார்களாக!" என விவிலியத்தின் திருப்பாடல் ஆசிரியர் 128ஆவது திருப்பாடலில் ஆசிப்பதுபோல ஆசித்து வாழ்த்திவிட்டுச் செல்லலாம்!

இக்காணித் தகராற்றின் வெள்ளிவிழாவுக்கான அழைப்பிதழைத் தயாரிக்கும்போதுகூட இருவீட்டாரின் குடும்பத் தலைவர்களின் பெயர்கள் வரவேண்டிய இடத்தில் என் குடும்பத்தின் பெயர்களையே பயன்படுத்தியிருக்கிறேன்.

இல்லையென்று வேறு யாருடைய பெயர்களை எழுதினால், 'இவர் வேணுமெண்டுதான் எங்கட அப்பாட பெயரப்போட்டு எழுதியிருக்கிறார்' என யாரும் குறைகாணலாம்.

பின்னர், இதையே ஒரு தலைமுறைக்குரிய பிரச்சினையாக்கி விடுவார்கள்! பிறகு, அதற்கும் வெள்ளிவிழாக் கொண்டாடவேண்டி ஏற்படலாம்! பார்த்தீர்களா, எத்தனை விடயங்களை மனதில் நினைத்துக்கொண்டு ஒரு பெயரையே எழுதவேண்டியிருக்கிறது என்று!

முள்ளிவாய்க்காலில், அவர்கள் முடித்ததுபோக மிச்சமுள்ளவர்கள் தற்காலிக முகாம்களில் அடைக்கப்பட்டு, மீண்டுவந்து தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்றதன் பின் நடந்த காணிச்சண்டைகள் பல இன்னும் முடிவுகாணாமல் கிடப்பில் கிடப்பதாகச் சொல்லுகிறார்கள்.



இதுபோக, வெளிநாட்டுக்குப் போனவர்களின் காணியை உள்நாட்டில் உள்ளவர்கள் அடைப்பதும், உள்நாட்டில் உள்ளவர்களின் காணியில் உரிமை கொண்டாடி வெளிநாட்டிலிருந்து வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதில் கட்டுவதும் என இந்தக் 'காணித் தகராற்று வரலாற்றுப் படலம்' நீளுகிறது.

கம்பன் இருந்தால் கம்பராமாயணத்தைப்போல 'தமிழர் காணித் தகராற்று மாயணம்' என்றொரு கதையையும் பாடியிருப்பான்!

ஆக, பிறர் நிலத்தை அபகரிக்கக்கூடாது என்பதை ஔவையார் ஆத்திசூடியில் கூறிச்சென்றாள்: "மண் பறித்து உண்ணேல்" (மண் பறித்து – மற்றவருடைய நிலத்தை அபகரிப்பது, உண்ணேல் - உண்ணக்கூடாது), மற்றவருடைய நிலத்தை அபகரித்து அதை உண்டு வாழக்கூடாது என அறிவுரை கூறிச் சென்றாள்.

இதனையெல்லாம் யார் கேட்டுநடக்கிறார்கள்! எந்தளவிற்கு அடுத்தவனின் காணியைப் பிடிக்கலாமோ அந்தளவிற்கு அதைச்செய்து அடுத்தவனின் வயித்தெரிச்சலில் இன்பம் காண்கிறார்கள்!

**மக்களின் வாழ்விடங்களை ஓர் அரசு அபகரிக்க முடியுமா?**

மன்னாரில் வளம்மிக்க முள்ளிக்குளக் கிராமமும், முல்லைத் தீவில் செழுமைமிக்க கேப்பாப்புலவு கிராமமும் முறையே இலங்கை கடற்படை, இலங்கை இராணுவம் ஆகியவற்றால் ஏற்கெனவே அபகரிக்கப்பட்டிருக்கின்றன.

இக்கிராமத்து மக்கள் அவர்களின் கிராமங்களுக்கு மிக அருகிலேயே வறண்ட வெளிகளில் 'குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்'!

இவை இரண்டு இடங்களுக்கும் இலங்கை கத்தோலிக்க ஆயர்பேரவை இவ்வாண்டின் தொடக்கத்தில் சென்று வந்திருக்கிறது. ஆனால், அம்மக்கள் தொடர்ந்து தம் கிராமங்களுக்கு வெளியே வறண்ட வெளிகளிலேயே தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், வலிகாமம் 24 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 6381 ஏக்கர் காணி இராணுவத் தேவைக்காக அபகரிக்கப் படுவதற்கான ஆயத்தங்கள் முழுவீச்சில் நடந்துகொண்டிருக்கின்றன.

வடமாராட்சி கிழக்கு மருதங்கேணியில் 05 குடும்பங்களுக்குச் சொந்தமான எழுநூறு ஏக்கர் காணி சுவீகரிக்கப்படவுள்ளது. மண்டை தீவு செம்மண்தோட்டப் பகுதியில் அறுநூறு ஏக்கர் காணி கடற்படை யினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. முல்லைத்தீவில் கொக்கிளாய் பிரதேசத்தில் தமிழ் மக்களுக்குரிய காணிகளில் மூவாயிரம் சிங்களக் குடும்பங்களுக்கு காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி பரவிப்பஞ்சான், மருதநகர், இரணைத்தீவு ஆகிய பெரு நிலங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்குடியமர்த்தப்படாததால் ஆயிரத்தி எண்ணூறு குடும்பங்கள் அவதியுறுகின்றன.

கிழக்கு மாகாணத்தில் சம்பூரிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆறாயிரம் மக்கள் இடம்பெயர்ந்து கிளிவெட்டி, மணல்சேனை, மூதூர் போன்ற இடங்களில் வாழ்ந்துவருகிறார்கள். பூநகரியில் ஐயாயிரம் ஏக்கர் காணியைத் தமக்கு வழங்கவேண்டும் எனப் படையினர் கோரிக்கை விடுத்துள்ளார்கள். இவையெல்லாம் ஊடகங்களில் வெளியான நம்பகரமான செய்திகள்.

இவ்வாறு, அரசாங்கம் திட்டமிட்ட வகையில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவந்த தமிழ் மக்களின் சொந்தக் காணிகளை அபகரிக்கும் மிகமோசமான, மனிதாபிமானமற்ற, மனித உரிமை மீறலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

மேலும், வவுனியா கருங்காலிக்குளம் வனப்பிரதேசத்தின் 1500 ஏக்கர் நிலம் திட்டமிடப்பட்ட சிங்கள மக்களின் குடியேற்றத்திற்காக கடந்த இரண்டு மாதங்களாக மிகவும் இரகசியமான முறையில் துப்பரவு செய்யப்பட்டு வருவதாக நிர்மலா கன்னங்கற 21.04.2013 அன்று த சண்டே லீடர் பத்திரிகைக்கு எழுதிய ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

இவ்வன அழிப்பானது இலங்கை இராணுவத்தினர் செய்த இரண்டாவது மிகப்பெரும் வன அழிப்பாகும் என வனவளத் திணைக்கள அதிகாரிகளை மேற்கோள்காட்டிக் குறிப்பிடுகிறார் மேற்சொன்ன கட்டுரை ஆசிரியர்.

மிகப்பெரும் வன அழிப்பாக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை சோமவாத்திய தேசிய பூங்காவின் *(Somawathiya National Park)* வாழைப்பழப் பயிர்ச்செய்கைக்கு அழிக்கப்பட்டதாகக் குறிப்பிடுகிறார். பின்னர் எதிர்ப்புகள் காரணமாக அம்முயற்சி கைவிடப்பட்டதாக அறிய முடிகிறது எனவும் கூறுகிறார் அக்கட்டுரை ஆசிரியர்.

**நாபோத்தின் இரத்தத்தை நாய்கள் நக்கியதுபோல...**

எளியவர்களை வஞ்சித்து நிலத்தை அநியாயமாக அநீதியான முறையில் அபகரிப்பவர்களுக்குக் கிடைக்கும் தண்டனையை விவிலியத்தின் 1அரசர்கள் 21ஆம், 22ஆம் அதிகாரங்களில் படிக்கக் கூடியதாக இருக்கிறது.

"இஸ்ரியேலனாகிய நாபோத்துக்கு இஸ்ரியேலில், சமாரிய அரசன் அகாபின் அரண்மனை அருகில், ஒரு திராட்சைத் தோட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. ஆகாபு நாபோத்திடம், 'உன் திராட்சைத் தோட்டம் என் அரண்மனை அருகிலிருப்பதால், நான் அதைக் காய்கறித் தோட்டம் ஆக்கும்படி என்னிடம் கொடுத்து விடு. அதற்குப் பதிலாய் அதைவிட நல்ல திராட்சைத் தோட்டத்தை உனக்குத் தருவேன். உனக்கு விருப்பமானால், அதன் விலையை வெள்ளியாகத் தருகிறேன்' என்றான்.

'என் மூதாதையரின் உரிமைச் சொத்தை உமக்குக் கொடுக்க மாட்டேன்' என்று இஸ்ரியேலனாகிய நாபோத்து தன்னிடம் சொன்ன வார்த்தைகளை முன்னிட்டு, ஆகாபு ஆத்திரத்துடனும் கோபத்துடனும் தன் அரண்மனைக்கு வந்தான்..." (1அரசர்கள் 21/1–4) என விவிலியத்தில் காணலாம்.

ஆகாபின் மனைவி ஈசபேல் இந்நிகழ்ச்சியைத் தன் கணவனிடம் கேட்டு அறிந்துகொண்டாள். நகரில் குடியிருந்த பெரியோருக்கும் உயர்குடிமக்களுக்கும் (விவிலியத்தில் பயன்படுத்தப்படும் வார்த்தைகளே இங்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. உண்மையில் இவர்கள் பெரியோரா? உயர்குடிமக்களா? என்பதை வாசித்து அறிந்துகொள்ளுங்கள்!) ஆகாபின் பெயரால் கடிதம் அனுப்பி 'நாபோத், கடவுளையும் அரசனையும் பழித்துரைத்தான்' என அவன்மேல் பழிசுமத்தி அவனைக் கல்லால் எறிந்து கொல்லச் சதித்திட்டம் தீட்டுகிறாள் ஆகாபின் மனைவி ஈசபேல்.

அவ்வாறே, நாபோத் கொல்லப்படுகிறான். இவ்வாறு, ஆகாபு அரசன் நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை உடைமையாக்கிக் கொள்கிறான்.

இவ்வேளையில், ஆண்டவரின் இறைவாக்கை அரசன் ஆகாபுக்கு எதிராக உரைக்கும் படியாக எலியா பணிக்கப்படுகிறார்.

"ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார்: நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கிய அதே இடத்தில் அவை உனது இரத்தத்தையும் நக்கும்..." (1அரசர்கள்21/19) என ஆகாபுக்கு கூறுகிறார் எலியா.

மேலும், ஆகாபின் மனைவி ஈசபேலைக் குறித்து, "இஸ்ரியேலின் மதிலருகே நாய்கள் ஈசபேலைத் தின்னும். ஆகாபைச் சார்ந்தவர்கள் நகரினுள் மடிந்தால், நாய்களுக்கு இரையாவர், நகர்ப்புறத்தே இறந்தால், வானத்துப் பறவைகளுக்கு இரையாவர்" (1அரசர்கள்21/23–24) எனவும் எலியா இறைவாக்குரைக்கிறார்.

ஏழை எளியவரின் வாழ்வோடும் வாழ்வாதாரத்தோடும் விளையாடுபவர்களின் மனங்களில் இந்நிகழ்வு விட்டுச்செல்லுகின்ற பாடங்களை இவர்கள் மனங்கொள்ளவேண்டி இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவாக, இறைவாக்கினர் மிக்காயாவின் இறைவார்த்தைகளுக்குச் செவிமடுக்காமல் பொய்வாக்கினர்களின் வார்த்தைகளுக்குச் செவிசாய்த்து சிரியாவுக்கு எதிரான போரில் ஆகாபு கொல்லப்படுகிறான்.

"ஆண்டவரின் வாக்கின்படியே நாய்கள் அவனது இரத்தத்தை நக்கின" *(1அரசர்கள்22/38)* என விவிலிய ஆசிரியர் ஆகாபுக்கு நடந்த விபரீதத்தை எடுத்துக்காட்டுகிறார்.

ஏழையரின் உயிர்களோடு விளையாடுபவர்களின் கதி அந்தோ பரிதாபமாகத்தான் முடியும்! முடிவுறும்! இது அவர்களே அவர்களுக்குத் தேடிக்கொள்கின்ற முடிவு! இதனை யார் தடுக்க முடியும்? இதனைத் தான், 'அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்' என்றார்கள் நம் முன்னோர்கள்.

**ஆயர்கள் ஆடுகளுக்காகக் குரல்கொடுப்பார்களா?**

நம் ஆயர்கள், மௌனம் கலைந்து வாய்திறந்து ஏழை மக்களுக்காக வழக்காடுவார்களா? அநீதியான மனிதாபிமானமற்ற நில ஆக்கிரமிப்பு, காணி அபகரிப்பு எனத் தெரிந்தும் ஏன் நம் ஆயர்கள், ஏனைய எம் சமயத் தலைவர்கள் இன்னும் மௌனித்துப்போய் நிற்கிறார்கள்?

இவ்விடத்தில் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு அவர்களின் தலையீட்டையும் கரிசனையையும்போல ஏன் நம் தமிழ் பிராந்திய வடக்கு, கிழக்கு ஆயர்கள் இணைந்து இப்பெரும் தீமையைத் தடுத்துநிறுத்த வழிவகைகளைத் தேடாமல் இருக்கிறார்கள்?

இந்நில ஆக்கிரமிப்பும் காணி அபகரிப்பும் மனச்சாட்சியுள்ள அத்தனைபேருக்கும் அநீதியாகப்பட்டால் தென்பகுதி ஆயர்கள் ஏன் இவ்விடயத்தில் மௌனம் காக்கவேண்டும்?

இம்மனிதாபிமானமற்ற அரசின் காணி ஆக்கிரமிப்புக்கு எதிரான இலங்கை ஆயர் பேரவையின் நிலைப்பாடுதான் என்ன? ஆயர்களே, ஆண்டவரின் பிரதிநிதிகளே! உங்களால் இந்நில ஆக்கிரமிப்பு அரக்கனைத் தடுத்து நிறுத்தமுடியும் என்பதால் ஏழை எளிய மக்களின் பெயரால் மன்றாட்டமாக வேண்டுகிறோம்! இவ்விடயத்தில் விரைந்து செயற்படுங்கள்.

மந்தைகளின் கொட்டிலாகிய நம் மக்களின் வாழ்விடங்களும் வாழ்வாதாரமும் பறிபோகின்றபோது நம் ஆயர்கள் எப்படிச் பேசாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கமுடியும்? எம் ஏழை மக்களின் வாழ்விடங்களுக்குள் கள்வரும் கொள்ளையரும் கொலைகாரரும் குதித்துக் கும்மாளம் போடுகின்ற போது ஆயர்கள் எப்படி மௌனித்திருக்க முடியும்? எப்படிக் கைகட்டி வாய்பொத்தி நிற்கமுடியும்?

**நில ஆக்கிரமிப்பைத் தடுக்க விரைந்து செயற்படுங்கள்**

ஆயர்களே, அருள்பணியாளர்களே, ஏனைய திருச்சபைகளின் தலைவர்களே, அவற்றின் அருட்பணியாளர்களே, சர்வமதத் தலைவர் களே, சமூகத் தலைவர்களே, பெரும் பதவிகளில் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் பெருந்தகைகளே, சமுதாயப் பெரியோர் களே, பேராசிரியர்களே, புத்திஜீவிகளே!... நீண்டகாலத்திற்கு எம் மக்களை மிகப் பாரதூரமாகப் பாதிக்கக்கூடிய திட்டமிடப்பட்ட அரச-இராணுவ காணி அபகரிப்புகளுக்கு உங்கள் எதிர்ப்பையும் கண்ட னத்தையும் தெரிவிக்கத் தயங்காதீர்கள்.

இல்லையேல் நம் மக்களின் இருப்பும் வாழ்வாதாரமும் சூறையாடப்பட்டு எம் மக்கள் நடுத்தெருவில் நிற்கவேண்டியநிலை உருவாகும் என்பதை உணருங்கள்.

உங்கள் மௌனம் ஆயிரம் ஆயிரம் ஏழை எளியவர்களை ஏதிலிகளாக்கும் என்பதைத் தயவுசெய்து உணர்ந்து செயற்பட முன்வாருங்கள். உங்கள் மௌனம் கலைத்து உண்மை நிலைகளை வெளிக்கொண்டுவரவும் நீதி நிலைநாட்டப்படவும் தொடர் செயல் திட்டங்களைத் தீட்ட ஒன்றுபடுங்கள்.

தலைமைப் பணிகளிலுள்ள பொதுநிலையினரே! திருச்சபை யில் உங்களுக்குள்ள உரிமைகளைப் பயன்படுத்தி எமக்குரியதை மேலும் இழந்துபோகாமல் இருக்கத் தலைமைப் பணியில் உள்ளவர்களை உண்மைக்காகவும் உரிமைக்காகவும் குரல்கொடுக்க அவர்களைத் தூண்டுவது உங்களின் தலையாய பொறுப்பும் கடமையும் என்பதை மறந்துபோகாதீர்கள்.

இருப்பதை இழந்துபோனால், குண்டுச் சட்டிக்குள்தான் குதிரை ஓட்டவேண்டிவரும்! இருப்பதை இழந்துவிட்டால், சுற்றிச்சுற்றி சுப்பரின் கொல்லைக்குள்தான் காணித் தகராற்றின் பொன், வைர, நூற்றாண்டு விழாக்களை இன்னும் அதிகமாகக் கொண்டாட வேண்டிவரும்!

மடியில் கை வைச்சிற்றாங்கள்! விட்டிட்டால் அதோகதிதான்!

மன்னா, ஆனி 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிக்க வழுவாதீர்கள்



26

**மரத்தை அதன் கனியால் அறியலாம்!**

ஒரு பெண் எழுத்தாளர், தான் எழுதிய நூல் ஒன்றிற்கு அணிந்துரை எழுதும்படி அறிஞர் பேனாட்ஷாவிடம் அனுப்பியிருந்தாள். நூலின் இரு பக்கங்களை மட்டும் வாசித்துவிட்டு, "வாசித்துப் பார்த்தேன். பிரயோசனம் இல்லை!" என்ற குறிப்புடன் அந்நூலைத் திருப்பி அனுப்பியிருந்தார் பேனாட்ஷா.

பிரட்டிக்கூடப் பார்க்காத பக்கங்களைச் சுட்டிக்காட்டி அப்பெண் கோபத்தோடு, "ஓர் அறிஞராக இருக்கின்றீர்! நூல் முழுவதையும் வாசிக்காமல், நீர், எப்படி இத்தகைய முடிவை எடுக்கமுடியும்?" எனக் காட்டமாக எழுதியிருந்தாள்.

பேனாட்ஷா அதற்கும் பதில் அனுப்பியிருந்தார்: "அம்மணியே, ஓர் *ஒம்லட்* (முட்டை, வெங்காயம், பச்சமிளகாய், உப்பு போன்றவைகளைக் கலந்து கலக்கிப் பொரிக்கப்படும் ஒரு வகை உணவு) கூடாத – கெட்டுப்போன முட்டையில் செய்யப்பட்டிருக்கின்றது என்றால், அதை முழுவதும் தின்று பார்க்கத் தேவையில்லை!" என அப்பெண்மணியினுடைய கேள்விக்கான பதிலாகவும் நூல் பற்றிய தன் அபிப்பிராயமாகவும் மீண்டும் தெரிவித்திருந்தார்.

அரச அதிகாரிகள், சமூகத் தலைவர்கள், கழக நிறுவுனர்கள், சமய முதல்வர்கள் போன்றவர்களின் செயற்பாடுகள் முழுவதையும் ஆய்ந்து, ஆராய்ந்து, சீர்தூக்கிப் பார்த்துத்தான் அவர்கள் பற்றிய அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்றில்லை. அவர்களின் 'கனிகளைக் கொண்டு' (மத்தேயு12/33) அவர்கள் யாரெனக் கண்டுகொள்ளலாம்.

அதேபோலத்தான் நிறுவனங்கள், அமைப்புக்கள், கழகங்கள், ஒன்றியங்கள், மன்றங்கள், அரசியல் கட்சிகள், ஏன் அரசாங்கங்களைக் கூட இவ்வகைப்படுத்தலுக்குள் வைத்துப் பார்க்கலாம்.

பொய்யும், புரட்டும், அடாவடித்தனமும், ஆணவச்செருக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டகாசங்களும் அத்துமீறிப் போகும்போது ஓர் அமைப்பினுடைய, ஓர் அரசியல் கட்சியினுடைய, ஓர் அரசினுடைய கனிகள் அதாவது அதன் செயற்பாடுகள் – அபிவிருத்தித் திட்டங்கள், நல்ல கனிகளாக ஒருபோதும் இருக்காது. சிலவேளைகளில் பார்வைக்கு நல்லவையாகத் தோன்றலாம். வெம்பிப் பழுத்த அல்லது *போமலின்* பாவித்துப் பழுத்த அல்லது புகையடித்துப் பழுத்த கனிகள்கூட நல்ல கனிகள் போன்றுதானே காட்சியளிக்கின்றன!

**2013, வடமாகாணசபைத் தேர்தல் களம்!**

பிறக்கவிருக்கும் புரட்டாசித் திங்கள் வடமாகாணத் தமிழ் மக்களுக்கு மிக முக்கியமான ஒரு மாதம். நடைபெறவிருக்கும் வடமாகாணத் தேர்தலில் 36 மாகாணசபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு தொளாயிரத்து ஆறு (906) பேர் போட்டியிடுகின்றார்கள். இவர்களில் பதின்நான்கு (14) கட்சிகளைச் சேர்ந்தோரும், இருபத்தொன்பது (29) சுயேட்சைக் குழுக்களைச் சார்ந்தோரும் அடங்குவர் என ஊடகங்களின் ஊடாக அறியக்கூடியதாக இருக்கின்றது.

இத்தகவல், ஒன்றை மட்டும் மிகத் தெளிவாகச் சுட்டிநிற்கின்றது. தமிழ் மக்களின் வாக்குகளை நன்கு திட்டமிட்ட வகையில் சிதறடிக்கச்செய்து தமிழ்தேசியப் பிரதிநிதித்துவத்தை இயன்றவரை குறைப்பதும் – இல்லா தொழிப்பதும் இவ்வியூகத்தின் தெளிவான இலக்கு என்பது மேற்சொன்ன தகவல்களில் இருந்து தமிழ் மக்களுக்குக் கிடைக்கப்பெறுகின்ற செய்திகளில் ஒன்று!

**தமிழர் அபிலாஷைகளைத் தோற்கடிப்பதே இலக்கு**

இத்தேர்தலில், தமிழர் தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வீழ்த்துவதற்காக, எத்தனை கட்சிகளை, சுயேட்சைக் குழுக்களைக் களத்தில் இறக்கமுடியுமோ, அத்தனை கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் வட மாகாணத் தேர்தலில் முதலீடு செய்யப்பட்டு இறக்கப்பட்டுள்ளன. வீட்டுத் திட்டங்கள், விதவைகளுக்கான சுயதொழில் வாய்ப்புக்கள், இளையோ ருக்கான வேலைவாய்ப்புக்கள் என வாரி வழங்கிக்கொண்டும் இருக் கின்றார்கள்.

இவ்விடத்தில், சில விடயங்களைத் தமிழ் மக்கள் சிந்தையில் கொள்வது நல்லது:

(1) போர் முடிந்து நான்கு ஆண்டுகள் கழிந்த நிலையில் எப்போதும் இல்லாத அக்கறை இவர்களுக்கு இப்போது திடீரென எப்படி வந்தது என்று தமிழ் மக்களாகிய நாம் சிந்திக்கவேண்டும்.

(2) வீடுகளை அழித்து, நம் வடகிழக்குத் தாய்மாரில் சுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்ணூறாயிரம் (90,000) பேர் விதவைகள் ஆவதற்குக் காரணமான வர்கள் அவர்கள்! இப்போது, வீடுகளைக்கட்டி, விதவைகளுக்கான சுயதொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றார்களாம்! கிளியைக் கொன்று அதற்குத் தங்கக்கூடு அமைக்கும் கதைதான் அவர்களின் செயற்பாடுகள்.

(3) வேலைவாய்ப்புக்கள் அவர்களின் தந்தையர்களின் வீட்டுச் சொத்துக்கள் அல்ல. வேலைவாய்ப்புக்களைப் பெற நாம் உரிமை உடைய வர்கள், தகைமை உடையவர்கள். அவ்வாறாகவா வேலைவாய்ப்புக்களை வழங்குகின்றார்கள்?, பிச்சை போடுவதைப்போல போடுகின்றார்கள். பிச்சை போடுகின்றபோதுகூட மரியாதையோடும் தர்மத்தோடும்தான் கொடுக் கின்றார்கள்.


(4) இத்தேர்தல் காலங்களில் இலட்சக்கணக்கான பணத்தை விளம்பரத்திற்கும், வாகனத் தொடரணிகளுக்கும், களியாட்டங்களுக்கும் அள்ளி இறைக்கின்றார்கள். இவையெல்லாம் யாருடைய பணம்? ஏழை மக்களின் வருவாயில் – நாட்டு மக்களின் வரிப்பணத்தில் நடந்துகொண்டி ருக்கின்றன.

மக்களை ஏமாற்றி, வாக்குகளைக் கவர்ந்து, அவர்கள்மேல் சவாரி செய்யப் பழகிக்கொண்டார்கள். அப்பழக்கத்தில்தான் 'வடமாகாண சபைத் தேர்தல் சவாரி' செய்ய வந்திறங்கி, தேர்தல் படையணிகளையும் பட்டாளத் தினரையும் இறக்கிவிட்டிருக்கின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வீழ்த்துவது தமிழர் அபிலாஷைகளை – தமிழர் வாழ்வுரிமையை தோற்கடிப்பதற்குச் சமமானது என்பதைத் தமிழ்மக்கள் நினைவில் நிறுத்தவேண்டியவர்கள் ஆகின்றனர்.

**தமிழரின் கையில் இப்போதிருப்பது வாக்குரிமை ஒன்றே!**

அன்பர்களே! நண்பர்களே! சகோதரத் தமிழ் உறவுகளே! கொடுக் கின்ற அனைத்தையும் யார்கொடுத்தாலும் வாங்குங்கள். ஏன் தெரியுமா?



அவை நமக்குரியவை.

ஒருவகையில், நம்மிடமிருந்து பறித்த வைகளில் சிலவற்றைத் திரும்பத் தருகின்றார் கள். வரியாக, கப்பமாக, வெளிநாட்டு உதவியாக நமக்கு வந்து சேர வேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியவைகளைத்தான் அவர்கள் கபடமாக – தந்திரமாகத் தந்துகொண்டிருக் கின்றார்கள்.

எனவே, மீண்டும் அழுத்திச் சொல்கின்றேன், கொடுப்பதையெல்லாம் யார்கொடுத்தாலும் பெற்றுக் கொள்ளுங்கள். அதில், எந்தத் தவறும் கிடையாது. ஆனால், பெற்றுக்கொண்டோமே, நன்றிக்கடன் செலுத்தவேண்டுமே என்று மட்டும் உணர்வுபூர்வமாகச் செயற்படாதீர்கள். காரணம், எங்கள் அங்கீ காரத்தோடு எங்களை அடிமைப்படுத்தவே எமது வாக்குகளைக் கேட்டு வருகின்றார்கள்.

எல்லாவற்றையும் இழந்துபோயிருக்கும் எமக்கு, இப்போது இருப்பது எம் வாக்குரிமை ஒன்றே ஒன்றுதான்! இவ்வாக்குரிமையை, தமிழர் எம் அபிலாஷைகளைப் பெறுவதற்கான ஆயுதமாகப் பயன்படுத்துங்கள்.

**தமிழ் மக்கள் நலம் சார்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

உலகநாடுகளின் முன் – சர்வதேசத்தின் முன் நாம் யார் என்றும், தமிழர்களாகிய நாம் எதிர்பார்ப்பவை என்ன என்றும், எம் மக்களின் ஒருமித்த அபிலாஷை என்ன என்பதையும் எம் வாக்குரிமையைப் பயன்படுத்தித் தெளிவாகத் தெரிவிக்கவேண்டிய அவசரத்தேவை இருக்கின்றது. எனவேதான், தமிழ்மக்கள் தீர்க்கதரிசனத்தோடு செயற்படவேண்டிய தருணம் ஒன்று மீண்டும் நம் வீடுதேடி வந்துள்ளது.

சுருங்கக்கூறின், இருக்கின்ற அரசியல் கட்சிகளுக்குள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒன்றே இன்று ஒட்டுமொத்த தமிழ்மக்கள் நலன் சார்ந்த தமிழ்த் தேசியக் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கின்றது என்பதை தமிழ்மக்கள் இம்மாகாணத் தேர்தலில் வெளிப்படுத்தவேண்டும் எனச் சமூகத் தலைவர் களும் புத்திஜீவிகளும் எதிர்பார்த்து நிற்கின்றனர். எனவே, ஒவ்வொருவரும் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியத்திற்கு வாக்களித்து தமிழர் அபிலாஷைகளை வெளிப்படுத்த முன்வருவது நம் அறக்கடனாகும்.

**முள்ளிவாய்க்கால் முடிவல்ல!**

வேலணையைச் சேர்ந்த தேனாள் சுரேஷ் முள்ளிவாய்க்கால் என்ற தலைப்பில் தினக்குரல் பத்திரிகையில் 05.05.2013 அன்று ஒரு விடயத்தை எழுதியிருக்கின்றார். அது, கதையா? கவிதையா? காவியமா? அல்லது நம் மக்களின் வரலாற்றின் ஒரு பகுதியா? எதுவோ தெரியவில்லை. அது எதுவென, நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்: "1 கிலோ அரிசி 2,600 ரூபா, 100 கிறாம் சீனி 1,100 ரூபா, 100 கிறாம் செத்தல் 2,800 ரூபா, 02 பனடொல் 500 ரூபா, 400 கிறாம் அங்கர் பால்மா 4,000 ரூபா, ஓ எல்லாமே நல்லவிலை போனது. அங்கே சும்மா போனது எம் உயிர்கள் மட்டும்தான்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றெழுதியிருந்தார்.

ஆயிரமாயிரம் எம் உறவுகளை 2009இல் கொன்றொழித்ததன் பின்னும் மனிதாபிமானப் போர் என்றும், பூச்சியச் சேதம் என்றும், இன்றும் படுபொய்யைச் சொல்லிக்கொண்டு எம்மிடமே வந்து வாக்குக் கேட்பதற்கு இவர்களுக்கு என்ன அருகதை இருக்கின்றது?

முள்ளிவாய்க்காலோடு தமிழர் அபிலாஷைகளும் முடிந்தது என்று தான் நினைக்கின்றார்கள். அவ்வாறு, முள்ளிவாய்க்காலோடு தமிழினத்தின் கதை முற்றுப்பெற முடியாது என்பது இறை நீதியும் உலக வரலாறும் நமக்குக் கற்றுத்தரும் பாடமாகும்.

**சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பாமல் இன்றும் பல்லாயிரம் மக்கள்**

இதுவரை அழித்தவைபோக, இன்னுமின்னும் ஆயிரமாயிரம் ஏக்கர் வளமான விளைச்சல் நிலங்கள் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. யாழ். வலிகாமம் வடக்கில் இருபத்தி நான்கு (24) கிராமசேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய ஆறாயிரத்து முன்னூற்று எண்பத்தியொரு (6381) ஏக்கர் மக்களின் நிலம், யாழ். வடமாராட்சி கிழக்கு மருதங்கேணியில் எழுநூறு (700) ஏக்கர் தனிநபர்களுக்குரிய காணி, யாழ். மண்டைதீவு செம்மண்தோட்ட அறுநூறு (600) ஏக்கர் மக்களின் வாழ்விடம், கொக்கிளாயில் மூவாயிரம் (3000) ஏக்கர் தனியார் காணிகள் போன்றவைபோல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் மக்களிடமிருந்து பறிக்கப்படுகின்றன.

இன்னும், பாரம்பரியமான கிராமங்களான மன்னாரின் கடல்வளமும் வயல்வளமும் கொண்ட முள்ளிக்குளம், முல்லைத்தீவில் கேப்பாப்புலவு கிராமம் மற்றும் கொக்குளாய் கிராமம், திருகோணமலையில் சம்பூர் கிழக்கு, சம்பூர் மேற்கு, சம்புக்கழி கடற்கரைச்சேனை போன்ற கிராமங்களும், யாழ்ப்பாணத்தில் பலாலி, வளலாய், அந்தோனியார்புரம், வள்ளுவர்புரம், வசாவிளான், ஊறணி, ஒட்டகப்புலம், தோலகட்டி, மயிலிட்டி, தையிட்டி, முலவை, இடைக்காடு, காங்கேசன்துறை போன்ற பல பாரம்பரிய – செல்வம் கொளிக்கும் கிராமங்கள் சூறையாடப்பட்டிருக்கின்றன.

மேலும், இன்னுமொரு நாட்டிற்குள் செல்வதுபோலவும், அந்நியர் களை நடத்துவது போலவும் இராணுவச் சோதனைச் சாவடிகள் ஓமந்தை, ஆனையிறவு போன்ற இடங்களில் இன்றும் நடத்தப்படுகின்றன.

வடகிழக்கில் பட்டிதொட்டியெங்கும் இராணுவப் படைமுகாம்களும் இராணுவச் சாவடிகளும் நிறைந்துள்ளன. இராணுவ ஆக்கிரமிப்பில் தொடர்ந்தும் நாம் வாழ நிர்ப்பந்திக்கப்படுவது இனிமேலும் நியாயமாகுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்சொன்னவற்றில் ஒன்றே போதும், எம் வாக்குகளை எவ்வாறு பயன் படுத்தப் போகின்றோம் என்று தீர்மானிப்பதற்கு!

**சர்வதேசத்திற்குத் தமிழ்த் தேசியத்தை உறுதிப்படுத்தவேண்டும்**

'போர்க்குற்ற விசாரணைகள் நடத்தப்படவேண்டும்' என மீண்டும் சர்வதேச அரங்கில் பேசப்படுகின்றது. இவ்வாண்டு கார்த்திகைத் திங்கள் கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில், 'இலங்கை யின் மனித உரிமை மீறல்கள் குறித்து கேள்விகள் எழுப்பப்பட இருக்கின்றன' என்று நம்பப்படுகின்றது. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைய கத்தின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையில் போர்நடந்த இடங் களைப் பார்வையிட இருக்கின்றார்.

இவ்வாறான சூழலில், வடமாகாண சபைத் தேர்தலில் குறிப்பிடத்தக்க வாக்குகளைப் பெற்று தமிழ் மக்கள் தங்களை அங்கீகரித்துள்ளார்கள் எனச் சர்வதேசத்திற்குக் காட்டுவதற்காக என்றாலும் வாக்குகளைச் சேர்த்தாக வேண்டும் எனக் கங்கணம்கட்டி நிற்கின்றது ஒரு பெரும் படை!

இந்நிலையில், நம் மக்களும் தங்களுக்கான தகுந்த தருணத்தைப் பயன்படுத்தி இவர்களை அடியோடு நிராகரித்து சர்வதேசத்திற்குத் தமிழ்த் தேசியத்தை உறுதிப்படுத்த முன்வருவார்கள் என உறுதியாக நம்பலாம்.

**தமிழ்த் தேசிய அபிலாஷைகளுக்கு தவறாது வாக்களிப்போம்**

முடிவாக, ஒவ்வொரு தடவையும், ஏதாவது சொல்லி, எதையாவது செய்து, என்னத்தையாவது தந்து, தமிழ்மக்கள் எம் அபிலாஷைகளை இல்லாதொழிக்கத் தணியாத தாகம்கொண்டு அலைந்து திரிகின்றார்கள். ஏமாறுவதும் ஏமாற்றப்படுவதும் நம் தொடர் வரலாறாகி விடக்கூடாது.

தமிழர் அபிலாஷைகளை வென்றெடுக்க தமிழ்த் தேசிய மக்களாக இணைவோம், தமிழ்த் தேசிய அபிலாஷைகளுக்கு இத்தேர்தல் நாளில் சென்று தவறாது வாக்களிப்போம். 'நம்ம நாடு சரியா இருக்கவேணுமெண்டா, இன் றைய சூழல்ல, நம்ம வீடு சரியா இருக்கணும். விளங்குதா!

மன்னா, ஆவணி 2013





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதல்வர்களாக முண்டியடிக்கக் கூடாது

27

**"அடுத்த ஆயர் யார்?"**

"அடுத்த ஆயர் 'ஆர்' (யார்)?" என்ற பேச்சு ஒருசில மறைமாவட்டங்களில் இந்நாட்களில் பரவலாக அடிபடுகிறது. எழுபத்தைந்து வயதை அண்மித்த – அடைந்த ஆயர்களுக்கு சிறியளவிலான பிறந்தநாள் கொண்டாட்டங்கள் கூட மக்கள் மத்தியில் 'அப்ப, எங்கள் அடுத்த ஆயர் யார்?' என்ற கேள்வியினை இயல்பாகவே ஏற்படுத்தவல்லது.

திருச்சபையின் சட்டம் 401 கூறுவது என்னவெனில், எழுபத்தைந்து வயதின் நிறைவில் ஆயர்கள் தங்களது பதவி விலகலுக்கான கடிதத்தினை (Letter of Resignation) திருத்தந்தைக்கு அனுப்பிவைப்பார்கள். அக்கடிதத்தைப் பரிசீலிக்கும் திருத்தந்தை ஆயரின் ஓய்வுக்கு அனுமதிக்கலாம் அல்லது தொடர்ந்து குறிப்பிட்ட காலங்களுக்குப் பணியைத் தொடரக் கேட்டுக் கொள்ளலாம் அல்லது புதிய ஓர் ஆயர் தெரிவு செய்யப்படும்வரை அவரையே ஆயராகப் பணிபுரியக் கேட்கலாம்.

திருச்சபையின் வேறு முக்கியமான சட்டங்கள் தெரிகிறதோ இல்லையோ இது போன்ற சட்டங்கள் இறைமக்களுக்குத் தெரிந்துவிடுகிறது அல்லது தெரிவிக்கப்படுகிறது! அவ்வகையில், எழுபத்தைந்தாவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய மறைமாவட்ட ஆயர்களின் வருங்கால வாரிசுகள் யார் என்பது பற்றி பொதுநிலையினரும் திருநிலையினரும் கரிசனை கொள்வது இயல்பானதும் புரிந்துகொள்ளக்கூடியதும் ஆகும்.

**தலைமை ஆயர் திருத்தந்தை பிரான்சிஸ்**

இறைவனின் பிரதிநிதிகளாக இயேசுவின் ஆயர்துவப் பணியில் பங்கேற்கும் ஆயர்கள், துறவறசபை முதல்வர்கள், ஏனைய திருநிலை மற்றும் பொதுநிலைப் பணியாளர்கள் எத்தகைய மனநிலையில் தங்கள் அழைப்பை உணர்ந்துகொள்ளவேண்டும், எவ்வாறான மனநிலையோடு தம் பணிகளை ஆற்றவேண்டும் என்பதற்குத் திருத்தந்தை பிரான்சிஸ் இவ்விருபத்தொராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டில் மிகச்சிறந்த வாழும் முன்னுதாரணமாகத் திகழுகிறார்.

அவருடைய புதுமைப்போக்கும், எளிமையான வாழ்வும், சேவை மனப்பான்மையும், பிறரன்புச் செயல்களும் மறைகடந்து உலகமக்கள் அனைவரையும் ஈர்த்தவண்ணமாக இருக்கிறது.

திருத்தந்தை பிரான்சிஸ்சின் இயற்பெயர் ஜோச் மறியோ பேர்கோக்லியோ (Jorge Mario Bergoglio) என்பதாகும். 1936 மார்கழித் திங்கள் 17ஆம் நாள் இத்தாலியப் பெற்றோருக்கு போனேஸ் எயாஸ்இல் (Buenos Aires) பிறந்தவராவார். குருமடம் செல்வதற்கு முன்பதாக இரசாயனத் தொழில் நுட்பவியலாளராகப் பணியாற்றியிருக்கிறார். 1969ஆம் ஆண்டு குருப்பட்டத்தைப் பெற்றுக்கொண்டவர் 1973–1979 வரையான காலப் பகுதியில் ஆஜன்ரீனாவின் இயேசு சபைத் துறவறக் குழுமத்தினுடைய முதல்வராகப் பணியாற்றியிருக்கிறார். 1998இல் போனேஸ் எயாஸ் மறைமாவட்டத்தின் பேராயராக நியமனம் பெற்று 2001இல் கருதினாலாக நியமிக்கப்பட்டார்.

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் பதவி விலகியதன் பின் கருதினால் களின் அவை (Papal Conclave) 2013 பங்குனித்திங்கள் 13ஆம் நாள் கருதினால் ஜோச் மறியோ பேர்கோக்லியோவை திருத்தந்தையாகத் தெரிவு செய்தது. கருதினால் ஜோச் மறியோ பேர்கோக்லியோ (பிரான்சிஸ்) திருத் தந்தையாகத் தெரிவுசெய்யப்பட்டது தூயஆவியாரின் பெரும் கொடையாகவே இக்காலகட்டத்தில் நோக்கப்படுகிறது. திருத்தந்தை பிரான்சிஸ்சின் அத்தனை செயற்பாடுகளும் இவ்வுண்மையையே வெளிப்படுத்தி நிற்கின்றன.

**தூயஆவியார் செயற்பட இடமுண்டா?**

துறவற சபைகளின் உலகளாவிய – மாகாண ரீதியிலான முதல் வர்கள், ஆயர்கள், திருத்தந்தை போன்ற பொறுப்புவாய்ந்த தெரிவுகள் தூய ஆவியானவரின் செயற்பாட்டில் நடந்தேறவேண்டிய ஒன்று என்று இறை நம்பிக்கைகொண்ட ஒருவர் கூறலாம். ஏனெனில், விவிலியத்தில் யோவான் நற்செய்தி 15/16இல் "நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை, நான்தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன்..." எனக் கூறுவதன் வழியாக இத்தகைய தெரிவுகளை இறைவனே செய்தாகவேண்டும் என்பது உறுதியாகிறது.

ஆயினும், இத்தகைய தேர்வுகளை தூயஆவியானவர் செயற்பட்டு நிறைவேற்ற எந்த அளவிற்கு இடமளிக்கப்படுகிறது என்பது ஆய்வுக்குரியது! ஏனென்றால், தூயஆவியின் வடிவில் அல்லது தூயஆவிக்குப் பதிலாக மனித ஆவிகளும் கடந்த காலங்களில் செயற்பட்டிருப்பதை திருச்சபையினுடைய நீண்ட வரலாற்றில் ஆங்காங்கே அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய ஆவியை 'மறக்கப்பட்ட கடவுள்' என்று வர்ணிக்கின்ற அருள் தந்தை தே.அல்போன்சு, "திருஅவையின் இந்த மறதி காரணமாக அது தவற விட்ட வளர்ச்சி வாய்ப்புக்களும் மிகப் பல. அன்பையும் பரிவிரக்கத்தையும்விடச் சட்டத்தையும் கட்டுப்பாட்டையும், அருங்கொடைகளைவிட அதிகார நிலை நாட்டலையும், இயக்கத்தன்மையைவிட நிறுவன இறுக்கத்தையும், புதுமையின் சவால்களைவிட பழமையின் பாதுகாப்பையும், பன்மையின் செழுமையைவிட ஒருமையின் வறட்சியையும் திருச்சபை தனது வரலாற்றின் முதன்மைப்படுத்திய காலங்கள் பல உண்டு" என அவர் பெயர் மரியா என்ற தமது நூலில் தூய ஆவியானவர் புறந்தள்ளப்படுவதால் திருச்சபையில் ஏற்பட்டிருக்கும் தேக்கத்தை அவதானிக்கிறார். இந்த விடயத்தை திருத்தந்தை பிரான்சிஸ் வெளிநாடுகளில் பணியாற்றும் வத்திக்கான் பிரதிநிதிகளை (Nuncios) அண்மையில் சந்தித்தபோது கோடிட்டுக்காட்டி இருக்கிறார்.

**'இளவரசர்களின் மனநிலை' திருச்சபையின் முதல்வர்களுக்குக் கூடாது**

2013, ஆனித்திங்கள் 21ஆம் நாள் வத்திக்கான் பிரதிநிதிகளைச் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ், 'ஆயர்கள் மக்களின் மேல் சுமைகளைச் சுமத்தாது மக்களுக்குப் பணியாற்றவேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார். வத்திக்கானின் தூதர்களாகப் பணியாற்றும் அவர்களின் கடினமான நாடோடி வாழ்க்கையின் அர்ப்பணிப்புக்களுக்கு நன்றி தெரிவித்ததோடு அவர்கள் ஆன்மீக உலகத்தனம் (Spiritual Worldliness) என்பதற்குள் வீழ்ந்துபோகாமல் கவனமாயிருக்கவேண்டும் என்று அறிவுரை கூறியுள்ளார்.

வத்திக்கானின் பிரதிநிதிகளான அவர்கள் ஆயர்களை நியமனம் செய்வதற்குப் பரிந்துரை செய்யும்போது பரிந்துரை செய்யப்படுபவர்கள் மக்களோடிருக்கும் மேய்ப்பர்களாக இருக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார். "ஆயராகவேண்டும் என்ற அவா இல்லாதவர்களாக இருக்கிறார்களா என்பதில் கவனமாயிருங்கள்" என ஆயத்துவ நிலைக்குப் பரிந்துரை செய்யப்படுபவர்களின் மட்டில் தம் பிரதிநிதிகள் கவனம் செலுத்தவேண்டும் என உறுதிபடத் தெரிவித்திருக்கிறார். பரிந்துரை செய்யப்படுபவர்கள் ஏழையரின் உள்ளத்தினராய் இருக்கவேண்டும் என்றும் 'இளவரசர்களின் மனநிலை' (The Mindset of Princes) கொண்டவர்கள் ஆயத்துவ நிலைக்கு உரியவர்களல்ல என்றும் எச்சரித்துள்ளார்.

**'திருச்சபையில் நிலவும் அதிகாரப்போட்டி பாவமானது'**

வைகாசித் திங்கள் 21ஆம் நாள் *Domus Sanctae Marthae* என்ற சிற்றாலயத்தில் ஒப்புக்கொடுத்த திருப்பலியில், "திருச்சபையில் நிலவும் அதிகாரப்போட்டி பாவமானது" (Struggle for Power in the Church is Sin) என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தந்தை பிரான்சிஸ் தெட்டத்தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார். பதவிகளுக்கான அதிகாரப் போட்டி திருச்சபையில் இருக்கவே கூடாது எனவும் ஐயம்திரிபுறக் கூறியிருக்கிறார்.

மாற்கு:9/30–37இல் இயேசு தம் சாவு, பாடுகள் பற்றிப் பேசுகின்ற போது சீடர்கள் தங்களுக்குள், "யார் பெரியவர்?" என வாதிடுகிறார்கள். பெரியவராவதற்குத் தாழ்மையும் சேவை மனப்பான்மையுமே அடிப்படை யானது எனத் திருத்தந்தை பிரான்சிஸ் மேற்குறிப்பிட்ட நற்செய்திப் பகுதியைக் குறிப்பிட்டு விளக்கம் கொடுத்திருக்கிறார்.

**புரட்சிகரமான போதனை**

இன்றைய கருதினால்கள், அதிமேற்றிராணிமார், ஆயர்கள், துறவற சபை முதல்வர்கள், அருள்பணியாளர்கள், துறவிகள், அருட்பணிப் பேரவையி னர், அருட்பணிச் சபையினர், இறைமக்கள் அனைவரும் திருத்தந்தை பிரான்சிஸ்சின் மேற்சொன்ன புரட்சிகரமான போதனைகளை மனங்களில் பதிக்கவேண்டி இருக்கிறது. திருத்தந்தையின் வாழ்க்கைப் படிப்பினைகள் மேற்சொன்னவர்களில் பல தரத்தாரையும் திறத்தாரையும் மூச்சுத்திணறவைக் கும் என நம்பலாம். ஏனெனில், முதல்வர்களாகத் திருச்சபையின் பல்வேறு நிலைகளைக் (பதவிகளை) கைப்பற்ற வேணவாக்கொண்டு தலைமைப் பதவிக் குக் கடந்த காலங்களில் வந்தவர்களும் எதிர்காலத்தில் வர ஆசைப்படுகிறவர் களும் திருநிலையினர் மட்டத்திலும் பொதுநிலையினர் மத்தியிலும் இருக்கத் தான் செய்கிறார்கள் என்பது மறுக்கப்பட முடியாதது.

அவ்வாறாயின், தூயஆவியானவர் செயற்பட இடமேது என்ற கேள்வி கேட்காமலே எழும்! எழவேண்டும்! எனினும், இத்தனை நெழிவுகள் சுழிவுகள் மத்தியிலும் தூயஆவியானவர் செயற்படுகிறார் என்பதைத் திருத்தந்தை பிரான்சிஸ்சின் தெரிவு உறுதிப்படுத்துகிறது என்பது இங்கு மனங்கொள்ளத் தக்கது.

**எளிமை வாழ்வால் உலகத்தை ஈர்க்கும் திருத்தந்தை**

அமெரிக்க நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட முதல் திருத் தந்தையாகவும், திருத்தந்தையரில் இயேசு சபையைச் சார்ந்த துறவியாகவும், திருத்தந்தையரில் பிரான்சிஸ் என்ற பெயரை முதன்முதல் தாங்கியவராகவும் திகழ்வது இவரின் சிறப்புக்களுள் சிலவாகும்.

திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் வழமையாகத் திருத்தந்தையர் அணியும் சிவப்பு நிறத்தினாலான *ஸ்ரோல்லை* (Stole- அருட்பணியாளர்கள் திருப்பலிக்கு அணியும் தோள்ப்பட்டை) அணியாமல் முதன்முதல் மக்கள் முன் எளிமையாகத் தோன்றியது பலருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனத்தையும் ஈர்த்திருந்தது. திருத்தந்தையாகத் தெரிவு செய்யப்பட்டபின் தான் பாவித்த அறைக்கு வந்து அவ்வறையைத் தானே துப்பரவுசெய்து ஒழுங்குபடுத்தி அவ்வறைக்குரிய வாடகையையும் அவரே செலுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

உத்தியோகபூர்வ பணியேற்பிற்கு இவர் கருதினாலாகப் பணியாற்றிய ஆர்ஜன்ரீனா நாட்டிலிருந்து பல்லாயிரக்கணக்கானோர் வர உத்தேசித்த போது அவ்வாறு நீண்டதூரம் பயணம் செய்து உரோமைக்கு வரவேண்டியதில்லை என்றும் பிரயாணம் செய்து செலவழிக்கின்ற பணத்தினை ஏழை எளியவர்களுக்குக் கொடுத்து மகிழ்ந்திருக்கும்படி கூறியதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

2013, ஆடித்திங்கள் 22ஆம் நாள் உலக இளையோர் தினத்தை முன்னிட்டு பிறேசில் நாட்டின் றியோ த ஜேநேய்றியோவை அடைந்த திருத்தந்தை பிரான்சிஸ், தன்னுடைய பயணப் பையைத் தானே தூக்கிக் கொண்டு சாதாரண ஒரு பயணியைப்போல விமானத்திலிருந்து இறங்கிச் சென்றது பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. ஏழ்மை வாழ்வும், ஏழைகள்பால் அக்கறையும், உதவி தேவைப்படுகின்றவர்கள்பால் கரிசனையும் கொண்டு வாழவேண்டும் என்பதைத் திருத்தந்தை பிரான்சிஸ் தமது போதனையாலும் வாழ்வாலும் தொடர்ந்து கோடிட்டுக் காட்டுவதைத் திருநிலையினரும் பொதுநிலையினரும் உற்றுநோக்குவது இன்றியமையாதது ஆகும்.

**எளிமை வாழ்வுக்கு எதிரானவை**

மேற்சொன்ன திருத்தந்தையின் செயற்பாடுகளை மனதில் வைத்துக் கொண்டு நம் ஆலயங்களில் - கோவில்களில் நடைபெறும் கொண்டாட்டங்களை நோக்கவேண்டி இருக்கிறது. ஆலயத் திருநாட்களை — கோவில் உற்சவங்களைப் பார்த்தால் அவை அளவுக்கதிகமான அலங்கரிப்புக்களையும் ஆடம்பரங்களையும் கொண்டிருப்பதை அவதானிக்கலாம்.

திருநாளுக்கு — உற்சவத்திற்கு இவ்வளவு என்று அன்றாடம் வருந்தி உழைக்கும் ஏழைகளிடம் பணம்பெற்று அநியாயமான செலவுகளைச் செய்து பணத்தை வீண்விரயம் செய்வதை அதிகமான ஆலயங்களில் - கோவில்களில் அவதானிக்க முடிகிறது.

அளவுக்கு அதிகமான ஒலிபெருக்கிகளின் பயன்பாடு என்றுமில்லாதவாறு அதிகரித்திருப்பதைக் காணலாம். இது மாணவர்களினுடைய கல்வியை வெகுவாகப் பாதிக்கிறது எனத் தெரிந்தும் இவ்விடயத்தில் யாரும் கரிசனை கொள்வதாகத் தெரியவில்லை. ஆலய — கோவில் திருநாட்காலங்களில் தேவைக்கு அதிகமான மின்சார விளக்குகளைப் பொருத்துதல், இரவிரவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்விளக்குகள் எரிவதையும் விடிந்தும் பகல் வேளைகளில் நூற்றுக் கணக்கான மின்விளக்குகள் எரிந்துகொண்டிருப்பதையும் இன்று வேதனை யோடு சுட்டிக்காட்டவேண்டி இருக்கிறது.

வெடிகளைக் கேட்டால் பயப்பட்டு பதகளித்து வெறுத்தோடிய காலம்போய் இப்போது வெடியில்லாத நிகழ்வுகளே இல்லை என்ற நிலை வந்துவிட்டது. ஆலயத்தில் கொடியேற்றத்திற்கும் வெடி கொளுத்துகிறார்கள், கொடியிறக்கத்திற்கும் வெடி கொளுத்துகிறார்கள்! திருவிழாவுக்கும் வெடி கொளுத்துகிறார்கள், தேர்தலுக்கும் வெடி கொளுத்துகிறார்கள்! திருமண வீட்டிலும் வெடி கொளுத்துகிறார்கள், இழவு வீட்டிலும் வெடி கொளுத்து கிறார்கள்! தாலிகட்டும்போதும் வெடிதான், தாலியறுந்தபோதும் வெடிதான்!

கிறிஸ்து பிறப்பு அன்று ஏன் குடிக்கிறான் என்று குடிப்பவனிடமே வினவினால், இயேசு பிறந்த மகிழ்ச்சியால் குடிப்பதாகக் கூறுவான். அதே ஆளிடம் பெரிய வெள்ளியன்று ஏன் குடிக்கிறான் என வினவினால், இயேசு இறந்த கவலையில் என்பான். அதுபோலதான் வெடி கொளுத்தலையும் புரிந்துகொள்ள வேண்டும்போல் தெரிகிறது.

**வெடிக்கும் வெளிச்சத்திற்குமான செலவில் ஓர் ஏழைக்கு உதவலாம்**

சில இடங்களில் வெடிகளுக்கும் வெளிச்சத்திற்கும் ஒலிபெருக்கிக்கும் செலவாகும் பணத்தின் தொகையைக் கணக்கிட்டால் ஒவ்வொரு ஆலயமும் – கோயிலும் ஆண்டொன்றுக்கு ஓர் ஏழை இளம் பெண்பிள்ளைக்கு சீதனம் கொடுக்கப் போதுமானதாகவும் அல்லது ஓர் ஏழைக் குடும்பத்திற்கு சிறிய வீட்டை அமைத்துக் கொடுக்கக் கூடியதாகவும் அல்லது மாற்றுத் திறனாளி ஒருவருக்கு தொழில்வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கக் கூடியதாகவும் இருக்கும். அவ்வளவு பெரும் தொகைப்பணம் ஆலய – கோவில் திருநாட்களின் வெடிகளுக்கும் வெளிச்சத்திற்கும் ஒலிபெருக்கிக்கும் செலவிடப்படுகிறது. வெளிச்சத்தினதும் ஒலிபெருக்கியினதும் தேவையினை மறுப்பதற்கில்லை. ஆனால், இங்கு மிகையான தேவையற்ற வீண்பயன்பாடே சுட்டிக் காட்டப் படுகிறது.

நிறைவாக, மேற்சொன்ன வீணான, விரயமான, ஆடம்பர, பகட்டான, பயனில்லாத செயற்பாடுகள் எளிமை வாழ்வுக்கு எதிரானவை மட்டுமல்லாமல் வளங்கள் வீண்விரயம் செய்யப்படுவதோடு ஏழையரோடு பகிரப்பட வேண்டியவை பகிரப்படாமல் அநியாயமாக்கப்படுவது நீதிக்குப் புறம்பான தாகவே கொள்ளப்படவேண்டும்.

மன்னா, ஐப்பசி 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூட்டமைப்பினரே கவனியுங்கள்!

28

**தீர்க்கமான தீர்மானம்**

ஆவணித்திங்கள் வெளியான இத்தொடர் - 'அதிர்வுகள்' கடந்த 2013 வடமாகாண சபைத் தேர்தலில் எத்தகைய தாக்கத்தை - மாற்றத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது என்பதைப் பலர் தெரியப்படுத்தி இருந்தார்கள். அவர்களுடைய பின்னூட்டல்களுக்கு தலைசாய்த்து நன்றி சொல்கிறேன். ஆவணித்திங்கள் 'அதிர்வுகள்' தொடர், "...தமிழ்த்தேசிய கூட்டமைப்பை வீழ்த்துவது தமிழர் அபிலாஷைகளை – தமிழர் வாழ்வுரிமையை தோற்கடிப்பதற்குச் சமமானது என்பதைத் தமிழ் மக்கள் நினைவில் நிறுத்தவேண்டியவர்கள் ஆகின்றனர்..." என்று தெளிவுபடுத்தி இருந்தது.

"... இருக்கின்ற அரசியல் கட்சிகளுக்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றே இன்று ஒட்டுமொத்த தமிழ் மக்கள் நலன் சார்ந்த தமிழ்த் தேசியக் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கின்றது என்பதைத் தமிழ் மக்கள் இம்மாகாணத் தேர்தலில் வெளிப்படுத்தவேண்டும் என சமூகத் தலைவர்களும் புத்திஜீவிகளும் எதிர்பார்த்து நிற்கின்றனர். எனவே, ஒவ்வொருவரும் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியத்திற்கு வாக்களித்து தமிழர் அபிலாஷைகளை வெளிப்படுத்த முன்வருவது நம் அறக்கடனாகும்" என்று வடமாகாணசபைத் தேர்தலில் மக்கள் தமிழர் அபிலாஷைகளுக்கே வாக்களித்து தமிழரின் வாழ்வுரிமையை உறுதிப்படுத்த வேண்டியிருந்தோம்.

இறுதியில், 'உரிமையா? சலுகையா? வரலாற்று முடிவு இன்று' என்று தேர்தல் தினத்தன்று 'உதயன்' தலைப்புச் செய்தியாகத் தீட்டியிருந்தது. 21.09.2013 அன்று பல்வேறு அச்சுறுத்தல்கள், அடாவடித்தனங்கள், அழுத்தங்கள், குழப்பங்கள், இடையூறுகள் மத்தியிலும் வடமாகாணத்தில் 68 சதவீதமான வாக்குகள் பதிவாகி இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எக்காலத்திலும் காணாத வரலாற்று வெற்றி**

2013 வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டு இருப்பினும் 38 ஆசனங்களில் ஆகக்கூடியது 24 – 25 ஆசனங்களையே பெறக்கூடிய தற்கான சாத்தியக்கூறுகள் உண்டு என்று எதிர்வு கூறப்பட்டது. நிலவிய அரசியல் களநிலைமையில் 25ஆசனங்கள் கிடைத்தாலே போதுமானது என்றிருந்தது.

ஆயினும், அனைவருடைய எதிர்பார்ப்புக்கும் மேலாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 78.48 விகிதமான வாக்குகளைப் பெற்று 30 ஆசனங்களைக் கைப்பற்றி மிகப் பெரும் வெற்றியை ஈட்டிக் கொண்டது. இவ்வெற்றியானது முன்னர் எப்போதுமே காணாத சரித்திர வெற்றி என வர்ணிக்கப்படுகிறது.

1977ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப் படையில் பெறப்பட்ட வெற்றி தமிழர் வரலாற்றில் பேசப்படுகின்ற, கடந்த காலங்களில் பெறப்பட்ட வெற்றிகளுக்கெல்லாம் மூலமாகத் திகழ்கின்ற ஒன்றாக இருந்தது.

ஆனால், 2013 வடமாகாண சபைத் தேர்தலில் பெறப்பட்ட வெற்றியானது 1977இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் கோட்பாட் டில் அமைந்த வெற்றியிலும் பார்க்க மகத்தானது என விதந் துரைக்கப்படுகிறது. "... வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் வெற்றியும் சிறப்பானதுதான். எனினும், அது தொகுதி வாரித் தேர்தலில் கிடைத்த வெற்றி. மாகாணசபைத் தேர்தலில் இப்போது கிடைத்திருக்கும் வெற்றி, விகிதாசார பிரதிநிதித்துவ முறையின்கீழ் பெற்ற வெற்றி. இவ்வாறு விகிதாசார பிரதிநிதித்துவத்தின் கீழ் கிடைத்த வெற்றி என்பது நிச்சயம் 1977இல் பெற்றுக்கொண்ட வெற்றியை விடவும் மேலானது" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தேர்தல் முடிவுகள் வெளியான மறுநாள் 22.09.2013 அன்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

**மக்களின் ஆணைக்கு மதிப்பளியுங்கள்**

இத்தேர்தல் முடிவிலிருந்து ஒன்று மிகத் தெளிவாகப் புலப்படுகிறது. வடபகுதி மக்கள் தம் அரசியல் கொள்கையில் தெளிவாக இருக்கிறார்கள் என்பது மீண்டும் ஒருதடவை மிக உறுதியாக சர்வதேசத்திற்கும், நம் நாட்டுத் தலைவர்களுக்கும், நம் தமிழ்த் தலைமைகளுக்கும் நிரூபிக்கப்பட்டு இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவேதான், வடபகுதி மக்கள் தேர்தலில் வழங்கிய அங்கீகாரம் தமிழர் அபிலாஷைகளை அடைய ஜனநாயக ரீதியாகக் கொடுத்த ஆணை என்பதை வடமாகாண சபைத் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இச்சிந்தனையின் அடிப்படையில்தான் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு அவர்கள், "இனியாவது மகிந்த தமிழரை மதிக்கட்டும்" என்ற தலைப்பில் உதயன் பத்திரிகையில் 24.09.2013அன்று வெளிப்படுத்திய கருத்தினை நோக்கவேண்டும். அதேபோல், 'தமிழரின் ஆணைக்குப் பெருமதிப்பளியுங்கள்' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் சம்பந்தன் கூறியிருப்பதனையும் கவனிக்கவேண்டும்.

**சிறுமைத்தனமான செயற்பாடுகள் வேண்டாம்!**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில வேட்பாளர்கள் தேர்தலுக்கு முன்னைய நாட்களில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் செய்தது போல சில குறுக்கு வழிக் கைத்தந்திரங்களைக் கையாண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சில இடங்களில் மதுபானங்கள் தாராளமாகவே வழங்கப்பட்டிருக்கிறது.

தொடர்ந்து தேர்தல் முடிவுகள் வெளியாகிய கையோடு வாக்குகளின் அடிப்படையில் குறைவான வாக்குகளைப் பெற்று மாகாண சபைக்குத் தெரிவுசெய்யப்படாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில வேட்பாளர்கள் சில 'புள்ளிகள்'இன் துணையோடு தமிழ் சிவில் சமூகப் பிரதிநிதிகளின் சிபார்சுகளை எப்படியேனும் பெற்று தமிழ் அரசியல் தலைமைகளிடம் *போனஸ் (Bonus)* ஆசனங்களைப் பெறக் கடும் பிரயத்தனம் செய்ததாக அறியமுடிகிறது. இவையெல்லாம் தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஆரோக்கியமான அணுகுமுறைகள் அல்ல என்பது மட்டும் புரிகிறது.



இத்தேர்தலில் விரும்பிய கட்சி ஒன்றுக்கும், அக்கட்சியில் தாம் விரும்பிய மூன்று வேட்பாளர்களுக்கும் புள்ளடியிட முடியும். கட்சியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் புள்ளடி இட்டபின்னர் மூன்று விருப்புவாக்குகளில் தமக்கு மட்டும் புள்ளடியிட்டு மற்றய இரு புள்ளடி களை இடவேண்டாம் எனச் சில பச்சைச் சுயநலத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் தங்கள் உறவினர்களையும் ஊரவர் களையும் ஆதரவாளர்களையும் கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது.

அதனால், சில மாவட்டங்களில் தெரிவான உறுப்பினர்கள் இன்னும் அதிக விருப்புவாக்குகளைப் பெறமுடியாமல் போனதோடு ஒருசில ஆசனங்களையும் மேலதிகமாகத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு பெறமுடியாது போனது என்றும் சொல்லப்படுகிறது.

இதேபோன்ற சின்னத்தனமான - சில்லறைத்தனமான செயற் பாடுகளைக் கடந்த பராளுமன்றத் தேர்தல் நடைபெற்றபோது நம் முடைய கௌரவ பாராளுமன்றத்திற்கு வேட்பாளர்களாகப் போட்டி யிட்டவர்கள் செய்ததாகவும் அறியமுடிகிறது. இவை, நம்மவர்களின் பச்சைச் சுயநல அரசியல் சிறுமைத்தனத்தையே வெளிப்படுத்துகிறது!

**வடமாகாண அமைச்சுப் பதவிகளின் இழுபறிக்கு முடிவு!**

வடமாகாண சபை நான்கு அமைச்சுப் பதவிகளுக்கான போட்டி தேர்தல் முடிவுகள் வெளியான கையோடே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் சூடுபிடிக்க ஆரம்பித்து விட்டது. அமைச்சுப் பதவிகள் கட்சி அடிப்படையிலா? மாவட்ட அடிப்படையிலா? நிபுணத்துவ (திறமைசார்) அடிப்படையிலா? அல்லது வேறு ஏதாவது அளவு கோலின் அடிப்படையிலா கொடுப்பது என்ற பேச்சுக்கள் நீண்ட நாட்களாகவே வாதப் பிரதிவாதங்களாக நடந்து வந்தன.

இறுதியாக, சுமார் இரண்டு வாரங்களின் பின்னர் ஒரு முடிவு காணப்பட்டு வடமாகாண சபை நான்கு அமைச்சர்களும் அறிவிக்கப் பட்டு 11.10.2013அன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் அமைச்சர்களும் உறுப்பினர்களும் மாகாணசபை முதலமைச்சர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இவ்விழுபறி நடந்துகொண்டிருந்த நிலையில் யாழ்.மாவட்டத் தில் இரண்டாவது அதிகூடிய வாக்குகளைப் (87,870) பெற்ற திருமதி. அனந்தி எழிலன் அவர்கள் அமைச்சுப் பதவிகள் இருந்தால்தான் மக்களுக்கான பணிகளை ஆற்றமுடியும் என்றல்ல, அவை இல்லா மலே மக்களுக்கான பணிகளை ஆற்றமுடியும்: அதனை அவர் ஆற்று வார் எனக் குறிப்பிட்டது இங்கு பெருந்தன்மையோடு நினைவு கூரத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், வேறு எந்த உறுப்பினர்களும் இவ்வாறான கருத்தைப் பகிரங்கமாகத் தெருவித்ததாகத் தெரியவில்லை! அந்தளவிற்கு அமைச்சுப் பதவிகளுக்கான போட்டி நிலவியது என்பது மறைக்கப்பட முடியாத விடயமாகிறது.

**பதவியேற்பில் 09 பேர் பங்கேற்கவில்லை!**

இந்நிகழ்வில், 'சித்தார்த்தன் உட்பட 09 பேர் நேற்று பதிவியேற்கவில்லை' எனும் தலைப்பில் "...யாழ்.மாவட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் போட்டியிட்ட க.சர்வேஸ்வரன், மற்றும் புளொட் சார்பில் போட்டியிட்ட த.சித்தார்த்தன், ரெலோ சார்பில் போட்டியிட்ட க.சிவாஜிலிங்கம், மன்னார் மாவட்டத்தில் ரெலோ சார்பில் போட்டியிட்ட மருத்துவர் குணசீலன், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் போட்டியிட்ட து.ரவிகரன், க.சிவமோகன், வவுனியா மாவட்டத்தில் புளொட் சார்பில் போட்டியிட்ட ரி.லிங்கநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் போட்டியிட்ட இந்திரராசா தியாகராசா ஆகிய 09 உறுப்பினர்கள் மட்டும் பங்கேற்கவில்லை" என பத்திரிகைகளில் 12.10.2013அன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இதேநாளில் 12.10.2013 அன்று 'வடக்கு மாகாண சபைக்கு எமது முழுமையான ஆதரவு', 13.10.2013இல் 'நடந்தவை அனைத்தையும் மறந்து சரியான பாதையில் பயணிப்போம்' போன்ற தலைப்புக்களில் புளொட் தலைவர் சித்தார்த்தன் கூறியிருந்த விடயங்களைப் பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன.

**தமிழர் ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவிக்க வேண்டாம்!**

ஒருசிலர், மாகாணசபை வேட்பாளர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டதே பெரிய விடயம்! இது இப்படியிருக்க, "அமைச்சுப் பதவிதான் வேண்டும் அப்போதுதான் மக்களுக்குப் பணியாற்றுவேன்" என்றால் நிலைமை எப்படியிருக்கும் என யோசித்துப் பாருங்களேன்!

ஒரு விடயத்திற்கு முடிவு எடுக்க, ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண ஜனநாயகக் கண்ணோட்டத்தில் பல நேர்மறையான எதிர்மறையான கருத்துப் பரிமாற்றங்களும் – கருத்து முரண்பாடுகளும் – கருத்து மோதல்களும் ஏற்படலாம். அது ஒருவகையில் ஆரோக்கியமானதும் கூட!

ஆனால், ஒரு தீர்மானம் எட்டப்பட்டதும் அதன் பின்னர் அறுபத்தெட்டுக் காரணங்களைக் கற்பித்துக்கொண்டும் – காரணங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் காட்டிக்கொண்டும் தீர்மானத்திலிருந்து விலகிநிற்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு செயல்! குறிப்பாக 11.10.2013அன்று நடைபெற்ற மாகாணசபை உறுப்பினர்களின் சத்தியப்பிரமாணமும் பதவியேற்பும் என்ற வைபவத்தில் 09 உறுப்பினர்கள் கலந்துகொள்ளாதது அவர்களுக்கு வாக்களித்த தமிழ்மக்களின் முகங்களில் கரி பூசியதற்கு ஒப்பானது!

ஏனெனில், இவர்களின் பதவியேற்பு நிகழ்வில் பங்கெடுக்காததற்கான நொண்டிக் காரணங்களை இனிமேலும் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. "மக்களின் நம்பிக்கையை வீணடிக்கும் முறையில் நடந்துகொள்ளக்கூடாது" என்றும், "பதவிப் பிரமாணத்தில் கலந்து கொள்ளாதது கவலைக்குரியது மட்டுமல்ல கண்டிக்கத்தக்கது" என்றும் மன்னார் ஆயர் 13.10.2013அன்று வீரகேசரியில் வெளியிட்ட கருத்தை வடமாகாணசபை உறுப்பினர்கள் ஆழமாகச் சிந்தையில் கொள்ளவேண்டும்.

தமிழர் அபிலாஷைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் எவ்வகையான ஒற்றுமையின்மையும் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்பதை இவர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். இல்லையென்றால், இப்பேர்ப்பட்டவர்கள் அரசியலில் இருந்து வெகுவிரைவில் மக்களால் தூக்கி எறியப்படுவார்கள் என்பது உறுதி.

இதனைக் கடந்த காலங்களில் மக்கள் தெளிவாகச் செய்து காட்டி இருக்கிறார்கள். இதற்கு உதாரணமாக, வன்னித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த (ஆகக்குறைந்தது) மூவர் மக்களால் அடுத்து வந்த தேர்தல்களில் ஓரங்கட்டப்பட்டது நினைவிருக்கும் (அவர்களுக்கான மரியாதை கருதி அவர்களின் பெயர்கள் குறிப்பிடுவது தவிர்க்கப்பட்டுள்ளது.)!

**மக்களின் கடமை வாக்களிப்பது மட்டுமல்ல!**

எனவே, தேர்தலில் வாக்களிப்பதோடு மக்களின் கடமையும் பொறுப்பும் முடிந்துபோவதில்லை. மக்கள் விழிப்பாயிருந்து தாங்கள் வாக்களித்த பிரதிநிதிகள் மக்களுக்காகச் செயற்படுகிறார்களா என அவதானிக்கவேண்டும்.

அப்போதுதான் அடுத்துவரும் தேர்தல்களில் மக்கள் பணியாற்றாத அரசியல் பிரமுகர்களை அரசியல் களத்திலிருந்து வெளியேற்றி உண்மையாக மக்கள் பணியாற்றத் தயாராயிருக்கும் அன்பர்களுக்கு அச்சந்தர்ப்பங்களை வழங்கமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாரையும் எல்லா வேளைகளிலும் ஏமாற்றமுடியாது என்பதை 2013ஆம் ஆண்டு வடமாகாண சபைத் தேர்தல் தெட்டத்தெளிவாக வெளிக்காட்டிவிட்டது. பச்சைச் சுயநல அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் மக்களால் நிராகரிக்கப்பட்டதை உறுதிப்படுத்துகிறது.

எனவே, தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் மக்களுக்குப் பணியாற்றுகிறார்களா? என்பதை உறுதிப்படுத்துவது மக்களின் கைகளிலேயே உள்ளது என்பதைச் சாதாரண மக்களும் சமூகத் தலைவர்களும் மறந்துபோகக் கூடாது.

**தமிழர் அபிலாஷைகளை அடையவே மக்களின் ஆணை!**

விருப்புவாக்குகளின் மூலம் ஒரு தொகை வாக்குகளை ஒவ்வொரு உறுப்பினரும் பெற்றிருந்தாலும் தமிழரசுக் கட்சியின் சின்னமான வீடு தமிழ் மக்களின் அபிலாஷைச் சின்னமாகத் தற்போது விளங்குவதால் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் தமிழர் அபிலாஷைகளுக்கும் வாழ்வுரிமைக்குமே வாக்களித்தார்கள் என்பதை வடமாகாண சபை உறுப்பினர்களும் வடக்கைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களும் தயவுசெய்து மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். இல்லையேல், அடுத்து வரும் தேர்தல்களில் கட்டுப்பணமும் கிடைக்காமல் போகலாம்!

'அடுத்த தேர்தல் வருவதற்கிடையில் உழைக்கவேண்டியதை உழைத்துவிடுவோம்' என்று எண்ணி பொருளாசைக்கும் சலுகைகளுக்கும் லஞ்சத்திற்கும் இடம்கொடுத்தால் வேறு தொழில்துறைகளை இப்போதே தேடிவைத்திருப்பது பிற்காலத்தில் எதற்கும் உதவியாக இருக்கும்!

நிறைவாக, 'தமிழர்களை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று தந்தை செல்வா அன்றைக்குச் சொன்னார். இன்றைக்கு, 'கூட்டமைப்பினரை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று வன்னித்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் 11.10.2013 அன்று கூறியிருக்கிறார்! அடுத்து, 'எங்கள் ஒவ்வொரு மாகாணசபை உறுப்பினரையும் இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என ஏகோபித்து வாக்களித்த மக்கள் அனல் பெருமூச்சு விடாமல் பார்த்துக்கொள்வது ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினரினதும் கடனாகும். செய்வார்களா?

மன்னா, கார்த்திகை 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர்வு சார்ந்தவை

# காலஞ்சென்ற கலாசாரக் கூறொன்று



29

**நம் அடையாளங்களுள் ஒன்று!**

பிரான்சில் லூர்துத் திருத்தலத்தில் மூன்றரை ஆண்டுகள் வாழப் பெரும் பாக்கியம் பெற்றேன். உலகின் பல பாகங்களில் இருந்து வரும் மக்களைச் சந்திக்கின்ற வாய்ப்புக் கிடைத்தது.

லூர்துத் திருத்தலத்திக்குத் தம் மக்களோடு திருப்பயணியாக வந்திருந்த பிரான்சு நாட்டைச் சார்ந்த ஆயர் ஒருவர் நான் தமிழ் அருட் பணியாளன் என்பதை என் உரையாடலிலிருந்து அறிந்து கொண்டார். அவருடைய மறைமாவட்டத்தில் நிறையத் தமிழ் மக்கள் வாழ்வதனால் தமிழ் மக்களைப் பற்றித் தெரிந்தவராக இருந்தார்.

திருத்தலத்தில் ஆன்ம குருவாக இருந்து தமிழ்த் திருப்பயணிகளுக்குத் திருப்பலியையும், ஏனைய ஆன்மீகப் பணிகளையும் புரிகிறேன் எனத் தெரிய வந்ததும், "உங்களுடைய மக்கள் பூசையில் எழுந்தேற்றத்திற்குத்தானே வந்து சேர்வார்கள்?" எனப் புன்னகைத்துக் கொண்டு சொன்னபோது, "துரதிஷ்ர வசமாக, அது எம் துரதிஷ்ரவசமான அடையாளங்களுள் ஒன்று!" என்றேன் பதிலுக்கு! "எம் மக்களில் அநேகர் ஆலயத்துக்கு வருவதையே குறைத்து விட்டார்கள், அப்படியிருக்க உங்கள் மக்கள் பிந்தியாவது வருகிறார்களே!" என்று எனக்கு ஓர் ஆறுதல் பரிசு தருவதுபோலக் கூறி உரையாடலைத் தொடர்ந்தார்.

**எதில் ந(ா)ம் தரம் ஒன்று?**

லூர்துத் திருத்தலத்தில் ஒருமுறை, ஏழு பேரோடு திருப்பலியைத் தொடங்கினேன். திருப்பலியின் எழுந்தேற்ற வேளையில் எழுபத்தேழு பேர் இருந்தார்கள்! திருப்பலி முடிவில், இந்த எண்ணிக்கை எண்பத்து நான்காக உயர்ந்தது.

நேரத்தைப் பொறுத்தளவில் இதுதான் எங்கள் பரிதாபநிலை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடயத்தை அவதானித்து, ஆராய்ந்து, கணக்கிட்டுப் பல தடவைகளில் பார்த்திருக்கிறேன். தானங்கள்தான் மாறுகிறதே தவிர, பிந்துவதில் ந(ா)ம் தரம் ஒன்றுதான்!

**பிந்திப்புறப்பட்டு, முட்டிமோதி, மூக்குடைபட வேண்டுமா?**

புலம்பெயர் நிலத்தில் மக்கள் பரவிக் கிடக்கிறார்கள். ஓரிடத்திற்குப் போகவேண்டும் என்றால் நேரகாலத்தோடு செல்லவேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு நகரத்துக்கும் இடையில் பல நூறு கிலோமீற்றர் தூரம் பயணிக்க வேண்டி ஏற்படும். சாதாரணமாக அன்றாடக் கருமங்களை ஆற்றுவதற்கே நீண்ட தூரங்கள் பிரயாணம் செய்யவேண்டி இருக்கிறது. நேரகாலத்தோடு புறப்படாமல் பிந்துவதால் பல சிக்கல்கள் உருவாகின்றன.

குறிப்பாக, நம்மவர்கள் நேரத்திற்குப் புறப்படாமல் பிந்துவதால், அவசரப்பட்டு வெளிக்கிட்டு, வீட்டிலிருந்து புறப்படும்போதே வீட்டில் உள்ளவர்களைத் தாறுமாறாய்ப் பேசி, வழியில் வாகனம் செலுத்தும் அத்தனை பேர்களையும் திட்டித் தீர்த்து, அதற்கிடையில் தொலைபேசியில் யாராவது தொடர்பு கொண்டால் அவர்களோடும் முட்டிமோதி, வழியில் மனைவி - பிள்ளைகள் ஏதாவது கேட்டால் அவர்கள் மீதும் ஏறிப்பாய்ந்து கடைசியில் வாகனம் உறுமிக் கொண்டு செல்லுமே தவிர வேகமாகச் செல்லாது!

நேரகாலத்தோடு புறப்படாததால் கடைசியாய் மிஞ்சி நிற்பது கோபமும், சோகமும், பதட்டமும், படபடப்பும், உயர்குருதி அழுத்தமும் ஏன் பயங்கர வீதி விபத்துக்களும்தான்!

**அவசரமான அதிவேகத் திருப்பயணம்!**

எனக்குத் தெரிந்த இரண்டு திருப்பயணிகள் அவசரமான திருப் பயணம் ஒன்றை மேற்கொண்டு பாரிசிலிருந்து லூர்துக்கு தொடரூந்தில் புறப்பட்டார்கள். என்னோடு தொடர்பு கொண்டு, லூர்து அன்னையைப் பார்க்காவிட்டாலும் என்னைக் கட்டாயம் சந்திக்க வேண்டும் என்பதுபோல எனக்கு வேண்டுகோள் ஒன்றையும் விடுத்தார்கள்.

லூர்தில் உறைப்புச் சுவையேதும் இல்லாமல் பிரஞ்சு சாப்பாடுகளைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் எனக்கு ஒரு நல்ல மத்தியானச் சாப்பாடு கொண்டுவருவதாக அவர்களே கூறியதால் நானும் இலவு காத்த கிளிபோல இவர்கள் சொன்ன நேரத்திலிருந்து காத்துக் கிடந்தேன்.

வரவேண்டியவர்கள் குறித்த நேரம் கடந்தும், சில மணித்தியாலங் களாகியும் வரவில்லை. ஒரு கட்டத்தில், "இனிமேலும் காத்து நிற்க முடியாது" என்ற வெறுப்பில் மனதை சாந்திப்படுத்திக்கொண்டு இருந்துவிட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குரிய சாப்பாட்டையும் ஏற்கெனவே இரத்துச் செய்துவிட்டு, "சோறும் கறியும் சாப்பிடலாம்" என்ற புளுகில் இருந்த எனக்கு, "இதுவும் வேண்டும் இன்னும் வேண்டும்" என நினைத்துக் கொண்டேன்.

**ஒரு ஜீவனின் பசித்துயர்!**

நான் தங்கியிருந்த அருள்பணியாளர் இருப்பிடத்தில் பிந்தி வருவதாகச் சொல்லியிருந்தால் சாப்பாடு வைத்திருப்பார்கள். அப்படிச் சொல்லாமல் பிந்திச் சென்றால் என்ன, சாப்பாடு சாப்பிட்டிருக்கிறார்கள் என்ற தடயங்கள்தான் கிடக்கும்! அதைப் பார்த்து, "வயிற்றுப் போராட்டத்தை ஏன் இன்னும் அதிகமாக்குவானேன்?" என அந்தப் பக்கமே செல்லவில்லை. வயிற்றுச் சமருக்கு முடிவுகட்டத் தண்ணீரை மூக்கு முட்டக் குடித்து விட்டுப் பசிக் களைப்பில் என் அறையை நோக்கிச் சோர்வோடு சென்று கொண்டிருந்தேன்.

செல்லும் வழியில் மேற்கத்தேய அருள்பணியாளரான என் நண்பர் ஒருவர் பிரான்சிய மொழியில், "இன்றைக்கு, உங்கள் ஊர் சாப்பாட்டை, நீண்ட காலங்களுக்குப் பின், நன்றாக சாப்பிட்டு இருப்பாயே?" என்று கரிசனையோடு தான் கேட்டான். "என்னுடைய துன்பம் உனக்கு எங்கே விளங்கப் போகிறது?" என நினைத்து விட்டு, இல்லையென்று சொன்னால், விளக்கம் கொடுக்க வேண்டிவரும் என்பதால், "சாப்பாடு அருமையாக இருந்தது" எனச் சுருக்க மாகவே சொன்னேன். அவனும் வடிவாக மேலும் கீழுமாக என்னைப் பார்த்து விட்டு, "அதுதான் உன் வயிறு பெரிதாக இருக்கிறது, என்னையும் கூப்பிடாமல் நன்றாகத்தான் சாப்பிட்டிருக்கிறாய்!" என்றான்.

தண்ணீரால் என் வயிறு நிரம்பியிருப்பதும், பசிக் களைப்பால் என் இதயம் துடிதுடிப்பதும் அவனுக்கு எப்படிப் புரியப் போகிறது? நல்லவேளை வழமைபோல யாரையும் அழைக்கவில்லை. அழைத்திருந்தால் என்கதி அதோகதிதான். "நல்ல வேளையாக நீ தப்பிவிட்டாயடா?" என மனதிற்குள் நினைத்துக் கொண்டேன். பசித் துன்பத்தில் என் வாய், "சொன்னா வெக்கக் கேடு, அட, சொல்லாட்டி மானக் கேடு கோய் கோய்..." என்ற பாடல் வரிகளைப் பாட ஆரம்பித்தது.



என் நண்பனும் என்னை விட்டபாடில்லை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாட்டெல்லாம் படிக்கிறதப் பார்க்க, நீ நல்லாத்தான் வெட்டியிருக்கிறாய்" என்றபோதுதான், ஒரு நேரச் சோற்றுக்காக இவ்வளவு உடல், உள, ஆன்ம வேதனைப் படவேண்டி இருக்கிறதே எனப் புரிந்துகொண்டு என் அறையைத் திறந்தேன். அன்றைய ஆழ்பசித் துயரை, துயில் கொண்டு மறந்தேன்.

அன்றைய நாளில் இருந்து, எனக்குச் சாப்பாடு கொண்டு வருவதாக யாராவது சொன்னால், 'வேண்டாம்' எனச்சொல்லி மறுப்பதும் கிடையாது, யாரையும் தடுப்பதும் கிடையாது. ஆனால், நான் காத்து நிற்பதும் கிடையாது. சாப்பிடாமல் இருப்பதும் கிடையாது. சாப்பிட்டு விட்டுத்தான் நிற்பதுண்டு. என்ன செய்வது? கர்லத்தின் கட்டாயத்தினால் இப்பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

அன்றைய ஆழ்பசித் துயர் நித்திரையில்கூட ஒரு கனவு கண்டேன். ஒரு அருமையான விருந்துக்கு அழைக்கப்பட்டதாகவும் அவ்விருந்துக்குப் போய்க் கொண்டிருக்கும்போது (இது கனவில்தான் நடக்கிறது!) கண் விழித்துக் கொண்டேன். "கனவில்கூடப் பட்டினித் துன்பம் தொடர்கிறதே" என எண்ணிக் கொண்டிருக்கத் தொலைபேசி ஒலித்தது. "மீண்டும் சாப்பாட்டுக்கான அழைப்புத் தானோ!" என நினைத்துக் கொண்டு அழைப்பை எடுத்தேன். "பாதர், குறை நினைக்க வேண்டாம், நாங்கள் *லில்லில்* (Lille என்பது பிரான்சில் உள்ள ஒரு நகரம்) நிற்கிறோம். நாளை வந்துவிடுவோம்" என்றார்கள். "இங்கு, ஒரு ஜீவன் பசிக்களைப்பில், சரிந்து விழுந்து, கட்டிலில், கிடையாய்க் கிடக்கிறது! நீங்கள் *லில்லில்* நின்றாலென்ன? எங்கு நின்றால்தான் எனக்கென்ன?" என மனம் குமுறிவிட்டு மறுபக்கம் படுத்துறங்கினேன்.

**சொன்னால் வெட்கம்!**

மறுநாள் அந்த இரு நண்பர்களையும் சந்தித்தபோதுதான் குறித்த நேரத்துக்கு வராததால் ஏற்பட்ட விபரீதங்களை அறிய முடிந்தது. இவர்கள் பயணச் சீட்டில் குறிப்பிட்ட நேரத்திற்கு வராமல் சில நிமிடங்கள் பிந்தித் தொடரூந்து நிலையத்தை வந்தடைந்தபோது ஒரு தொடரூந்து அப்போதுதான் புறப்பட்டுக்கொண்டு இருந்திருக்கிறது. "அதாத்தான் இருக்க வேணும்..." என்று ஒருவர் சொல்ல, "பாத்துக் கொண்டு நிக்காமல் பாஞ்சேறு மச்சான்!" என மற்றவர் கூற இருவரும் தொடரூந்தில் ஏறிக் கொண்டார்கள்.

"பிந்தினாலும் *றெயின* விடயில்ல, ஒரு மாதிரிப் பிடிச்சிற்றம் மச்சான்!" என்ற வெற்றிக் களிப்பில் இருக்கிறபோதுதான் லூர்து போகிற தொடரூந்துக்குப் பதிலாக லில்லுக்குச் செல்லுகின்ற தொடரூந்தில் ஏறிக் கொண்டதையும், அதிலே இருப்பதையும் உணர்ந்து கொண்டார்கள். அதுவும், அத்தொடரூந்து அதிவேகக் கடுகதி என்பதால் போகிற வழியில் பல தரிப்பிடங்கள் இருப்பினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தப்படாமல் லில்லில்தான் போய் நின்றிருக்கிறது.

ஒருவாறு, தொடரூந்து நிலைய அதிகாரிகளிடம் அழுது, பிரலாபித்து, கெஞ்சி, மன்றாடி (காலில் விழுந்தார்களோ தெரியாது! – அவ்வாறு நடந்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில், இவ்விடயம் தணிக்கை செய்யப்பட்டிருக்கலாம்!), மீண்டும் லூர்துக்குப் பயணச் சீட்டுக்களைப் பெற்றிருக்கிறார்கள். இத்தனைக்கும் லில், லூர்துக்கு சரி எதிர்த் திசையில் இருக்கிறது. இரு நிமிடங்கள் நேரகாலத்தோடு வராததால் இரு நாட்களை வீணாகப் பயணத்தில் கழிக்க வேண்டிய துர்ப்பாக்கியத்துக்கு ஆளானார்கள் அவசரமாக வந்து திரும்ப வேண்டிய என் அன்பு நண்பர்கள்!

படத்தில் இடையிடையே பகிடிக் கட்டங்கள் வருவதுபோல என்னுடைய பட்டினிக் கட்டங்களும் இவர்களின் லூர்துப் பயணப் படத்தில் இடம் பிடித்து விட்டன. இதுபோன்ற எத்தனையோ சம்பவங்களைத் தொகுத்தால், பயணங்களும் என் பட்டினிகளும் என்ற ஒரு நாவலையோ அல்லது இது போன்ற ஒரு தொடரையோ எழுதலாம் அல்லது றெயில் பயணங்கள் போன்ற தொரு படத்தையோ மிக இலகுவாக ஆக்கிவிடலாம்!

**அதி உயர் கௌரவிப்புக்களைச் செய்தாலென்ன!**

குறிப்பிட்ட நேரத்தை விட்டுப் பிந்திச் செல்கிறோம் என்றால் குறித்த நேரத்திற்கு வரச் சொன்னவரை மதிக்கவில்லை என்றுதான் மேற்குலகில் கணிக்கப்படுகிறது. பிந்திச் செல்வதை மேற்கத்தேயர்கள் பொதுவாகச் சகித்துக்கொள்ள மாட்டார்கள்.

ஈழத்திலும் நேரத்திற்கு நிகழ்வுகளைத் தொடங்குவது – நிகழ்வுகளுக்கு நிற்பது போன்றவை இருந்திருக்கிறது. ஆனால், இப்போது நாம் நிகழ்வுகளைப் பிந்திபிந்தித் தொடங்க – நிகழ்வுகளுக்குப் பிந்திச் செல்லப் பழக்கப்பட்டு ஒருவகையில் அதற்கு அடிமையாகிவிட்டோம். நேரகாலத்தோடே நிகழ்வுகளுக்குப் போனால், "இவருக்கு வீட்டில வேலை இல்லப்போல, அதனாலதான் நேரத்தோடே வந்திற்றார்" அல்லது "சும்மா *றிற்றாயட்* பண்ணிற்று இருக்கிறவர்தானே, வீட்டிலயும் வேலை இருக்காது" என விசித்திரமாக விமர்சிப்பார்கள். குறித்த நேரத்துக்குப் போனால், "நாங்கள் நான்கு மணியெண்டுதான் *காட்டில* போட்ட நாங்க, ஆனா, நாலரை மணிக்குத்தான் தொடங்குவம்." என்பார்கள்!

பரமா!... நேரத்திற்கு ஏற்றாற்போல் கதைக்கும் இப்பேர்ப்பட்ட பேர்வழிகளைத் தேடிக் கண்டுபிடித்து, அதி உயர் விருதுகள் கொடுத்து, கௌரவித்தால் என்ன என்ற எண்ணமும் இப்போது அடிக்கடி வருகிறது.

மன்னா, பங்குனி 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் வாழ்வைப் புரிந்துகொள்ளுங்கள்



30

**அடிமன ஆவல் ஒன்று**

ஏறக்குறைய மூன்றரை ஆண்டுகள் பிரான்ஸ் நாட்டில் உள்ள லூட்ஸ்சில் வாழக்கிடைத்த சந்தர்ப்பத்தினால் ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்வதற்கும் அந்நாடுகளில் வாழும் அந்நாட்டு மக்களையும், புலம்பெயர்ந்து வாழும் நம் நாட்டு மக்களின் வாழ்க்கை முறைகளையும் ஓரளவுக்கேனும் அறிவதற்கு நல்ல வாய்ப்புக் கிட்டியது.

இச்சந்தர்ப்பங்களில் அந்நாடுகளில் வாழும் அந்நாட்டு, நம்நாட்டு மக்களின் வாழ்க்கை முறைகளுடன் நமது ஈழத்து மக்களின் வாழ்க்கை முறைகளை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் – அவற்றைத் தொகுக்க வேண்டும் – சிறிய அளவிலேனும் ஆய்வு செய்ய வேண்டும் என்ற அடிமன ஆவல் ஒன்று இருக்கிறது.

அதற்கெல்லாம் காலம் எப்போது கைகூடுமோ தெரியவில்லை! இருப்பினும், இப்போதைக்கு வெளிநாடு பற்றி நமது மக்கள் கொண்டிருக்கும் எண்ணக் கருவைப் பற்றியும் வெளிநாட்டு வாழ்க்கை அனுபவங்களைப் பற்றியும் இக்கட்டுரைத் தொடரில் கொஞ்சம் பகிர்ந்து கொள்ளலாம் எனத் துணிகிறேன்.

**'வெளிநாட்டு வாழ்க்கை'!...**

வாழ்க்கையைப் பல்வேறு கோணங்களில் நின்று நோக்கலாம். ஆயினும், பொருட்களை வெளிநாட்டுச் சாமான் அல்லது உள்நாட்டுச் சாமான் எனப் பார்ப்பதுபோல வாழ்க்கையை வெளிநாட்டு வாழ்க்கை, உள்நாட்டு வாழ்க்கை எனப் பிரித்துப் பார்க்க முடியாது. அவ்வாறே, வாழ்க்கையை ஏற்று மதிக்கும் இறக்குமதிக்கும் உட்படுத்தவும் முடியாது.

எனினும், என் பயணங்களில் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்களின் வாழ்க்கை முறைகளை அவதானித்ததில் இருந்தும் அவர்களின் கருத்துப் பரிமாற்றத்தில் இருந்தும் வெளிநாட்டு வாழ்க்கை பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வாழ்க்கை முறைகளை – அனுபவங்களை) கொஞ்சம் மனம் விட்டுப் பேச உங்கள் அனுமதிகோரி நிற்கிறேன்! கிடைக்குமா?

வெளிநாடுகளில் வாழும் நம்மவர்களின் வாழ்க்கையில் மிகச் சிறிய அளவிலேனும் பங்கேற்றிருக்கிறேன், அவர்களின் மகிழ்ச்சியில் – வேதனையில் ஓரளவுக்கேனும் பங்குகொண்டு இருக்கிறேன் என்ற வாழ்க்கை அனுபவம் இத்தகைய ஒரு பகிர்தலைச் செய்யவேண்டும் எனத் தூண்டுகிறது.

இவ்வாறான வாழ்க்கை அனுபவங்களை வைத்துக்கொண்டு வெளிநாட்டு வாழ்க்கை பற்றிய எண்ணக் கருவுக்குச் செல்வோம்.

பகிர்ந்து கொள்ளப்பட்ட எதிர்மறை, நேர்மறை அனுபவங்களை முறையே பகிர்ந்து கொண்டவர்களின் வார்த்தைகளிலேயே முதலில் பார்த்து விட்டு தொடர்ந்து கருத்துக்களால் விவாதிப்போம்.

**எதிர்மறை அனுபவங்கள்**

"வெளிநாட்டு வாழ்க்கை விசர் வாழ்க்கை!" என்றார் இப்போது இலண்டன் மாநகரில் வாழ்ந்து வரும் எனக்குச் சிறுவயதில் கல்வியறிவு ஊட்டிய ஆசிரியை ஒருவர்.

"வெளிநாட்டு வாழ்க்கை அலுத்துப்போச்சிது!" என்று 1980களில் புலம்பெயர்ந்து இப்போதும் நோர்வேயில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெரியவர் ஒருவர் கூற, "உண்மையில, வெளிநாட்டு வாழ்க்கை நல்லா எங்கள களைக்கடிச்சிப் போட்டுது!" என்றார் பதிலுக்கு மற்றவர்.

"வெளிநாட்டு வாழ்க்கை பொருளைத் தந்தது, வசதியைத் தந்தது, வாய்ப்பைத் தந்தது: ஆனால், எங்கட சந்தோஷத்த எடுத்திற்றுது!" என்று கணவன் கூற, "என்ன செய்யிறது, வந்திற்றம் இருக்கிறம்!" எனப் பெருமூச்சோடு பதிலுரையாகக் கூறினாள் மனைவி.

"வெளிநாடு வந்தாவது நம்ம சனங்கள் திருந்துங்கள் எண்டு பாக்க, இங்கையும் (புலம்பெயர் மண்ணில்) இப்பிடித்தான்! இதுகள் திருந்தாதுகள்! எங்க போனாலும் இதுகள் இப்பிடித்தான் இருக்குங்கள்!" என மனம் நொந்தார் கனடா நாட்டில் வசித்துவரும் மற்றொருவர்.

இரண்டு வேலைகள் செய்து உழைக்கும் ஓர் அன்பன், "அவன் நமக்கா உழைச்சித்தாறான்! நம்மளவச்சி அவன் உழைக்கிறான்!" ('அவன்' என்றால் இங்கு வெளிநாட்டவர்) என்றார்.

இரண்டு, மூன்று வேலைகளை ஓடியோடிச் செய்து ஓய்வு உறக்கமின்றி உழைத்து நொந்துபோயிருக்கும் இன்னொருவர், "பணத்தை உழைச்சம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையத் தொலைச்சிற்றம்!" என்றார்.

"அங்க உழைக்கணும் இங்க வாழனும் பாருங்கோ!" ('அங்க' என்பது புலம்பெயர் மண், 'இங்க' என்பது இலங்கை) எனக்கூறிய வெளிநாட்டிலிருந்து விடுமுறைக்கு யாழ்ப்பாணம் வந்த ஒருவர், "என்னதான் வெளிநாட்டில இருந்தாலும் நம்ம நாட்டப் போல வருமா?" எனச் சொல்லிமுடித்து முற்றுப் புள்ளி வைத்தார்.

"வெளிநாட்டுப் பணத் திமிர்ல இங்க கொஞ்சப்பேர் திரியினம்! அதுகள் (வெளிநாட்டில் வாழும் நம்மவர்கள்) அங்க கஸ்ரப்பட்டு உழைச்சி இங்க அனுப்ப, இதுகள் (இலங்கையில் வாழ்பவர்கள்) இங்க நல்லா உடுத்திப் படுத்தி, உண்டு குடித்துத் திரியினம்!" என்றார் ஒரு வயதானவர்.

"அங்க உள்ளதுகள் (வெளிநாட்டில் வாழும் நம்மவர்கள்) குளிரிலை யும் வெயிலிலையும் மாடா உழைச்சி அனுப்ப, இங்க உள்ளதுகள் (இலங்கை யில் வாழ்பவர்கள்) காசைக் கரியாக்குதுகள். இதுகளுக்கு எங்க தெரியப் போகுது கஸ்ரத்தின்ர அருமையோ அல்லது காசினுடைய பெறுமதியோ!..." என்றார் பதிலுக்கு மேற்சொன்னவரின் நண்பர்.

மேற்சொன்ன எதிர்மறை அனுபவங்கள் வெளிநாட்டு வாழ்க்கையின் ஒரு பக்கத்தைக் காட்டுகிறது. அதன் மறுபக்கத்தைப் பார்க்கிறபோது இன்னும் பல அனுபவங்களை அறியவரலாம்.

**நேர்மறை அபிப்பிராயங்கள்**

"நம்மட நாடு ஒரு நாடா? நம்மட மனிசர் ஒரு மனிசரா! மந்திக் கூட்டங்கள்! வெளிநாடுகள்ள, மனிசன மனிசன், எப்பிடி மதிக்கிறான்!" எனக் குறிப்பிட்டார் ஒரு மனித உரிமைச் செயற்பாட்டாளர். வெளிநாட்டவரும், வெளிநாட்டு அரசுகளும் மனிதர் மட்டில் காட்டும் மனித மாண்பையும், கொடுக்கும் மரியாதையையும் கோடிட்டுக் காட்டினார்.



"உண்மையில, வெளிநாட்டுக்கு வந்தால நல்லா வளந்திற்றம். வெளிநாட்டுக்கு வராவிட்டால் நாங்க முன்னேறியிருக்க மாட்டம். பொருளாதாரத்தில வளந்திற்றம், பிள்ளைகள் படிச்சிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துகள். ஊரில இருந்தா கிணத்துத் தவளைகளாத்தான் இருந்திருப்பம்!" எனத் தொடர்ந்தாள் தாயொருத்தி.

"வெளிநாட்டுக்கு வந்ததால தப்பினம். வெளிநாட்டுக்கு வரயில்லையோ, நம்மட இனத்தையே அழிச்சிருப்பான் – கருவறுத்திருப்பான்!" என்றார் தமிழர் உரிமைக்காகச் செயற்படும் அன்பர் ஒருவர்.

"வெளிநாட்டில நம்மட சனம் இருக்கிறதாலதான், இங்க உள்நாட்டுல சனம் வாழுது!" என வெளிநாட்டு உதவி பெற்றுவாழும் ஒருவர் கூற மற்றவர், "சும்மா சொல்லக் கூடாது வெளிநாடு வெளிநாடுதான். முன்னேறுறவன் முன்னேறலாம், மற்றவங்க நல்லா *பிரெஞ் வைன்* அடிச்சிற்றுக் கிடக்கலாம்" என்றார் பிரான்சுக்கு விருந்தினராய் போய்வந்த அவர் நண்பர்.

"வெளிநாட்டுப் பணம் இல்லையோ, இங்க உள்ள பலரின் நிலை பரிதாபம்தான்! ஏதோ அதுகளின்ர தயவில நம்மப்போன்ற பலர் இங்க வாழுதுகள்!" என்றார் வெளிநாட்டு உறவுகளின் உதவியில் தங்கிவாழும் இன்னுமொரு அன்பர்.

இவ்வாறு, வெளிநாட்டு வாழ்க்கை பற்றிப் பல எதிர்மறை, நேர்மறை அனுபவங்களையும் அபிப்பிராயங்களையும் பார்த்துக் கொண்டும், படித்துக் கொண்டும் போகலாம்.

'வாழ்க்கை கண்ணாடி போன்றது என்கிறார்கள். ஆம், நீ சிரித்தால் அது சிரிக்கிறது, நீ அழுதால் அதுவும் அழுகிறது.'

வெளிநாட்டில் வாழ்ந்தால் என்ன உள்நாட்டில் வாழ்ந்தால் என்ன, நகரத்தில் வாழ்ந்தால் என்ன கிராமத்தில் வாழ்ந்தால் என்ன, வாழ்க்கையை எப்படிப் பார்க்கிறோமோ அப்படியே அது அமைகிறது அல்லது ஆகிவிடுகிறது அல்லது ஆக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. அவ்வளவுதான்!

**தொடக்க காலங்களில் சொல்லொணாத் துன்பங்கள்**

புலம்பெயர் மண்ணிற்கு நம் மண்ணிலிருந்து தொடக்க நாட்களில் அதாவது 1990களிலோ அல்லது அதற்கு முற்பட்ட காலங்களில் போனவர்கள் மிகக் கடுமையான கஸ்ரங்களையும், சொல்லொணாத் துன்பங்களையும் அனுபவித்திருக்கிறார்கள். இத்துன்பங்களை எல்லாம் நம்மில் பலர் அறிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை.

புலம்பெயர் மண்ணில் அரசுகள் புலம்பெயர்ந்தோர் மீது மிகக் கரிசனை காட்டினாலும் இங்கிருந்து போனவர்களுக்குச் சொந்தம் – உறவு என்று யாரும் இருக்கவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல நம்மவர்கள் புலம்பெயர் மண்ணில் வந்திறங்கிய நாட்கள் அமைந்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக, ஐரோப்பிய, ஸ்கன்டநேவிய, அமெரிக்க நாடுகளில் ஏதாவது ஒரு நாட்டுக்குச் சென்றுவிட வேண்டும் என்று பல கிழமைகள் – சில மாதங்கள் எவ்வகையிலும் பாதுகாப்பற்ற பயணங்களை மேற்கொண்டிருக்கிறார்கள்.

நாடுகளின் எல்லைகளைக் கடப்பதற்குக் காடுகள், ஆட்கள் அறியாத மலைகளைக் கடந்திருக்கிறார்கள். கடும்பனிக் காலங்களில் பல கிலோ மீற்றர்களைக்கூட நடந்து, கடந்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட பிரயாணங்களின் இடைநிடுவில், கூடவந்த நண்பர் களின் பயணங்கள் வழியிலேயே முடிந்திருக்கின்றன! பயணத்தைத் தொடர முடியாமல் களைத்துப் போக உதவ முடியாத – இயலாத சூழலில் அவர்களை விட்டுவிட்டு மற்றவர்கள் தங்கள் பயணத்தைத் தொடர்ந்த சம்பவங்களும் இருக்கத்தான் செய்கின்றன. அப்படி விடுபட்டவர்களின் நிலை அத்தோடு முடிந்துபோன கதைகளாகிவிட்டன.

**அறியப்படாத துயரப் படலங்கள்**

ஐரோப்பிய சூழலில் சாதாரண அடிப்படை வசதிகளை மட்டும் கொண்ட ஓர் அறையில் 07, 08 பேர் படுத்துறங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கிறார்கள்.

குருதியை உறைய வைக்கும் கடும் குளிரில் கால்கள் கைகள் விறைக்க விறைக்க கடை கடையாய் வேலை தேடவேண்டிய பரிதாபத்தில் இருந்திருக்கிறார்கள்.

மிகக் குறைந்த ஊதியத்தோடு கிடைக்கின்ற வேலையைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. மிகக் குறைந்த பட்ச கூலிக்கு மிகக் கூடுதலான வேலை செய்வதுடன் தொடக்க காலங்களில் *விசாவுக்கு* அலைகின்ற கொடுமையைச் சந்தித்திருக்கிறார்கள். *விசாவைப்* பெற உழைப்பதில் பெரும் பகுதியைக் கொடுப்பதும், *விசா* கிடைத்தும் சாதாரண வேலைகளில் முறிந்து போகின்ற நிலையில் பலர் இருந்திருக்கிறார்கள்.

மேலும், குடும்பத்தினர் – சொந்தங்கள் ஊரில் கஸ்ரப்படுகிறார்கள் என ஓடியோடி இரண்டு மூன்று வேலைகள் செய்து, உழைத்து, காசு அனுப்புவது எனத் தொடக்க நாட்களில் வந்த அநேகர் உண்மையில் களைத்துப் போயிருக்கிறார்கள்.

அந்நாடுகளின் பேசப்படும் மொழி தெரியாமல் திக்கு முக்காடித் திணறி இருக்கிறார்கள். கறடி பிறை காண்பதுபோல சோறு கறியைப் பார்ப் பதே அபூர்வமாக இருந்திருக்கிறது ஆரம்பத்தில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஞ்சாலியின் சேலையைப்போல நம்மவர்கள் புலம்பெயர் மண்ணில் பட்ட தொடர் துன்பங்கள், சொந்த மண்ணில் வாழுகின்ற நம்மில் பலர் அறியாத – தெரியாத – உணராத வெளிநாட்டு வாழ்க்கையின் சில முக்கிய அதிகாரங்கள் ஆகும்.

**பட்ட கஸ்ரங்கள் 'தம்பியவை'க்குத் தெரியாது!**

இத்துன்பங்கள் பின்நாட்களில் புலம்பெயர் மண்ணிற்கு வந்த இக்கால சந்ததியினருக்குக்கூடப் பொதுவாகத் தெரியாதவைகளாகவே இருக்கின்றன.

ஏனென்றால், 2000 ஆண்டுகளில் புலம்பெயர் மண்ணிற்கு வந்து சேர்ந்தவர்களுக்கு மாமன், மச்சான், அண்ணன், தம்பி, அத்தை, அத்தான் என்று உறவுக்காரர் – ஊர்க்காரர் எனப் பலரோ, சிலரோ இருந்திருக்கிறார்கள். இதனால், கடலாலோ, கப்பலாலோ அநேகமாக விமானத்தாலோ புலம்பெயர் மண்ணில் 'தம்பி' வந்திறங்கி விடுகிறான்.

வந்திறங்கியதும் தங்குவதற்கு ஒரு நல்ல அறையும் கொடுத்து, வாய்க்கு உருசியாக கோழிக் குழம்போட சோறும் கறியும் ஒழுங்காக சமைத்துக் கொடுத்து, கைத்தொலைபேசி ஒன்றையும் கொடுத்துவிட, 'வெளிநாட்டு வாழ்க்கை சோக்கான சுகமான வாழ்க்கை' எனத் 'தம்பி' நினைத்துக் கொள்கிறான்.

"இங்க இருக்கிறவை (வெளிநாட்டில் வாழும் நம்மவர்கள்) நல்லாத்தான் இருக்கினம், இங்க இருக்கிற ஆட்களுக்கு என்ன குறை..." என்ற நினைப்பும் வந்து விடுகிறது 2000ஆம் ஆண்டுகளில் இங்கிருந்து (இலங்கையிலிருந்து) அங்குபோய்ச் (வெளிநாடுகளுக்கு) சேர்ந்த நம் தம்பிமார்களுக்கு.

தொடக்க காலங்களில் புலம்பெயர் மண்ணில் தம் முன்னோடிகள் அனுபவித்த கஸ்ட நஸ்டங்களை எல்லாம் ஈழநாட்டிலிருந்து சென்ற பிற்கால தலைமுறையினர் தெரிந்து கொள்ளவில்லை என்றுதான் கொள்ள வேண்டி இருக்கிறது.

இதே மனப்பான்மையைத்தான், புலம்பெயர் மண்ணில் வாழும் நம்மவர்கள் பற்றி ஈழநாட்டில் வாழும் நாமும் கொண்டிருக்கிறோம்.

மன்னா, வைகாசி 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் நிலத்தில் காசு காய்க்கிறதா!



31

**கப்பலோட்டிப் பெருமை பெற்றவன், இன்று...!**

1970, 1980களில் தமிழர்களை வெளிநாடுகளில் காண்பதே அரிதாயிருந்ததாகச் சொல்லுகிறார்கள் அப்போது புலம்பெயர் மண்ணில் புகுந்தவர்கள். அப்படித் தமிழர்களை பார்த்துவிட்டால் ஓடோடிச் சென்று நலம் விசாரிப்பது, ஊர்ப் புதினம் கேட்பது என்று உறவு வளருமாம், அது பின்னர் தொடருமாம்.

ஆனால், இப்போது புலம்பெயர் மண்ணில் சில தமிழரைச் சில தமிழர் கண்டுவிட்டால், "என்னடா சனியன்(கள்)!... இங்கையும் நிக்கிறாங்கள்" என எண்ணுகின்ற நிலையில் கணிசமானோர் இருக்கிறார்கள் எனச் சொல்லுகிறார்கள்.

அந்த அளவுக்குச் சண்டைகளும் சண்டித்தனங்களும் அடிபுடிகளும் அடிதடிகளும் அடாவடித்தனங்களும் புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்களிடையே நடைபெறுவதாக அவ்வப்போது செய்திகள் கிடைத்த வண்ணமாய் இருக்கின்றன.

நாகரிகமான நாடுகளிலே வாழ்ந்து கொண்டிருந்தாலும் வாள்வெட்டு, வாள்வீச்சு, கத்திக்குத்து என நம் ஊர்களில் நடக்கிற சண்டைகளைப்போல புலம்பெயர் மண்ணிலும் இந்த அடாவடித்தனங்களில் மிகக் குறைந்த ஒரு தொகையினர் ஈடுபடுகிறார்கள்போல்தான் தெரிகிறது.

இதில் இன்னுமொரு புதினம் என்னவென்றால் இசைக் குழுக்கள், நாடக மன்றங்கள், நடனக் குழுக்கள் வைத்திருப்பதுபோல சில இடங்களில் 'அடிபாட்டு குழு'க்களும் வெவ்வேறு நாமம் சூட்டப்பட்டு இயங்கி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

'கப்பலோட்டிப் பெருமை பெற்றவன் கத்திக் குத்திலும் சாதனை படைக்க வேண்டாமா?... அதனால்தான்!' என்று நீங்கள் முணுமுணுப்பதும் புரிகிறது.

இது ஒரு புறமிருக்க, இன்று பல துறைகளில் மிக உச்ச நிலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர் மண்ணில் நம்மவர்கள், குறிப்பாக, அங்கு பிறந்து வளரும் நம் பிள்ளைகள் வளர்ந்திருக்கிறார்கள் – வளருகிறார்கள் என்பதையும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

கலையிலும், கல்வியிலும், ஆய்விலும், ஆராய்ச்சியிலும், விஞ்ஞானத் திலும், அரசியலிலும் என நம்மவர்கள் கொடிகட்டிப் பறக்கிறார்கள் என்பதையும் இவ்விடத்தில் கோடிட்டுக்காட்ட வேண்டிய கடப்பாடும், உரிமையும் இருக்கிறது.

**'இது அன்றைக்கு, அது இன்றைக்கு'**

முல்லா நசூருதீன் நீண்ட பிரயாணம் ஒன்றை மேற்கொண்டு விடுதி ஒன்றில் ஓர் இரவுப்பொழுதைக் கழிக்க வேண்டி ஏற்பட்டது.

முல்லா சாதாரண உடையிலும் உருவத்திலும் சென்றதால் விடுதியில் நின்ற பணியாளர்கள் அவரை அக்கறையோடு கவனித்துக் கொள்ளவில்லை.

மறுநாள் பிரயாணத்தை ஆரம்பிக்கு முன் இரவு தங்கியதற்கான வாடகையைக் கட்டிவிட்டு அங்கு நின்ற ஒரு பணியாளனுக்கு ஐநூறு ரூபாவை முல்லா சந்தோஷமாக வழங்கியபோது அவன் அதிர்ச்சியில் உறைந்து போனான்.

"ஒரு சிறிய பையைத் தூக்கிக் கொடுத்ததற்கே இவ்வளவு பணத்தைத் தாராளமாகத் தந்திருக்கிறாரே!" என மலைத்துப் போனான். நடந்ததை ஏனைய சக பணியாளர்களிடம் சொன்னபோது அவர்களும் மிகுந்த ஆச்சரியத்திற்கு உள்ளானார்கள்.

சில நாட்கள் கழித்து முல்லா அதே சாதாரண கோலத்திலும், அதே உருவத்திலும், மீண்டும் அதே விடுதியில் தங்குவதற்கு நேரிட்டது.

இப்போது முல்லாவைக் கண்டதுதான், 'நான் முந்தி நீ முந்தி' என விடுதியின் முதலாளி தொடக்கம் சாதாரண பணியாளன்வரை முல்லாவைக் கவனிக்க முண்டியடித்தார்கள்.

எனினும் முதல் தடவை முல்லா வந்தபோது கவனித்துக் கொண்ட அதே பணியாளனே முல்லாவைத் தான்தான் கவனித்துக் கொள்ளவேண்டும் என விடாப்பிடியாக நின்று வெற்றியும் கண்டான். அவனின் கவனிப்பைக் கண்டு இப்போது முல்லா அதிர்ச்சியில் உறைந்து போனார்.

மறுநாள் காலைவேளை வழமைபோல முல்லா இரவு தங்கியதற்கான வாடகைப் பணத்தைக் கொடுத்துவிட்டு விடுதியைவிட்டு புறப்படுவதற்கு முன்பதாகத் தனக்குப் பணிசெய்த பணியாளனிடம் தன்னைக் கவனித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதற்காக மிகுந்த நன்றியைக் கூறிவிட்டு தனது பைக்குள் பணத்தை எடுக்க விளைந்தார்.

அப்பணியாளன், "போனதடவை இவரைக் கவனித்துக் கொள்ளா மலே ஐநூறு ரூபாவைத் தந்தாரென்றால் இம்முறை நன்றாகக் கவனித்ததற்கு நிச்சயமாக ஆகக்குறைந்தது ஆயிரம் ரூபாயாவது கொடுப்பார்!" என தனக்குள்ளே கூறிக்கொண்டான்.

ஆனால், முல்லா ஐம்பது ரூபாயை எடுத்து அவனுடைய கையில் கொடுத்து, "நண்பா, இது அன்றைய நாளுக்கு, அது இன்றைய நாளுக்கு" என்று கூறிவிட்டுப் புன்னகையுடன் புறப்பட்டார்.

**'அவர்களிடம் நிறைய இருக்குது' என்ற மனநிலை**

பொதுவாக, புலம்பெயர் மண்ணில் இருப்பவர்களிடம் நிறையப் பணம் இருக்கிறது. ஆகவே அவர்கள் நிறையத் தமக்குத் தரவேண்டும் என்ற எதிர்பார்ப்புத்தான் ஈழத்தில் இருப்பவர்களிடம் மேலோங்கிக் கிடக்கிறது.

அண்மையில் எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் தம் ஊருக்கு வந்திருந்தார். நீண்ட காலத்துக்குப் பின்னர் வந்திருப்பதால் ஊர்க் காற்றைச் சுவாசிக்க வேண்டும், உறவுகளைப் பார்க்க வேண்டும் என்று ஒவ்வொரு குடும்பமாகச் சந்திக்கத் தொடங்கினார். நிச்சயமாக நடந்து சென்று பார்க்கக் கூடிய தூரமாகையால் நடந்து சென்றே தம்முடைய சந்திப்புக்களைச் செய்திருக்கிறார்.

ஒரு தடவை, இவர் நடந்து சென்று கொண்டிருக்கும்போது இவரின் உறவுக்காரர் ஒருவர், "வெளிநாட்டிலிருந்து வந்து, நடந்தா திரியிறது! வாகனத்தில அல்லோ போகவேணும். உங்கட்ட காசா இல்ல!..." என்று கூற, "வாகனத்தில போறது ஒன்றும் பிரச்சினை இல்ல, காச நீங்க குடுங்கோ, நான் வாகனத்தில போறன்" என்று பகிடியாகக் கூறிவிட்டு நடந்தே சென்றிருக்கிறார்.



இன்னுமொரு முறை, இதே அன்பர் சந்தையில் மீன் வாங்கிக்கொண்டு நின்றிருக்கிறார். மீன் வாங்கிவிட்டு பணத்தை எண்ணிக் கொடுத்திருக்கிறார். இவரோடு கூட நின்ற இன்னுமொரு உறவுக்காரர், "வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில இருந்து வந்து, காசக் கணக்குப் பாத்தா கொடுக்கிறது? அள்ளி இறைக்க வேணும்..." என்றாராம்.

வேறொரு சந்தர்ப்பத்தில் இந்நபரே சந்தைக்குப் பொருட்கள் வாங்கச் சென்றிருக்கிறார். அங்கு அவர் பொருட்களின் விலையைக் கேட்டிருக்கிறார். அவரைக் கூட்டிச்சென்ற உறவினர் ஒருவர், "வெளிநாட்டில இருந்து வந்து காசையெல்லாம் கணக்குப் பாத்துத் கொடுக்கிறது, வெட்கமில்லையா? காசை, இழுத்து வீசவேணும் கண்டியோ!" என்றாராம்.

**வார்த்தை + வாய் வீச்சைப் பார்த்தீர்களா?**

இவ்வார்த்தைகளையும், இவ்வார்த்தைகளில் உள்ள வீச்சினையும் ஒரு கணம் இவ்விடத்தில் வாசிப்பை நிறுத்திவிட்டு!... சிந்தித்துப் பாருங்கள்.

இவ்வார்த்தைகளில் உள்ள வீச்சுக்கள் உங்களால் உணரப்படவில்லை என்றால்: இரண்டு, மூன்று தடவைகள் சரியான *ரொணோடு* சொல்லிப் பாருங்கள், அர்த்தம் புரியும்!

மாமரத்தில் பிஞ்சு பிடித்துக் காய்ப்பதுபோல வெளிநாட்டில் 'காசு மரம்' பிஞ்சு பிடித்துக் காய்த்துக் குலுங்குவதாக நம்மில் பலர் நினைத்துக் கொள் கிறார்கள் போலும்!

"அப்ப போனவைகள் (1980களில்) போய், அப்படியே இருக்கிறாங் கள். இப்ப போன இவன், சங்கரப்பிள்ளையின்ர (பெயர் மட்டும் மாற்றப் பட்டுள்ளது) மோன் வீடு வாங்கி, நல்ல வசதி வாய்ப்போட இருக்கிறானாம். இங்கையும் ஊரில பத்தேக்கர் காணியும் வாங்கிப் போட்டுட்டானாம். அத்தோட நல்ல வீடொண்டும் கட்டீற்றானாம். அத்தோட அங்கையும் நல்ல வசதி வாய்ப்போட இருக்கிறானாம்..." எனக் கணித்துக் கொள்கிறார்கள்.

இப்போது போன இவன் எப்படி உழைத்தான்?, எப்படி இவ்வளவு காசு ஒரே தடவையில் இவனுக்கு வந்தது? எவ்வழிகளில் இச்சொத்துக்கள் சேர்க்கப்படுகின்றன? என்பதைப் பற்றியெல்லாம் ஈழத்திலுள்ளவர்கள் சிந்திப்பது கிடையாது.

**வீண்விரயம் செய்யப்படுகிறதா?**

உண்மையில், இவ்விடத்தில் ஒன்றைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். வெளிநாட்டில் உள்ள நம்மவர்களின் பண உதவியால் இங்கு ஈழத்தில் வாழும் பலர் பல்வேறு நலன்களைப் பெறுகிறார்கள்.

அதேவேளையில், இவ்வுதவிகள் தேவைப்படுபவர்களுக்கு அநேக மாகப் போய்ச் சேராமல், உள்ளவர்களுக்குத்தான் மேலும் அளவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமாகப் போய்ச் சேர்கிறது அல்லது வந்து குவிகிறது! என்பதையும் அவதானிக்க முடிகிறது.

இதனால், பணத்தை என்ன செய்வது? என்று தெரியாமல் நன்றாகக் கட்டியிருக்கின்ற வீட்டையே உடைத்துக் கட்டுவதும், அழகாக இருக்கின்ற மதிலை உடைத்து உயர்த்துவதும், 'சுள்ளான்', 'நுளம்பு' என்று புதிய புதிய வரவுகளை (மோட்டார் சையிக்கிள்களுக்கான புதிய உள்ளூர் பெயர்கள்) வாங்குவதும், வகைவகையான நகைநட்டுக்களை அணிவதும், களவு கொடுப்பதும், பின்னர் மீண்டும் அவற்றைக் கொள்வனவு செய்வதும் என இவ்வெளிநாட்டுப் பணம் பல வழிகளில் விரயம் செய்யப்படுகிறது. அதாவது உண்மையாக தேவைப்படுபவர்களுக்குப் போய்ச் சேராமல் இருப்பவர்களுக்கே இன்னும் போய்ச் சேர்வதால் ஏற்படும் விபரீதங்கள் இவை!

எனினும் வெளிநாட்டிலிருந்து நம்மவர்கள் அனுப்பும் பணத்தை இன்னும் சிலர் பல ஏழைக் குடும்பங்களை வாழ்விக்கவும், ஏழைச் சிறார்களின் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவும், அபிவிருத்திப் பணிகளைச் செய்யவும் பயனுள்ள வகையில் பயன்படுத்துகிறார்கள் என்பதையும் இங்கு குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

ஆக, இப்பணம் யாருடைய கையில் கிடைக்கிறது? என்பதைப் பொறுத்து இருக்கிறது. அதாவது இவ்வெளிநாட்டுப் பணம் யாருடைய கையில் கிடைக்கிறது, யாருக்குப் போய்ச் சேருகிறது? என்பதைக் கவனித்தால் பயனுள்ள வகையில் இப்பணம் பகிரப்படும் என்பதில் நாம் சந்தோஷம் அடையலாம்.

வெளிநாட்டில் வாழுகின்ற நம்மவர்கள், சொந்தங்கள் – உறவினர்கள் என்ற நிலை கடந்து ஏழைகள் – தேவையில் உழல்வோர் எனச் சிந்தித்தால் அவர்களின் உதவிகளால் பல நன்மைகளைச் செய்ய முடியும், சாதனைகளைப் படைக்க முடியும்.

**'அள்ளி இறைக்கவேணும்' என்ற மனநிலை**

"வெளிநாட்டில இருந்து வந்து பத்தாயிரம் தந்திற்றுப் போறான் அவன்! அத, (அதை) ஒரு நாள்ள இங்க உழைப்பன் நான்! பிச்சக்காரக் காசு! அதக் கொண்டுபோய் அவனிட்டே குடுத்திற்று வாடி..." என்று திட்டித் தீர்த்தார் ஒரு குடும்பத் தலைவர்.

வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் "நல்லா அள்ளி இறைக்க வேணும்" என்ற மனநிலை எம்மவர்களில் இன்று நிறையவே காணப்படுகிறது.

அவர்களிடம் உள்ளதைப் பகிர்ந்து கொள்கிறார்கள், அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தாராள உள்ளத்திற்கு நன்றி சொல்ல வேண்டும், நம்மைப்போல பலருக்கு அவர்கள் உதவிகள் செய்ய வேண்டியிருக்கும், அவர்கள் தங்களுடைய தேவைகளையும் கவனிக்க வேண்டும்' என்பதை எல்லாம் இப்போது ஆட்கள் எண்ணிப் பார்ப்பது கிடையாது. கொட்டுவதை எல்லாம் என்னிடம் – எங்களிடம் கொட்டிவிட்டுப் போங்கள் என்ற மனநிலைதான் இப்போது விஞ்சி நிற்கிறது.

பத்தாயிரம் ரூபா கொடுத்தால் இருபதாயிரத்தை எதிர்பார்க் கிறார்கள்; ஐம்பதாயிரம் ரூபா கொடுத்தால் ஒரு இலட்சத்தை எதிர்பார்க் கிறார்கள்; சரி, அப்படியே ஐம்பது ஆயிரத்தையோ, ஒரு இலட்சத்தையோ கொடுத்து விட்டால் அதற்கும், "இப்ப ஐம்பது ஆயிரம் – ஒரு இலட்சம் எல்லாம் ஒரு காசே! அதுக்கு என்ன செய்யலாம்! என்னத்த வாங்கலாம்? ஒரு *ரொயிலெற்றக்கூட* கட்ட ஏலாது..." எனச் சில நாட்களுக்கு முன் ஒருவர் இன்னொருவருக்குக் கூறியது என் காதில் விழுந்தது.

இந்தக் காதுகளில் விழுந்தால் அது தப்புமா? தப்புவதற்கு வாய்ப்பே இல்லை என நீங்கள் எண்ணுவதும் புரிகிறது. இப்படி, உதவிகளையும் பெற்றுக் கொண்டு, விசித்திரமான வியாக்கியானம் செய்பவர்கள் நம்மிடையே இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

**பொல்லுக் கொடுத்து அடிவாங்கியது பழைய கதை!**

பொல்லுக் கொடுத்து அடிவாங்கிய பழைய கதையைத்தான் இதுவரை கேள்விப்பட்டிருப்பீர்கள்! ஆனால், இப்போது நடப்பது எப்படிப்பட்ட கதை என்றால் பொல்லையும் கொடுத்து, அடிக்க, முதுகையும் காட்டுகின்ற கதை!

கஸ்ரப்பட்டு உழைக்கும் பணத்தையும் கொடுத்து, எவ்வளவு விமர்சனங்களையும், வியாக்கியானங்களையும் கேட்க வேண்டி இருக்கிறது!

இவ்விடத்தில் மட்டும் ஒரு சிறுகுறிப்பு: *ரொயிலெற்றக்கூட* அவர்கள் தருகின்ற காசுக்குக் கட்ட முடியவில்லை என்றால், காலைக் கடனைச் செய்ய காட்டுக்கோ கடற்கரைக்கோ போகவேண்டியதுதானே! பிறகேன் *ரொயி லெற்றை* எல்லாம் கட்டுகிறீர்கள் என விசித்திரமான வியாக்கியானங்களைக் கூறுபவர்களைப் பார்த்துக் கேட்கவேண்டும்போல இருக்கிறது!

மன்னா, ஆனி 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் பகட்டுக்கல்லவே



32

**கண்ணை மூடிக்கொண்டு காசை இழுத்து வீசக்கூடாது**

புலம்பெயர்ந்து வாழுகின்ற நம் மக்களில் பலர், தாங்கள் பிறந்து வளர்ந்து வாழ்ந்த இடங்களுக்கு இப்போது வந்து போகிறார்கள். இது உள்நாட்டில் வாழ்பவர்களுக்கும் புலத்திலிருந்து வருபவர்களுக்கும் இடையில் உறவுகளைப் பலப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

சிறப்பாகப் புலத்தில் பிறந்து வளர்ந்து வாழுகின்ற இளையவர்கள் ஒவ்வொரு ஆண்டுமோ, இரண்டாண்டுக்கு ஒரு தடவையோ அல்லது அவர்களின் வசதிக்கு ஏற்ப வந்து போவதால் இங்குள்ளவர்கள் உடனான உறவுகள் வளர உதவியாய்த் திகழும்.

புலம்பெயர் நாடுகளிலிருந்து வருகின்றவர்களில் சிலர், ஈழத்தில் சில முதலீடுகளில் ஈடுபடுகிறார்கள். இது நல்லது. பாராட்டப்பட வேண்டியது. இதுபோன்ற முயற்சிகள் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு வருமானத்தை ஏற்படுத்தக் கூடியதாக – தொழில் வாய்ப்புக்களை உருவாக்கக் கூடியதாக அமையும்போது இங்குள்ள வளரும் சமூகத்திற்கு அது வரப்பிரசாதமாக அமைந்துவிடும்.

இவற்றைவிட புலம்பெயர் நாடுகளிலிருந்து வருகின்ற இன்னும் சிலர் பெரும் தொகைப் பணத்திற்குக் காணிகளை வாங்குகிறார்கள். ஒன்று, இரண்டு லட்சம் பெறுமதியான காணிகளை ஒன்பது, பத்து லட்சத்துக்கு ஏற்றி வைத்திருப்பவர்கள் புலம்பெயர்ந்து வாழும் நம் சொந்தங்கள் அல்லது புலம்பெயர்ந்து வாழ்வோரின் உள்நாட்டில் வசிக்கும் உறவுகள்.

இந்தப் பட்டியலுக்குள் புலம்பெயர்ந்து வாழும் சொந்தங்கள் எல்லாரையும் வைத்துப் பார்க்காவிட்டாலும் காசுக்குமேல் காசு வைத்திருக்கின்ற உறவுகளில் கணிசமான ஒரு பகுதியினரைக் கூறலாம்!

அண்மையில் எனக்குத் தெரிந்த ஒருவரின் நண்பர் புலம்பெயர் நாடு ஒன்றில் இருந்து வந்தவர். அவர் 80 லட்சம் ரூபாவுக்குப் பேசி வாங்க இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவை, புலம்பெயர் நாட்டிலிருந்து வந்த இன்னுமோர் அன்பர், "நான் 90 லட்சம் தாறன், எனக்குத் தாவன்" என சுமார் முப்பது, நாற்பது லட்சம் ரூபா பெறுமதியான அவ்வளவை 90 லட்சம் கொடுத்து வாங்கியிருக்கிறார்!

புலம்பெயர் நாடொன்றில் இருந்து வந்த வேறொருவர், "எவ்வளவு கொடுத்தெண்டாலும் அந்தக் காணியை வாங்கிப்போடுவன்" என வேறொரு காணி விவகாரத்தில் கூறியது நினைவுகூரத் தக்கது.

கேட்பாரற்று, காய்ந்து போய்க் கிடந்த வளவுகளை என்ன விலை கொடுத்து வாங்குகிறார்கள் தெரியுமா! இவ்வளவு பணமும் இவர்களுக்கு எப்படிக் கிடைக்கிறதோ, எப்படிச் சம்பாதிக்கிறார்களோ தெரியாது! அது அவனுக் குத்தான் வெளிச்சம்!

ஆனால், வளவுக்குமேல் வளவை, காணிக்குமேல் காணியை வாங்கியும்; கடைக்குமேல் கடையை, வீட்டுக்குமேல் வீட்டைக் கட்டியும் தள்ளுகிறார்கள் என்றுதான் சொல்லவேண்டி இருக்கிறது.

சில பிரதேசங்களில் வளமான, செழிப்பான தோட்டக் காணிகளைத் தூர்த்துக் கடைகளைக் கட்டுகிறார்கள்! ஒரு காலத்தில் தெருநாய்கள் படுத்துறங்க இவை உதவியாய் இருக்குமோ என்னவோ?

**மாப்பிள்ளைக்கு நம்மூரில் எப்போதும் மவுசுதான்**

மழைக் காலத்தில் மரக்கறிக்கு விலை அதிகரிக்கிறது, அது நியாய மானது. காரணம், உற்பத்தி செய்வதில் ஒரு பகுதி எப்படியும் மழையினால் அழிந்து போகும் வாய்ப்பு இருப்பதனால் விவசாய உற்பத்திப் பொருளின் விலையினை அதிகரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறான் விவசாயி.

அத்துடன் நிரம்பல் குறைந்து, கேள்வி அதிகரிக்கின்றபோது அல்லது நிரம்பல் அப்படியே இருந்து கேள்வி அதிகரிக்கின்றபோது விலை அதிகரிப்பது இயல்புதானே.

பொருளியல் நோக்கில், இங்கு நிரம்பல் என்றால் உற்பத்திப் பொருள், கேள்வி என்றால் மக்களின் தேவை அல்லது விலை என விளங்கிக் கொள்ளலாம்.

அன்று படித்த பொருளியல் பாடம் இப்போதும் இவருக்கு நன்றாகப் பயன்படுவதை நினைத்துச் பெருமைப்படுவீர்கள் என நீங்கள் நினைப்பதாக நான் நினைத்து, சந்தோஷப்பட வேண்டியதுதான்!

இது இவ்வாறிருக்க, மறு புறம், நம் தமிழ்ப் பிரதேசங்களில் மாப்பிள்ளைக்கு — மணமகனுக்கு மவுசு எப்போதும்போல இப்போதும் ஏறிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுதான் போகிறது.

மாப்பிள்ளைக்கான நிரம்பல் குறைந்து கேள்வி எக்கச்சக்கமாக அதிகரித்துக்கொண்டு போவது மாப்பிள்ளைக்கு மவுசு ஏறிக்கொண்டும் ஏகிறிக்கொண்டும்போக ஒரு முக்கிய காரணமாகும். இது, 30 ஆண்டுகாலப் போர் நமக்குத் தந்த *சீதனங்களுள்* ஒன்று!

சில நல்ல நல்ல மனிதர்கள்கூட, நல்ல நல்ல *சீதனத்தை* வாய்விட்டுக் கேட்டு, சில சந்தர்ப்பங்களில் கெஞ்சி மன்றாடி வேண்டுமானால் கூத்தாடி, வெட்கப்படாமல் வாங்கிக் கொள்கிறார்கள். 05, 10, 15, 20, 25, 30, 40, 50 லட்சம் என்று சாதாரணமாக ஆயிரம், இரண்டாயிரம் ரூபாவை கைமாற் றாகவோ கடனாகவோ கேட்பதுபோல மாப்பிள்ளைக்குச் சீதனத்தைக் கேட்கிறார்கள்.

"பெத்தாலும் இரண்டு ஆம்பிளய, *டொக்ரர, என்சினியர* பெற வேணும் கண்டியோ. அப்பிடிப் பெத்திற்றால், அவனுக்கு அதிஸ்ரம்தான். இல்லையெண்டு இரண்டு பெட்டைக் குட்டிகள பெத்தானென்டால், அவன் பாடு நாபடாத (நாய்படாத) பாடுதான்!" என்று திருமண வீடொன்றில் இரண்டு பெரியவர்கள் பேசிக்கொண்டது நினைவிலிருக்கிறது.

**பால்மணம் மாறாத பச்சிளம் பாலகன்போல!**

"என்னப்பா நீ படிச்ச பிள்ளை, கொஞ்சம் யோசிக்கவேணும். *சீதனம்* கேட்கிறாங்கள்தான்! அதுக்கு, கண்மண் தெரியாமக் கேட்கிறதே?..." என எஞ்சினியர் – டொக்ரர் மாப்பிள்ளையிடம் சொன்னால் அவர், தான் ஓர் அப்பாவி, மூக்கைப் பிடித்தால் வாயைத் திறக்கத் தெரியாத பால்மணம் மாறாத பச்சிளம் பாலகனைப்போல இருந்துகொண்டு கூறுவார், "உண்மையில், எனக்கு ஒன்றும் தெரியாது! உண்மையில், *சீதனம்* வாங்க எனக்கு விருப்பம் இல்ல! உண்மையில், வீட்டாக்கள்தான் கேட்கிறாங்கள்! உண்மையில், என்னால் ஒன்றும் செய்ய ஏலாமல் இருக்குது!..." எனப் பொய்(யா) வாக்குரைப்பார்.

இப்பச்சிளம் பாலகர் குழுவில் பல தரத்தாரும் திறத்தாரும் மிக உயர்ந்த பதவிகளில் இருப்பவர்களும் அடங்குகிறார்கள் என்பதுதான் ஆச்சரி யத்திற்குரிய விடயம்! அப்படிப்பட்டவர்களுக்குத்தான் திருமணச் சந்தையில் கிராக்கியும், விலையும் அதிகமாக நிலவுகிறது.

**கொஞ்சம் பிறரன்போடு நடந்துகொள்ள வேண்டும்**

புலம்பெயர் மண்ணில் இருந்து தம்(நம்) சொந்த ஊர் வருகின்ற நம் உறவுகள் இவ்விடயங்களில் கொஞ்சம் பிறர் அன்போடு நடந்துகொள்ள வேண்டும் என்பதுதான் உள்ளூர் ஏழையர்களின் பிரார்த்தனை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஸ்ரெலிங் பவுண்ஸ், டொலர், யூரோ* ஆகியவற்றில் வைத்திருப்பவர்கள் அவற்றை மாற்றி ரூபாவில் பல இலட்சங்களை வைத்துக்கொண்டு, தங்கள் உறவுகளுக்குச் சீதனமாக அள்ளிக் கொடுத்து, திருமணத்தை செய்துவைத்துப் போனால், இங்கு மிகவும் வறுமையில் வாழுகின்ற – நாளாந்த வாழ்வுக்கே போராடிக் கொண்டிருக்கின்ற குமர்கள் எப்போது கரை சேர்வது? இவ்வளவு லட்சத்தையும் ஆசைக்குக் கூடப் பார்க்காமல் செத்துப் போக வேண்டியதுதான்!

ஆயினும், புலம்பெயர் மண்ணில் வாழுகின்ற குறிப்பிடத்தக்க இளையோர் எவ்வித கொடுக்கல் வாங்கலும் இன்றி இங்குள்ளவர்களை மணம்புரிந்து கொள்வதையும் நாம் நன்றியோடு நினைக்கிறோம்.

**பட்டினி கிடந்தாலும் பதக்கங்களோடுதான் கிடப்பார்கள்!**

'லண்டனில் தமிழர் ஒருவரின் வீட்டில் 200 பவுண் நகையும் 18,000 ஸ்ரெலிங் பவுணும் களவாடப்பட்டுள்ளன...' என 13.10.2012 அன்று பத்திரிகையில் செய்தி வெளியிட்டிருந்தார்கள். இதுபற்றிய என் தனிப்பட்ட கருத்து ஒருபுறம் இருக்க, இச்சம்பவத்தைப்போல பல சம்பவங்கள் உண்டு. புலம்பெயர் மண்ணில் நம்மவர்கள் 25, 50, 75, 100, 150, 200 பவுண் எனப் போட்டி போட்டுக் கொண்டு களவு கொடுத்திருக்கிறார்கள்.

'தமிழ் மக்கள், அதிலும் குறிப்பாகத் தமிழ்ப் பெண்கள், வறுமையில் பட்டினி கிடந்தாலும் நகைகளை கழுத்தில் மாட்டிக்கொண்டுதான் பட்டினி கிடப்பார்கள்', 'அன்றாடச் செலவுக்குப் பணம் இல்லாவிட்டாலும் நிறைய நகைகளைத் தமிழர்கள் தங்கள் வீடுகளில் நிச்சயமாக வைத்திருப்பார்கள்' என்ற அபிப்பிராயம் தமிழ் மக்கள் வாழுகின்ற புலம்பெயர் நாடுகளின் ஏனைய மக்கள் மத்தியில் பரவலாக நிலவுவதை அவதானிக்கலாம்.

இதனால், தமிழ் மக்களின் வீடுகளையே கொஞ்சக் காலமாகக் கொள்ளையர்கள் குறிவைத்துக் கொள்ளையடிக்கிறார்கள் என்றால் எம்மைக் (தமிழ் மக்கள்) குறித்து ஏனைய மக்கள், கொள்ளையர்கள் கொண்டிருக்கின்ற கருத்து எப்படிப்பட்டது என்பதைக் கணித்துக் கொள்ளுங்களேன்!

**கோல்சேல் (Whole Sale) கொள்ளை!**

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன், நாங்கள் சிறுவர்களாய் இருந்தபோது வங்கிகளில் 40, 50 பவுண்களையும் 10, 15 லட்சம் ரூபாக்களையும் கொள்ளையடித்துச் சென்றுவிட்டார்களாம் என்றுதான் மக்கள் பேசிக் கொள்வார்கள்.

'வீடொன்றில் களவுபோய்விட்டது', 'வங்கியொன்றில் கொள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடித்து விட்டார்கள்' என்றுதான் சொல்லக் கேட்டிருப்போம் அல்லது பத்திரிகைச் செய்திகளில் படித்திருப்போம்.

ஆனால், இப்போது நம் நாட்டு வங்கிகளிலும் பார்க்க வெளிநாடுகளில் வாழும் கணிசமான தமிழ் மக்களின் வீடுகளில் கூடுதலான பவுண்கள் இருப்பதாகவே தெரிகிறது. அதனால்தான் வெளிநாட்டுக் கொள்ளையர்கள் அங்குள்ள வங்கிகளில் களவு எடுக்காமல் தமிழர்களின் வீடுகளில் கொள்ளையடிக்கிறார்கள்.

ஏனெனில், வங்கிகளைவிடத் தமிழர்களின் வீடுகளில் அதிக வசூல் கிடைக்கும் என்பதாலும், வங்கிகளைவிடத் தமிழர் வீடுகளில் லேசாக கொள்ளையடித்துவிட முடியும் என்பதாலும் இவ்வாறான தெரிவைச் செய்திருக்கிறார்கள்போல் தெரிகிறது.

எது எவ்வாறோ, தமிழர்களின் வீடுகளை வெளிநாட்டுக் கொள்ளையர்கள் இப்போது இலக்கு வைத்திருக்கிறார்கள் என்பதைக் கடந்த 05, 10 ஆண்டுகளாக மிகக்கூடுதலாக அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

இவ்வெளிநாட்டுக் கொள்ளையர்களுக்கு நம்மவர்களில் சிலர்தான் – 'சுத்த தமிழர்தான்' வழிகாட்டிகளாகச் செல்கிறார்கள் என்பதும் கண்டறியப்பட்ட திடுக்கிடும் தகவல் ஒன்று.

இதனை, எத்தனைபேர் எண்ணிப் பார்க்கிறார்கள்? உறைய வைக்கும் பனியில் ஒட்டி, உறைந்து, உருகி, ஓடி ஓடி உழைத்து, தாம் கஸ்ரப்பட்டுத் தேடிய உழைப்பைக் கொள்ளையர்களுக்கு மொத்த வியாபாரம் – *கோல் சேல்க்குக்* கொடுப்பது போல கொடுத்துவிடுகிறார்கள் நம்மவர்களில் பலர்.

**துன்பத்திலும் அனுகூலமான குழுவினர்!**

இவ்வாறு, கொள்ளைகள் இடம்பெறுவதால் குடும்பங்களுக்கு மிகப் பெரும் துயரும், மிகப் பாரிய பொருளாதாரப் பின்னடைவும், பல குடும்பப் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

இத்துன்பத்திற்குள்ளும் அனுகூலமான குழு ஒன்று இருக்கிறது. அது எது என்றால், கொள்ளையடிக்கப்பட்ட வீடுகளில் உள்ள குடும்பத் தலைவிமார்தான்! இது, முற்றுமுழுதான புத்தம்புதிய 2013ஆம் ஆண்டுக்காக விருது பெறப்போகும் கண்டுபிடிப்பாகக்கூட அமையலாம்!

இப்படிச் சொல்வதற்கான காரணம் என்னவென்றால், வீட்டில் கொள்ளையிடப்பட்டு 03, 04 மாதங்கள் கடந்ததும், பவுண்களை பறிகொடுத்த வீட்டுக்காரி கறையான் அரிப்பதுபோலக் கணவனிடம் அரிக்கத் தொடங்கி, "இப்பிடியே சும்மா இருந்து என்ன செய்யிறது? வெறும் கழுத்தோட எத்தின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாளைக்குத்தான் திரியிறது? சனம் என்ன நினைக்கும்? (ஏதோ ஆடை யில்லாமல் நிர்வாணத்தோடு திரிவது போலத்தான் கதையளப்பார்கள்!) தாலியும், ஒரு சங்கிலியும், இரண்டு காப்பு எண்டாலும் செய்யத்தானே வேணும்!" என்பார்கள் ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தையில்!

ஒரு மாதிரி விரும்பியோ விரும்பாமலோ, அரை மனத்துடனோ கால் மனத்துடனோ, கணவன் உடன் படுவதற்கான சைகை அவர்களுக்கு எப்படியோ கிடைத்துவிடும். இது போதாதா அவர்களுக்கு!

களவு கொடுத்த தாலியை 15பவுணில் செய்திருந்தால் இப்போது கூறுவார்கள், "செய்யிறதோட 25 பவுணா செய்துவிடுவம். திரும்ப ஒரு தடவ செய்யவா போறம்? இப்ப செய்தா, எப்போதாவது எதுக்கும் அது உதவும்தானே..." என இறுதிக் கட்டப் பேச்சின் உச்சக் கட்டத்தில் மிக நிதானமாகக் கூறுவார்கள்! எங்கிருந்துதான் இவர்களுக்கு இப்படியான பிரகாசமான எண்ணாங் கள் பிறக்கிறதோ தெரியாது!

'வேண்டாம் என்றாலும் கேட்கவா போகிறாள்?' என எண்ணிவிட்டு செம்மறி ஆட்டைப்போல அவரும் மேலும் கீழும், வலமும் இடமும் தலையை ஆட்டி அசைத்து பெருமூச்சு விட்டபடியே அடுத்த கட்ட நடவடிக்கைக்கு விழி பிதுங்கி நிற்பார்.

இந்த நகைநட்டுக் கலாசாரம் முன்னைய காலங்களிலும் பார்க்க உள் நாட்டிலும் இப்போது சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கிறது. இனிவரும் காலங்களில் நகைநட்டுப் போடுவதில் நம் வெளிநாட்டுச் சொந்தங்களை, இங்குள்ளவர்கள் மிஞ்சிவிடுபவர்களாக இருப்பினும் அதில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை. நம் பெண் குலத்தின் கழுத்துகளையும், காது களையும், கைகளையும், கைப்பைகளையும், நம் நகர்களில் நகைக்கடைகளின் பெருக்கத்தையும் அவதானிக்கின்றபோது இந்த உண்மை புரியும்.

**கழுத்து நிறைய நகை!**

கழுத்து நிறைய நகை! கை, காது நிறைய ஆபரணங்கள்! மேலும் கொழுவுவதற்கு வேறிடங்கள் இல்லை, இருப்பின், அங்கும் கொழுவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவார்கள்!

"எதற்காக நகைநகையாய் சேமிக்கிறீர்கள்?", எனக் கேட்டால் சிலர், "சேமிப்பு"; இன்னும் சிலர், "சிக்கனம்"; மற்றும் சிலர், "பின்னுக்குத் தேவை"; வேறு சிலர், "பிள்ளைகளுக்கு" என்பார்கள்.

ஆராய்ந்து பார்த்தால், இவர்கள் ஏதாவது தொழில் முதலீட்டுக்காக இந்நகைகளைப் பயன்படுத்துவார்கள் என்றால், அப்படியும் செய்ய முன்வர மாட்டார்கள். அப்படியான ஒன்றைக் கணவன் முன்மொழிந்தாலே வீடு இரண்டு படக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுவிடும்.

நிதானமாகச் சிந்தனை செய்து பார்த்தால் பின்னுக்கும் இல்லாமல், முன்னுக்கும் பயன்படாமல், பிள்ளைகளுக்கும் போய்ச் சேராமல் கொள்ளையர்கள் கொண்டுபோவதற்குச் சேர்த்து வைப்பதுபோலத்தான் சிலரின், நகை முதலீடு அமைந்துவிடுகிறது.

பொதுவாக, இருக்கிற நகைகளை வங்கிகளில் பாதுகாப்பாக வைப்பார்கள், பின்னர் ஏதாவது ஒரு கொண்டாட்டத்திற்குத் தேவை என்று எடுத்துக் கொண்டுவந்து வீட்டில் வைப்பார்கள். கணவனுக்குத் தெரிகிறதோ இல்லையோ, நகைகள் வீட்டில் இருப்பது கொள்ளையர்களுக்குத் தெரிந்து விடுகிறது.

"அதென்ன, மாட்டுக்கு வட்டான் சங்கிலி போர்றது (போடுவது) போல போட்டால் யாருக்குத்தான் தெரியாது!" என இது பற்றிப் பேசிக்கொண்டிருந்த போது ஓர் அன்பர் மனம்நொந்து குறிப்பிட்டார். "எவ்வளவுதான் களவு போனாலும் கேட்குதுகளா? நகை எண்டா பேய்கள் மாதிரி நிக்குதுகள். அந்த நகைப் பேய்களோட போராட யாரால் முடியும்?" எனக்கூறி முடித்தார் கூட இருந்தவர்.

நகைகள், ஆபரணங்கள் அணியலாம். அணிவதை அழகாக அணியலாம், நாகரிகமாக அணியக் கற்றுக்கொள்ளலாம். என்ன, கண்டமாதிரி போட்டுக்கொண்டு திரிந்தால் முந்திய நாட்களில் அறுத்துக்கொண்டு போனார்கள், இந்தக் காலங்களிலும் இனிவரும் நாட்களிலும் உடல் பாகங்களை சீவியெடுத்துக் கொண்டு, உதாரணமாக, காதை வார்ந்துகொண்டு போய்விடுவார்கள், அதனால்தான் கவனம்! கவனம்! கவனம்! என இக்கருத்தை அழுத்திச் சொல்லவேண்டி இருக்கிறது.

மன்னா, பங்குனி 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு வெறி வேண்டாம்



## 33

**உடையவன் யாரோ? உரிமை கொண்டாடுவது யாரோ?**

எழுபது வயதான பெரியவர் ஒருவர் இருபது வயதான தன் மனைவியுடன் தனியார் மருத்துவமனைக்குள் நுழைந்தார். அங்கிருந்த மருத்துவரிடம், "*டொக்ரர்*, எனக்குப் பெரிய சந்தோஷம்! என் மனைவி கருத்தாங்கி இருக்கின்றாள். அவளைப் பரிசோதித்து அவளுக்கு வேண்டியதைச் செய்யவேண்டும்" என வேண்டினார்.

மருத்துவரோ அப்பெரியவரை ஆச்சரியத்தோடு பார்த்துவிட்டு, "நான் உங்களுக்கு ஒரு சம்பவத்தைச் சொல்லவேண்டும்..." எனக்கூற அம் முதியவரும் ஆர்வத்தோடு மருத்துவருக்கு செவிமடுத்தார்.

மருத்துவரும், "ஐயா பெரியவரே, வேட்டைக்குப் போகும் என் நண்பன் ஒருவன் இருக்கின்றான். ஒருநாள் விடியற்காலைவேளை, வேட்டைக்குப் போகும் அவசரத்தில் துவக்குக்குப் பதிலாகத் தன் குடையை எடுத்துக்கொண்டு போய் விடுகின்றான். துவக்குக்குப் பதிலாகக் குடையைக் கொண்டுசென்றதை உணர்ந்து கொள்ளாத அவன், மான் ஒன்றைக் கண்டதும் குடையை எடுத்து குறிவைத்துச் சுடுகின்றார். என்ன அதிசயம்! மான் சூடுபட்டு அவ்விடத்திலேயே வீழ்கின்றது!..."

மருத்துவர் கதையை முடிப்பதற்குள் அம்முதியவர், "ஐயா மருத்துவரே, இது எப்படி சாத்தியப்படும்! குடையினால் எப்படி மானைச் சுட்டு வீழ்த்த முடியும்? வேறு யாராவது அம்மானைச் சுட்டு வீழ்த்தியிருக்க வேண்டும்!" எனத் திடமாகக் கூறிவிடுகின்றார்.

அம்முதியவரை அன்பொழுகப் பார்த்த மருத்துவர், "உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்கின்றேன்: அதேபோல்தான், உங்கள் மனைவிக்கும் நடந்திருக்கின்றது!..." என்று கூறத் தன்னிலை உணர்ந்தவராகத் தன்னைச் சுதாகரித்துக்கொண்ட அம்முதியவர் தன் மனைவியுடன் அங்கிருந்து மறைந்துபோனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சம்பவத்திற்கு விளக்கம் கொடுக்க விருப்பம்தான், விளக்கம் கொடுக்க விளைந்தால் தேவையில்லாத வியாக்கியானங்களைக் கொடுக்க வேண்டிவரும்! அதனால், அதனை விட்டுவிடுவது புத்திசாலித்தனம்போல் தெரிகின்றது.

மேற்சொன்ன சம்பவத்தின் விபரம் விளங்கியவர்கள் இதுவரையில் வாய்விட்டுச் சிரித்திருப்பார்கள் அல்லது குலுங்கிக் குலுங்கிச் சிரித்திருப்பார்கள் அல்லது சம்பவத்தைக் கற்பனை செய்துசெய்து சிரித்துக்கொண்டிருப்பார்கள். பொருள் புரியாதவர்கள், என்னசெய்வது? அளந்தது அவ்வளவுதான்! என்று வாசிப்பைத் தொடர வேண்டியதுதான்!

**வெளிநாட்டு ஆசை!**

'வெளிநாட்டு ஆசை காட்டி 200 தமிழ் இளைஞர்களிடம் மோசடி – தலா 50,000 செலுத்தியோர் நடுத்தெருவில்: முகவர் தலைமறைவு' என்ற பெரிய நீண்ட தலைப்பில் தினக்குரல் பத்திரிகை 11.06.2013 அன்று செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது. சி.எஸ்.வி என்ற தனது பயண முகவர் நிலையம் மதவாச்சியில் இயங்குவதாகக் கூறி அங்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் நிழற்படங்கள் எடுக்கப்பட்டு விண்ணப்பங்கள் பதியப்பட்டு பணம் பெறப்பட்டதாக ஏமாற்றப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

பணத்தைப் பறிகொடுத்தவர்கள், தலையில் கைவைத்துக்கொண்டு திரிவதாகக் கேள்வி! எப்போதுதான் நம் இளைஞர்களுக்கு புத்தி தெளியப் போகின்றதோ?

**வெளிநாட்டு மோகம்!**

வெளிநாடுகளை நோக்கி எம் இளையோர் இன்றும் படையெடுத்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். அதற்கு முக்கியமான காரணங்களும் ஒன்று, வெளிநாடு பற்றி இவர்கள் வளர்த்து வைத்திருக்கும் ஒரு வகை ஆசை!

இதற்கு நான் கொடுக்கும் கலைச்சொல், 'வெளிநாட்டு மோகம்'. இச்சொற்றொடருக்கான விளக்கத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ளல் வேண்டும். என்ன பாடுபட்டு என்றாலும் – எவ்வளவு கடன்பட்டு என்றாலும் – உயிரைக்கொடுத்து என்றாலும் வெளிநாடு சென்றுவிட்டால் பணம் வந்து குவியும் என்ற மாயையை உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

வெளிநாட்டை நோக்கிப் படையெடுப்பதற்கான இரண்டாவது காரணம், எம் இளையோரில் அநேகருக்கு கொஞ்சம் கொஞ்சமாக உழைத்து முன்னேறவேண்டும் – உண்மையாக உழைத்து முன்னேறவேண்டும் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸ்ரப்பட்டு உழைக்க வேண்டும் என்ற எண்ணமெல்லாம் அருகிப்போய், அதிஸ்ரலாபச் சீட்டிழுப்பில் அதிஸ்ரம் விழுவதுபோல் ஒரே தடவையில் இலட்சாதிபதியாக வேண்டும் என்பதுதான் கற்பனையாக இருக்கின்றது.

பொருள் ஈட்டுவதற்கு வழி, வெளிநாடு சென்றால் எல்லாம் வசதியாக வந்து வாய்த்துவிடும் எனக் கற்பனை செய்து கொள்கின்றார்கள். இவ்வெளிநாட்டு ஆசையிலிருந்தும் – வெளிநாட்டு மோகத்திலிருந்தும் விடுபட ஒரே தீர்வு, வெளிநாட்டுக் கனவுலகைக் கலைத்து நிஜவுலகில் வாழக் கற்றுக் கொள்வதுதான் என்பதை எப்போதுதான் நம்மவர்கள் உணரப்போகின்றார் களோ தெரியாது!

**வெளிநாட்டு - உள்நாட்டு நிலை**

இங்குள்ளவர்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலானவர்கள், 'வாய்ப்புக்கள் அமைந்தால் வெளிநாட்டுக்குப் போய்விடுவோம்' என யோசிக்கின்றார்கள்.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் முதல் தலைமுறையினரில் (1980, 1990களில் புலம்பெயர்ந்து சென்றவர்கள்) குறிப்பிடத்தக்க விகிதா சாரத்தினர், 'உழைக்கின்ற வரை உழைத்துக்கொண்டு, எவ்வளவு விரைவாக பிள்ளைகளைப் படிப்பித்து, அவர்களின் வாழ்வுக்கான ஒழுங்குகளைச் செய்துவிட்டு, நாடு திரும்பமுடியுமோ அவ்வளவு விரைவாக ஊருக்கு (ஈழத்திற்கு) வந்துசேர்ந்து விடுவோம்' என்று சொல்லிக்கொள்கின்றார்கள்.

தாயகத்தில் உள்ளவர்கள், வெளிநாடு 'சொர்க்கபூமி' எனக் கற்பனைசெய்து கொள்கின்றார்கள்! வெளிநாடுகளில் வாழும் எம்மவர்களைக் கேட்டால், 'நம்முடைய ஊரைப் போல வருமா?' என ஊருக்கு வர ஏங்கு கின்றார்கள்!

புலம்பெயர்ந்து வாழும் எம்மவர்களின் மேற்சொன்ன மனநிலையை இங்குள்ளவர்கள் எப்படி விளங்கிக்கொள்ளப் போகின்றார்கள் என்பதுதான் கேள்வியாகத் தொக்கி நிற்கிறது. வெளிநாடு என்ற கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டு இருப்பவர்களுக்கு எத்தனை வெளிநாட்டு வாழ்க்கை அனுபவங் களை எடுத்துச் சொன்னாலும் அவற்றைப் புரிந்துகொள்ள முடியாதிருப்பது தான் சிலவேளைகளில் விசித்திரமாக இருக்கின்றது.

இக்கரையில் உள்ள மாடு அக்கரைப் பசுமையைப் பார்த்துப் பரிதவிக்கின்றது. அக்கரையை அடைந்த மாடு இக்கரைப் பசுமையை நினைந்து நினைந்து புலம்புகின்றது. இதுதான், இக்கரையில் வாழும் நம்முடைய நிலையும் அக்கரையில் வாழும் அவர்களின் தவிப்பும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா அனுபவங்களையும் ஒருவர் பெற்றுக்கொள்ள வாய்ப்பிருக்கின்றது. ஆனால், ஒருவர் 'இறப்பு அனுபவம்' பெற வாய்ப்பில்லை. ஆயினும், ஆழ்நிலை மயக்க நிலையில் (Coma) இருந்து தப்பிப் பிழைக்கின்ற ஒருசில நோயாளர்கள் இறப்பு அனுபவத்தினைப் பெறுகின்றார்கள் எனச் சில மருத்துவ ஆய்வுகள் குறிப்பிடுவதாகச் சொல்லுகின்றார்கள்.

இது தவிர, வேறு வகையான 'இறப்பு அனுபவம்' இருக்க முடியாது என்றுதான் புரிந்து கொள்ளப்படுகின்றது. "இல்லை, இறப்பையும் நான் அனுபவித்துப் பார்க்கத்தான் போகின்றேன்" எனச் சிலர் ஒற்றை விரலில் நின்றால், "சரி, தொலைந்துபோ!", அதாவது "இறந்துபார்" எனக் கைகழுவி விடுவதைத் தவிர வேறென்ன வழியிருக்கின்றது! இதேபோலத்தான், "வெளிநாட்டுக்கா? போய்த்தொலை!" எனக் கூறிவிட்டு நம் வேலையைப் பார்க்க வேண்டியதுதான்.

**ஏமாறுவதும் ஏமாற்றப்படுவதும் எம் வரலாறு ஆகிவிடுமோ!**

எம்மவர்கள் ஏமாறுவதும் ஏமாற்றப்படுவதும் நீண்ட எம் பாரம்பரியத்தோடு கூடிய வரலாறாகிவிட்டதோ என்றுகூட எண்ணவேண்டி இருக்கின்றது! வரலாற்றிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளாத இனத்தவர்கள் நாங்கள்! வெளிநாட்டில் வேலைவாய்ப்பு!, நிரந்தர வீடு, நிரந்தர வேலை, நிரந்தர வீசா என்றதும் ஆவென்று வாயைப் பிளந்துகொண்டு, காணியை அறா (மிகக்குறைந்த) விலைக்கு விற்று – நகைகளை அடைவு வைத்து – வட்டிக்குக் கடன்வாங்கி – கண்ணை மூடிக்கொண்டு பணத்தைத் தூக்கிக் கொடுத்துவிட்டு இலவுகாத்த கிளிகளாக ஏங்கித் தவிக்கின்றார்கள் பலர்.

வெளிநாட்டில் வேலைவாய்ப்பு! நிரந்தர வீடு, வேலை, வீசா எனச் சொல்லி வருபவர்கள் யார்?, எப்படிப்பட்டவர்கள்?, உண்மையானவர்களா?, வெளிநாடுகளின் *கலர்கள்* ஆவது இவர்களுக்குத் தெரிந்திருக்கின்றதா என்பவைபற்றி எல்லாம் சிந்தித்துப் பார்க்காமல், வெளிநாட்டுக் கனவுலகில் சஞ்சரித்துக்கொண்டு இருப்பவர்கள் இலகுவாக ஏமாற்றப்படுகின்றார்கள்.

**அவுஸ்ரேலிய வெறி!**

இதன் ஓர் அங்கமாகத்தான் இன்றைய அவுஸ்ரேலியப் பயணத்தைப் பார்க்கவேண்டும். கடுமையாகப் போர் நடந்த காலத்தில் உயிரைப் பாதுகாக்க வெளியேறவேண்டிய நிலையில்கூட உயிராபத்து மிக்க அவுஸ்ரேலியா, கனடா போன்ற ஆழ்கடல் பயணங்களில் மக்கள் இறங்கத் துணியவில்லை.

ஆனால், இப்போது இங்கு ஓரளவிற்கு உயிர்பிழைத்து வாழக்கூடிய சூழலிருந்தும் அவுஸ்ரேலியா தொற்றுப்பிடித்து இன்று பலர் அவதியுறுகின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார்கள்! இத்தொற்று மிக மோசமான – பொல்லாத – பயங்கர தொற்று நோயாகப் பரவி வருகின்றது.

இத்தொற்றின் மரண ஆபத்துக்களைச் சிந்திக்காமல் அவுஸ்ரேலியா போய்ச் சேரும் வெறியோடு பலர் வாழ்வதுதான் வேதனைக்குரியது. வெறிமுறிந்து பார்க்கின்றபோதுதான், இந்தநேசியா – அவுஸ்ரேலிய – வங்காள கடற்பரப்பில் கிடந்து, "ஐயகோ! அங்கையும் (அங்கேயும்) இல்லாமல், இங்கையும் (இங்கேயும்) இல்லாமல் நடுக்கடலில் தத்தளிக்கின்றோமே!" என அலம்பிப் புலம்பி நொந்துகொள்வதாகத் தெரிய வருகின்றது.

**பத்தோடு பதினொன்று, அத்தோடு நானுமொன்று!**

பாதுகாப்பற்ற சிறிய படகுகளில் அளவுக்கு அதிகமான மக்களை ஏற்றி வாரக் கணக்கான ஆழ்கடல் பயணம் பற்றிப் பலர் அறியாமல் வெளிநாட்டு ஆசையில் வெளிக்கிட்டு அவுஸ்ரேலியா போகத் துடிக்கின்றார்கள். இவ்வாறு, (1) அவுஸ்ரேலியா செல்ல முயன்ற நூற்றுக்கணக்கானவர்கள் கடலில் இறந்து போயிருக்கின்றார்கள் என்பது இன்னும் பலர் அறிந்தும் அறியாத செய்தி! (2) அங்குபோய்ச் சேர்ந்தபின் அவர்கள் படுகின்றபாடு இன்னும் இங்குள்ளவர்கள் தெரிந்திராத இன்னுமொரு சமாச்சாரம். (3) மேலும், இனிமேல் அவுஸ்ரேலியா செல்பவர்களை அந்நாடு நம் நாட்டைவிட வறுமைப்பட்ட வேறு நாடுகளுக்கோ அல்லது நம் நாட்டுக்கோ திருப்பி அனுப்புவதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன.

இவற்றைப் பற்றியெல்லாம் சிந்திக்காமல் பத்தோடு பதினொன்று அத்தோடு நானுமொன்று என்ற மனப்பான்மையோடு செயற்படுகின்றவர் களாகத்தான் வெளிநாட்டு எண்ணத்திலிருக்கும் நம்மில் பலர் இன்று இருக்கின்றார்கள்.

**உயிர்பிழைத்து மீண்டவர்கள் உயிர்துறந்த துயர்!**

அண்மையில், அவுஸ்ரேலியப் பயணம் புறப்பட்டு என்னுடன் இருந்த மாணவன் ஒருவன், அவன் தாய், அவன் சகோதரி என மூவர் கடலில் மூழ்கி இறந்திருப்பதாக அவரின் உறவினர்கள் அதிர்ச்சித் தகவல் தெரிவித்திருக் கின்றார்கள்.

இத்தனைக்கும், இக்குடும்பத்தவர்கள், 2009ஆம் ஆண்டு முள்ளி வாய்க்கால் யுத்தத்தின்போது உயிர் பிரிந்த உடல்களோடு உடல்களாகக் கிடந்து மீண்டவர்கள்! செத்துப் பிழைத்தவர்கள்!

முள்ளிவாய்க்காலில் செத்துப்பிழைத்து மீண்டுவந்து, இவ்வாறான அகாலமரணம் அடைந்திருப்பது எவ்வளவு வேதனையைத் தருகின்றது? இவர்களைப் போன்று அவுஸ்ரேலியா புறப்பட்டு இறந்துபோனவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரங்கள் இப்போதுதான் வெளியே வந்துகொண்டிருக்கின்றன.

**வேண்டவே வேண்டாம்!**

எனவே, இவ்வாபத்தான அவுஸ்ரேலிய ஆழ்கடல் பயணங்கள், வேண்டவே வேண்டாம் என அறுதியாகவும் இறுதியாகவும் நாம் முடிவெடுப்பதோடு, இச்சிந்தனையை – இதன் விபரீதத்தை நம்மவர்களுக்குத் தெரியப்படுத்தவும் வேண்டும்.

இப்பகுதியை வாசித்தபின், "அவுஸ்ரேலியா தூதரகம்தான் அன்புராசா அடிகளாருக்குப் பணம்கொடுத்து இப்பந்தியைப் பதியவைக்கிறதோ!..." என நம்மவர்களில் ஒருசிலர் எண்ணினாலும் ஆச்சரிப்படுவதற்கில்லை!

**நாம் நமக்காக நம்மண்ணில்!**

நம் மக்களில் பலர் இவ்வாறு அவுஸ்ரேலியா சென்றால் இந்த மண்ணில் யார் வாழ்வது என்ற கேள்வி எழுகின்றது? ஏற்கெனவே ஆயிரமாயிரம் மக்களை 30 ஆண்டுகளாகப் பலியெடுத்திருக்கின்றார்கள்.

மேலும், ஒரு தொகுதியினர் புலம்பெயர்ந்து இந்தியாவிலும், மேற்குலக நாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறான சூழலில், மக்கள் மேலும் வெளியேற வெளியேற நம் தேசம், பண்டாரவன்னியன் – அவன் கைதின்பின் ஆங்கிலத் துரையர்களுக்குச் சொன்னதுபோல, '...நாய்களும் பேய்களும் நயவஞ்சகப் பூனைகளும்...' குடியேற வாய்ப்பளிப்பதாக மாறிவிடும்.

எனவே, எம் வீடுகளை – காணிகளை – நிலங்களை இழந்து நாம் என்ன செய்யப் போகின்றோம்? நம் நிலபுலன்களை இழந்து அடுத்த நம் இளம் தலைமுறையினரை இத்தீவைச் சுற்றியுள்ள தீடைகளில் (கடல்நடுவே காணப்படும் சிறுசிறு மணற்புட்டிகள்) வாழவிடவா ஆயத்தமாகின்றோம்?

நம்முடைய மண்ணில் நம்முடைய பிள்ளைகள் நலமுடன் வாழ நாம் ஆவன செய்யவேண்டும். மண்ணாசை இல்லாத 'இந்த மண் எங்கள் மண்' என்ற மண்பற்று இருக்கவேண்டும். அப்போதுதான், நாம் நமக்காக நம் மண்ணில் உழைத்து முன்னேற முடியும்.

வெளிநாட்டு – அவுஸ்ரேலியக் கனவுலகில் சஞ்சரித்து நிஜக்கடலில் தத்தளிக்கத் திட்டமா? அன்றேல், நமது மண்ணில் உழைத்து முன்னேறுவது நோக்கமா?

மன்னா, புரட்டாசி 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகளின் அதிர்வுகள்

அருள்தந்தை அன்பு தனது பெயரை தனது ஆளுமையிலே அடக்கியுள்ளார். தனது அன்பினாலே பலரைக் கொள்ளைகொள்ளும் இவர், தனது எழுத்தினால், தான் அறியாதவர்களோடுகூட அறிமுகமாகி வருகின்றார். அருள்தந்தையின் பல்வேறு பணிகளில் எழுத்துரைப்புப் பணியும் ஒன்றாகும். அவர் தனது எழுத்துப் பணியினால் சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலே விழிப்புணர்வை ஏற்படுத்தி, சமூகத்தைச் சீராகச் சிந்திக்கத் தூண்டுவது அவரின் இயல்பு. இவ்வியல்பு அவரில் மேலும் ஆழப்படவேண்டுமென்பது அவரின் வளர்ச்சியை ஆசிக்கும் எம் ஒவ்வொருவரின் எதிர்பார்ப்பாகும். அருள்தந்தை அன்புவின் ‘அதிர்வுகளில்’ காணப்படும் தத்ரூபமான கருத்துக்களும், சிந்தனையைத் தூண்டும் எண்ணங்களும், பல வாசகர் களைக் கவர்ந்திழுக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

அருட்கலாநிதி **செ.எட்வின் வசந்தராஜா, அ.ம.தி.**
யாழ். மாகாண அமலமரித் தியாகிகளின் முதல்வர்,
யாழ்ப்பாணம்.

அன்புராசா அடிகளார் தலைசிறந்த பேச்சாளர் மட்டும் அன்று, நல்ல எழுத்தாளனும்கூட என்பதை அவருடைய எழுத்தோவியங்கள் எடுத்து ரைக்கும். அவரது படைப்புக்களில் சுவை உண்டு; பொருள் உண்டு; அருள் உண்டு; சில வேளைகளில் சிறந்த நகையும் உண்டு. எப்பொழுதும் தெளிவு உண்டு. தமது பெயருக்கு ஏற்ற வகையில் எண்ணக் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளும் பக்குவமும் உண்டு.

பேராசிரியர் **நீ.மரியசேவியர் அடிகள்**
இயக்குநர், திருமறைக் கலாமன்றம்,
யாழ்ப்பாணம்.

அருள்பணி செ.அன்புராசா, அ.ம.தி. அடிகள் ‘மன்னா’ என்னும் மாதாந்த இதழில் எழுதும் அதிர்வுகள் என்னும் பந்தியில் முன்வைக்கும் கருத்துக்களில் அன்றாட வாழ்வில் நிகழ்வுகள் மையப்படுத்தப்படுகின்றன. இக்கருத்துக்கள் யதார்த்தமானவை, கருத்தாளமானவை, மிகப் பயனுடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யவை. வாழ்வின் அர்த்தம் பற்றிச் சிந்திக்கத் தூண்டுபவை. ஆன்மீகப் புதுப் பித்தலையும், சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் திறன் கொண்டவை.

பேராசிரியர் **ஞா.பிலேந்திரன் அடிகளார்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Dear Fr. Anpu, the themes you choose are very relevant for today's society. Especially the examples you use are very appropriate and valuable to get the message across. The language used is very simple and catchy for the readers. This is the need of the hour in our society which has been torn apart with the war and is losing all its cultural values and morals. I think what you write will go a long way to build a noble society which in a way is physically alive but spiritually dead at present. Your article on Education will and should play an important role in the life of the youth and will lay a proper foundation for their future. The one on Marriage is very inspirational with a clear meaning of marriage in the different religions. I think you are playing an important role in building a noble society with wholistic education.

Women Acfivist **Rev. Sr. Nichola**
Vavuniya.

மனத்தில், வீட்டில், சமூகத்தில் மாற்றத்தை தோற்றுவிக்கும் அரியதொரு நூலாக அதிர்வுகள் வெளிவருகிறது.

அருட்கலாநிதி **டேவிட் வின்சன் பற்றிக், அ.ம.தி**
யாழ்ப்பாணம்.

சமகால, ஆன்மீக, சமூக, அரசியல் விடயங்களைத் தொட்டு விறுவிறுப்பாக - நகைச்சுவையோடு கூடிய ஒரு கட்டுரைத் தொடரை மன்னாவில் எழுதவேண்டுமென, 'மன்னா' பத்திரிகை ஆசிரியர் என்ற வகையில் அன்புவை நான் கேட்டுக்கொண்டேன். அதற்குச் சம்மதித்த அன்பு, "அத்தொடருக்கு என்ன பெயர் வைக்கலாம்?" என்று என்னிடமே கேட்டார். 'அதிர்வுகள்' என்ற பெயரை நான் முன்மொழிந்தேன். அதுவே அத்தொடருக் கான பெயராயிற்று.

'மன்னா' மூலம் 'அதிர்வுகள்' பிரபல்யம் அடைந்ததைப்போல 'அதிர்வுகள்' மூலம் மன்னாவும் பிரபல்யம் அடைந்தது எனலாம். இன்று 7,000 பிரதிகள் மாதம்தோறும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் விநியோகிக்கப்படு கின்றன. திருச்சபை வட்டத்துக்குள் பேசுவதற்குத் தயக்கம் காட்டப்பட்ட பல விடயங்களை அன்பு துணிவோடு எழுதினார். இதனால், இக்கட்டுரைத் தொடர் பலருக்கு எழுச்சியாகவும், சிலருக்கு வீழ்ச்சியாகவும் அமைந்திருக்கும் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ண இடமுண்டு. பெயருக்கு ஏற்ப இக்கட்டுரைத் தொடர் அதிர்வுகளை ஏற்படுத்தியது உண்மை. அது பாரிய நில அதிர்வுகளாக இல்லாவிடினும் திருச்சபை வட்டத்திற்குள்ளும், சமூக மட்டத்திலும் சில அதிர்வலைகளை ஏற்படுத்தியது உண்மையே. அன்புக்கு என் அன்புநிறைந்த பாராட்டுக்கள்.

'மன்னா' பத்திரிகை ஆசிரியர் **தமிழ் நேசன் அடிகள்**
மன்னார்.

இன்றைய பிரச்சினைகள் ஊடாக நாளைய கனவுகளை நெறிப் படுத்தும் அருள்பணி. செ.அன்புராசாவின் பேனாமுனையைப் பயன்படுத்து வோம்.

அருட்கலாநிதி **பிரான்சிஸ் ஜெயசேகரம்**
யாழ்ப்பாணம்.

ஒரு மனிதன் தன் வாழ்நாளில் அனுபவிக்கும் அதிர்வுகள் பல்வகைப் பட்டவை. அவை, அவரவர் வாழ்வியல் நடவடிக்கையில் பாதிப்பை, வியப்பை அல்லது புதுமையைக் கொண்டதாக இருக்கும். ஆனால், மதிப்பிற்குரிய எழுத்தாளர் அருள்பணி செ.அன்புராசா அடிகளார் தந்திருக்கும் 'அதிர்வுகள்' சமகாலத்தின் முப்பரிமாணத் தாக்கத்தைக் கொண்டுள்ளது. சாதாரண மனிதனில் - அவனது சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவது முதல், அரசியல் முதிர்ச்சிவரை உள்நுழைந்து, கண்ணிவெடியாக அதிரவைத்து, அந்தக் கணம்முதல் சிந்திக்கவைத்துச் செல்கிறது இவர் தருகின்ற 'அதிர்வுகள்'. எரிமலையோ, பூகம்பமோ, சுனாமியோ ஏற்படுத்தும் அதிர்வுகளைவிடத் தாக்கம் கூடியதாகவும் இருக்கின்றது. இத்தகை இயற்கையின் அதிர்வுகளை அளக்க அளவீடுகள் உள்ளன. அன்பு அடிகளாரின் அதிர்வுகளை அளப்ப தற்கு மனித, சமூக மாற்றம் எனும் அளவீடு தோற்றம் பெறும்வரை அவர் தந்த 'அதிர்வுகளின்' தாக்கம் நீட்சி பெறுவதைக் கட்டுப்படுத்தவே முடியாது.

கலாபூஷணம் **கலையார்வன்**
யாழ்ப்பாணம்.

அதிர்வுகள் சமூகத்தின் அதிர்வலைகளின் வெளிப்பாடே. சமூகத்தின் அவலங்களை, போலிகளை படம் பிடித்துக்காட்டும் சமூகக் கண்ணாடி போன்றது. உண்மையின் தேடலுக்கான கதவுகளை அதிர்வுகள் திறந்து விட்டுள்ளது.

அருட்கலாநிதி **ஸ்ரனி அன்ரனி, அ.ம.தி.**
வவுனியா.

அதிர்வுகள் சமூகத்தின் மனச்சாட்சி. "ஆடுதல் பாடுதல், சித்திரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவி ஆதியான செயல்களில் என்றும் ஈடுபட்டிருப்பவர் பிறர் ஈனநிலைகண்டு துள்ளுவர்" என்ற பாரதியின் வாக்குக்கொப்ப வாழ்பவர்களில் அருள்பணி. செ.அன்புராசா அடிகளும் ஒருவர். அவர் எங்கெல்லாம் பணிசெய்யப் புகுந்தாரோ அங்கெல்லாம் தனது அனுபவங்களை, விமர்சனங்களாய் எழுத்திலே பதிப்பது வழக்கம். அந்த வகையில் முன்னையவற்றிலிருந்து சற்று வித்தியாசமாக மன்னா பத்திரிகையில் அதிர்வுகள் என்ற தொடர் பத்தி ஒன்றினை வரைந்து வருகின்றார். அண்மைக்காலமாக இந்த அதிர்வுகள் ஏற்படுத்துகின்ற அதிர்வுகள் பலரையும் பாதித்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. பலர் மன்னாவைக் கையிலெடுத்ததும் அதிர்வுகளையே முதலில் பார்ப்பதனையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அந்தளவுக்கு அதிர்வுகள் பத்தி இடம்பிடித்தமைக்குக் காரணம் அதில் பேசப்படுகின்ற ஒவ்வொரு விடயங்களும் நடந்துகொண்டிருக்கும் சமகால வாழ்வின் விமர்சனங்களாய், ஆன்மீகம், அரசியல், சமூகம், கலை, கல்வி... எனப் பல்வேறு விடயங்கள் பற்றியும் பேசிச் செல்வதனாலாகும். சமூகத்தின் மனச்சாட்சியைப்போல் தந்தையவர்களின் வரிகள் உள்ளங்களை ஊடுருவு கின்றன. சமூகப் பிரக்ஞையைத் தோற்றுவிக்கின்றன. வெறுமனே விடயக் கிளறல் களாக இல்லாது தீர்வுகளையும் பேசுகின்றன. எழுதப்படும் விடயங்களும், எழுதும், கட்டிறுக்கமான மொழிநடையும், விடயத்தை நகர்த்திச் செல்லும் நடைப்பாங்கும் அதிர்வுகளுக்கு வலுச் சேர்க்கின்றன. எனவே, தொடர்ந்து அதிரட்டும் அகாலத்தின் காரிருள் அகலும்வரை.

ஆசிரியர் நாடகவித்தகர் **யோ.யோண்சன் ராஜ்குமார்**
யாழ்ப்பாணம்.

சமூக நடத்தைக் கோலங்களில் இரண்டறக் கலந்துபோயுள்ள போலித்தனங்களையும், உறைக்கும் உண்மைகளையும் தோலுரித்துக் காட்டும் எழுத்துருவிலான உதிர்வுகளே செ.அன்புராசா அடிகளாரின் அதிர்வுகள்.

கவிஞர் **எஸ்.ஏ.அழகுராஜா**
யாழ்ப்பாணம்.

அதிர்வுகளின் ஆர்ப்பாட்டம்! அள்ள அள்ள குறையாத சுரங்கம், கள்ளமில்லாத கருத்துக்களின் அரங்கம், அன்புராசா அடிகள் அளித்திடும் அதிர்வுகள், தன்நிலை சார்ந்து பகன்றிடும் இல்லை, பகிர்ந்திடும் பதிவுகள்; பண்பாட்டுத் தளத்தில் தோன்றும் ஓட்டைகள், விண்ணோடு நிமிர முடியாத நம் கோட்டைகள், விரிந்து விரிந்து செல்லும் ஆய்வுப் புலங்கள், சொரிந்து நிற்கும் சொல் முத்துக்களின் வளங்கள்; கதையோடு தொடங்கும், கவிதை யோடு தொடரும், கருத்துக்களோடு நிறைவுறும்; அன்புராசா அடிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமை அலசல்கள், விண்புகழ் பாடும் மாதிரிக் கலசங்கள், மக்கள்மீது தொடுக்கும் சிந்தனைக் கணைகள், மென்மையோடு மொழிந்திடும் கருத்துச் சுனைகள், மனிதரின் செயல்களில் மாற்றத்தைக் கோரும், இனிமை மனதில் இன்பமும் கூட்டும், ஊக்கமும் சேர்க்கும்.

பிந்திச் செல்லாதே, ஆத்திரம் கொள்ளாதே, அளவோடு பேசு, அரியவை நாட்டு, காதலோடு வாழ்ந்து பிள்ளைச் செல்வம் போற்று, கல்வியைத் தவமாக்கி - பாலியல் கல்வியை அறமாக்கு, சாதிச் சாக்கடையைத் தூற்று, வடலிப் பருவத்தை வாழ்த்து, வாழ்விழந்தார்க்கு ஆதாரம் காட்டு, வாழ்வுரிமைக்கு வழிகாட்டு, சலுகைகள் மறுத்து - வாழ்வுச் சிலுவைகளைத் தாங்கு - இறை உணர்வுகளைக் கூட்டும், தலைமைகளைத் தேடும் புலம்பெயர் மோகம் தவிர்க்கும் வழிமுறைகள் பல கூறும், விழிப்புணர்வு நாடும், அன்புராசாவின் அதிர்வுகள் அத்தனையும் சத்தியப் பதிவுகள்!

சிரேஷ்ட விரிவுரையாளர் **கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

'பேசாப்பொருளை பேச நான் துணிந்தேன்' என்ற பாரதியின் வாக்கை செ.அன்புராசா அடிகளாரின் எழுத்துக்களில் காண முடிகிறது. அனைவரும் உணரத்தக்க உளவியல் ஆற்றுப்படுத்தலை மக்கள் மொழியில் நல்கும் நூல்.

விரிவுரையாளர் **ச.லலீசன்**
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

அதிர்வுகள் உறுத்தட்டும்! மாதந்தோறும் மன்னாவில் அதிர்வுகளை ஏற்படுத்தி உதிருகின்ற மொட்டுக்களை, மாலையாக்கித் தமிழ்த் தாய்க்கு அர்ப்பணிக்க முன்வந்த அன்புராசா அடிகளாரின் பெருமுயற்சி வரவேற்கத் தக்கதொன்றே. சொல்ல வேண்டியவற்றை, சொல்ல வேண்டியவர்களுக்கு, சொல்ல வேண்டிய விதத்தில், சொல்ல வேண்டிய முறையில் சுட்டிக்காட்டி, அநேக இதயங்களை அதிர வைப்பதில் அன்பு ஒரு அசாத்திய துணிச்சல் வீரன். மூர்த்தி சிறிதெனினும் கீர்த்தி பெரிதென்பதுபோல உருவ அமைப்பில் ஓர் இளைஞன். உள்ளத்தில் குமுறும் இவர் எண்ணத்தில் ஓர் எரிமலை. அரசியல்வாதிகளானாலும் சரி, மதத் தலைவர்களானாலும் சரி, இவரது எழுத்துக்களில் ஒரு நக்கீரத் தனம் எப்பொழுதும் இருக்கும். கடந்த நான்கு வருடங்களாக இவர் பேனாவில் உதித்த அதிர்வுகள் ஏதோவொரு விதத்தில் நகைச்சுவையாக ஆரம்பித்து பாயும் ஈட்டியாக சம்பந்தப்பட்டவர்களின் மனச்சாட்சிகளைக் குத்திக் கிளறும். வளரும் சமுதாயத்தில் இவர் ஏற்படுத்தி வரும் புரட்சிச் சிந்தனைகள் எல்லோரையும் வாழவைக்கும்.

நிரந்தர மறையாசிரியர் **எஸ்.ஏ.நாதர்**
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்சாரத்தைத் தொட்டுவிட்டால் எமக்கு 'சொக்' அடிக்கின்றது. அந்த 'சொக்' எதிர்பாராமல் நடக்கிறது. மன்னா சுமந்துவரும் அன்புவின் அதிர்வை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்துநிற்கும் வாசகர்களில் நானும் ஒருத்தி! 'அதிர்வுகள்' உள்ளத்தை மட்டுமன்றி என் சிந்தனையையும் அதிர வைக்கின்றது. மனமாற்றத்திற்கும், செயல் மாற்றத்திற்கும் என்னைத் தூண்டீற்று. கற்பாறைபோல் கல்லான நெஞ்சங்களும் மரத்துப்போன மனங்களும் அன்புவின் அதிர்வினால் அதிரவில்லையானால் இனி எதைக் கொண்டு அதிரவைக்க முடியுமோ?

**திருமதி மஞ்சு சீலன்**

பரிஸ், பிரான்ஸ்.

'உண்மையை எடுத்துரைப்பதே என் பணி' (யோவான் 18:37) என்ற இயேசுவின் வார்த்தையை மையமாக வைத்து தாங்கள் மன்னா பத்திரிகையில் எழுதிவரும் 'அதிர்வுகள்' என்னும் தலைப்பிலான சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் எம் போன்றவர்களின் மனதில் பல காலமாகப் புதைந்து கிடந்தவற்றை அழகிய சொற்பதத்தில் அனைவரும் புரியும்படியாகவும், அனைவரது உள்ளத்தைத் தொடும் படியாகவும், நடுநிலையாக, தூரநோக்குடன் சிந்தித்துத் தாங்கள் எழுதியிருப்பது பாராட்டத்தக்கது.

**திரு. க.அருள்நேசன்**

யாழ்ப்பாணம்.

வள்ளுவன், தான் எடுத்துக்கொண்ட ஒவ்வொரு அதிகாரங்களையும் முதன்மைப்படுத்தி சொல்லிச் செல்வதுபோல அதிர்வுகளின் ஒவ்வொரு தலைப்பும் ஒன்றையொன்று விஞ்சி நிற்கின்றது. இதில் கதை, கவிதை, சிறுகதை, நாடகம், நகைச்சுவை எனப்பல இலக்கிய வடிவங்கள் சங்கமிக்கும் புதிய இலக்கிய உத்தியாகக் காணப்படுகின்றது. வாசிக்கத் தூண்டும் வகையில் ஒவ்வொரு நிகழ்வுகளையும் சொல்லோவியமாகக் காட்சிப்படுத்துவது அருள்தந்தை அவர்களின் இலக்கியப் புலமையைக் காட்டுகின்றது. 'யதார்த்தவாதி வெகுசன விரோதி' என்பார்கள். இக்கட்டுரைத் தொடரானது தர்க்க ரீதியான சான்றாதாரங்களுடன் ஆன்மீக ரீதியான கருத்துக்களை முதன்மைப்படுத்தி அமைந்திருப்பது யாரும் மறுக்கமுடியாத உண்மையாகும். அரசியல் ரீதியான கருத்துக்களை விமர்சன ரீதியாகப் பார்ப்பது சிறப்பானதாகும். இது இன்றைய காலகட்டத்தில் பொருத்தமானதாகவும் அமைந்துள்ளது.

ஆசிரியர் **திருமதி எம்.எம்.ஜெயக்கெனடி**

வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக நல்வாழ்வு ஆடையணிந்து சுழலும் உலகில், புலம்பெயர் வாழ் தமிழினம் தவறி, வாழ்வில் சிதறி விடாமல், உண்மையின் புதிர்களை ஒளிக் கதிர்களாக வீசி 'அதிர்வுகள்' தரும் அறிவாற்றல் அற்புதம். சமகால அரசியலில் மேடையேறும் காட்சிகளும் மண்ணின் நிகழ்வுகளும் மனமாற்றத்தின் தேவையும் அதிர்வுகளில் மலர்வது இறைவன் எமக்குக் கொடுத்த பெரும் பொக்கிஷம்.

**தீவகத்தான்**
பலர்மோ, இத்தாலி.

விறுவிறுப்பான தொடர்...!
சமகால வாழ்வியலாய் அதிர்ந்து வந்தது
கல் நெஞ்சம் கொண்டோர்க்கு ஆச்சரியம் தந்தது!
சமூக வாழ்வியல் கண்ணாடியின் புதுமைநிறைந்த
அதிர்வுகள் தொடர் ஓர் அற்புத சக்தியாம்!

**அ.ஜஸ்மின் ஷறோன்**
ஆவணம், நானாட்டான்.

சமகாலத்தில் நிலவிவருகின்ற புரியாத புதிர்களை 'அதிர்வுகள்' மூலம் வெளிக்கொணர்ந்து சமூகத்தின் நாடி, நாளங்களை அசைத்து அரசியல் தொடக்கம் ஆன்மீகம் வரை வீறுகொண்டெழும் அருட்பணி. செ.அன்புராசா அ.ம.தி. அவர்களது எழுத்துருவாக்கம் காலத்தின் தேவை.

**செல்வன் அல்பிரட் அருண்ராஜ்**
செட்டிகுளம்.

ஈன்ற பொழுதினில் - நீ முருங்கனின் முத்து
பணித்தளத்தில் அ.ம.தியின் சொத்து
அதிர்வுகளை தந்ததால் - நீ மன்னாவின் வித்து
மன்னா கை சேர்ந்ததும் பக்கம் பத்தினை
புரட்டிட விரல்கள் துடிக்கும் மனமோ உந்தனது
சமகால சிந்தனையை படித்திட நினைக்கும்
மண்வாசனை கலந்த உந்தனது பேச்சுத் தமிழ்
நிகழ்வுகளை அதிர்வுகளாய் தந்ததால் அதிர்வின்
பக்கங்களைப் படித்திட பலரைத் தூண்டும்.

**திரு. அ.வேதநாயகம்**
பிச்சகுளம், முருங்கன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் தெளிவாகவும், விளக்கமாகவும், சிறிய சிறிய தலைப்புகளுடன் இலக்கிய வடிவிலும், நகைச்சுவையாகவும், ஆன்மீக விழிப்புணர்வுகளை தூண்டும் வகையிலும் அதிர்வுகள் அமைந்துள்ளது சிறப்புக்குரியது.

**செல்வி செ.சகித்ரா**
வவுனியா.

மாணவர்களாகிய எமக்கு 'அதிர்வுகள்' என்னும் தொடர் கட்டுரை யானது எமது வாழ்விற்கு வழிகாட்டுவதாகவும் இன்றைய நவீன யுகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் இளைஞர் சமுதாயத்தை நேர்வழியில் இட்டுச் செல்வதற்கு உந்துசக்தியாகவும் அமைகின்றது.

**செல்வி பி.சன்சிகா**
வவுனியா.

மாணவர்களை சீரழிக்கக்கூடிய பலவகையான ஊடகங்கள் தோன்றி பண்பாடு, கலாசார ரீதியில் இளைஞர் சமுதாயத்தை திசை திருப்பிவரும் இன்றைய காலகட்டத்தில் 'அதிர்வுகள்' எமக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதம்.

**செல்வி தி.யூலியானா**
வவுனியா.

'அதிர்வுகள்' என்னும் கட்டுரையானது வாசிப்பதற்கு இலகுவான மொழிநடையை உடையதாகவும் இன்றைய பெண்கள், ஆண்கள், குடும்பங்களிலும், சமூகங்களிலும் எதிர்நோக்கும் அன்றாட பிரச்சினைகளை ஆய்வு செய்வதாகவும் அமைந்துள்ளது. இக்கட்டுரையினை வாசித்ததன் ஊடாக எமது நிலையினை நாம் உணர்ந்து கொள்வதற்கும் திருந்தி நடப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற உணர்வும் எனக்குள் ஏற்பட்டது.

**செல்வி உ.யூடிற் துஷானா**
வவுனியா.

தேர்தல் காலத்தில் மக்கள் தள்ளாடிக்கொண்டிருந்த வேளையில் எவ்வாறான முடிவுகளை தமிழ் மக்கள் எடுக்கவேண்டும் எனவும், தமிழ் மக்களின் அடிப்படை உணர்வுகள், தேவைகள் என்பனவற்றை சிறந்த, ஆழமான அரசியல் கண்ணோட்டத்துடன் நோக்க எம்மை வழிப்படுத்திய 'அதிர்வுகள்' அந்நேரத்தின் தேவையாக இருந்தமை சிறப்பானதாகும்.

**செல்வி எ.எட்வினா**
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் சமூக பொருளாதார அடிப்படைகளை ஆன்மீக ரீதியில் அணுகக்கூடிய துணிச்சலும் நிறைந்த புலமையும் உள்ள அருள்தந்தை அன்புராசாவின் இவ்விலக்கியப் பணி பாராட்டத்தக்கதாகும். தொடர்ந்தும் அவர் இப்பணியில் தம்மை ஈடுபடுத்தி நல்ல வழிகாட்டல்களை தக்கநேரத்தில் வடிக்கவேண்டுமென்று கேட்டு நிற்கின்றேன்.

ஆசிரியர் **செல்வி மா.வாசுகி**
வவுனியா.

வீதி விபத்துக்கள் அதிகரித்துவரும் இக்காலகட்டத்தில் அருள் தந்தை அவர்கள் மிகவும் அக்கறையுடனும் மனிதநேயத்துடனும் அவற்றைச் சுட்டிக்காட்டி, வீதி விதிகளை பின்பற்ற வேண்டியதன் அவசியத்தைத் தனது கட்டுரைகளில் குறிப்பிட்டு இருப்பது மிகவும் சிறப்பானதாகும்.

**செல்வி செ.பிருந்தா**
வவுனியா.

'அதிர்வுகள்' என்னும் கட்டுரைத் தொடரை வாசித்துவரும் வாசகர்களில் நானும் ஒருத்தி! அருள்தந்தை தனது கட்டுரைகளில் சமூகத்திற்குத் தேவையான விடயங்களை பல அறிஞர்களின் தத்துவக் கருத்துக்களை மேற்கோள்காட்டி விபரித்துச் சொல்வது பல அறிஞர்களை எமக்கு அறியத்தருவதாகவும் புதிய அறிவை பெறுவதற்கு வழி செய்வ தாகவும் அமைந்துள்ளது.

ஆசிரியர் **திருமதி ஆர்.சிவகாந்தீஸ்வரன்**
வவுனியா.

மன்னா பத்திரிகையானது நல்ல பல விடயங்களைத் தாங்கி வருகின்றபோதும் இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் 'அதிர்வுகள்' என்னும் பகுதி அமைந்துள்ளது. வாசிக்கத் தூண்டும் வகையில் ஒவ்வொரு சம்பவங்களையும் மிகவும் கண்டிப்பாகவும் நகைச்சுவையாகவும் அருள் தந்தை அவர்கள் அமைத்திருப்பது நன்றாக உள்ளது.

மறையாசிரியர் **செல்வி தே.அனுஷா**
வேப்பங்குளம், வவுனியா

நான் ஓர் இந்துமதத்தைச் சேர்ந்த ஆசிரியர். மன்னா பத்திரிகையில் 'அதிர்வுகள்' என்ற கட்டுரைத் தொகுதியை வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அக்கட்டுரைகளானது, வள்ளுவன் வாக்கினைப்போல் சமயங்களைக் கூர்ந்து நோக்கி தற்காலத்துக்குத் தேவையான விடயங்களை, மிகவும் சிறந்த மொழிநடையில், எல்லோரும் வாசித்து விளங்கிக்கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் அமைந்திருந்தது மிகவும் சிறப்பானதாகும்.

ஆசிரியர் **திருமதி க.ஜெகதீஸ்வரி**
வவுனியா.

சமகால நிகழ்வுகளை சிறந்த சொல்லோவியமாக, யாவர்க்கும் விளங்கும் வகையில் இலகு தமிழில், மிகவும் சுவாரஸ்யமாக அழகுற அமைத்துச் செல்வது, அருள்தந்தை அவர்களின் தமிழாற்றலை வெளிப்படுத்துகின்றது. சமூகங்களில் நடக்கும் அவலங்கள் எடுத்துக்காட்டப்பட்டு, எமது எதிர்கால சமுதாயம் நல்லமுறையில் நெறிப்படுத்தப்பட இது உதவும்.

**திருமதி ம.மகாரட்ணம்**
வவுனியா.

'அதிர்வுகள்' சமகால நிகழ்வுகளை ஆய்வு செய்வதாக அமைந்துள்ளது. படித்தவர்கள் விளங்கிக்கொள்ளும் வகையில் தத்துவக் கருத்துக்கள் சுட்டிக்காட்டப்படுவதுடன், பாமர மக்களும் விளங்கிக்கொள்ளும் வகையில் கிராமிய மொழிநடையில் அமைந்திருப்பது சிறப்பானதாகும்.

உப அதிபர் **திருமதி தி.யோகநாதன்**
வவுனியா.

சமகால நிகழ்வுகளை ஆதாரங்களுடன் அலசி ஆராய்ந்து, மனித விழுமியங்களையும் மிகவும் தெளிவாக, சுவையாக எடுத்துக்காட்டி, அனைத்து மத வரையறைகளைக் கடந்த நிலையில் மனித நேயத்தை எடுத்துக் காட்டியிருப்பது சிறப்பானதாகும். இக்கட்டுரைகளை வாசிக்கும்போது உற்சாகமும் உத்வேகமும் ஏற்படுகின்றன. ஒவ்வொரு உள்ளங்களையும் அதிரவைக்கின்றது.

ஓய்வுநிலை ஆசிரியர் **செல்வி ஆர்.அந்தோனிப்பிள்ளை**
வவுனியா.

இது கற்பனைக் கருவூலங்களின் காவியமல்ல. மாறாக, நிஜங்களின் நிழல்களை நிதமும் படம் பிடித்துக்கொண்ட ஓர் ஆன்மாவின் ஆத்மார்த்தமான உரையாடல். சமுதாயத்தின் சங்கதிகளை பக்குவமாய் பதிவுசெய்து எம்மைச் சிந்திக்கவும், செயற்படவும் தூண்ட தனது எழுதுகோலை ஆயுதமாக்கி சமூக, அரசியல், ஆன்மீகம் சார்ந்த மும்முனைத் தொடர் தாக்குதல்களால் எம் செவிப்பறைகளை ஒருகணம் அதிர வைத்திருக்கின்றார் இந்த எழுத்தாளர் அருள்பணி செ.அன்புராசா அ.ம.தி. அடிகளார்.

அருட்சகோதரன் **எஸ்.ஜேசுதாஸ், CMF**
கண்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிர்வுகள் எல்லோரையும் அதிரவைத்தது மாத்திரமல்ல உணரவும் வைத்தது.

**திரு. பி.எஸ்.அல்பிரட்**
கொழும்பு.

செ.அன்புராசா அடிகளாரின் வாழ்வும் பணியும் எப்போதும் அன்பாலும், பண்பாலும், அறிவாலும், ஆற்றலாலும், ஆன்மீகத்தாலும், யதார்த்தத்தாலும், பிறர்மேல் அக்கறையாலும், உண்மை நேர்மை நீதியாலும் ஆளுமை பெற்று இருக்கின்றது. இவ்வாறான ஓர் ஆளுமையின் வெளிப்பாட்டால் உருவாகியதே அதிர்வுகள். இது சமகாலத்தை படம்பிடித்துக் காட்டி, எப்படி வாழ்வது நல்லது எனும் வழியைச் சுட்டி, அனைவருக்கும் விழிப்புணர்வை ஊட்டுகின்றது. அனைவரையும் - அனைத்தையும் உள்வாங்கிய பொக்கிஷமாக மிளர்கின்றது. அதிர்வுகள் பலருடைய வாழ்வுக்கு வழிகாட்டியாக அமையும் என்பது என் நம்பிக்கை.

**அருட்பணி. இ.அகஸ்ரின் புஸ்பராஜ்**
மறைக்கோட்ட முதல்வர், மன்னார்.

காலத்தின் பதிவாக, கலைந்த நினைவுகளின் கண்ணாடி விம்பமாக மனக் காயங்களை ஆற்றவைத்த அன்பின் மன அதிர்வுகளைச் சுவைத்தேன்.

உள சமூக சீராளன் **திரு. யோசப்பாலா**
யாழ்ப்பாணம்.

அதிர்வுகள் தொடர் குடும்ப, சமூக, சமய, சமகால நிகழ்வுகளை உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெட்டத் தெளிவுபடுத்துவதாக உள்ளது. அதிர்வுகள் நூலுருப்பெறும் என ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறோம்.

**திருமதி ஆனந்தகுமார் அசுந்தா பீரிஸ்**
பேசாலை.

வாழ்க்கையை வடிவமைக்கவும் சமூகத்தை எதிர்கொள்வதற்கும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வாழப்பழக்குவதுமே கல்வியின் தூரநோக்காகும். ஆனால், நடைமுறையில் பரீட்சையை மையப்படுத்தும் கல்வியே உள்ளது, அது ஆரோக்கியமானது அல்ல. அது கல்வியின் குறுகிய நோக்கம் என்ற அப்பட்டமான உண்மையை உங்கள் கட்டுரைகளினூடாகத் துலாம்பரமாக எடுத்துக்காட்டியுள்ளீர்கள்.

ஆசிரியர் **திருமதி கலிஸ்ரா ரவீந்திரன்**
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர்மோவில் உங்களை முதலில் பார்த்தபோது, "இவர்தான் 'அதிர்வுகள்' எழுதும் அன்புராசா" என உங்களை ஏற்கெனவே அறிந்தவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்கள். உங்கள் எழுத்தின் சிறப்பு என்னவென்றால், ஒவ்வொரு கட்டுரையிலும் புதுமையைப் பார்க்க முடிகிறது. "அடுத்து என்ன கட்டுரை எழுதுவார்" என்ற ஆதங்கத்தை ஏற்படுத்துவதாக உங்கள் எழுத்துக்கள் இருப்பது பல எழுத்தாளர்களில் காணாத தனிச் சிறப்பாகும்.

**திருமதி என். யூர்மனா**
பலர்மோ, இத்தாலி.

அதிர்வுகளைத் தவறாமல் வாசித்து வருகின்றேன். 'அதிர்வுகள்' எங்கும் இன்னும் அதிரவேண்டும். அதிர்வுகள் படித்தோருக்கு மட்டுமல்ல பாமரருக்கும் பதில் சொல்கின்றது. யதார்த்த நங்கை எழுந்துநின்று நடனமாடுகிறாள்! இவை நூல் வடிவம்பெற ஆவன செய்யுங்கள்.

கவிஞர் **பி. முல்லைதாசன்**
முல்லைத்தீவு.

அதிர்வுகளைப் படித்ததும் எங்கள் உள்ளத்தில் ஓர் உத்வேகம் தோன்றுகிறது. எங்களைப்போன்ற வயதானவர்கள்கூட உங்கள் கட்டுரை களை எதிர்பார்த்து இருக்கிறார்கள் என்றால் எப்படியான கனதியான விடயங் களை இக்கட்டுரைகள் தாங்கி வருகின்றன என்பதைக் கண்டுகொள்ளலாம். எல்லாத் தரப்பினரும் உங்கள் கட்டுரைகளைப் படிக்கக்கூடியதாக இவை நூல் வடிவம் பெற்றால் அது பலருக்கு உதவியாக இருக்கும்.

**திருமதி மோசஸ் விக்ரோறியா**
தலைமன்னார்.

இத்தாலி, பலர்மோவில் வாழும் நான், மன்னா வந்ததும் உடன் படிக்க வேண்டும் என்பதால் அவசர அவசரமாக வேலைக்கு வெளிக்கிட்டுப் போகின்றபோது கைப்பைக்குள் வைத்துக்கொண்டு செல்வதுண்டு. பயணத்தின்போதும், வேலை இடைவேளைகளின்போதும் படிப்பதுண்டு. உண்மையில் 'அடுத்த கட்டுரை என்ன தலைப்பில் வருகிறது?' என்ற ஆர்வத்தை ஏற்படுத்தி அதில் உள்ளவற்றை விரைவாக வாசிக்க வேண்டும் என்ற ஆசையை ஒவ்வொரு கட்டுரையும் ஏற்படுத்துகின்றது. புலம் பெயர்ந்து வாழும் எம்போன்றோருக்கு பெரும் ஆறுதலையும் அறிவையும் இக்கட்டுரைகள் தருகின்றன.

**திருமதி ஏ. வாசுகி**
பலர்மோ, இத்தாலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புவின் அதிர்வுகள் - அவர்தம்
மனதின் உதிர்வுகள்
அவனிவாழ் மானிடர்க்கு வாய்த்த நல் வரிகள்
முல்லைக்கு தேர் கொடுத்து
அதன் வாழ்வுக்கு வழி வகுத்தான் பாரி மன்னன்
வளமான வாழ்வுக்கு வளமான வார்த்தைகளை
வாரி வழங்கிய அன்பு நீ வாழி
பாதை மாறிப் பயணிக்கும் எம்மவர்க்கு
வழிகாட்டும் வல்லமை பொருந்திய - வல்ல - நல்ல
சிந்தனைகள் - சீரிய நல் ஆலோசனைகள்
சிதறுண்ட சீர் கெட்ட நம்மவர்க்கு
சீரான, கூரான, இதயத்தை இதமாக்கும்
இனிய கருத்துக்கள்!
இதன் வழி நடப்பின்
நல்லதோர் வாழ்வு அவர்க்குண்டு.
நன்று, நன்றி நற்குருவே.

ஆசிரியர் **சி.ஸ்ரனிஸ்லாஸ்**
யாழ்ப்பாணம்

சுவையாக, சுடச்சுட தரப்படும் யதார்த்தமான சம்பவங்கள் சிந்திக்கத் தூண்டுகின்றன. சிந்தனை மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. மறையுரையை எப்படிக் கொடுக்க வேண்டும் எனும் விடயம் மனதுக்கு ஆறுதலாக உள்ளது. பலருக்குப் பயன் தரவல்லது, வாசித்திருந்தால்! உள்ளதை உள்ளபடி எடுத்துக்கூறும் துணிவுக்குப் பாராட்டுக்கள். நகைச்சுவையோடு தரப்படுகின்ற உண்மைகள் வெல்லம் கலந்த மருந்துபோல ஊட்டப்படுகின்றது. வாழ்க் கையை கற்பனையாக அல்லாது வாழ்க்கையை வாழச்செய்யும் அதிர்வுகளை மானசீகமாக வரவேற்கிறேன்.

ஓய்வுநிலை அதிபர் **செ.எலிசபேத், அ.கா.**
அடம்பன், மன்னார்.

குற்றாலம் அருவியில் நீராடும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அந்த நீர்வீழ்ச்சியில் ஒருகணம் நனைந்தால் அதைவிட்டு மீளவே மனம்வராது. அதுகாட்டும் சொல்லொணா விந்தைகளை அனுபவித்தால் மட்டுமே புரியும். அன்பு அடிகளாரின் ஆக்கங்களில் மூழ்குவதும் இதற்கு நிகரானதே. அத்தியாவசியமான கருத்துக்களை அற்புதமான பாணியில் அமைக்கும் படைப்புகள் தனித்துவமானவை; அதிர்வுகள் உள்ளூரச் சிந்திக்க வைப்பவை; நிச்சயமாகப் பயன்தர வல்லவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த ஆக்கம் எப்போது வரும் என்ற தவிப்பை ஏற்படுத்துவது அதன் சிறப்பே.

ஓய்வுநிலை ஆசிரியர் **திரு. ஏ.எஸ்.அகஸ்ரின்**
யாழ்ப்பாணம்.

நூலிலே உட்பொதிந்திருக்கும் கட்டுரைகளை வாசித்தே, வியந்து கொண்டேன். தங்களுடைய வாசிப்பின் பரப்பினை என்னால் அளவீடு செய்ய முடியாது போனமை இவ்விடத்தில் குறிப்பிடவேண்டிய விடயமாகும். செய்தியைச் சொல்லும் வடிவம், விடயத்தைக் கையாளுகின்ற திறன், கருத்துக்களை வரிசைப்படுத்துகின்ற முறை என்பன மிக மிக உச்சமாக விளங்குகின்றது. எழுதுங்கள், தாருங்கள், தொடர்ந்து வாசிப்போம்.

கலைப்பருதி, **கே.ஆர்.திருத்துவராஜா**
அல்வாய், யாழ்ப்பாணம்.

மன்னாவின் மகுடமாய் - மாதந்தோறும் மனதில் பதியும் அதிர்வுகள் வாழ்வுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காக, இருள் சூழ்ந்த எம் வாழ்வுக்கு ஒளிச் சூரியனாக, வளமான வாழ்வுக்கு உயர்ந்த நற்கருத்துக்கள் இமயமாக, நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே என்ற நெருப்பாக, வழிதவறும் எம்மவர்க்கு வழிகாட்டும் நேர் பாதையாக, மனதை மகிழவைக்கும் குளிர் புனலாக, கலங்கிய மனங்களை மகிழவைக்கும் உன்னத கலையாக, இருள் அகற்றி மனதுக்கு சுகம்தரும் மதியாக அதிர்வுகள், அது அன்புவின் அருத்தின் ஆழம். அளவிட முடியாத அர்த்தங்கள். இந்த அதிர்வுகள் உள்ளங்களின் சுகத்திற்கு உன்னத ஔடதம். அன்பின் நல் வாழ்த்துக்கள்.

ஆசிரியர் **திருமதி ஆன்ரீடா ஸ்ரனிஸ்லாஸ்**
யாழ்ப்பாணம்

'அன்பு' வெறும் பெயராக மாத்திரமல்ல. இவரது உள்ளத்திலும், செயல்களிலும் நன்கு செறிந்துள்ளது என்று பலரும் கூறக்கேட்டிருக்கிறேன். இதுபோலவே இவர் மன்னா பத்திரிகையில் எழுதிய அதிர்வுகளும் வெறும் கருத்துகளாக மாத்திரமல்ல, வாசகர்கள் சமகால, சமூக, அரசியல், ஆன்மீகம் சார்ந்த விடயங்களை நன்கு உய்த்துணரவும், ஏன் தமது தீர்மானங்கள், முடிவுகளை சரியான முறையில் திருத்தி அமைத்துப் பயன்பெறவும் வழி சமைத்துள்ளன.

ஓய்வுநிலை ஆசிரியர் **திரு. பெ.பிரான்சிஸ்**
யாழ்ப்பாணம்.

அருள்பணி செபமாலை அன்புராசா அ.ம.தி. அடிகள் 'கம்பன் வீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுத்தறியும் கவிபாடும்' என்ற கூற்றுக்கிணங்க, கலையும் எழுத்தும் ஒருங்கே இணைந்து தவழ்ந்து விளையாடிய குடும்பத்தில் பிறந்தவர். 'அதிர்வுகள்' என்ற தனது ஆக்கத்தின் ஊடாக சமகால நிகழ்வுகளை மையப்படுத்தி, உண்மை அனுபவங்களை கோடிட்டுக் காட்டி, மக்களை சிந்திக்கத் தூண்டினார். தான் ஒரு கத்தோலிக்க குரு என்பதற்கு அப்பால் நகர்ந்து, அனைத்து மக்களுக்கும் பயன்படக்கூடியதாக தனது எழுதுகோலை நகர்த்தி, நகைச்சுவையாகவும், தேவையான இடங்களில் இறை வார்த்தைகளையும் பயன்படுத்தி, சொல்லவந்த கருத்தைத் துணிவோடு வெளிக்கொணர்ந்தமை பாராட்டுக்குரியதே. வாசகர்களை வாசிக்கத் தூண்டுகின்ற 'அதிர்வுகள்' ஆக்கம் தொடர்ந்து வரவேண்டும்.

சமாதான நீதவான் **திரு. அ.அமலரட்ணம்**
யாழ்ப்பாணம்.

ஒப்பற்ற சுவையான எழுத்துக்களால் மக்கள் மனங்களில் தாக்கத்தையும், வாழ்வின் நற்திருப்பத்திற்கான உந்துதல்களையும் ஏற்படுத்த முனைகிறார், நமது அபிமான அன்புப் புரட்சியாளன் அருள்பணி செ.அன்புராசா அடிகளார். அவர் தமது தொடர் ஆக்கங்களால் எமது தவிப்பை நிறைவுசெய்து வரவேண்டும் என்பதே என்போன்றோரின் தணியாத பேரவா.

ஆசிரியர் **திரு. அகஸ்ரின் சுரேஸ்**
யாழ்ப்பாணம்.

ஆடுகளைப் பார்க்கின்ற விதமும், ஆயர்களைப் பார்க்கின்ற முறையும் அருமையாக இருக்கிறது. வெளிநாடுகளில் வாழுகின்ற என்போன்றவர்கட்கு உங்கள் எழுத்துக்கள் ஊக்கத்தையும், உற்சாகத்தையும், ஊர் உணர்வையும் தாராளமாகத் தந்துகொண்டு இருக்கின்றது.

**திரு. சீலன்**
பரிஸ், பிரான்ஸ்.

அதிர்வுகள் மக்களைச் சிந்திக்கத் தூண்டுபவை. இவ்வாக்கத்தில் உண்மை நிகழ்வுகள் இழையோடுபவையாகவும், மக்களை புதிய வாழ்வுக்கு அழைத்துச் செல்பவையாகவும் அமைந்திருப்பது கண்கூடு. ஒவ்வொருவரையும் அறிந்து வாழ அழைப்பு விடுக்கும் இவருடைய பேனா, தொடர்ந்தும் உயிரோட்டம் உள்ளதாக பயணிக்க வேண்டுகிறேன்.

**திரு. பி.பி.பிறின்ஸ்**
பாஷையூர், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் நூல்கள்



மறைப்பணி புரிந்த மாமேதை
2001



காலத்தின் பதிவுகள்
2002




சுனாமி சொல்லாத சோகங்கள்
2005



நம்பிக்கையின் பாதையில்
2005



மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடகங்கள்
2006



லூர்து நம்பிக்கை தரும் நகர்
2010




திருப்பத்திற்கான தேடல்கள்
2013



அதிர்வுகள்
2014

## இறுவட்டுகள்

அன்புக் காணிக்கை -2000

வியாகுல இசைப்பாக்களும் வியாகுல பிரசங்கமும் - 2006

உந்தன் நினைவினிலே - 2012

என் தேசத் திருப்பாடல்கள் - 2014

புனித சந்தியோகுமையோர் சுற்றுப்பிரகாரப் பாடல்கள் (விரைவில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 33 கட்டுரைகள், 330 உப தலைப்புக்களைக் கொண்டவை.
- இந்நூலைப் பற்றி 50இற்கும் மேற்பட்டோரின் கருத்துக்கள் பதியப்பட்டவை.
- 04 ஆண்டுகள் (2011-2014) மன்னா பத்திரிகையின் அதிர்வுகள் தொடரில் அதிர்ந்தவை.
- புலம்பெயர் நிலத்தில் வாழும் நம்மவர்களின் வாழ்க்கைக் கூறுகள் உரைக்கப்பட்டவை.
- மானிடவியல், சமூகவியல், உளவியல், அறிவியல் பார்வைகள் உள்ளடங்கியவை.
- சமூக, சமய, கலை, கலாசார, அரசியல், ஆன்மீக, பொருளாதார நோக்குகள் இணைக்கப் பெற்றவை.
- வரலாற்றுக் குறிப்புகள், இலக்கிய எடுகோள்கள், அறிஞர்களின் பொன்மொழிகள், மெய்யியல் தத்துவங்கள், இறையியல் சிந்தனைகள், மறைகளின் கருத்துக்கள் அதிகமாகப் பொதிந்தவை.
- சுவையான கதைகள், சுவாரஸ்யமான நகைச்சுவைகள், நறுக்கான விவாதங்கள், நியாயமான கேள்விகள், உண்மை வாழ்க்கை அனுபவங்கள் நிறைந்தவை.
- தனித்தும் குழுவாகவும் ஆர்வமுடன் வாசிக்கவும், யோசிக்கவும், சிலாகிக்கவும், செயற்படுத்தவும் தூண்டுபவை.






செ.அன்புராசா, அ.ம.தி. அடிகளார், யாழ். மருத்துவமனை ஆன்ம குருவாக, மறையுரைஞராக, பிரான்ஸ் லூர்து திருத்தல ஆன்ம குருவாகவும் பணி யாற்றியவர். தற்போது குருமட மாணவர்களின் உருவாக்குநராக பணிபுரிகிறார். கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக கலை இலக்கியத் துறையில் ஈடுபாட்டுடன் உழைத்து வரும் இவர், இத்துறையில் 08 நூல்களையும் 05 இறுவட்டுகளையும் வெளியீடு செய்துள்ளார்.

ISBN 978-955-1769-05-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயந்த் சென்ரர் 077 724 9536